## அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

**காரைக்குடி -630 003**





# ONLINE PROGRAMMES

## எம்.ஏ.,தமிழ்

**இரண்டாமாண்டு -மூன்றாம் பருவம்**

**தாள் – 205132**

# காப்பியங்கள்


Copy Right Reserved

For Private use only

**Author :**

**Dr.S.MURUGESAN**
**Associate Professor in Tamil ,**
**Research Centre**
**Alagappa Govt Arts College,**
**Karaikudi – 630003**

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**

**Dr. V. THIRUVENI**
**Assistant Professor of Tamil,**
**Directorate of Distance Education,**
**Alagappa University,**
**Karaikudi -630003.**

## பாடத் திட்டம் - பொருளடக்கம்

**நோக்கம்**

**காப்பியங்களின் கதைகளும் அதில் கூறப்பட்டுள்ள சிறப்புச் செய்திகளைப் பற்றியும் மாணவர்களுக்குக் கூறுதல்.**


| | | | |
|---|---|---|---|
| **பிரிவு 1:** | | **சிலப்பதிகாரம்** | **பக்கம** |
| கூறு 1 | : | சிலப்பதிகாரம் -புகார்க்காண்டம்- அறிமுகம் - மனையறம்படுத்த காதை | **1** |
| கூறு 2 | : | சிலப்பதிகாரம் -புகார்க் காண்டம்- அரங்கேற்றுக் காதை- அந்தி மாலை சிறப்புச்செய்த காதை | **13** |
| கூறு 3 | : | சிலப்பதிகாரம் -புகார்க் காண்டம்- இந்திரவிழவூரெடுத்த காதை -கடலாடு காதை | **20** |
| கூறு 4 | : | சிலப்பதிகாரம் -புகார்க் காண்டம்- கானல்வரிக் காதை- வேனிற் காதை | **27** |
| கூறு 5 | : | சிலப்பதிகாரம் -புகார்க் காண்டம்- கனாத்திறம் உரைத்த காதை -நாடுகாண் காதை | **38** |
| **பிரிவு 2** | **:** | **மணிமேகலை - சீவகசிந்தாமணி** | |
| கூறு 6 | : | மணிமேகலை - 1முதல் 7 காதைகள் | **48** |
| கூறு 7 | : | மணிமேகலை - 8 முதல் 15 காதைகள் | **67** |
| கூறு 8 | : | சீவக சிந்தாமணி : கோவிந்தையார் இலம்பகம் | **117** |
| **பிரிவு 3** | **:** | **பெரியபுராணம் -தேம்பாவணி** | |
| கூறு 9 | : | பெரிய புராணம் : கண்ணப்ப நாயனார் புராணம் | **129** |
| கூறு 10 | : | வில்லிபாரதம் : கன்னப் பருவம் | **146** |
| கூறு 11 | : | தேம்பாவணி : முதற்காண்டம் - பால மாட்சிப்படலம் | **176** |
| **பிரிவு 4** | **:** | **சீறாப்புராணம் - நளவெண்பா- வளையாபதி -** | |
| கூறு 12 | : | சீறாப்புராணம் : நுபுவத்துக் காண்டம் - உமறு கத்தாபு ஈமான் கொண்ட படலம் | **195** |
| கூறு 13 | : | நளவெண்பா : சுயம்வர காண்டம் (1-45 பாடல்கள்) | **220** |
| கூறு 14 | : | வளையாபதி | **232** |

**பிரிவு-1 சிலப்பதிகாரம், -புகார்க்காண்டம்** **1-2**
சிலப்பதிகாரம் -அறிமுகம்
காப்பிய இலக்கணம்
**கூறு : 1** **3-12**
1.1 மங்கல வாழ்த்துப் பாடல் (அறிமுகம்)
1.2. மனையறம்படுத்த காதை
1.3 சோதித்தறியும் வினாக்கள்
**கூறு : 2** **13-19**
2.1 அரங்கேற்றுக்காதை
2.2 அந்திமாலைச் சிறப்புச் செய் காதை
2.3 சோதித்தறியும் வினாக்கள்
**கூறு : 3** **20-26**
3.1 இந்திரவிழவூரெடுத்த காதை
3.2 கடலாடு காதை
3.3 சோதித்தறியும் வினாக்கள்
**கூறு: 4** **27-37**
4.1 கானல்வரிக்காதை
4.2 வேனிற்காதை
4.3 சோதித்தறியும் வினாவிடைகள்
4.4 பயிற்சி வினா
**கூறு : 5** **38-47**
5.1 கனாத்திறம் உரைத்த காதை
5.2 நாடுகாண்காதை
5.3 சோதித்தறியும் வினாக்கள்
**பிரிவு-2 மணிமேகலை- சீவகசிந்தாமணி** **48-66**
**கூறு : 6**
6.1 விழாவறைகாதை
6.2 ஊர் அலர் உரைத்த காதை
6.3 மலர்வனம் புக்க காதை
6.4 பளிக்கறை புக்க காதை
6.5 மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை
6.6 சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை
6.7 துயிலெழுப்பிய காதை
6.8 பயிற்சி வினாக்கள்
**கூறு :7** **67-116**
7.1 மணிபல்லவத் துயருற்ற காதை
7.2 பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை
7.3 மந்திரங் கொடுத்த காதை
7.4 பாத்திரம் பெற்ற காதை
7.5 அறவணர்த் தொழுத காதை
7.6. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை
7.7 பாத்திரமரபு கூறிய காதை
7.8 பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை
**கூறு :8** **117-128**
**பிரிவு -3: பெரியபுராணம் - வில்லிபாரதம் - தேம்பாவணி** **129-145**
**கூறு : 9**
9.1. பெரியபுராணம் - அறிமுகம்
9.2. நோக்கம் : கண்ணப்ப நாயனார் வரலாற்றை மாணவர் அறியச் செய்வது.

9.3. கண்ணப்ப நாயனார் புராணம்
9.3.1. பொத்தப்பி நாடு
9.3.2. திண்ணார்பிறப்பு
9.3.3. விற்பயிற்சி
9.3.4. திண்ணார்க்கு முடிசூட்டல்
9.3.5. வேட்டை
9.3.6. காளத்திக் காட்சி
9.3.7. பொன்முகலி அடைதல்
9.3.8. தத்துவப்படி ஏறல்
9.3.9.அன்பேயாதல்
9.3.10.நாணன் -காடன் வருந்தல்
9.3.11.ஞானார்ச்சனை
9.3.12.அன்பில் சிவத்தைக் காணல்
9.3.13.சிவகோசரியர் ஆகமப் பூசை
9.3.14.மாறுபட்ட ஆசைகள்
9.3.15 நாகன் முயற்சி பலியாமை
9.3.16 சிவகோசரியார் ஒளித்திருத்தல்
9.3.17.ஒரு கண் அகழ்ந்து அப்பல்
9.3.18.மற்றொரு கண்ணகழ்தலும் கண்ணப்பராதலும்
9.4.சோதித்தறியும் வினாக்கள்
9.5 பயிற்சி வினா:
9.6.மேலும் படித்தறிக:
**கூறு: 10** **146-175**
10.1.போர்க்களம் அடைதல்
**கூறு 11** **176-194**
11.1. தேம்பாவணி ஆசிரியர் ஓர் அறிமுகம்
**பிரிவு : 4 - சீறாப்புராணம் - நளவெண்பா – வளையாபதி** **195-219**
**கூறு – 12**
12.1 உமறுகத்தாபீமான் கொண்ட படலம் - பாடல் விளக்கம்
12.1.1 அபுஜகில் அறிவிப்பு
12.1.2 மலக்கானவர் காளை வடிவம் கொள்ளல் :
12.1.3 காளையின் செயல்கள்
12.1.4 உமறுகத்தாபு காளையுடன் மோதியதைக் கூறுதல் :
12.1.5 சுவாகென்னும் தெய்வ வாக்கு
12.1.6 உமறு கத்தாபு சகோதரி பாத்திமா சந்திப்பு :
12.1.7 ஹப்பாபு றலியல்லாரு உரை
12.2.சோதித்தறியும் வினாக்கள் :
12.3 பயிற்சி வினாக்கள் :
12.4. பொருளறிக.
12.5. மேலும் படித்தறிக.
**கூறு: 13** **220-231**
13.1. அறிமுகம்
13.2 கதை பிறந்த கதை
13.2.1 தருமனின் வாட்டம்
13.2.2 வரும்தகையோர் வந்தனர்
13.2.3. வேதவியாசர் வந்தார்
13.2.4. தருமன் போற்றினான்
13.2.5. வருந்திய காரணம்

13.2.6. கயிலை போக்கினேன்
13.2.7. தோள் இரண்டும் துணை
13.2.8. காரணம் யாதோ?
13.2.9. மன்னர்க்கு இயல்பேகாண்
13.2.10எவரும் உள்ளாரோ?
13.2.11 நகரின் சிறப்பு
13.2.12 மாடங்களின் சிறப்பு
13.2.13 மக்களின் சிறப்பு
13.2.14 கல்லாமிருலர்! இல்லாருமிலர்!
13.2.15 முரணையும் மாவிந்தமும்
13.2.16 நளனின் செங்கோற்சிறப்பு
13.2.17 விதிவழியாகச் சென்றான்
13.2.18 இளவேனில் எதிர்வந்தது
13.2.19 புழுதியவித்த பூத்தேன்
13.2.20 பிடித்துத்தா என்றான்
13.2.21 பிடித்து வந்தனர்
13.2.22 வருத்தமும் கலக்கமும்
13.2.23. தடுமாற்றம் தீர்ந்தது
13.2.24. பொருத்தம் தமயந்தியே!
13.2.25. யாவர் மகளோ?
13.2.26. விதர்ப்பன் பூங்கொடி
13.2.27. பெண்மை அரசு
13.2.28. நூபுரங்கள் புலம்பும்!
13.2.29. இடை நுடங்கும்
13.2.30. மலர்வாளி தீட்டும் இடம்
13.2.31. வாயுடையது என் வாழ்வு
13.3. சோதித்தறியும் வினா – விடைகள் :
13.4. பயிற்சி வினா :
13.5. பொருளறிக :
13.6. மேலும் படித்தறிக.
**கூறு 14: வளையாபதி** **232-256**
14.1 வளையாபதி கதைச்சுருக்கம்
14.2 வளையாபதி – பாடல் விளக்கம் :
14.2.1. அருகன் அடிபோற்றி
14.2.2. அருளாளன் அடிவணங்கி ஆரம்பம் செய்கின்றேன்
14.2.3.நெஞ்சுக்கு நீதி
14.2.4.அரச வாழ்வு அநித்தியமே
14.2.5. மானிடப்பிறவி மத்தானது
14.2.6. உயர்குடிப் பிறப்பு உன்னதமானது
14.2.7. பெண்ணின் ஒருமை
14.2.8. இப்படியும் சில பெண்கள்
14.2.9. மனமே காவல் மகளிர்க்கு
14.2.10. ஆடவர்க்கும் கற்பு நிலை
14.2.11. தாமரை இலைத் தண்ணீர் கற்பிலாப் பெண்கள்
14.2.12. மக்கள் செல்வம் மனைக்கு அலங்காரம்
14.2.13. காக்கக் ….காக்க நா….. காக்க
14.2.14. மனைவியை மதித்தால் மாண்படைதல் நிச்சயம்
14.2.15.பிறர் மனை விரும்பாமையே பேராண்மை
14.2.16.செய்யற்க இவற்றை

14.2.17. பசிப்பிணி போக்குதல் பாரில் மேலான அறம்
14.2.18. எவ்வுயிர்க்கும் அன்பும் அருளும் செய்க :
14.2.19 உயிர்க்கொலை தவிர்ப்பீர்
14.2.20 பொருளோடு அருளும் பெற முயலுக
14.2.21 தவத்திற்கு அடையாளம்
14.2.22 காமத்தின் இயல்பு
14.2.23 கற்பிலாப் பெண்கள்
14.2.24 களவும் பொய்யும் தீதே :
14.2.25 கொல்லாமை கோடி நன்மை
14.2.26 செல்வம் நிலையல்ல
14.2.27 இளமை நிலையானது முதுமை ஒழியாது
14.2.28 வினைப்பிறவிச் சுமை உடம்பு
14.2.29 செல்வம் எல்லாம் தரும்
14.2.30 விளைமகளின் பொருள் பற்று :
14.2.31 இல்லற வாழ்வே இனியது என்றும்
14.2.32 வானுலகு இவர்க்கு வழிவிடும்
14.2.33 குருடுக்குக் குருடு வழிகாட்ட இயலாது
14.2.34 வானுயர வளரும் கரும்பும் கமுகும்
14.2.35 பாசாண்ட சாத்தன்
14.2.36 மாலை வந்தும் மணாளன் வரவில்லை
14.3. சோதித்தறியும் வினா விடைகள் :
14.4. பயிற்சி வினாக்கள் :
14.5. பொருளறிக .
14.6. மேலும் படித்தறிக.
**மாதிரி வினாத்தாள் 257**

# பிரிவு-1 சிலப்பதிகாரம் -அறிமுகம்

தனிப்பாடல்களாகப் பாடிய சங்க இலக்கிய மரபிற்குப் பின்னர் காப்பியங்கள் தோன்றின. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெருங்காப்பியங்களும், யசோதர காவியம், உதயண குமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், சூளாமணி ஆகிய ஐஞ்சிறு காப்பியங்களும் தோன்றின. இருபதாம் நூற்றாண்டில் பாரதியார், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலான காப்பியங்களைப் படைத்தளித்துள்ளார். பாவேந்தர் பாரதிதாசன், பாண்டியன் பரிசு, சஞ்சீவி பருவத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், தமிழச்சியின் கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம் முதலான காப்பியங்களைப் படைத்துள்ளார். இன்றும் தொடர்ந்து பல்வேறு காப்பியங்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

காப்பியங்கள் குறிப்புகள்

**காப்பிய இலக்கணம்**

காப்பியத்தைக் குறிக்கும் 'எபிக்' (EPIC) என்ற சொல் 'எபோஸ் (Epos) என்னும் கிரேக்கச் சொல்லிருந்து தோன்றியதாகும். இக் கிரேக்கச் சொல்லின் பொருள், 'சொல்' அல்லது பாடல் என்பதாகும். கால ஓட்டத்தில் இதன் பொருள் விரிவடைந்து வீரயுகப் பண்பினைக் கருவாகக் கொண்ட நீண்ட வேற்றுவகைப் பாடலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"காப்பியம் ஒரு குறிக்கோளோடு மறைமுகமாக

நல்லறம் வலியுறுத்தி, வாழ்வியலைச் சித்திரித்துக்காட்டுவதே.

இதில் அக்கால மனிதனின் பண்பாடு, பழக்கவழக்கம்,

நாகரிகம் முதலாவற்றைத் தெளிவாக உணரலாம்"

என்பர் பேரா. இரா.காசிராஜன்.

"கதை மட்டும் காப்பியம் ஆக முடியாது; அக்கதையில் மனித சமுதாயத்தின் ஒருங்கிணைந்த பண்பினைக் கொண்டு வருகிறபோதுதான் அது காப்பியமாகிறது"

என்னும் கருத்தைக் காப்பியத்திற்கான வரையறையெனக் கொளல் பொருத்தமுடையதெனலாம். ஜான் கிளார்க் என்பார் 'History of Epic poetry;' என்னும் நூலில் குறிப்பிடும், 'காப்பியம் பேசும் வாழ்க்கை மனித சிந்தனையின் நிறைகருவூலமாக அமைய வேண்டுமென்பதில்லை. இயல்பான மனித வாழ்க்கையை அல்லது மனிதத்துவம் பெற்ற ஒரு வாழ்க்கையைப் பேசுவதே சிறப்பு என்ற கருத்து காப்பியக் கொள்கை விளக்கமாக அமைகிறது.

காப்பியத்திற்கான இலக்கணத்தைத் தண்டியலங்காரம் தெளிவாக வரையறுத்துள்ளது. கடவுள் வாழ்த்தும், சிறப்புடையோர்களுக்கான வணக்கம் தெரிவித்தலும் அமைய வேண்டும். நூலினுள் கூறப்போகும் பொருளின் சாரத்தைக் குறிப்பிடவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு நெறிகளையும் உரைத்திடல் வேண்டும். தன்னேரில்லாத தலைவன் வேண்டும். கோடை, குளிர், பனி, மழை முதலான பருவ காலங்கள் மற்றும் சூரியோதயம், சந்திரோதயம் போன்ற நிலைகளை உரைத்தல் வேண்டும். திருமண நிகழ்ச்சி, முடிசூட்டல், நீராடல், மக்கட்பேறு முதலான நிகழ்வுகளைப் பற்றி உரைத்தல் வேண்டும். தலைவன் தலைவி ஊடலில் புலத்தலும், கலவியிற் களித்தலும் இடம்பெறவேண்டும்.

நல்ல ஒழுக்கநெறியில் மேவி, அமைச்சர்கள் ஆலோசனை வழங்குதல், தூது சென்று செய்திகளை உரைத்தல், போர்புரிந்து வெற்றி நிலை கொள்ளுதல் ஆகியன அமைதல் வேண்டும். சந்தி என்ற வகையில் தொடர்ந்து சுருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பாங்குடன் விளங்கி, எட்டு வகையான சுவையும் அதனால் விரவும் மெய்ப்பாடும் மேவக் கற்றறிந்த புலவர்களால் யாத்து அமையப்பெறுதல் பெருங்காப்பியம் எனப்படும்.

இதனை,

"அவற்றுள்

பெருங்காப் பியநிலை பேசுங் காலை

வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று

ஏற்புடைத் தாகி, முன்வரவு இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்,
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்த்தல் பொன்முடி கவித்தல்
பூம்மொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியல் புலத்தல் கலவியில் களித்தல் என்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவு இகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி

நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்

கற்றோர் புனையும் பெற்றியது என்ப”

என்னும் நூற்பாவால் அறியமுடிகிறது.



# பிரிவு 1:கூறு 1-சிலப்பதிகாரம்,புகார்க்காண்டம்

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது. புகார்க்காண்டம் -10 காதைகள்; மதுரைக் காண்டம் 13 காதைகள்; வஞ்சிக்காண்டம் -7 காதைகள் என அமைக்கப்பட்டுள்ளது. பதிகம், உரைபெறு கட்டுரை, வெண்பா ஆகியனவும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. அரும்பதவுரை என்ற ஒன்றும், அடியார்க்கு நல்லார் எழுதிய உரை என்றும் சிலப்பதிகாரத்திற்கு உண்டு. மேலும் வேறு பல உரைகளும் வெளிவந்துள்ளன.

## புகார்க் காண்டம்

### 1.1 மங்கல வாழ்த்துப் பாடல் (அறிமுகம்)

**காதைச் சுருக்கம்**

திருமண வாழ்த்து என்பது இதன் பொருளாகும். புகார்க்காண்டம் ஆதலாலும், பலர்கூடி ஆடிப்பாடும் இசைப்பாடலாக இக்குழுப்பாடல் அமைந்திருப்பதாலும் இது சோழ மன்னன் வாழ்த்துடன் தொடங்கி அவ்வாழ்த்துடனே நிறைவு பெறுதலாலும் இப்பெயர் பெற்றது. மேலும் திங்கள், ஞாயிறு, மழை, புகார் என்றிவற்றை வாழ்த்துவது போலவும் இது நிகழ்வதால் இதனை இயற்கை வாழ்த்தாகவும், கடவுள் வாழ்த்தாகவும் சான்றோர் பாராட்டுவர். சிலப்பதிகாரம் நாடகக் காப்பியமே என்பதற்கு ஏற்ப, கண்ணகி கோவலன் திருமணமும், திருமண வாழ்த்துமாகிய கதையின் இடைப்பகுதி ஒன்றிலிருந்து காப்பியம் தொடங்குகிறது. ஏனெனில் தலைமை மாந்தர் தம் பிறப்புத் தொடங்கிக் கதை கூறிச் செல்வதே பிற காப்பிய மரபாக அமைந்துள்ளது. மேலும் குழுவினர் தம் ஆடல் பாடலாக இந்நூல் தொடங்குவதும், இதனை ஒரு நாடகம் எனக் கருத இடம் தருகிறது. ஏனெனில் நாடகங்கள் குழுவினர் தம் குழுப்பாடலோடு தொடங்குவது மரபாகும்.

**வாழ்த்து**

“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்

கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்று இவ் அங்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான்.
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்.
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்"

(அடி 1-12)

தேன் பிலிற்றும் மாலையணிந்த சோழனின் குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றைக் குடைபோன்று அழகிய இடத்தையுடைய இவ்வுலகிற்கு அளிசெய்தலான் நாம் திங்களைப் போற்றுவோம்; திங்களைப் போற்றுவோம்;

காவிரி நாடனுடைய ஆட்சிச் சக்கரம்போல், பொற்கோட்டினையுடைய இமயமலையை வலமாக வருதலால் நாம் ஞாயிற்றைப் போற்றுவோம்; ஞாயிற்றைப் போற்றுவோம்.

அச்சம் தரும் கடலாற் சூழப்பட்ட உலகிற்குச் சோழ மன்னன் அளி செய்யுமாறு போல, மாறாது மேலாய் நின்று பெயலால் வளம் சுரத்தலால் நாம் பெரிய மழையைப் போற்றுவோம்; பெரிய மழையைப் போற்றுவோம்!

மிக்க கடலை வேலியாகவுடைய உலகில், அவன் குலத்தோடு உயர்ந்து வளர்ந்து விளங்குதலால், நாம் பூம்புகாரைப் போற்றுவோம்! பூம்புகாரைப் போற்றுவோம்!

**திருமண அழைப்பு**

இக்காலத் 'திருமண அழைப்பிதழ்' போல் இஃதமைந்துள்ளது. முதலில் ஊர்சொல்லி, பின் இன்னார் மக்களாகிய இன்னார் என மணமகள் பெயரும் மணமகன் பெயரும் கூறி இவர்களுக்கு ஒரு பெருநாளில் இருமுது குரவரும், மணவணி காண உறுதி செய்திருப்பதாக மாநகரத்திற்கு மணவினை அறிவிக்கப்படுகிறது.

அங்குச் சோழவள நாட்டிலுள்ள அப்புகார் நகரம் மிகவும் சிறப்பு உடையதாகவும் பொதியமலை இமயமலை (தம்மிடம் வாழும் குடிமக்கள் பெயர்ந்து போகாதவாறு வளம் நிறைந்து தொல்குடியினர் பொருந்தி வாழும் தனிச்சிறப்புடைய) புகார் ஆகிய இவற்றில் உயர்ந்தோர் இருந்து வாழ்தலின் இவற்றைச் சலிப்பின்றியே நிலைபெறுக என வாழ்த்தவல்ல கேள்வியறிவு

முற்றிய முழுதுணர்ந்த சான்றோர் இவற்றிற்கு ஒடுக்கம் உண்டென்று கூறார். அதனால் நாகநீள் நகரமாகிய துறக்கவுலகுடனும் நாகநாட்டுடனும் (பவணம்

எனப்படும் நாகலோகம்) சமமாகப் போகமும் நீண்ட புகழும் நிலைபெற்ற அப் புகார் நகரின்கண் மழைபோல் வழங்கும் கையையுடையமா நாய்கன் குலத்தில் தோன்றிய கொம்பு போலவும் சிறந்த பொற்கொடி போலவும் பன்னிரண்டாண்டு வயதினளாய் அவ்வணிகன் மகளொருத்தி திகழ்ந்தாள்.

அவள், தாமரைப்போதில் இருக்கும் திருமகளுடைய புகழுடைய வடிவு இவள் வடிவை ஒக்கும்; பழுதற்ற அருந்ததியுடைய கற்பு இவள் கற்பை ஒக்கும்; மாதரார் அனைவராலும் தொழுதேத்தப்படுபவள்; விளங்கிய பெருங்குணங்களைக் காதலிப்பவள்; அவள் பெயர் கண்ணகி என்பதாகும்.

அப்புகார் நகரிடத்துப் பெரு நிலவுலகம் ஆளும் பெருமகனாம் கரிகாலனை முதற்குடியாக வைத்து எண்ணுதலுடைய ஒப்பற்ற குடி உயர்ந்தோங்கும் செல்வத்தையுடையவன்; தன்னுடைய வருமானத்தைப் பிறர்க்களித்து நுகரச் செய்யும் மாசாத்துவான் என்பான்; அப்பெருஞ் செல்வனுடைய மகன் பதினாறாண்டு வயதினனாய்த் திகழ்ந்தான்.

அவன் மண்ணுலகைச் சிறிதாக்கிய பெரும்புகழுடையவன் மதி முக மகளிர் தம் பண்ணைத் தேய்த்த மொழி பயிலும் ஆயத்தில் பாராட்டிக் கண்டு ஏத்தித் தொழும் செவ்வேள் என்ற காதற்குறிப்புடன் கொண்டேத்துமாறு தன் புகழைப் பரப்பியவன் கோவலன் என்னும் பெயரையுடையவன்.

அவர்களுடைய தாய் தந்தையர்களாகிய இருமுது குரவர்களும் ஒரு பெரும் நல்ல நாளில் திருமணம் செய்ய நிச்சயித்து மனம் மகிழ்ந்தனர். யானையின் மத்தகத்தின் மீது அணியிழையார் சிலரை அமர்த்தி அவர் வழி மாநகர் மக்களுக்கு இவர் திருமணத்தை அறிவித்து அழைப்பு விடுத்தனர்.

"இருபெருங் குரவரும் ஒருபெரு நாளில்
மணவணி காண மகிழ்ந்தனர்: மகிழ்ந்துழி
யானை எருத்தத்து அணியிழையார் மேல்இரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்" (41-44)

**திருமண நிகழ்ச்சி**

**ஊர்வலம்**

அவ்விடத்து முரசுகள் ஒலித்தன. மத்தளங்கள் ஆரவாரித்தன. சங்குகள் முறையே ஒலித்தன; வெண்கொற்றைக் குடையுடன் அரசன் ஊர் வலம்

போவதுபோல ஊரினுள் மாங்கல்ய சூத்திரமாகிய மங்கலவணி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

**மணச்சடங்கு**



மாவிலைத் தோரணங்கள் தொங்கவிடப்பட்ட உச்சியினை உடையதும் வயிரமும் மணியும் பதித்த தூண்களையுடையதும் ஆகிய மண்டபத்தில் நீலப்பட்டு மேற்கட்டியாகக் கட்டப்பட்டு முத்து பதித்த பந்தரின் கண்ணே திருமணச்சடங்கு நிகழ்வுற்றது.வான்வழிச் செல்லும் மதியம் உரோகிணியைக் கூடும் நல்ல நாளிலே வானகத்து அருந்ததியாகிய விண்மீன் தகைமை பொருந்திய கண்ணகியைக் கோவலன் மணம் செய்து கொண்டான். மாமுது பார்ப்பானாகிய புரோகிதன் வேதநூல் விதிப்படி வழிகாட்டத் தீயைவலம் வந்து திருமணமக்களாய்க் காட்சியளிக்கும் கண்ணகியையும் கோவலனையும் காண்கின்றவர் கண்கள் முற்பிறவியிற் செய்த தவம் எத்தகையது என வியக்கும்படி இருந்தது.

"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து

நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்

வான்ஊர் மதியம் சகடணைய வானத்துச்

சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்

மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத்

தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை!" (48 53)

**மண வாழ்த்து**

ஆடல் பாடல் வல்ல இள மகளிர் பலர் கூடி ஆடிக்கொண்டே கண்ணகி-கோவலன் ஆகிய மணமக்களை வாழ்த்தும் இக்காட்சி நாட்டியக் காட்சிபோல உள்ளது.

மணப் பொருள்களை கையில் ஏந்தியவர்களாய் மலரினராய் விளங்கும் மேனியராய் உரையினராய் பாட்டினராய் ஒசிந்த பார்வையினராய் மகளிர் பலர் வாழ்த்தினர். சந்தனம் ஏந்தியவராய் மணப்புகை தாங்கியவராய் விளங்கும் மாலை அணிந்தவராய் ஏந்தும் இளமார்பினராய் அவர்கள் அசைந்தாடினர் இடித்த சுண்ணப்பொடிகளை ஏந்தியவராய் முளைக்கும் வரிசையுடையராய் முகிழ்ந்த புன்னகையினராய்ப் பூச்சூடி விரித்த கூந்தலினராய் பொற்கொடியினைய மகளிர் கூடி ஆடி வாழ்த்திசைத்தனர்.

"இவளும் காதலனைத் தன் கண்ணினும் நெஞ்சினும் பிரியாமல் புணர்வாளாக! இவள் காதலனும் இவளைத் தழுவிய கை நெகிழாமல் புணர்வாளாக! இவர்கள் தீது அற வாழ்க" என அவர்கள் ஏத்திப் பாராட்டிச் சில மலர்களைத் தூவி வாழ்த்தினர்.



"காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்

தீது அறுக என ஏத்திச் சின்மலர் கொடுதூவி

அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை

மங்கல நல்லமளி ஏற்றினார்."

இவ்வாறு அங்கண் உலகின் அருந்ததி போல்வளாகிய கண்ணகியை மங்கல அமளியில் ஏற்றினார். "இமயத்தின்கண் வென்று பொறித்த வேங்கைச் சின்னமானது பொற்கோட்டு இமயத்தின் மேலேயே விளங்குவதாக எப்பாலும் போர்மேம்பட்ட வேலையுடைய கரிகாலன் மாறில்லாத தன் திகிரியை உருட்டுவோனாக!" என்ற அரச வாழ்த்துடன் அவர்கள் ஆடல் பாடல்கள் முடிவுற்றன.

## 1.2. மனையறம்படுத்த காதை

### காதைச் சுருக்கம்

கோவலன் தாய் தன் மகனையும் மருமகளையும் தனியே இல்லறம் நடத்துமாறு வேண்டுவன அளித்து வழிப்படுத்துதலே மனையறம்படுத்தலாகும். முதற்காதையில் மங்கல நல் அமளியில் கண்ணகியை அவள் தோழியர் ஏற்றியதைக் காணமுடிந்தது. என்று கண்டோம். இங்கு எழுநிலை மாடத்தின் இடைநிலத்தில் மணிக்கால் அமளிமேல் இருந்து அவ்விருவரும் தம்முள் கூடியின்புற்றதும் அப்போது கோவலன் கண்ணகியை நலம் பாராட்டிப் புகழ்ந்ததும் கோவலன் தாய் அவர்களை மனையறம்படுத்தி வாழ வைத்ததுமாகிய செய்திகள் முறையே கூறப்படுகின்றன.

### கோவலனும் கண்ணகியும் கூடி இன்புறுதல்

புகார் நகரம் புகழமைந்த சிறப்பினையும் அரசு விழையும் செல்வத்தினையும் உடைய பரதவர்கள் மிகுதியாக வாழும் பணன் மிக்க மாநகர். அங்கு அக் கடலோடிகளாம் வணிகர்கள் மரக்கலங்கள் மூலமாகவும் வண்டிகள் மூலமாகவும் (நீர் வழியும் நில வழியும்) ஈட்டித் தருதலானே அரும் பொருள்களையெல்லாம் தரும் புதிய பிற தேயங்கள் அனைத்தையும் ஒருங்கு வந்து கூடினாற் போன்று அந்நாட்டுப் பண்டங்கள் எல்லாம் ஒருங்கே குவிக்கப்பட்டுக் கிடக்கும். எனவே அந்நகரம்,

"முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்

வழங்கத் தவாஅ வளத்து ஆகித்" (3-4)

திகழ்ந்தது. கடலாற் சூழப்பட்ட உலகம் முழுவதும் வருமாயினும் அதற்கு வழங்க வழங்க மேன்மேலும் வளம் சுரக்கும் நகரம் அது.அங்கே தம்குல ஒழுக்கத்திற் குன்றாத பெருஞ் செல்வருக்கு மக்களாகப் பிறந்தோர்

காப்பியங்கள்

குறிப்புகள்

கோவலனும் கண்ணகியும், அரியதானம்தவம் முதலியவற்றைச் செய்தோர் சென்றெய்தும் உத்தரகுரு எனப்படும் போக பூமியினை ஒக்குமாறு தோன்றிய சிறந்த குடியில் கண்ணகியும் அவள் காதலனாகிய கொழுநனும் மயன் என்ற தெய்வத்தச்சனால் செய்யப்பட்டது போன்ற மணிக்கால் அமளி மிசை ஏறி அமர்ந்திருந்தனர். அவர்கள் நெடுநிலை மாடமாகிய எழுநிலை மாடத்தின் இடைநிலமாகிய நான்காம் மாடத்தில் இருந்தனர்.

**வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்**

கழு நீர் ஆம்பல் இதழ் ஒடியாத குவளை அரும்பாயிருந்து சுரும்பு ஒலிக்குமாறு கட்டவிழ்ந்த தாமரை ஆகிய நீர்ப்பூக்களுடன் வயற்பூக்கள் ஆகியவற்றின் மணம் கலந்து தென்றல் வீசியது. அதன் அயலதாகிய கோட்டுப் பூக்களில் மேன்மை பொருந்திய தாழையின் பிரிந்த வெள்ளிய தோட்டினையும் மாலைபோல் பூத்துக் குலுங்கும் மாதவினையும் சண்பகம் பூத்து நிறைந்த பொதும்பரினையும் சென்று தேடித் தாதுண்டது அத்தென்றல். ஒளிபொருந்திய முகத்தினையுடைய மாதர்களின் கடை குழன்ற நெளியமைந்த கூந்தலில் புக முயன்று இயலாமையின் ஏக்கற்றுச் சுழல்கின்ற சுரும்பொடும் செவ்வி பார்த்துத் தென்றல் வீசத் தொடங்கிற்று.

மணித்தாமத்தாலே மணிப்போல் வரிசையாகத் தொங்கவிடப்பட்ட அழகிய சாளரத்தின் சிறிய கண்கள் வழியே நுழைந்து வண்டுகளுடன் புகுந்து மணத்தைத் தன்னிடத்தே உடையது அத்தென்றல்.

"கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை
அரும்பொதி அவிழ்ந்து சுரும்புஇமிர் தாமரை
வயற்பூ வாசம் அளைஇ: அயற்பூ
மேதகு தாழை விரியல் வெண்தோட்டுக்
கோதை மாதவி சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந்து உண்டு: மாதர் வாள்முகத்துப்
புரிகுழல் அளகத்துப் புகல் ஏக்கற்றுத்
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்து
கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்".

அதனைக் கண்டு அவர்கள் மகிழ்வெய்திக் காதல் உணர்வு மிகப்பெற்று மேன்மாடம் சென்றனர். மணமலர்களாகிய அம்புகளுடன் மாரனாகிய வேனிலான் வீற்றிருப்பதும் வரிசைப்படுத்தி வைத்ததுமான மாளிகையின் மேலேயுள்ள நிலாமுற்றத்தை அவர்கள் அடைந்தனர்.

அங்குச் சுரும்புகள் உண்பதற்கு விரித்து வைத்தாற் போன்ற

நறும்பூக்களையுடைய சேக்கைக் கண்ணேயிருந்து கரும்பினையும் வல்லினையும் (வல்லிக்கொடி) அவளுடைய பெரிய தோள்களிலே தீட்டித் தொய்யில் எழுதினா். முதிா்ந்த கடலாற் சூழப்பட்ட உலகம் முழுவதையும் விளக்கும் ஞாயிறும் திங்களும் ஒருங்கிருந்த காட்சிபோலக் கோவலனும் கண்ணகியும் விளங்கினா். வண்டுகள் வாய்க்கண் புரி நெகிழ்க்க நெடுநிலாவில் மலா்ந்த வெள்ளிய தோட்டினையுடைய மல்லிகையின் மலா்களாகிய மாலையுடன் செங்கழுநீா் மாலையின் இதழ் ஒடியாத முழு நெறிகள் சிதையக்கோவலனது தாரும் கண்ணகியது மாலையும் கலந்து மயங்கிடச் செயலற்றுக் கூடி மகிழ்ந்தனா்.கோவலன் தீராத காதலுடன் கண்ணகியின் திருமுகத்தைப் பாா்த்து தன் அறிவு முதலியவற்றைக் குறியாத ‘நலம் பாராட்டல்’ என்னும் பொருள் பொதிந்த உரையைக் கூறுவானாயின்.

**கோவலன் கூறிய குறியாக் கட்டுரை**

‘இளம்பிறை தேவா்கள் ஏத்தும்படியாக அழகு செய்தற் பொருட்டுச் சிவபெருமானால் சூட்டப்பட்ட அருமை உடைத்தெனினும் நின்னொடு உடன் பிறந்த உரிமையுடைமையின் அதனை அவன் நினக்குத் திருநுதலாகத் தரக்கடவன். (இலக்குமியுடன் பாற்கடலில் உடன் பிறந்தது பிறை இவண் கண்ணகி இலக்குமியாகப் பேசப்படுகிறாள்).

போா்க்களத்தே தம்மை மேம்படுக்கும் பகைவருக்குப் பெருவீரா்கள் தம் படைக்காலத்தைக் கொடுத்துப் போா் செய்யச் சொல்லும் ஊராண்மையாம் பண்புண்டாதலின் அதனை ஒப்ப உருவிலாளனாகிய காமன் தன் ஒப்பற்ற பெரிய கரும்பு வில் ஒன்றையும் நினக்கு இரு கரும்புருவங்களாகத் தரக் கடமைப்பட்டுள்ளான்.

இமையவருக்கு மரணம் மூப்பு இன்மையை அளிக்கும் அமிழ்தத்தின் முன்னே நீ (இலக்குமியாகப்) பிறந்தலான் இந்திரன் தேவரைக் காத்தற்காக எடுத்த வச்சிரப்படையை நினைக்குத்தர அதனால் அமைந்த நின் இடையும் மெலிவும் வலிவும் உடையதாய் அமைந்தது.

இங்ஙனம் நினக்குத் தர வேண்டிய காரணம் எதுவும் இல்லையாயினும் முருகவேள் தன் கையிலுள் அழகிய சுடரையுடைய வேல் ஒன்றையும் யான் இறந்து படும் முறையைக் காணும் தன்மையால் அன்றோ நின்முகத்துச் செவ்வரியோடிய மழைக்கண்கள் இரண்டாக அளித்தனன்.

நன்னுதால் (நல்ல நெற்றியினளே)! கரிய பெரிய தோகையினையுடைய நீலமணி நிறமமைந்த மயில் நின் சாயலுக்குத் தோற்றுக் காட்டிடத்தே போய் ஒடுங்கியது. அன்னம் நின் நடைக்குத் தோற்று நல்ல நீா் நிலையிடத்தேயுள்ள நெருங்கிய மலா்களிடையே மறையவும் சிறிய பசிய கிளிகள் மட்டும் குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலைப்

பேச்சுக்குத் தோற்று வருந்தி நின் மலர்களையை விட்டு நீங்க மாட்டாதனவாயின.

“மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்
அன்னம் நன்னுதால்! மென்னடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்
அளிய வாமே சிறுபசுங்கி ளியே
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாதுநின் மலர்க்கையின் நீங்காது
உடனுறைவு மரீஇ ஒருவா வாயின!”. (53-61)

நறுமலர் சூடிய கோதையே! நின் அழகை ஒப்பனை செய்பவர் நினக்குக் குற்றமற்ற மங்கல அணியே போதுமானதாயிருக்கவும் பிற அணிகளை அணிவித்தது ஏனோ! பலவாகிய கரிய கூந்தலில் சில மலர்களைச் சூடுவதே போதுமானதாக இருக்கவும் ஒளி விரிக்கும் மாலையை அணிவிக்க அவர்களுக்கு அம்மாலையோடு உண்டாகிய உறவு என்ன?

நின் கூந்தலுக்கு நெய்யையுடைய நல்ல அகிற்புகையேயல்லாமலும் மான்மதச்சாந்தாகிய கத்தூரியை அணிய அவர்களுக்கு என்ன தேவை வந்தது?

மார்பகத்தே தொய்யில் எழுதுவதே அழகூட்டுவதாக இருக்கவும் தனி முத்துவடத்தைப் பூட்டுவதற்கு அதன்பால் அவர்கள் கொண்ட உரிமைதான் யாதோ?

இயற்கையழகே சிறப்பாயிருக்கவும் திங்கள் முகத்தே சிறு வியர்வை முத்தரும்பவும் சிறுகிய இடை வருந்தவும் அவர்கள் இங்கு இவற்றையெல்லாம் அணிவிக்கலாயினர். இவர்களுக்கு என்ன வந்துற்றதோ தெரியவில்லையே!

கண்ணுக்கு இனிமையான மாசற்ற பொன்னை ஒப்பாய்! ஊற்றின்பத்தால் முத்தைப் போல்வாய்! உயிர்த்து நுகரும்போது தரும் இனிமையால் குற்றமற்ற மணத்தை ஒப்பாய்! சுவை இனிமையால் கரும்பை ஒப்பாய்! இனியமொழி பேசுவதால் செவிக்குத் தேனைப் போல்வாய்!

பெறுதற்கரிய பாவையே! ஆருயிர் மருந்தே! பெருங்குடி வணிகன் இள மகளே! நின்னை மலையில் பிறவாத மாணிக்கம் என்பேனா? அலைகடலிற் பிறவாத அமிழ்தம் என்பேனா? யாழில் பிறவாத இசை என்பேனா? நீண்டகரிய கூந்தலையுடையவளே நின்னை யான் எங்ஙனம் பாராட்டுவேன்?

“மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!

காசறு விரையே! கரும்பே! தேனே!

அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே!

பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!

மலையிடைப் பிறவா மணியே என்கோ!

அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!

யாழிடைப் பிறவா இசையே என்கோ!

தாழிருங் கூந்தல் தையால் நின்னை" (73-80)

எவ்வளவு பாராட்டினாலும் முடிவு என்பதில்லாத பொருள் பொதிந்த புகழுரைகளால் இவ்வாறு கோவலன் கண்ணகியைப் பாராட்டினான்.விளங்குமலர்த் தாரோனாகிய கோவலன் தயங்கு மலர் மாலையினளாகிய கண்ணகியுடன் வாழ்ந்து வருகிற காலத்தில் ஒருநாள் (அவர்கள் இல்லறத்தைக் கடைப்பிடித்தாற் பொருட்டுப் பெரிய குடும்பத்தை விட்டுப் பிரித்துத் தனிக்குடும்பமாக வேறு வைக்கப்பட்டனர்) இல்லக்கிழத்தியான கண்ணகியின் மாமியார் (கோவலன் தாய்) நீண்ட தழைத்த கூந்தலுடைய கண்ணகியை மறவாமல் செய்தற்குரிய சுற்றம் தழுவுதலையும் துறவோரைப் பேணும் உபசாரத்தையும் விருந்து புறந்தருதலையும் மேற்கொள்ளத் தக்க இல்லற வாழ்க்கையில் ஈடுபடுத்தினார். இங்ஙனம் பலவிதமான செல்வத்தோடு அவ் இருவரும் பெருஞ் சிறப்புறுதலைக் காண உரிமைத் திரளாகிய வேலையாட்களுடன் தனியறம் பேணுமாறு செய்தனர். காட்சிக்குத் தகும் சிறப்பினையுடைய கண்ணகி தனக்கு இவ்வாறு இல்லறமாகிய நல்வாழ்வின்கண் யாண்டுகள் சில கழிந்தன.

இன்பம் துய்க்கும் பாம்புகள் (பணிகள்) தம்முள் ஒன்றிக் கூடினாற் போலத் தம்முள் ஒருவரை ஒருவர் பிரியாராய்க் கோவலனும் கண்ணகியும் காமனும் இரதியும்போற் கைபிணைத்து அழகுகெடாத இன்பமனைத்தையும் துய்த்தனர். உலக நிலையாமையை உணர்ந்தவர்கள் உள்ளபோதே இன்பம் துய்த்துவிட வேண்டும் என விரைவதே போல அவர்களும் இன்பம் துய்த்தனர்.

## 1.3 சோதித்தறியும் வினாக்கள்

1. கோவலனும் கண்ணகியும் திருமணம் நிகழ்ந்த வகையினைத் தொகுத்துரைக்க.

   விடை : திருமண நிகழ்ச்சி, வாழ்த்து ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகளை எழுதுக.

2. ‘ இயற்கை வருணனையில் சிறந்தவா் இளங்கோ’ இதனை தென்றல் வருணனை கொண்டு நிறுவுக.

விடை : வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் என்று தலைப்பில் அமைந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**காப்பியங்கள்**

**குறிப்புகள்**

3. கண்ணகியை நோக்கிக் கோவலன் கூறிய குறியாக் கட்டுரைகள் யாவை?

விடை : கோவலன் கூறிய குறியாக் கட்டுரை என்ற தலைப்பில் அமைந்த செய்திகளை எழுதுக.

## கூறு-2 2.1 அரங்கேற்றுக்காதை



**கதைச்சுருக்கம்**

காவிரிப்பூம்பட்டினத்தில் கணிகையர் குலத்தில் உதித்த மாதவி ஆடல், பாடல், அழகு என்ற மூன்றிலும் சிறந்தவள். ஐந்தாண்டு தொடங்கி ஆடற்கலை பயின்று சிறந்த அவள் தன் பன்னிரண்டாவது வயதில் அரசன் முன் அரங்கேறிச் சிறப்புப் பெற்ற செய்திகளைக் கூறுகிறது இக் காதை.

**ஆடல் பாடல் அழகுகள்**

இந்திர சிறுவனோடு சாபம் நீங்கப்பெற்ற உருப்பசியின் மரபில் தோன்றிய மாதவி குன்றாப் பிறப்பு உடையவள்; ஆடல், பாடல்,அழகு என்ற மூன்றிலும் குறைவு இல்லாதவள்; தன் ஐந்தாவது வயதிலிருந்து பன்னீராவது வயதுவரை (ஏழாண்டுகள்) கற்ற கலையறிவு கொண்டவள். அவள் அரசன் அவையில் அரங்கேற விரும்பினாள்.

**ஆடலாசிரியரின் அமைதி (இலக்கணம்)**

ஆடலாசிரியரின் அகக் கூத்து புறக்கூத்து என்ற இருவகைக் கூத்தின் இலக்கணமும் அறிந்தவன். அல்லியம் முதல் கொடுகொட்டி ஈறாகக் கிடந்த பதினொரு கூத்துக்களையும் அவற்றின் பாட்டுகளையும் அவற்றின் வாத்தியங்களையும் கூறுகளையும் நூலின் வழியே நன்கு அறிந்தவன். ஆடல் பாடல் தாளத்தின் வழியே வருகின்ற தூக்கு ஆகியவை தம்மிற் கூடிவருமாறு தாளம் நிகழ்த்தும்போது பிண்டியும் பிணையலும் புறக்கூத்துக்கு உரிய கை என்றும் எழிற்கையும் தொழிற்கையும் அகக் கூத்துக்குரிய கை என்றும் கொள்ளும் வகை அறிந்தவன். அகக் கூத்தில் ஒற்றையில் செய்த கை இரட்டையில் புகாமலும், இரட்டையில் செய்த கை ஒற்றையில் புகாமலும் புறக்கூத்தில் ஆடல் நிகழும் போது அவிநயம் நிகழாமலும் அவிநயம் நிகழும் போது ஆடல் நிகழாமலும் காக்கும்

திறனுடையவன்; குரவையும் வரியும் தம்முள் விரவாதபடி செலுத்துதற்குரியவன். இத்தகுதிகளை உடைய ஆடலாசிரியன் ஆடவும் ஆட்டுவிக்கவும் வல்லவனாயிருந்தான்.

**இசையாசிரியரின் அமைதி**

இசையாசிரியனோ யாழ்ப் பாடல், குழல் பாடல், மிடற்றுப் பாடல், தாளங்கள், தண்ணுமை, கூத்துகள் ஆகியவற்றில் வல்லவன். இவை சேர்ந்த உருக்களை இசையுடன் புணர்க்கவும் வல்லவன். நான்கு இயக்கத்தையும் தேசாந்திரங்களின் மொழிகளையும் தேசாந்திர மொழிகளின் இசையையும் நன்கு உணர்ந்தவன். பாடல் இயற்றிய கவியின் குறிப்பும் நாடகப் புலவனின் ஈடும் வரவும் குற்றமற்ற நூல் வழக்கால் வகுக்கவும் வல்லவன்.

அதற்கு இசைப்புலவன் தளரா இயல்பினனாய் இருந்தான்.

**கவிஞன் அமைதி**

பாடல் இயற்றும் கவிஞனோ முத்தமிழும் கற்றுத் துறை போகியவன். நாட்டிய நன்னூல் நன்கு கற்றவன். இசைப் புலவன் ஆளத்தி வைத்த தன்மையைத் தன் கவியிலே வைக்க வல்லவன். வசை மொழியற்ற கவிதை செய்யும் திறமுடையவன்.

**தண்ணுமை (முழவு) ஆசிரியன் அமைதி**

ஆடல்,பாடல், இசைத் தமிழ் ஆகியவற்றை நன்கு உணர்ந்தவன் தண்ணுமை ஆசிரியன் அவன் பண்ணும் தாளமும் தூக்கமும் இவற்றில் அமையும் குற்றங்களும் நால்வகைச் சொல் வழக்கும் குற்றமற உணர்ந்தவன். யாழ் குழல் கண்ட பாடல்கள் இசைந்து நடக்குமாறு தண்ணுமையைச் சேர வாசிக்க வல்லவன். பிற கருவிகளின் குறையை நிரப்பவும் மிகுதியை அடக்கவும் வல்லவன். கைத் தொழில் அழகுறச் செய்வதிலும் சிறந்தவன்.

**குழலாசிரியன் அமைதி**

குழலாசிரியன் சித்திரப் புணர்ப்பும் வஞ்சனைப் புணர்ப்பும் அறிந்தவன். பாடல் ஆசிரியனை ஒத்த அறிவினையுடையவன். நூற்று மூன்று பண் நீர்மைகளையும் தம் நிலைகுலையாமல் காட்ட வல்லவன். அரும்பாலையும் மேற்செம்பாலையும் இவைபோல அல்லாத பிற பாலைகளையும் இணை நரம்பு தொடுத்துப் பாடும் அறிவினையுடையவன். தண்ணுமை முதல்வனோடு பொருத்தி இசைக்காரன் பாடிய பாட்டின் இயல்பை ஒற்றிப் பண்ணிலக்கணம் பதினொன்றையும் நிரம்பவைத்துக் குற்றம் பொருந்தாமல் குழல் இசைத்துக் காட்ட வல்லவன்.

**யாழாசிரியன் அமைதி**

செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப் பாலை, அரும்பாலை, கோடிப் பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை எனப்பட்ட ஏழு பாலையினையும் அறிந்தவன். இணை நரம்பு தொடுத்து நிறுத்திக் காட்ட வேண்டி உழை குரலாகச் செம்பாலை ஆயிற்று; கைக்கிளை குரலாகப் படுமலைப் பாலை ஆயிற்று; துத்தம் குரலாகச் செவ்வழிப்பாலை ஆயிற்று; குரல் குரலாக அரும்பாலை ஆயிற்று; தாரம் குரலாகக் கோடிப்பாலை ஆயிற்று; விளரிக்

குரலாக விளரிப்பாலை ஆயிற்று; இளி குரலாக மேற் செம்பாலை ஆயிற்று; யாழிடத்து அரும்பாலை முதலியன இடமுறை மெலிந்தன. குழலிடத்துக் கோடிப் பாலை முதலியவை வலமுறை மெலிந்தன.இவ்வாறாகிய வலிவு மெலிவு முதலியன விளங்குமாறு நரப்புடைவு கெடாமல் பண்தன்மை குன்றாமல் எழுத்தால் இசை செய்ய வல்லவன் யாழாசிரியன்.

**அரங்க அமைதி**

சிற்ப நூலாசிரியா் வகுத்த குற்றமற்ற ஒரு நிலம் அரங்கிற்காக வகுத்துக் கொள்ளப்பட்டது. புண்ணியமலையில் தோன்றிய கண்ணுக்குக் கண் ஒரு சாண் என வளா்ந்த மூங்கில் கொண்டு இருபத்து நான்கு விரல் அளவிலானதாக நறுக்கி அளவுகோல் செய்யப்பட்டது.அரங்கு அக்கோலால் எழுதுகோல் அகலம் கொண்டது.எண் கோல் நீளம் கொண்டது.ஒரு கோல் குறட்டு உயரம் கொண்டது. உத்தரப் பலகைக்கும் தளப்பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு கொண்டது. அவ்வளவுக்கேற்ப இருவாயில் கொண்டது. நால்வகை வருணபூதங்களையும் மேனிலத்தே எழுதி வைத்து தூண்களின் நிழல் நாயகப்பத்தியிலும் அவையிலும் படாதவாறு விளக்கை நிறுத்தி ஒரு முக எழினி (திரை), பொருமுக எழினி, கரந்துவரல் எழினி ஆகியவற்றை வகுத்துச் சித்திரவிதானமும் அமைத்து முத்து மாலையும் சரிகையும் தாமமும் தொங்க விட்டுச் செய்யப்பட்டது அரங்கு.

**தலைக்கோல் அமைதி**

புறமுதுகிட்ட பகையரசின் கொற்றக்குடைக்காம்பு கொண்டு கணுத் தோறும் நவமணி கட்டி பொன் தகடு பூட்டி அக்கோலை இந்திரன் மகன் சயந்தனாக எண்ணிப் பூசித்துக் காப்பமைக்கப்பட்டது தலைக்கோல். அக்கோல் ஆடலாசிரியா் முதலாயினோா் புண்ணிய நதிகளில் முகந்து வந்த குடநீரால் முழுக்காட்டி மாலை சூட்டி நன்னாளில் அரசு யானையின் கையில் தர முரசு முழங்க அரசன் முதலாயினோா் உடன் வர நகா்வலம் செய்து அதன்பின் அரங்கின்கண் நிறுத்தப்பட்டது.

**மாதவி ஆடுதல்**

அரசனும் பிறரும் தத்தமக்கு தக்க இருக்கைகளில் அமா்ந்தனா்.

குயிலுவ

மாக்கள் நெறிப்பட நின்றனா். மாதவி வலக்காலை அரங்கின் கண் வைத்து ஏறினாள்.வலப்பக்கத் தூணைச் சாா்ந்து நின்றாள். தேரிய மடந்தையா் இடப்பக்கத்துத் தூணைச் சாா்ந்தனா். ஓரொற்று வாரம் ஈரொற்றுவாரம் என்ற தெய்வப்பாடல்கள் இரண்டையும் பாடினா். பாடிய தெய்வப்பாடலின் இறுதியிலே குயிலுவக் கருவிகள் எல்லாம் கூடி நின்று இசைத்தன.

“குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே முழவொடு

கூடிநின்று இசைத்தது ஆமந் திரிகை” (139-142)

மேற்சொன்ன குயிலுவக் கருவிகள் யாவும் பருந்தும் நிழலும்போல் ஒன்றாய்

நின்றன. மாதவி பதினொரு பற்றால் தேசிக் கூத்தை ஆடினாள். அந்தரக்கொட்டும் முகமும் ஆகியவற்றை ஆடி முடித்தாள். பாலைப் பண்ணை ஆளத்தியில் வைத்துப் பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தினாள். தேசியின் கூறுகளெல்லாம் ஆடி முடித்தாள். மார்க்கக்கூத்தையும் தேசிக் கூத்தினைப் போல் இரட்டிக்கிரட்டியாக ஆடிக்காட்டினாள். பொன்னால் இயன்ற பூங்கொடி ஒன்று ஆடியது போல் நாட்டிய நூல்களை நன்கு கடைப்பிடித்து ஆடிக்காட்டினாள்.

**மாதவி பரிசு பெறுதல்**

குற்றமில்லாமல் ஆடினாள் கோதை ஆதலின் காவலின் பச்சை மாலையுடன் தலைக்கோற் சிறப்பும் பெற்றாள்.தலை அரங்கு ஏறித் தலைவரிசை எனப்பெயர் பெற்ற ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரிசமாகப் பெற்றாள்.

“ஆயிரத்தெட்டுப் பசும்பொன்னை பெறுவது இம்மாலை. இம்மாலையை வாங்குபவர் நம் மாதவிக்கு மணமகனாதல் கூடும்” என்று சொல்லி மான்போன்ற நோக்கினை உடையகூனியின் கையில்கொடுத்துச் செல்வர் உலாவரும் வீதியில் நிறுத்த, மாதவியின் பரிசமலையைக் கோவலன் வாங்கினான்.கூனியுடன் மாதவியின் மணமனை புகுந்தான்.அவளை நீங்க முடியாத விருப்பினன் ஆயினான்; மாசற்ற தன் மனைவியையும் மறந்தான்.

“மாமலர் நெடுங்கண் மாதவி மாலை

கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு

மணமனை புக்கு மாதவி தன்னொடு

அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி

விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்

வடுநீங்கி சிறப்பின்தன் மனையகம் மறந்தென்.” (170-175)

**வெண்பா**

“எண்ணும் எழுத்தும் இயல்ஐந்தும் பண்நான்கும்

பண்ணின்ற கூத்துப் பதினொன்றும்- மண்ணின்மேல்

போக்கினாள் பூம்புகார்ப் பொற்கொடி மாதவிதன்

வாக்கினால் ஆடரங்கின் வந்து”

பூம்புகாரில் பிறந்த பொற்கொடி மாதவி.ஆடுகின்ற அரங்கிலே வந்து தோன்றிக் கலைகட்குக் கருவியாக எண்ணும் எழுத்தும் இயல் தமிழும் இசைத் தமிழும் நாடகத் தமிழின் நயமும் தன் வாக்காலும் கூத்தாலும் உலகெல்லாம் அறிந்து உயர்த்தும்படி அரங்கேற்றினாள்.

**அரங்கேற்றுக்காதை**

அக்காலத்து நாடக அரங்கமைப்பு எவ்வாறு இருந்தது என்பதை உணர்த்துகிறது. அரும்பத உரைகாரரும் அடியாருக்கு நல்லாரும் இக்காதையின் உரையிலே இசை கூத்துகள் பற்றிய எண்ணற்ற விளக்கம் இயம்புகின்றனர்.எனவே தமிழிசை கூத்துகளின் வற்றாத ஊற்றென்று இக்காதையைக் கருதலாம்.

## 2.2 அந்திமாலைச் சிறப்புச் செய் காதை

மாதவியின் மகிழ்வையும் கண்ணகியின் கவலையையும் முரண்பட்ட இரு ஓவியங்களாகத் தீட்டுகிறது அந்திமாலைச் சிறப்புச் செய்காதை.

பெருங்காவியத்திற்குரிய சிறுபொழுது வருணனையும் இதில் அமைகிறது.

**மண்மகள் புலம்பல்**

மாலைப்பொழுது வந்தது. "விரிகதிரால் உலகாண்ட உரவோனைக் காண்கிலேன். அழகிய வானத்தில் நிலவு சிரிக்கும் என் திங்கட்செல்வனையும் காண்கிலேன். அவன் எங்கு உள்ளானோ?" என்று திசைமுகம் எல்லாம் பசலை அடைந்து கண் நீர் துளிர்த்து அமய் பனித்துக் கடலாடை உடுத்திய நிலமடைந்தை கணவனைக் காணாது நெஞ்சு கலங்கிப் போனாள்.

**மாலைப்பொழுது வந்த நிலை**

பெருவேந்தர் இல்லா இடமறிந்து புதிதாய்ப் புகுந்த குறுநில மன்னர் வரி செலுத்தும் குடிமக்களைத் துயருமாறு அழித்தல்போல மாலைப் பொழுது வந்தது.

துணைவரைப் பிரிந்த மகளிர் துன்பம் எய்தினர்.காதலர் புணர்ந்தோர் களிப்பு எய்தினர். இடையர் குழலிலும் இளந்தும்பிகள் முல்லையிலும் வாய் வைத்து ஊதிட அரும்பில் பூட்டிய வாசத்தைத் தென்றற் செல்வன் தெருவெல்லாம் தூற்றினான்.மகளிர் மணிவிளக்கேந்தினர்.புகாரில் புன்மாலைப் பொழுது புகுந்தது.

**மாதவி நிலை**

மல்லிகை முல்லை மற்றும் பல மலர்கள் விரித்த அமளியிலே நிலவுப்பயன் கொள்ளும் நிலா முற்றத்திலே மேகலை அசைய மாதவிகலவியும் புலவியும் தன் காதலனுக்கு அளித்தாள். குலைந்த ஒப்பனையை மீண்டும் கோலமாக்கிக் கொண்டாள். மாதவி மட்டுமன்றிக் கணவனைக் கூடிய பிறமகளிரும் அகிற்புகையை வெறுத்தனர்.சந்தனத்தை நாடினர். தாமரை குவளை செங்கழுநீர் பச்சிலைப் படலை முத்தாரம் சுண்ணப்பொடி ஆகியவை சிந்திக்கிடந்த வளமிக்க அணையிலே தம் காதலர் மார்பில் பொருந்திக் காவிக்கண்கள் குவிந்தனர்.களித்துயில் எய்தினர்.

**கண்ணகி நிலை**

கண்ணகிக்கோ சீறடிகள் சிலம்பு மறந்தன.மெல்லிடை மேகலை

மறந்தது.மதிமுகம் வியர்வு மறந்தது.கயல்விழிகள் மை மறந்தன.நெற்றி திலகம் மறந்தது.கூந்தல் நெய் மறந்தது. கொங்கை குங்குமம் மறந்தது.கற்பின் செல்வி மங்கல அணியின்றிப் பிறிதணி மறந்தாள். வடிந்துவீழ் காதின் நெடுங்குழை துறந்தாள்.

“அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்க
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியின் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி”.

கண்ணகியின் இத்துணை இழப்பையும் கூறிய இளங்கோ கோவலனது இழப்பை ஒரே அடியில்

“தவள வாள்நகை கோவலன் இழப்ப”

என்று ஆழமும் நயமும் செறிய உரைத்துவிடுகிறார்.

**பிரிந்த மகளிர் நிலை**

கையறு நெஞ்சத்துக் கண்ணகி மட்டுமன்றிக் காதலரைப் பிரிந்த பிற மாதரும் ஊதுலைபோல் நெஞ்சம் வெய்து உயிர்த்தனர். அம் மாதர் கூதிர்ப்

பள்ளியின் குறிய சாளரத்தினையும் அடைத்து மூடினர்.உலவு தென்றலும் நிலவும் உள்ளே புகாதிருக்க முத்தும் சந்தனமும் மறந்தனர்.பூத்த குவளையும் பிற மலரும் பூஞ்சேக்கையில் பொருந்தவில்லை.அன்னத் தூவியின் அணையிலே அன்புத்துணைவர் இல்லாமையால் துயிலாமல் துன்புற்றனர்.முன்பு ஊடலின் பொழுதும் தம் கணவரின் கலங்காத நெஞ்சமும் கலங்கச் செய்த காவிக்கண்கள் இப்போது கண்ணீர்ச்சரம் தொடுத்தன.

**காமன்வாசல்**

அன்ன நடை தாமரைவாய் அறல்கூந்தல் ஆகியவற்றை உடைய பொய்கையாகிய மங்கை வண்டுகளின் பள்ளியெழுச்சி கேட்டுக் குவளைக் கண் விழிப்பாள். பறவை முரசுபோல ஒலிக்கும்.சேவலும் சங்கமும் மாறி மாறி ஒலித்து ஊரைத் துயில் எழுப்பும்.இவ்வாறு செய்து இருளை விரட்டி

விடியலைத் தோற்றுவிக்கும் அளவும் நள்ளிரவு முழுவதும் மன்மதனின் ஆட்சிதான். அவன் இமைப்போதும் இமை மூடுவதில்லை. கரும்புவில்லும் கள் மலர் அம்பும் மகரக்கொடியும் ஏந்தியபடி அக்காமதேவன் இரவெல்லாம் திரிவதால் புகாரில் காவல் சிறந்தது.

**வெண்பா**

"கூடினார் பால்நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே-கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும் கங்குற் பொழுது."

நண்பர்க்கு நிழலும் பகைவர்க்கு வெம்மையும் தருகின்ற சோழன் குடைபோல, வானூர்தி மதியம் மாதவிளக்குத் தண்மையும், கண்ணிக்கு வெம்மையும் தந்தது.

## 2.3 சோதித்தறியும் வினாக்கள்

1. அரங்கேற்றுக் காதையில் கூறப்படும் கலைத் தொடர்பான செய்திகள் யாவை?

   விடை: ஆடல் பாடல் அழமுருகன் முதல் தலைக்கோல் அமைதி வரையிலான பகுதிகள்.

2. மாதவியின் ஆடற்திறம் பற்றி எழுதுக.

   விடை மாதவி ஆடுதல், பரிசு பெறுதல் ஆகிய தலைப்பிலமைந்த செய்திகள்.

3. அந்திமாலை சிறப்புச்செய் காதையில் இடம்பெறும் இயற்கை வருணனையை விவரி. விடை: மண்மகள் புலம்பல், மாலைப்பொழுது வந்த நிலை ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகள்.
4. கண்ணகியின் பிரிவுக்கோலம் பற்றிக் குறிப்பு வரைக.

   விடை: கண்ணகி நிலை என்றும் தலைப்பலமைந்த செய்திகள்.

# கூறு : 3 சிலப்பதிகாரம் -புகார்க் காண்டம்-

### 3.1 இந்திரவிழவூரெடுத்த காதை

புகார் நகரத்தார் இந்திரவிழா கொண்டாடியதைப் பற்றிச் சொல்வது இந்திரவிழவூரெடுத்த காதையாகும். இக்காதையில் புகாரின் புனைவும், இந்திரவிழாவின் சிறப்பும் உரைக்கப்படுகின்றன. வரலாற்றுப் பார்வையில் இக்காதையைப் புகாரின் நகரமைப்பு அட்டவணை எனக் கூறலாம்.

**மருவூர்ப் பாக்கத்தின் மாண்பு**

மாளிகைகளும் நிலா முற்றமும், யவனர் இருக்கையும், பிற நாட்டவர் கலந்து உறையும் அலைவாய்க்கரை இருப்பும்; வண்ணம், சுண்ணம், பூ, புகை, சந்தனம் விற்பவர் திரியும் நகரவீதியும்; பட்டிலும் மயிரிலும் பருத்தியிலும் நெசவு நெய்யும் சாலியர் இருப்பிடமும்; முத்து, மணி, பொன்விற்கும் வளமறுகும்; கூலவீதியும்; பிட்டு வணிகர், அப்ப வணிகர், வலைச்சியர், பரதர், உமணர், வெற்றிலைகாரர், நிணவிலைஞர், வணிகர் போன்றோர் இருப்பிடமும்; கன்னார், கொல்லர், தச்சர், ஓவியர், சுதைகாரர், தட்டார், தையற்காரர், செம்மார், பெரும்பாணர், கைத்தொழிலாளர், குற்றேவல் செய்வார் ஆகியோர் உறையும் இடங்களும் கொண்டது மருவூர்ப்பாக்கம்.

**பட்டினப்பாக்கத்தின் பான்மை**

அரசவீதியும் தேரோடும் வீதியும் கடைத்தெருவும் வாணிகர் மறுகும் வேதியர் இருக்கையும், உழவர், மருத்துவர், சோதிடர், வளையறுப்போர் போன்றோர் வாழுகின்ற பெரிய வீதிகளும், சூதர், மாகதர், வைதாளிகர், நாளிகைக் கணக்கர், கூத்தர், பரத்தையர், கூத்தியர், குயிலுவர், விதூடகர் ஆகியோரின் இருப்பிடங்களும், குதிரை வீரர் யானைப்பாகர், தேர்ப்பாகர், மறவர் ஆகியோர் வாழும் இருப்பிடங்களும் ஆகியவற்றைக் கொண்ட பாடல் சான்ற சிறப்பு மிக்கது பட்டினப்பாக்கம்.

**நாளங்காடி**

மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இரு பகுதிக்கும் இடைநிலமாகிய சோலைகளிலே விற்போர் வாங்குவோர் ஆரவாரம் இடையறாது நிலைபெற்று விளங்குவது நாளங்காடி. அது, இருபெருவேந்தர் போர் குறித்த போர்க்களம்போல ஆரவாரம் மிக்கது. காவல் பூதப் பீடிகை ஆங்கிருந்தது.

**மறமகளிர் வாழ்த்தொலி**

சித்திரைத் திங்கள் சித்திரை நாளில் நிறைமதி சேர்ந்தது. காவல் பூதத்துப் பலி பீடிகையில் புழுக்கல், எள்ளுருண்டை, மடை பூ, புகை, பொங்கல் ஆகியவற்றை மகளிர் பலியாக இட்டனர், துணங்கை குரவை ஆடினர். சிலர் தெய்வமேறி ஆடினர். பசியும் பிணியும் பகையும் நீங்கி மழைவளம் சிறக்க மகளிர் ஆரவாரம் செய்து பலியிட்டுப் போயினர்.

**மறவர்பலி**

மருவூர்ப்பாக்கத்தினர் மறவர், பட்டினப்பாக்கத்துப் படைவீரர் ஆகிய இருவரும் பெரும் பலிபீடத்தில், மன்னருக்கு வெற்றி வேண்டி வஞ்சினம் கூறித் தோளில் தட்டி ஆரவாரித்துப் போர்க்களத்தில் அச்சம் தரும் சிவந்த விழியுடைய தமது தலையையே பலியிடுவர்.

**முத்துப்பந்தர் பட்டிமண்டபம் தோரணவாயில்**

கரிகாற் பெருவளத்தான் வடதிசைமேற் சென்று இமயத்தில் புலி பொறித்து மீண்டபொழுது வச்சிர நாட்டான் திறையாய்த் தந்த முத்துப் பந்தர் புகாரில் திகழ்ந்தது. மகதன் தந்த பட்டி மண்டபமும, அவந்தி நாட்டான் தந்த தோரண வாயிலும் திகழ்ந்தன.

**ஐவகை மன்றம்**

கண்ணெழுத்துப் படுத்தி எண்ணும் பல பொதிகள் போன்றவற்றைக் களவு செய்வார் உளராயின் பொதியை அவர் தலையில் ஏற்றி ஊரைச் சுற்றுவித்துக் களவு என்பதனை நினைத்தலும் நடுங்குவிக்கும் வெள்ளிடை மன்றம் விளங்கியது.

கூனும் குறளும் ஊமையுஞ் செவிடும் முழுகி நீராடினால் நல்லுருத்தருகிற இலஞ்சி மன்றம் இலங்கியது.

பித்தர், நஞ்சுண்டார், பேயுண்டார் போன்றோர் துயர் நீக்கும் நெடுங்கல் மன்றம் நின்றது.

தவவேடம் பூண்டு அவம் செய்வோரும், தீநெறிப் பெண்டிரும் பொய்க்கரியாளரும், புறங்கூற்றாளரும் ஆகியோரைப் பற்றிப் புடைத்து உண்ணும் சதுக்க பூதம் உண்டு.

அரசனது செங்கோல் வளைந்தாலும், நீதிமுறை பிறழ்ந்தாலும் அரசவை உணருமாறு கண்ணீர் வடிக்கும் பாவை மன்றம் இருந்தது.

இத்தகைய ஐவகை மன்றத்திலும் மக்கள் அரும்பலி இட்டனர்.

மங்கல முரசினை யானையில் ஏற்றி ஐராவதத்தின் கோயில் சென்று விழாவின் தொடக்கமும் முடிவும் சாற்றினர். கற்பகத்தருக்கோயில் முன் நெடிய கொடியை ஏற்றினர்.

**இந்திரனை நீராட்டல்**

கிம்புரியையும் முத்தொழுக்கத்தையுமுடைய மகர தோரணங்களை வீதியில் கட்டியிருந்தனர். பூரண கும்பம், முளைப்பாலிகை, பாவை விளக்கு, பொற்சுண்ணம் ஆகியனவும் வீதியில் பொருந்தியிருந்தன.

ஐம்பெருங்குழு, எண்பேராயம், அரசகுமரர், பரதகுமரர் ஆகியோர் யானை, குதிரை, தேர் ஆகியவற்றின் மேல் ஏறித்திரண்டு வந்து வேந்தனை வாழ்த்திப் பொற்குடங்களில் காவிரி நீரை ஏந்தி வானோர் வியப்ப இந்திரனை மஞ்சனமாட்ட விரைந்தனர்.

**விழாச் செயல்கள்**

பிறவா யாக்கைப் பெரியோன் கோயில், முருகன் கோயில் முதலியவற்றில் வேத நெறிப்படி ஓமங்கள் நடந்தன. நால்வகைத்தேவர், பதினெண் கணங்கள் ஆகியோருக்கு எடுக்கும் விழாக்கள் ஒரு பக்கம் சிறந்தன. புத்தப் பள்ளி, புண்ணியதானம், அறச்சாலை ஆகியவற்றில் தருமம் போதிக்கும் செயல்கள் விளங்கின; பகை அரசரை விடுதலை செய்தனர். பாணரின் இன்னிசை சிறந்தது.

**தென்றல் உலவும் தெருக்கள்**

மல்லிகை, மாதவி, முல்லை முதலிய பூக்களைச் சூடிக்கள்ளுண்டு களித்துப் பூப்பொழில் விளையாட்டை விரும்பி நாள்தோறும் மகிழ்ந்திருக்கும் இருக்கை பெற்றது நாளங்காடி. குரலிசையைப் பாடும் பாணரோடும் பரத்தரோடும் உலவும் கோவலன் போல வண்டினோடும் இளவேனிலோடும் இளந்தென்றல் உலாவியது.

“முகிலைச் சுமந்து முயல்கறை துடைத்து இருகயல்களுக்கு இடையில் குமிழ் எழுதிய திங்கள் அரவுக்கு அஞ்சி இங்கே திரியும்கொல்? அமுதகலை அருந்தி மன்மதன் வளர்த்த வானவல்லி மண்ணில் வந்ததோ? திருமகள் புகுந்த இடம் புகாரோ என்று தாமரை அவளைத் தேடித் திரிந்ததோ? அரசனுக்கு அஞ்சிய கூற்றமானது ஆணியல்பு மாறி நாணமும் நகையும் கொண்ட பெண்ணுருக்கொண்டு இங்கே வீதியில் திரியுங்கொல்?” என்றெல்லாம் பரத்தையரின் ஊடல் தீர்க்க ஆடவர் புகழ்ந்து புலவி தணித்துப் புணர்வர். பின்பு விருந்தினரோடு இல்லம்புகும் அவ்வாடவரைக் கற்பு உடைய மகளிர் ஊடல் தணிந்து ஏற்பர். விருந்தன்றி இவ்வூடலுக்கு வேறு மருந்துண்டோ என ஆடவர் நெஞ்சோடு கூறி நடுங்கினர்.

**கண்ணகி மாதவியர் கண்கள்**

கள் சிந்த நடுங்கும் கழுநீர்போலக் கண்ணகியின் கருங்கண்ணும் மாதவியின் செங்கண்ணும் முறையே இடமும் வலமும் துடித்தன.

“உள்ளகம் நறுந்தா துறைப்ப மீதழிந்து

கள்ளுக நடுங்கும் கழுநீர் போலக்

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்

உண்ணிறை கரந்து அகத்தொளித்துநீர் உகுத்தன

எண்ணுமுறை இடத்திலும் வலத்தினும் துடித்தன (235.239)

இன்பம் துளித்த கண்களை உடைய மாதவிக்கு வலக்கண் துடித்தது. துன்பம் துளித்த கண்களை உடைய கண்ணகிக்கு இடக்கண் துடித்தது என்றது, பின்னர் நடக்கப் போகும் நிகழ்ச்சிக்கு முற்குறிப்பாகும்.

## 3.2 கடலாடு காதை

**விஞ்சை வீரன் காமக் கடவுளுக்கு விழா எடுத்தல்**

வெள்ளிப் பெருமலைக்கண் அகன்று உயர்ந்த வடசேடிக்கண்ணே பூக்கள் நிறைந்த பொழிலிடத்து இருந்த விஞ்சை வீரன், அழகிய கரிய கயல்போலும் நெடிய கண்களுடைய தன் காதலியுடன் காமக் கடவுட்கு விழா எடுக்க விருப்பம் கொண்டான்.

**இந்திர விழாவைப் பற்றிக் காதலிக்குக் கூறல்**

இவ்விஞ்சையன் தன் காதலியைப் பார்த்து, "தென் திசையில் உள்ள இந்திர விழாவினை மேற்கொள்வார் கொடியேற்றும் நாள் இது. முன்பு அவுணர்கள் இந்திரனது நகரைத் தாக்கினர். முசுகுந்தன் என்னும் மன்னன் அவுணர்களை எதிர்த்தான். அதனால் அவுணர்கள் நெஞ்சிலே பகைமை இருள் செறிந்தது. அவர்கள் ஒன்றுகூடி முசுகுந்தனுக்கு எதிராக இருள் செய்யும் கணையை ஏறினர். அந்த வஞ்சத்தை ஒழிக்க இந்திரன் உதவினான்; ஒரு பெரிய பூதத்தை முசுகுந்தனைக் காக்கும் பொருட்டாக அனுப்பினான். அப் பூதம் புகார் நகரிலே காவலாகத் தங்கி இருந்தது. அது பலி கொண்டிருக்கும் நாளங்காடியைக் காண்போம். அமராவதியைச் சோழன் காத்தமையால் இந்திரன் அவ்வரசனுக்குத் தந்த ஐவேறுவகை மன்றங்களின் பெருமைகளைக் காண்போம். ஒருமுறை உருப்பசி இந்திர குமாரனின் அழகிலே மயங்கிப் போனாள்; நடனம் சீர் கெட்டது. அதனால் நாரத முனிவனின் யாழ்ப்பாடலும், தோரிய மடைந்தையர் வாரப்பாடலும் பயனற்றுப் போயின. நாரதரின் யாழ் மங்கலம் இழந்தது. ஆதலின் 'இவள் மண்மிசைச் சென்று மானிட மகளாகப் பிறக்க' என்ற சாபம் பெற்றனள். 'அந்த ஊர்வசியே மாதவி என்னும் நடனமாதாகப் பூமியிலே பிறந்தாள். அந்த மாதவியின் பரம்பரையில் பிறந்தவளே அரவுப்படம் போன்ற அல்குலையுடைய இம்மாதவி என்பவள். அவளை நாம் இந்திர விழாவில் காணலாம். அத்தகைய பூம்புகாரில் அமரர் தலைவனை வணங்கி வரலாம்" என்று கூறினாள்.

இமயமும், கங்கையும் உஞ்சை நகரும், விந்திய மலை சூழ்ந்தகாடும், வேங்கட மலையும், காவிரி யாறும் சோழவள நாடும் ஆகிய இடங்களை எல்லாம் புகார் நகருக்கு வரும் வழியில் விஞ்சையன் தன் காதலிக்குக் காட்டினான். பின்னர்ப் புகார் நகர நாளங்காடிப் பூதம்,

ஐவகைமன்றம், இந்திரன் கோயில் ஆகியவற்றையும் காட்டினான். இருவரும் அத்தெய்வங்களைத் தொழுதனர். பின், வளம் பொருந்திய பழைய புகார் நகரத்திலே மகிழ்வுடன் நடைபெறும் இந்திர விழாவினையும் தன் காதலியுடன் அவன் கண்டான்.

**மாதவியின் பதினோர் ஆடல்கள்**

திருமாலைப் பாடும் தேவபாணியும், வருணபூதர் நால்வரைப் பரவும் நால்வகைப் பாணியும், உயிர்கள் யாவும் நலம்பெற வேண்டும் என்ற குறிக்கோளினை உடைய வானூர் மதியத்தைப்பாடும் தேவாணியும் ஆகியவற்றைப் பாடி மாதவி ஆடுவதைக் காண்பாயாக என்றான். திரிபுரத்தைச் சிரித்தே எரித்து, வெற்றிக் களிப்பால் கைகொட்டிச் சிவன் ஆடிய கொடுகொட்டி ஆடலையும், நான்முகன் காணுமாறு பாரதி (பைரவி) ஆடிய பாண்டரங்கக் கூத்தினையும், கஞ்சனுடைய வஞ்சனையை, கொல்வதன் பொருட்டாகக் கார்நிற வண்ணணாகிய திருமால் ஆடிய ஆடல்களுள், யானையின் கொம்பினை ஒடிப்பதற்கு எதிர் நின்று ஆடிய அல்லியத் தொகுதியையும், மாயோன் மல்லனாய் அவுணனக் கடந்த மல்லாடல் கூத்தினையும், சூரபன்மனின் வலிமையை வென்ற முருகன் துடிகொட்டி ஆடிய துடிக் கூத்தினையும், படைகளைக் களத்திலேயே போட்டுவிட்டு அவுணர் ஓடியபோது முருகன் ஆடிய குடைக் கூத்தையும், பூமியைத் தாவி அளந்த மாயோன் ஆடிய குடக் கூத்தையும், பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய பேடிக் கூத்தையும், துர்க்கையானவள் மரக்கால்கொண்டு ஆடிய மரக்காற்கூத்தையும், திருமகள் ஆடிய பாவைக்கூத்தையும், அயிராணி மடந்தை ஆடிய கடையக்கூத்தையும் மாதவி ஆடினாள். இவ்வாடலரசியின் ஆடலையும் அதற்கிசைய எழுந்த இசையினையும் விளக்கித் தன் காதலிக்குக் காட்டினான் விஞ்சையன்.

**கோவலன் ஊடலும் மாதவி தேற்றலும்**

தேவரும் வானவரும் கண்டு மகிழ்ந்த இந்திர விழா முடிவுற்று எங்கும் நிரம்பியிருந்த ஆடலும் பாடலும் அணியும் ஒருவாறு முடிந்தன. பலரும் காண மாதவி இந்திர விழாவிலே ஆடியதால் கோவலன் அவள் பால் ஊடல் கொண்டான். எனவே, கோவலன் உவப்ப மாதவி தன்னைப் பல வகையில் புனைந்துகொள்ளத்தொடங்கினாள். முதலில் பத்துவகைப் பட்ட துவாரினாலும் ஐந்து வகைப்பட்ட விரையினாலும், முப்பத்திரண்டு வகைப்பட்ட ஓமாலிகையாலும் ஊறின நல்ல நீரில் வாசைன நெய் தேய்த்து நீராடினாள் என்பதை,

“ஊடற் கோலமோடு இருந்தோன் உவப்பப்

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்

முப்பத்து இருவகை ஓமா லிகையினும்

ஊறின நல்நீர் உரைத்த நெய்வாசம்

நாறுஇருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்

புகையின் புலர்த்திய பூமென் கூந்தலை

வகைதொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி' (75-81)

என்று இளங்கோவடிகள் வருணிப்பர். மாதவி தன்னை ஒப்பனை செய்து கொண்டபின் அழகுக்கு அழகூட்ட அணிகலன்கள் பல புனைந்து கொண்டாள். இந்த நிலையில் கோவலன்முன் தோன்றிக் கூடலும் ஊடலும் மாறி மாறி அவன் இன்பமுற அளித்தாள்.

**கடற்கரைப் பயணம்**

பகைவர்க்கு அச்சம் அளிக்கும் புகாரினின்று கடற்கரையை நாடி மக்கள் கடலாடுவதற்கு அணி அணியாய் விரைந்தனர். தானும் கடல் விளையாட்டைக் காணவேண்டும் என்று மாதவி விரும்பினாள் அதற்கு

உடன்பட்ட கோவலன், கோவேறு கழுதையில் ஏறிச்செல்ல, மாதவி மூடுவண்டியில் சென்றனள். அதனை,

"வான வண்கையன் அத்திரி ஏற,

மான்அமர் நோக்கியும் வையம் ஏறிச்" (119-120)

சென்றனர் என்பர் இளங்கோவடிகள். கோடிக்கணக்கான வளமான பொருள் நிரம்பிய மாடங்கள் தோன்றும் வாணிகர் வீதியினைக் கடந்து மலரோடு மணிவிளக்குகள் ஏற்றித் திரியும் மங்கலத் தாசியர் குடியிருக்கும் இடத்தினை நீங்கி, உயர்வுடன் விளங்கிய நகர வீதிகளின் நடுவே சென்று, வேற்று நாட்டார் வதியும் கடல் அலைவாய் இருப்பையுங் கடந்து, விற்கும் பொருள்களுக்கு விளக்கம் கூறும் கொடிகள் நிறைந்த கூலவாணிகத் தெருவினைக் கடந்து, மாலைச்சேரியின் வழியாகவுஞ் சென்று, கோவலனும் மாதவியும் நெய்தலங் கானலை எய்தினர். அவர்கள் சென்ற வழி எல்லாம் பல்வேறு விளக்குகளைக் கண்டனர். மருதத் திணையைப் போல விளையும் அழகுறு தாழையை வேலியாகவுடைய நெய்தலங் கானல், ஆடவராலும் பெண்டிராலும் சூழப்பட்டு அழகாகக் காட்சி அளித்தது. கானல் விளையாட்டு விரும்பிய மாதவியும் அவள் தோழிகளும் கோவலனுடன் சென்றனர்.

**கடற்கரைக் காட்சி**

மலைபடு பொருளும் கடல்படு பொருளும் தம்முள் கலந்துகிடக்கும் சோலை சூழ்ந்த இருப்பிடத்தில், அரசிளங் குமரரும் அவர்தம் உரிமைச் சுற்றமும், பரதகுமரரும் அவரைச் சுற்றிய ஆயமகளிரும் ஆடல்மகளிரும், பாடல் மகளிரும் கூடாரங்கள் அமைத்து மகிழ்ந்தனர். கரிகால்வளவன் வெற்றி விழாக் கொண்டாடிய முதல்நாள் போன்று இவ்விடம் காட்சி

அளித்தது; விழாவிலே அனைவரும் வீறுபெறத்தோன்றினர். ஆரவாரங்கள் பேரோசையாக ஒலித்துக்கொண்டிருந்தன.

**புதுமணற் பரப்பில் மாதவியும் கோவலனும்**



தாழை மடல் அவிழ்ந்ததால், புலால் நாற்றம் நீங்கிப் புதுமணம் கமழும் புன்னை மர நிழலின் புதுமணற் பரப்பிலே சித்திர வேலைப்பாடு நிறைந்த திரைச்சீலை கூடாரமாய் வளைத்துக் கட்டப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் வயந்தமாலையின் கையிலிருந்த யாழைத் தன் கையில் வாங்கிக் கோவலனுடன் இருந்தாள் மாதவி.

**வெண்பா**

“வேலை மடற்றாழை யுட்பொதிந்த வெண்தோட்டு

மாலைத் துயின்ற மணிவண்டு- காலைக்

களிநறவந் தாதூதத் தோன்றிற்றே காமர்

தெளிநிற வெங்கதிரோன் தேர்”.

தாழை மடலில் தேன் உண்டு இரவில் உறங்கிய மணிவண்டு காலையில் களிநறவம் மாந்திப் பூந்தாது ஊத, அழகிய தெளிந்த நிறமுடைய கதிரவனது தேர் எழுந்தது.

## 3.4 சோதித்தறியும் வினாக்கள்

1. இந்திர விழா ஊரெடுத்த காதையால் அறியலாகும், புகார் நகரச் சிறப்பினைக் குறிப்பிடுக.

விடை : மருஓர்ப்பாக்கத்தின் மாண்டி முதல், ஐவகை மன்றம் வரையிலான தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகள்.

2. மாதவி ஆடிய பதினோரு வகை ஆடல்களைப் பற்றி எழுதுக.

விடை : மாதவியின் பதினோர் ஆடல்கள் என்றும் தலைப்பில் இடம்பெற்றுள்ள செய்திகள்.

**பயிற்சி வினா**

1. கடலாடு காதை தரும் கடற்கரைக் காட்சி பற்றி எழுதுக

# கூறு: 4 4.1 கானல்வரிக்காதை



மணமகளின் ஒப்பனை உடையது அந்த அழகிய யாழ்; அது எவ்விதக் குற்றமும் இல்லாதது. மாதவி அந்த யாழுக்குச் சுருதி கூட்டினாள்; பின்னர்க் கோவலனை நோக்கி, 'பாணியாது?' எனக் கேட்டாள். கோவலன் கைநீட்டி யாழினை வாங்கிக் கொண்டான். கோவலனைப் பொதுத்தவரை, மாதவி மனம் மகிழவேண்டும் என்ற எண்ணத்தில்தான் காவிரியைக் கருதியனவும், கடற்கானல்வரிப் பாணியையும் பாடத் தொடங்கினான். இதனை,

"….. ….பின், பாணியாது என,

கோவலன் கை யாழ் நீட்ட, அவனும்

காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்

மாதவிதன் மனம்மகிழ வாசித்தல் தொடங்குமன்" (17-20)

என்று இளங்கோவடிகள் கூறுவதன் வாயிலாக அறியலாம்.

**காவிரியை நோக்கிப் பாடியன**

"கங்கையை நாடிக் கூடினான், திங்கள் போன்ற வெண்கொற்றக்குடையை உடைய சோழன்! ஆனால் கயற் கண்ணினைய நீ அவனை வெறுக்கவில்லை. அங்ஙனம் அவனை வெறுக்காது இருந்தமைக்குக் காதல் நிறைந்த மாதர் தம் பெருங்கற்பே காரணம் என அறிந்தேன். ஆதலின் வாழி காவேரி!.

"அது மட்டுமா! சோழன் கன்னியைக் (குமரியைக்) கூடினான் ஆயினும், சோழனை நீ வெறுத்தாய் அல்லை! அது நின் நிலைபெற்ற நிறையைக் காட்டுகிறது. பெருங்கற்பின் உறைவிடமல்லவா காவிரியே, நீ வாழ்க!.

"மறவர் பெற்ற வெற்றியினால், சோழ நாட்டு வளம் பெருகியது. அதனால் உழவர் ஏர்மங்கல ஓசையும், மதகிலே நீர் வடிகின்ற ஓசையும், வரப்புகளை உடைத்து நீர் பாய்கின்ற ஓசையும், விழாக்கொண்டாடும் ஓசையும் எங்கும் கேட்கின்றன.

இக்கருத்தினை அமைத்து ஆரவாரமாய்க் கோவலன் யாழிசையைப் பன்னணி ஆக்கிப் பாடினான். ஆனால் மாதவியோ மாறாகப் பொருள் கொண்டாள். கோவலன் பிற கன்னியரை அணைந்து வந்தாலும் மாதவியாகிய தான் புலத்தலாகாது எனக் கோவலன் கூறுகின்றான்; பரத்தமைக்குத் தனி உரிமை வேண்டிப் பாடுகிறான் என நினைத்தாள். 'வளவன் தன் வளனே வாழி காவேரி' என்று கோவலன் பாடியதில், 'மாதவி

வளனெல்லாம் என் வளமே' என்று அவன் இடித்துக்கூறுவதாய் மாதவி எண்ணினாள்.

**புகார்**

**காப்பியங்கள்**

**குறிப்புகள்**

தோழி வரைவுகடாதல் என்ற துறையில் சார்த்துவரியாய்ப் பாடிய பாடல்கள் கோவலனின் மனநிலையைப் புலப்படுத்துவன. கண்ணகிக்குக் கோவலன் செய்த கொடுமை அவனையும் அறியாமல் இங்கே உருவெடுக்கிறது. எனவே கோவலன், தானே கண்ணகி ஆகிப் பேசுகிறான் எனலாம்.

தலைவன் களவொழுக்கத்தில் ஈடுபடுகிறான். பாங்கி மதியுடம்பட்டு உதவவேண்டும். எனவே தலைவன் பூவினையோ முத்தினையோ கையுறையாகக் கொண்டு செல்லுதல் உண்டு. தோழி கையுறையை மறுத்து அவன் காதல் உள்ளத்தை அறிய முயல்வாள். "சங்கையும் முத்தையும் கண்டு வெண்மதியும் மீன்கணமும் என மயங்கிப் பகலிலும் இந்த நாட்டில் ஆம்பல் மலர்வது போலத் தலைவியும் அன்று உன்னைக் கண்டு மயங்கினாள்".

"எம்பாற் காதல் உற்றவர் தலைவர்; ஆதலால் அன்று கழிக்கான்ற சோலையிடத்தே கையுறையுங் கொண்டு எம் பின்னால் வந்தார். நாம் உடன்பட்டோம்; ஆனால், இன்றோ அவர் நமக்கு அயலவரானார்; அருளற்றவராய்க்காட்சி அளிக்கிறார். இவ்வாறு நிற்கும் இயல்பினர் என்பதை முன்னரே யாம் எங்ஙனம் அறிவோம்? மாதரார் கண்ணையும், மதியொளி கண்டு மலர்ந்த நீலமலரையும்கண்ட வண்டு எது கண், எது மலர் என அறியாது இங்கும் அங்கும் ஊசலாடும் நீர்மைத்து எங்கள் நாடு; எது உண்மை எது போலி என அறியாத ஊர் இப்புகார்".

"வரிமணல் மீது மகளிர் தாம் இழைத்த வண்டலை எழுது அழிக்கும் அலையைக் கண்டு வெகுண்டு தாம் அணிந்திருந்த மலர் மாலையால் அவ்அலையை விரட்டுவார். அதனால், அம்மாலையினின்றும் சிதறிய குவளை மலர்கள், மாலைக் கடற்கரையில் மகளிரின் கண்களோ எனன அங்குப் போவோரை மயக்கம் அடையச் செய்யும், அத்தகைய இயல்படைய புகார் நகரமன்றோ எமது ஊர்?" என்றெல்லாம் தோழி கூறி, "தலைவனே! நீ இயற்கையின் கூட்டமாய் வந்து கூடித் தலைவியின் நலன் உண்டாய். உன் பிரிவினைப் பொறாது அவள் வருந்துகிறாள். ஊரலர் எங்கும் எழுகிறது. எனவே, விரைவில் அவளை வரைந்து கொள்வாயாக" எனக் கூறும் குறிப்பு இப்பாடலில் அமைகின்றது.

"கரியமலர் நெடுங்கண் காரிகைமுன்

கடல்தெய்வம் காட்டிக் காட்டி,

அரியசூள் பொய்த்தார் அறன்இலர் என்று
ஏழையம் யாங்கு அறிகோம், ஐய!
விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும்
ஆம்என்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல்
பொதி அவிழ்க்கும் புகாரே, உம்ஊர்.' (5)

“காதலர் ஆகிக் கழிக்கானல்
கையுறை கொண்டு, எம்பின் வந்தார்
ஏதிலர் தாம் ஆகி, யாம் இரப்ப,
நிற்பதை யாங்கு அறிகோம். ஐய!
மாதரார் கண்ணும், மதிநிழல் நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும், அறியாது வண்டு ஊச
லாடும் புகாரே, எம் ஊர் (6)

“மோது முதுதிரையான் மொத்துண்டு
போந்து அசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுது உழிப்ப மாழகி, ஐய!
கோதை பரிந்து அசைய, மென்விரலால்
கொண்டு ஓச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்ப் போவார்கண்
போகப் புகாரே எம் ஊர்” (7)

கோவலன், நெய்தல் நிலப்பெண்ணைத் தன் கற்பனையில் இருத்திப் பாடுகிறான். இப்பாடல்களைத் தலைவன் தனக்குள் கூறியனவாகவும் பாங்கனிடம் கூறியனவாகவும் கொள்ளலாம். “இணை இல்லாத நீ, உனது பெருமை எல்லாம் மறந்து, யாரோ ஒரு பெண்ணை எண்ணிக் கலங்குகிறாய்” எனப் பாங்கன் இடித்துரைக்கின்றான் அதற்குத் தலைவன், “கடற்கரையிலே புலால் வற்றலைக் காய வைத்திருக்கிறார்கள். அவற்றைக் கடற்கரைப் பறவைகள் உண்ண வருகின்றன. அவற்றை ஓட்டக் கையிலே பூங்கொம்பு ஏந்திப் பெண்ணணங்கு ஒன்று வருகிறது. அவளுடைய கண்ணே

வலை. அந்த வலையில் காமத்தால் சிக்கி வீழ்வார் பலர். கண்வலையில் உயிரிழந்த காமுகர் வற்றலாய் வதங்குகின்றனர். தலைவனும் முதலில் பெண்தானே என அக்காட்சியைப் பொருட்படுத்தாது சென்றான். ஆனால் அக்காட்சியின் பெருமை அவனைக் காதல் வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது. இத்தகையை காட்சி அங்கே எழுமென அறிந்திருந்தால், நானும் அவ்வாறு அங்கே போயிருக்க மாட்டேன்" என்கிறான்.

"வலைவாழ்நர் சேரிவலை உணங்கு முன்றில்

மலர்கை ஏந்தி

விலைமீன் உணங்கல் பொருட்டாக

வேண்டு உருவங் கொண்டு வேறுஓர்

கொலைவேல் நெடுங்கண்

கொடுங்கூற்றம் வாழ்வது

அலைநீர்த் தண்கானல் அறியேன்;

அறிவேனேல், அடையேன் மன்னோ".

"மேலும், 'கண்' எனக் கயலையும் 'புருவம்' என வில்லையும், 'கூந்தல்' எனக் கார்மேகத்தையும் எழுதி அவற்றுடன் எதிர்ப்பட்ட என்னைக் காமநோயால் வருத்துகின்ற கொடுந்தொழிலையும் எழுதி முடித்துள்ள இவள் முகம் திங்களோ! அது அழகிய வானத்திலே அரவுக்கு அஞ்சித் திமில் என்னும் படகினால் உயிர்வாழும் இவ்வூர் வந்து மறைந்து வாழ்கிறதோ? கொடுங்கூற்றமோ, அணங்கோ?" எனத் தலைவன் தலைவிபால் காமுற்றுத்தலைவி அருளாமையால் வெந்துயர்கொண்டு பாடுவதாய் அமைகின்றன. அடுத்தமையும் நிலைவரிப்பாடல்கள், தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறிய துறையிலமையும்.

அடுத்து, முரிவரி, திணை நிலைவரியாகச் சில பாடல்கள் பாடுகிறான். இவை 'தலைமகன் பாங்கன்கேட்ப உற்றதுரைத்தல்', 'புணர்ச்சி நீட இடந்தலைப்பாட்டில் புணர்தலுறுவான் ஆற்றானாயத் தன்நெஞ்சிற்குச் சொல்லியது', 'காமஞ்சாலா இளமையோள் வயின் ஏமஞ்சாலா இடும்பை எய்தியோன், சொல்லியது' என்னும் துறையின. 'என்னை இடர் செய்தவை தலைவியின் அழகு நலன்களே' என்றும், அதனால் 'என் உயிர் கொள்வாளோ தலைவி' என்றும் அஞ்சிய தலைமகன் பின்னர் தலைவியுடன் கூடி மகிழ்கிறான். அவளுடைய செவ்வரி படர்ந்த கண்கள்தாம் குவளை மலர்களோ எனில், அல்ல! அவை மிகக் கொடிய வேல்களோ எனில், அல்ல! அவை வேல்களிலும் கொடியவை, அன்னமே! நீ அவள்

நடை ஒவ்வாய்! அணங்கு போன்ற தன் பேரழகால் கலக்கித் திரிகின்றவள் அன்றோ அவள்!” என்று கோவலன் தான் கண்ட கற்பனைப் பெண்ணைப் பாடுவதாக அமைகிறது.

**மாதவி மாறாக எண்ணியமை**

கோவலன் மாதவியின் மனமகிழப் பாடினான், மாதவியோ,

“மன்னும்ஓர் குறிப்புண்டு; இவன் தன்நிலை மயங்கினான் எனக் கலவியால் மகிழ்ந்தாள்போல், புலவியால் யாழ்வாங்கித் தானும்ஓர் குறிப்பினள்போற், கானல்வரிப் பாடற்பாணி நிலத்தெய்வம் வியப்புஎய்த, நீள்நிலத்தோர் மனமகிழக் கலத்தொடு புணர்ந்து அமைந்த கண்டத்தால் பாடத்தொடங்குமன்”(24).

மாதவி குறிப்புப் பொருள் வைத்தே பாடினாள். காவிரியை ஒரு பெண்ணாகவும் அவள் கண்விழித்து நடப்பது அவள் கணவனின் செம்மையான ஒழுக்கமுறை மாறாமல் இருப்பதற்காகவே எனவும் புனைந்து பாடினான்.

“பூக்கள் மலர்ந்த சோலையில் மயில்கள் ஆடும்; குயில்கள் இன்வரிசை பாடும்; மலர்மாலை அருகு அசையும்; இவற்றின் ஊடே நடந்தாய் நீ! வாழ்க! அங்ஙனம் நீ நடந்த செயல் எல்லாம் நின் கணவனது அச்சந்தரும் வேலின் ஆற்றலைக் கண்டேதான் என்பதனை யான் அறிவேன்; வாழ்க! சோழனது வளநாடு! அதனை மகவுபோலப் பேணி வளர்க்கும் தாயாகிப் பேருதவி புரிந்து ஊழிதோறும் காத்து என்றும் நீங்காது இருக்கின்றாய்; அவ்வாறு நீ ஒழுகுதல் எல்லாம் உயிர்களைப் பாதுகாக்கும் சோழனது நடுநிலைமை உடைய அருளால் அன்றோ! அதனால், காவிரியே வாழ்வாயாக!”

“கருங்கயற்கண் விழித்துஒல்கி

நடந்த எல்லாம் நின்கணவன்

திருந்து செங்கோல் வளையாமை

அறிந்தேன் வாழி காவேரி”

என்று, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிக் கோவலன் பாட்டிற்கு எதிர் மொழியாய்ப் பாடினாள் மாதவி.

மாதவி சார்த்து வரியாய்ப் பாடிய பாடல்கள் மிக அழகானவை. அவள் பாடிய பாடலைக் கேட்ட நிலத்தெய்வம் வியப்பு எய்தியது என்று

இளங்கோவடிகளே பாடுகிறார். 'தோழி கையுறையை மறுத்தல்' என்ற துறையில், "எங்கள் ஊரில் அலைகள் முத்துகளைத் தந்து பூங்கொத்துகளைப் பெற்றுச் செல்லலாம் என்று எண்ணுகின்றீர் போலும்" எனக் கையுறையை மறுத்தாள்.

'தோழியிற் கூட்டம் கூடிப் பின்பு வாராது அமைந்த தலைவற்குத் தோழி கூறியது' என்னும் துறையில் மாதவி இரு பாடல்களை இனிமை ததும்பப் பாடினாள். "புன்னையில் ஏறிய அன்னத்தையும் அதில் பூத்த பூக்களையும் கண்டு மதியும் மீன்கணமும் என மயங்கி ஆம்பல் மலர்ந்தது. அதுபோல உன் பொய்யுரையைக் கேட்டுத் தலைவி உடன்பட்டாள். சூள் பேணாய்; பொய்ப்பாய் என்று எப்படித் தெரியும்? எங்கள் ஊர்ப் பெண்கள் அப்பாவிகள். வண்டலைத் திரை அழிக்க, அதனால் கண்ணீர் விட்டசிறுமியர் மணலைக் கொண்டு கடலைத் தூர்க்க முற்பட்டனர்".

இந்நிலையில் பாங்கியும் தலைவன் பொய்த்தலை அறிய முடியவில்லை என்கிறாள். இன்பம் துய்த்த அத்தலைவன் தலைவியை மறந்தான் என்று குற்றம் சாட்டுகிறாள். 'காமம் மிக்க கழிபடர் கிளவி'-யாய் 'எம்மை நினையாமல் தம்முடைய அருளும், தாமும் தம்முடைய குதிரை பூட்டிய தேருமாக எம்மை நினையாது கைவிட்டனரோ? நீத்து அகன்றாலும், அழகிய மென்மையான கொத்துக் கையுடைய அரும்புகளே!; அன்னங்களே! நம்மை மறந்த அவரை நாம் என்றும் மறக்கமாட்டோம்" என்கிறாள்.

"தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ? விட்டு அகல்க!
அம்மென் இணர அரும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்!" (32)

எனப்பாடுவது கோவலன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து தைத்திருக்க வேண்டும்.

"நெய்தற் பூவே! நீ எய்தும் கனவினுள் வன்கணார் கானல் வரக் கண்டறிதியே?" எனவும், "கடலே, எம்மோடு கூடியிராத காதலரோடு கூட்டுச்சேர்ந்து துன்பம் செய்கின்றாய்! எம் நோயினை நீயும் அவர்போல் உணராயோ? இல்லையெனில், இனியாம் யாது செய்வோம்!" எனவும், "கடல் நீர் ஓதமே! மலர் தரு பொழிலே! துணைபுணர் அன்னமே! கடற்றுறையே! காதலி தவிக்கக் காதலன் பிரிவது தகாது என்று நும்மில் எவரேனும் கூற மாட்டீர்களோ?' எனவும், "கடல் ஓதமே! காதலர் வரவின் சுவட்டையே மறைத்து விட்டாய்! எம்மோடு நீ பல காலமும் பழகி இருந்தும் பழைய உறவு நிலை திரிந்தாற்போலப் பகையே ஆயினாய்!" எனவும் கூறப்படும்

காமம் மிக்க கழிபடர் கிளவியாய் வரும் பாடல்கள் ஆழ்ந்த கருத்து உடையவை.

இந்நிலையில், அலர் அறிவுறுத்திக் களவொழுக்கத்தைத் தாய் அறிந்தால் என்ன ஆகும் என அச்சம் தெரிவித்து 'வரைவு கடாதல்' துறையாகப் பாடியவை பின்வருவன;

கடற் சேர்ப்பனே! புன்னை நிறைந்த சோலையிலே நின்னைக் காதலித்தேன். அதனால் மகரக்கொடியோனான காமன் எய்த புண்கள் என்னை இனங் காணாதவாறு அழகை மறைத்தன. அதனைத் தாயும் அறிந்தால் யான் என் செய்வேன்?" என்பதை,

"... திரை உலாவு கடற்சேர்ப்ப

புன்னைப் பொதும்பர் மகரத்திண்

கொடியோன் எய்த புதுப்புண்கள்

என்னைக் காணா வகைமறைத்தால்

அன்னை காணின் என்செய்கோ?" (37)

என்று மூன்று பாடலாய் அடுக்கிப் பாடினாள் மாதவி, மேலும், 'பொழுது கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தல்' என்னும் துறையில் பாடிய பாடல், கோவலன் மாதவி உறவை முறிக்க அடிக்கல் நாட்டியதோ என்று ஐயுற வேண்டியுள்ளது. மாலை மயக்கத்தைப் பிரிவு என்னும் கொடுமை மிகுவித்தது என்பதை,

"இளையிருள் பரந்ததுவே; எற்செய்வான் மறைந்தனனே;

களைவு அரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே;

தளை அவிழ் மலர்க்குழலாய்! தணந்தார் நாட்டு உளதாம்கொல்

வளைநெகிழ எரிசிந்தி வந்தஇம் மருள் மாலை" (40)

என்ற பாடலிலும், அதனைத் தொடரும் பாடல்களிலும் காணலாம்.

'ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள்' இயற்பட மொழிதல்' என்ற துறையில் மாதவி பாடும் மூன்று பாடல்களும் கோவலனது ஐயுறவை மேலும் வலுப்படுத்துவனவாக அமைகின்றன. "மனத்தைவிட்டு அகலாது இருக்கின்றாரே! மானை ஒத்த மருண்ட "மனத்தைவிட்டு ஒரு நாளும் மறப்பவர் அல்லரன்றோ! நம்மைக் கைவிட்டுப் பிரிந்து போலாரல்லர் அன்றோ!" என்று தலைவி ஏங்குவதாகப் பாடினாள். பின்னர், 'காமம் மிக்க கழிபடர் கிளவியாக ஒரு பாடல்பாடினாள். அடுத்துப்

பண்ணுப்பெயர்த்து மாலை நேரத்தைப் பாடினாள் “மாலைப் பொழுது கண்டு தலைவி கூறியது’ என்னும் துறையில் இப்பாடல்கள் அமையும். செவ்வழிப் பாலை என்னும் பண்ணினை யாழிலே எழுப்பி, மாலை நேரத்தையும், அது தலைவியை வருத்தியமையையும், இசை நூல் முறைமையில் பாடிய இறுதி வரிகள் கோவலனது நெஞ்சினைச் சுட்டிருக்க வேண்டும்.

“காமம் மீதூர்ந்த காரணத்தால் நோய் மிகுகிறது. பகலைச் செய்பவனாகிய கதிரவனும் மேற்றிசையிலே சென்று மறைந்துவிட்டான். வையகமெல்லாம் கண்மூடி உறங்குகிறது. மயக்கத்தைத் தரும் மாலையே!

நீயும் வந்தாய். மாலையும் நீயானால், எம்மோடு கூடி இன்பம் துய்த்தவரும் இவரானால், உலகந்தான் பெரிதும் வறுமையுற்றது”. பிரிவின் எல்லையைத் தொட்டு நிற்கும் இப்பாடல்,

“பையுள் நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப, வந்தாய், மருள்மாலை!
மாலைநீ ஆயின், மணந்தார் அவா் ஆயின்,
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை” (50)

என்று உருவெடுக்கிறது. இதனைப் பாடிய மாதவி, தான் புனைந்து பாடிய கானல்வரி பொய்யானது; இருப்பினும், அது வினையாகுமோ என்று அஞ்சுகிறாள். தன்னை அறியாமல் மாக்கடல் தெய்வத்தை வணங்குகிறாள்.

“தீத்துழைஇ வந்தஇச் செல்லன் மருள்மாலை
தூக்காது துணிந்த இத் துயர்எஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானவில் பெயர்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடல் தெய்வநின் மலா் அடி வணங்குதும்” (51)

என்று பாடினாள். இது ‘வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி கூறியது’ என்ற துறையில் அமையும் பாடல். இது கேட்ட கோவலன்,

“கானல்வரி யான்பாடத் தான்ஒன்றின்மேல் மனம்வைத்து மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள் என யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந் துருத்ததாகலின் உலவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்தனனாய் (52)

ஏவலாளர் சூழ்ந்துவர, மாதவியைத் தனியே விடுத்து நீங்கினான். மாதவி கையற்ற நெஞ்சினாய்த் தன் வண்டியில் ஏறினாள்.

காதலனுடன் வந்தவள் காதலன் இன்றிச் சென்றாள். இனிக்கோவலனை அவள் காணப்போவதில்லை. கானல்வரி சிலப்பதிகாரக் கதையில் ஒரு திருப்பு முனையாக (Turing point) அமைகிறது.

## 4.2 வேனிற்காதை

இளவேனில் காலத்தில் கோவலனைப் பிரிந்து தவிக்கும் மாதவியின் நிலையைச் சொல்வதாக அமைகிறது இக்காதை.

**இளவேனிலின் வருகை**

இளவேனிற் பருவம் வந்தது. அதன் வரவை,

“மன்னன் மாரன் மகிழ்துணை ஆகிய
இன் இளவேனில் வந்தது இவண் என,
வலம் கெழு பொதியில் மாமுனி பயந்த
இளங்கால் தூதன் இசைத்தனன். ஆதலின்,
மகர வெல் கொடி மைந்தன் சேனை
புகர்அறு கோலம் கொள்ளும் என்பதுபோல்,
கொடிமிடை சோலைக் குயிலோன் என்னும்
படையுள் படுவோன் பணி மொழிகூற” (6-13)

என இளந்தென்றலும், குயிலின் கூவலும் அறிவித்தன.

**நிலாமுற்றத்தில் தனியனாய் மாதவி பாடுதல்**

ஊடலால் பிரிந்த கோவலனை எண்ணி வருந்தினாள் மாதவி. வருத்தத்தைத் தணிப்பதற்காக யாழினை எடுத்துக்கொண்டு, மேல்மாடத்து நிலாமுற்றத்தில் ஏறினாள். ‘யாழில்மேற்செம்பாலை’ என்னும் பண்ணை மீட்டிப் பாடினாள். பண் தவறியது. பிறகு சகோட யாழை எடுத்து வேறொரு பண்ணைப்பாடினாள். அப்பண்ணும் தவறியது. இது இசை இலக்கணம் பொருந்தப்பாடும் மாதவியின் மனத்தடுமாற்றத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறது. இக்காட்சியை இளங்கோவடிகள்,

“வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும்
உழைமுதல் ஆகவும், உழை ஈறு ஆகவும்
குரல் முதல் ஆகவும், குரல் ஈறு ஆகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி,

மூவகை இயக்கமும் முறையுளிக் கழிப்பா

திறத்து வழிப்படூஉம் தென்இசைக் கரணத்து

புறத்து ஒரு பாணியில் பூங்கொடி மயங்கி” (36-44)



எனப் பதிவுசெய்துள்ளார்.

**கோவலனுக்கு மாதவி மடல் அனுப்புதல்**

மனம் வருந்தி நின்ற மாதவி, காமதேவனைத் தொழுது கடிதம் எழுதிக் கோவலனுக்கு கொடுத்தனுப்ப எண்ணினாள்' தாழை மடலில், பித்திகை அரும்பை எழுத்தாணியாகக் கொண்டு, செம்பஞ்சுக் குழம்பிலே தோய்த்துத் திருமுகம் வரைந்தாள். அதில், 'இளவேனிலும் திங்களும் பிரிந்திருக்கும் காதலரை வருத்தும். காமவேளும், மலர் அம்பால் பிரித்தவரை வருத்துவார். இதனை நீர் அறிவீராக' எனக் குறிப்பிட்டாள்.

“மன்உயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்

இன் இளவேனில் இளவரசாளன்;

அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய

திங்கள் செல்லும் செவ்வியன் அல்லன்;

புணர்ந்த மாக்கள் பொழுது இடைப்படுப்பினும்

தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்

நறும்பூ வாளியின் நல் உயிர் கோடல்

இறும்பூது அன்று; அ.்.து அறந்தீமின் என” (56-63)

மாதவியின் உள்ளக்கிடக்கையில் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமையும் மடலைத் தோழி வசந்த மாலை மூலம் கோவலனுக்குக் கொடுத்து அனுப்புகிறாள்.

**கோவலன் மாதவியின் மடலை மறுத்தல்**

'தூமலர் மாலையின் துணி பொருள் எல்லாம்

கோவலற்கு அளித்து கொணர்க ஈங்கு என' (70-71)

மாதவி கொடுத்த மாலை வடிவத்திலமைந்திருக்கும் மடலை வாங்கிச் சென்ற வசந்தமாலை, கூலம் (தானியம்) விற்கும் தெருவில் கோவலனைக் கண்டு அதனைக் கொடுத்தாள். கோவலன், 'அவள் நாடகமாடுபவள்; இதுவும் நடிப்புத்தான்' என்று கூறிக் கடிதத்தை வாங்க மறுத்தான். இச்செய்தி,



“ஆடல் மகளே ஆதலின், ஆய்-இழை!

பாடு பெற்றன அப் பைந்தொடி தனக்கு” (109-110)

என்னும் பாடலடிகளில் பளிச்சிடுகிறது. கோவலன் கடிதத்தை வாங்கமறுத்த செய்தியை வசந்த மாலை மாதவியிடம் தெரிவித்தாள். இதனால் அவலமுற்ற மாதவி, 'மாலை வாரார் ஆயினும் காலை காண்குவுவம்' எனக் கையறு நெஞ்சத்தோடு மலர்ப்படுக்கையில் கண்துயிலாது கிடந்தாள்.

இசை இலக்கணங்கள் சிலவும், கண்கூடுவரி, கண்வரி, உள்வரி, புன்புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி முதலிய எண்வகை வரிப்பாடல்களும் இடம்பெற்றுள்ளமை இக்காதையின் தனிச்சிறப்பாகும்.

## 4.3 சோதித்தறியும் வினாவிடைகள்

1. கானல் வரியில் கோவலன் பாடிய பாடற் கருத்துக்கள் யாவை?

   விடை : காவிரியை நோக்கிப் பாடியவை, புகார் ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றிருக்கும் செய்திகள்.

2. மாதவிபாடிய கானல்பாடற் கருத்துக்கள் யாவை?

   விடை : மாதவி மாறாக எண்ணியமை என்ற தலைப்பில் உள்ள செய்திகள்.

3. மாதவி தனியளாய்ப் பாடிய நிலை குறித்து எழுதுக.

   விடை : மாதவி தனியளாய்ப் பாடுதல் என்னும் தலைப்பில் அமைந்த செய்திகள்.

## 4.4 பயிற்சி வினா

1. மாதவியின் மடலும் கோவலனின் நிலையும் குறித்து விவரி.

காப்பியங்கள்

குறிப்புகள்

## கூறு : 5 5.1 கனாத்திறம் உரைத்த காதை

கண்ணகி கனவினைப் பற்றிக் கூறுவதாக இக்காதை அமைகிறது.

**மகளிர் வழிபடல்**

பூம்புகாரில் மாலைப்பொழுது மறைந்து இரவு வந்தது. புகார் நகரத்துப் பெண்கள் முல்லை மலரையும் நெல்லையும் கலந்து தாவி இல்லுறை தெய்வங்களை வழிபட்டனர்; பின்னர் இரவு நேரத்திற்கு ஏற்ற கோலத்தைக் கொண்டனர்.

**மாலதி வரலாறு**

மாலதி என்பவள் தன் மாற்றாளின் குழந்தைக்குப் பால் ஊட்டுகையில், பால் விக்கிப் பாலகன் இறந்துவிடுகிறான். பார்ப்பானும் அவன் மனைவியும் அடாத பழியைக் கூறுவதை விடுத்து, ஏற்பவரிவற்றைக் கூறமாட்டார்கள் என ஏங்கிய மாலதி, குழந்தையை எடுத்துக்கொண்டு, கற்பக மரம் நிற்கும் கோயில், ஐராவதம் நிற்கும் கோயில், பலதேவர் கோயில், சூரியன் கோயில், கைலாயம் நிற்கும் கோயில், முருகன் கோயில், வச்சிரப்படை நிற்கும் கோயில், ஐயனார் கோயில், அருகன் கோயில், சந்திரன் கோயில் ஆகிய கோயில்களுக்குச் சென்று, 'தெய்வங்களே எனக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தீருங்கள்' என வேண்டினாள்.

**இடஇனிப்பேய்**

பாகண்டச் சாத்தன் கோயிலை அடைந்து வரம் கேட்டபோது, பிணங்களைத் தின்னும் இடாகினிப்பேய்,

"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம்கொடார்

பொய்உரையே அன்று; பொருள் உரையே"

எனக் கூறி அவள் கையிலுள்ள பிணத்தைப் பறித்து விழுங்கிவிட்டது. அது கண்டு ஏங்கி அழுத மாலதியிடம், 'நீ அழ வேண்டாம்; செல்லும் வழியில் உன் குழந்தையை உயிருடன் காண்பாய்' என்று ஆறுதல் கூறிய சாத்தன்,

தானே குழந்தையாக மாறிக் கிடந்தான். அந்தக் குழந்தையை எடுத்து வயிற்றில் அனைத்த மாலதி, தாயின் கையில் கொடுத்தாள்.

**தேவந்தியின் வரலாறு**

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய சாத்தன் பின்னர் தன் தாய்-தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துப்பின் ஒரு நாளில் தேவந்தி என்பாளை மணந்தான். ஒருநாள் அவளிடம் தன் தெய்வ உருவைக் காட்டி, எம் கோவிலுக்கு வா என்று சொல்லி நீங்கினான். நீர்த்துறைகளில் தீர்த்தமாடச் சென்றுள்ளான் தன் கணவன் என்று ஊராரிடம் தெரிவித்த தேவந்தி, சாத்தன் கோயிலுக்கு நாள்தோறும் சென்று வழிபட்டு வந்தாள். அவ்வாறு வணங்கி வந்தபோது ஒருமுறை கண்ணகியின்

துயரைப்போக்கக்கோரி அருகம்புல், சிறுபூனப்பூ, நெல் முதலியவற்றைத் தூவி வணங்கினாள். அதன்பின் கண்ணகியிடம் சென்று 'பெறுவாய் கணவனை' என்று வாழ்த்தினாள்.

**கண்ணகி கண்ட கனவு**

தேவந்தியிடம் கண்ணகி நீ இவ்வாறு கூறுவதால் என் கணவனைப் பெறுவேன் என்றாலும், என் நெஞ்சம் நான் கண்ட கனவினால் நடுக்குறுகிறது. நானும் என் கணவனும் ஒரு பெரிய நகரத்திற்குச் சென்றோம். அங்கு ஊரார் எங்கள் மீது அடாத பழியொன்றைச் சுமத்தினர். அதனால் கோவலனுக்குத் தீங்கு நேர்ந்தது. அது கேட்ட நான் மன்னன் முன் வழக்குரைத்தேன். அதன் காரணமாக மன்னனோடு ஊருக்கும் தீங்கு நேர்ந்தது. பின்னர் நான் என் கணவனோடு பெற்ற நற்பேற்றுனைக் கேட்டால் அது உனக்குச் சிரிப்பைத் தரும் என்று தான் கண்ட கனவினைக் கூறினாள். இதனை,

“பெறுகேன்;

கடுக்கும் என்நெஞ்சம் கனவினால், என் கை

பிடித்தனள் போய் ஓர் பெரும் பதியுள் பட்டோம்;

பட்ட பதியில், படாது ஒரு வார்த்தை

இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு என்-தன்மேல்;

கோவலற்கு உற்றது ஓர் தீங்கு என்று அதுகேட்டு,

காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனொடு

ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால்; உரையாடேன்;

தீக்குற்றம் போலும், செறி-தொடீஇ! தீக் குற்றம்

உற்றேனொடு உற்ற உறுவனோடு யான் உற்ற

நற்றிறம் கேட்கின் நகை யாகும்”

என்று விவரித்துள்ளார் இளங்கோவடிகள். இது கண்ணகிக்கு நேரப்போகும் அவலத்தின் முன்னறிவிப்பாக அமைந்துள்ளது.

**தேவந்தி தேறுதலும் கண்ணகி மறுமொழியும்**

தேவந்தி உண்ணகியிடம், நீ “முற்பிறப்பில் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்றில் தவறினாய். அக்குறை நீங்கிட சங்க முகத்துறைக்கு அருகிலுள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய இரு துறைகளில் மூழ்கி மன்மதன் கோயிலில் வணங்கினால், இம்மையில்

கணவனும், மறுமையில் வீடு பேறும் கிடைக்கப்பெறுவாய்; நாம் அவ்வாறு ஒரு நாள் செய்வோம்” என்று கூறினாள். அதற்குக் கண்ணகி ‘அவ்வாறு செய்வது எங்கள் மரபன்று’ என்னும் பொருள்பட, ‘பீடன்று’ என ஒற்றைச் சொல்லால் மறுத்தாள்.

**கோவலன் வருகையும் தொடர் நிகழ்வுகளும்**

கோவலன் அப்போது மாதவியிடமிருந்து திரும்பிவந்தான், கண்ணகியின் பள்ளயறைக்குச் சென்ற கோவலன், கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு வருந்தினான். ‘வஞ்சம் பொருந்திய கொள்கையுடைய பரத்தையோடு ஆடிப் பணத்தையெல்லாம் பறிகொடுத்த வறுமை எனக்கு நாணத்தைத் தருகிறது’ என்றான் கோவலன். அதைக் கேட்ட கண்ணகி புன்னகையோடு, ‘என்னிடம் இரண்டு சிலம்புகள் உள்ளன; பெற்றுக்கொள்ளுங்கள்’ என்று கூறினாள்.

இந்த உரையாடல் காட்சியை,

“சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடிக்
குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு என்ன-
நலம்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்புள கொண்ம்”

என்று இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார். அதுகேட்ட கோவலன், ‘இந்தச் சிலம்புகளை விற்று மதுரை சென்று நான் தொலைந்த பொருள்களை ஈட்டுவதாக இருக்கிறேன்; நீயும் வா என்றான். கோவலனும் கண்ணகியும் பொழுது புலர்வதற்கு முன்பே இரவோடு இரவாக மதுரையை நோக்கிப் புறப்பட்டனர்.

## 5.2 நாடுகாண்காதை

கோவலனும் கண்ணகியும் வழியில் எதிர்ப்பட்ட கவுந்தியடிகளோடு மதுரை நோக்கிப் பயணித்ததைப் பற்றிப் பேசுகிறது இக்காதை.

**கோவலனும் கண்ணகியும் கவுந்தியின் தவப்பள்ளி அடைதல்**

பொழுது விடிவதற்கு முன்னர் மதுரைக்குப் புறுப்பட்ட கோவலுனும் கண்ணகியும் புகார் நகரத்து வாயிலைக் கடந்தனர். காவிரியின் சங்கமுகத் துறையைத் தாண்டினர். வடகரை வழியாகச் சோலைகளின் ஊடே மேற்காகச் சென்று ஒரு காத தூரம் நடந்தனர். கவுந்தியடிகள் தவப்பள்ளி அமைத்திருக்கும் சோலையை அடைந்தனர்.

**கண்ணகி வினாவும் கோவலன் விடையும்**

நடந்தே அறியாத கண்ணகி, உள்ளமும் உடலும் வாடிப் பெருமூச்சுவிட்டு 'மதுரைநகரம் யாது' என்று வினவினாள். 'முப்பது காத தூரம் தான். இதோ பக்கத்திலிருக்கிறது மதுரை' என்று சொல்லிக் கோவலன் சிரித்த செய்தியை,

"முதிராக் கிளவியின் முள் எயிறு இலங்க

மதுரை மூதூர் யாது? என விவை-

ஆறைங் காதம் நம் அகல்நாட்டு உம்பர்

நாறைங்கூந்தல்! நணித்து என நக்கு" (40-43)

என்னும் பாடல் அடிகள் சுட்டுகின்றன.

**மூவரும் மதுரை செல்லல்**

கோவலன் கவுந்தியடிகளைக் கண்டு வணங்கி, அவர்கள் மதுரைக்குச் செல்வதைக் கூறினார். கவுந்தியடிகளும் தமக்கும் அங்கு வேலையிருப்பதாகவும், மதுரைக்குத் தானும் வருவதாகவும் சொல்லி, மூவரும் மேற்குத்திசை வழியில் புறபப்பட்டனர்.

**காவிரி ஆற்றின் ஓசையும் பறவைகளின் ஓசையும் நாட்டுவளமும்.**

'கடல் வளன் எதிரக் கயவாய் தெரிக்கும்

காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை,

ஓ இறந்து ஒலிக்கும்' காவிரி ஆற்றின் ஒலியோடு"

கம்புள் கோழி, கனை குரல் நாரை, செங்கால் அன்னம், பைங்கால் கொக்கு, கானக்கோழி, நீர்நிறக்காக்கை, உள், ஊரல், புள், புத முதலிய பறவைகளின் ஓசைகளையும், உழவரின் ஒலிகளையும் கண்டு கேட்டும், மறையோர் இருக்கை, உழவர் இருக்கை முதலான பறவைகளின் ஓசைகளையும், உழவரின் ஒலிகளையும் கண்டும் கேட்டல், மறையோர் இருக்கை, உழவர் இருக்கை முதலான நாட்டு வளங்களையும் கடந்து மூவரும் நாள் ஒன்றுக்கு ஒரு காததூரம் நடந்து திருவரங்கத்தை அடைந்தனர்.

**சாரணர் அறிவுரையும் கவுந்தியின் புகழ்மாலையும்**

அவ்வூர்ச் சோலையில் வந்திருந்த சமண சமயச் சாரணரை மூவரும் தொழுதனர். சாரணர் கூறிய அறவுரைகளைக் கேட்டனர்.

"ஒழிக என ஒழியாது ஊட்டும் வல்வினை;

இட்ட வித்தின் எதிர்வந்து எய்தி,

ஓட்டும் காலை ஒழிக்கவும் ஒண்ணா" என்றும்,

"அறிவன் அறவோன் அறிவு வரம்பு இகந்தோன்

செறிவன், சினேந்திரன் சித்தன், பகவன்

தரும முதல்வன், தலைவன், தருமன்,

பொருளன், புனிதன், புராணன், புலவன்,

… … …. …. …..

… … …. …. …..

அங்கம் பயந்தோன், அருகன், அருள்முனி,

பண்ணவன், எண்குணன், பாத்துகில் பழம்பொருள்

விண்ணவன், வேதமுதல்வன், விளங்கு ஒளி

ஓதிய வேதத்து ஒளிஉறின் அல்லது

போதார், பிறவவிப்பொதி- அறையோர்" எனறும்

சாரணர் வழங்கிய அறிவுரைகளைக் கேட்டனர். சாரணர் அறிவுரை கேட்ட களவுந்தியடிகள் தன் கை தலைமேல் கொண்டு

"ஒரு மூன்று அவித்தோன் ஓதிய ஞானத்

திருமொழிக்கு அல்லது என்செவிஅகம் திறவா

காமனை வென்றோன் ஆயிரத்து எட்டு

நாமம் அல்லது நாவினது என் நா" என்று அருகனின் பெருமைகளைப் பலவாறு பாராட்டிப் புகழ்மாலை சூட்டினார்.

**வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும்**

மூவரும் ஓடம் வழியாகக் காவிரித் தென்கரையை அடைந்து ஒரு சோலையில் இளைப்பாறினர். அவ்வழியாக வந்த பரத்தையும், கயவனும் கண்ணகி –கோவலனை அடாத சொல்லால் பழித்தனர். கவுந்தியடிகள் அவர்களைச் சபித்தார். நரிகளாக மாறிய அவர்களுக்கு இரங்கி, சாபவிமோசனம் அளிக்குமாறு கோவலனும், கண்ணகியும் வேண்டினர்; கவுந்தியடிகளும் அவ்வாறே சாபவிமோசனம் அளித்தார்.

பின்பு மூவரும் உறையூர் சென்று சேர்ந்தனர்.

**சோதித்தறியும் வினா விடைகள்**

1.புகார் நகர மகளிரின் அந்திப் பொழுதுச் செயல்கள் பற்றி இளங்கோவடிகள் கூறுவன யாவை?

புகார்க் காண்டத்தில், வேனிற் காதைக்கு அடுத்தும் நாடுகாண் காதைக்கு முன்பும் 'கனாத்திறம் உரைத்த காதையை அமைத்துள்ளார் இளங்கோவடிகள்.

வேனிற் காதையின் இறுதியில், கோவலன் அந்தி மாலைப்பொழுதில் தன்னிடம் வராவிட்டாலும், மறுநாள் காலையிலாவது வருவான் என்று வாடினாள் மாதவி.

கனாத் திறம் உரைத்த காதையின் தொடக்கத்தில் அம்மாலைப் பொழுது மறைந்தபிறகு, புகார் நகர மகளிரின் அந்திப் பொழுதுச் செயல்களை இளங்கோவடிகள் வருணிக்கிறார்.

'அகல்நகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை

நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த

மாலை மணிவிளக்கங் காட்டி இரவிற்குஓர்

கோலம் கொடி இடையார் தாம் கொள்ள'.

ஞாயிறு மேல்திசையில் சென்று மறைந்தது. அந்திப் பொழுது வந்தது. பூங்கொடி போல் துவள்கின்ற இடை கொண்ட புகார் நகரத்து மகளிர், தத்தம் வீடுகளில் அரும்பு அவிழ்கிற முல்லைப் பூக்களை நெல்லுடன் கலந்து மனையிடம் எங்கும் தூவினார்கள்; அழகிய விளக்குகளை ஏற்றி வைத்தார்கள். இல்லத்தில் உறைகின்ற தெய்வத்தை வணங்கினார்கள். தாம் கொண்டிருந்த பகற் பொழுதிற்குரிய கோலத்திற்கான ஆடை அணிகளை நீக்கி, இரவுக் கோலத்துக்கேற்ற ஆடை அணிகளை அணிந்தார்கள். மகளிர், தாம் பகலில் அணிந்தவற்றைக் களைந்து, இரவில் தம் துணைவரைத் தழுவுதற்கு ஏற்ற நொய்மையான ஆடை மற்றும் நறுமணப் பொருள்களைக் கொண்டு ஒப்பனை செய்துகொண்டனர். இதன் மூலம், கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகி, இரவுக் கோலம் கொள்ளாத தனிமைத் துயரைக் குறிப்பாகக் காட்டுகிறார் இளங்கோ.

**அக்கால வழக்கம்**

கதிரவன் மறையும் அந்திநேரத்தில் விளக்குகளை ஏற்றிவைத்து, முல்லை மலரோடு நெல் கலந்து தூவி வழிபட்டு இரவு அலங்காரம் செய்யும் வழக்கம் அக்கால மகளிரிடம் இருந்தது.

2.மாலதி தன் துயர் தீர்வதற்குச் சென்று வேண்டிய கோட்டங்கள் யாவை?

**மாலதிக்கு நேர்ந்த துன்பம்**

முன்னொரு காலத்தில், ஒரு பார்ப்பனனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். அவர்களுள் மாலதி என்பவள், தன் மாற்றாளின் ஆண் குழந்தைக்குப் பாலூட்டினாள். பால் விக்கியதால் குழந்தை இறந்துவிட்டது. அதிர்ச்சியடைந்த மாலதி, 'கணவனும் மாற்றாளும் தான்தான் குழந்தையை வேண்டுமென்றே கொன்றுவிட்டதாக, அடாத பழியைச் சுமத்துவார்களே என்று மனங்கலங்கினாள். இறந்துபோன குழந்தையை எடுத்துக்கொண்டு.

பூம்புகாரைச் சுற்றியுள்ள கோயில்கள் பலவற்றுக்கும் சென்று, தனது துன்பத்தைத் தீர்க்குமாறு வேண்டினாள்.

**மாலதி சென்ற கோயில்கள்**

1. தேவர்களின் மரமாகிய கற்பகம் நிற்கும் கோயில்,
2. இந்திரனது ஊர்தியாகிய ஐராவதம் என்னும் வெள்ளை யானை நிற்கும் கோயில்
3. அழகிய வெண்திருமேனியை உடைய பலதேவர் எழுந்தருளிய கோயில்
4. கீழ்த் திசையில் தோன்றுகின்ற ஞாயிறுக்குக் கட்டிய கோயில்,
5. ஊரின் காவல் தெய்வமாகிய சம்பாபதி (ஐயனார்) எழுந்தருளிய கோயில்
6. வேற்படை ஏந்திய முருகன் கோயில்.
7. இந்திரனின் படைக் கருவியாகிய வச்சிராயுதம் நிற்கும் கோயில்,
8. நகர்ப்புறப் பகுதியில் வாழும் இயல்புடைய சாதவாகனன் (ஐயனார்) கோயில்.
9. அருகனின் கோயில்.
10. சந்திரனாகிய திங்கள் கடவுளுக்குக் கட்டிய கோயில்.

ஆகிய கோயில்களுக்கு மாலதி சென்று அலைந்தாள் அப்பொழுது, அந்தக் கோயில்களில் உள்ள தெய்வங்களைப் பார்த்து. "தெய்வங்களே! எனக்கு ஏற்பட்டுள்ள இத்துன்பத்தைத் தீர்த்து அருளுங்கள்" என்று மாலதி வேண்டினாள். அத்தெய்வங்கள் ஒன்றேனும் அவளது துயரினைத் தீர்க்க முன் வரவில்லை. அதனால், மீண்டும் பாசண் சாத்தன் என்னும் ஐயனார் கோயிலுக்கே சென்று, தன் துயரைச் சொல்லியபடி அங்கேயே வரம் வேண்டிக் கிடந்தாள்.

**3. கண்ணகி கண்ட கனவினை விளக்குக.**

மாலைப்பொழுது மறைந்தது, இரவுப் பொழுது வந்தது, புகார் நகர மகளிர், தம் துணைவரைத் தழுவுவதற்கேற்ற இரவுக் கோலம் கொண்டனர்.

**தேவந்தியின் வருகை:**

தெய்வச் சாத்தனின் மனைவி தேவந்தி, கண்ணகியின் தோழியான இவள், சாத்தனின் கோயிலுக்குச் சென்று கண்ணகிக்காக வழிபட்டாள். கண்ணகியைச் சந்தித்து, "உன்னைப் பிரிந்த கணவனோடு கூடி நீ வாழ்வு, பெறுவாயாக!" என்று அவள் வாழ்த்தினாள், அப்பொழுது கண்ணகி,

'பெறுக கணவனோடென்றாள் பெறுகேன்

கடுக்குமென் நெஞ்சம் கனவினால்..' என்றாள்.



**கண்ணகி கண்ட கனவு:**

தேவந்தியிடம் கண்ணகி தான் கண்ட கனவு ஒன்றினைப் பற்றிக் கூறலானாள். "செறிந்த வளையல் அணிபவளே! நீ வாழத்தியபடி நான் என் கணவனைப் பெறுவேன். ஆயினும், நான் கண்ட கனவினால் என் நெஞ்சம் வருந்துகின்றது.

அந்தக் கனவில் என் கணவன் என்னை விரும்பி வந்து அன்புடன் என் கையைப் பற்றினான். பின்னர், நாங்கள் ஒரு பெரிய நகரத்தில் புகுந்தோம். அவ்வூர் மக்கள், பொய்த் தேள் இடுவதுபோலப் பொய்யான பழிச்சொல் ஒன்றினை என் மேல் இட்டனர். அப்பழிமொழியால் கோவலருக்கு ஒரு தீஙகு உண்டாயிற்று என்று பிறர் கூறக்கேட்டேன். அந்த நகரத்து அரசன் முன்னர் சென்று வழக்குரைத்தேன். அதனால், அவ்வரசனுக்கும் அவ்வூருக்கும் ஏற்பட்ட தீங்கு ஒன்று உண்டு. அவ்வூருக்கு ஏற்பட்ட தீங்கு, நான் செய்த தீக்குற்றத்தின் பயன்போல் தோன்றுகின்றது. ஆதலால், அதனை நான் உனக்குக் கூறமாட்டேன். இவ்வாறு கொடிய குற்றம் எய்திய என்னோடு என் கணவர் பெற்ற நன்மையை நீ கேட்பாயானால், அது நகைப்பை உண்டாக்கும்'.

**கனவின் விளக்கம்**

பின்னால் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளைக் கண்ணகி கண்ட கனவு முன்னதாக அறிவிக்கிறது. கனவிற் கண்டபடி, கண்ணகியிடம் வருகிறான் கோவலன், இருவரும் சென்ற நகரம், மதுரை. அரசியின் சிலமபு திருடிய கள்வனின் மனைவி என்பது ஊரார் கண்ணகியின் மேல் இட்ட பிழி; கண்ணகி சென்று வழங்குரைத்த அரசன், பாண்டியன், அரசன் மடிவதும் ஊர் தீட்டிபிடித்து எரிவதும் தீங்கு; கண்ணகியின் வெஞ்சொல்சாபமலால் ஊர் தீப்பிடித்தது அவளது குற்றம்; கோவலனும் கண்ணகியும் விமானத்தில் வானுலகம் செல்வது, நல்திறம்.

4.தேவந்தியின் அறிவுரையும் அதற்குக் கண்ணகியின் பதிலும் பற்றி எழுதுக

தெய்வச் சாத்தனின் மனைவி தேவந்தி கண்ணகியிடம் சென்று கணவனைப் பெறும்படி வாழ்த்தினாள். கோவலுனுடன் தான் ஒரு நகரத்திற்குச் செல்ல. அங்குப் பொய்ப் பழியால் அவனுக்குத் தீங்கு ஏற்பட, அரசனிடம் தான் வழக்குரைக்க, அரசனுக்கும் அவ்வூருக்கும் தன்னால் தீங்கு ஏற்பட, கோவலனுக்கு தனக்கும் நற்பேறு ஏற்பட்டது. இவ்வாறு தான் கண்ட கனவினைக் கண்ணகி தேவந்தியிடம் கூறினாள்.

**தேவந்தி சொன்ன பரிகாரம்**

கனவினைக் கேட்ட தேவந்தி, ஒரு வழி சொன்னாள். "பொன்வளையல் அணியும் தோழி! நீ உன் கணவரால் வெறுத்துக்

கைவிடப்பட்டவள் இல்லை. உன்னுடைய முற்பிறப்பில் மகளிர் கணவனுக்காக மேற்கொள்வதற்கு உரிய நோன்பிலே தவறு செய்துள்ளாய் போலும். அதனால், இப்பிறப்பில் கணவரைப் பிரிந்து வாடுகின்றாய் போலும். அத்தவறு இவ்வளவோடு தொலைந்து ஒழிவதாக! காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தின் அருகில் உள்ள நெய்தல் நிலத்துக் கானலில் சோம குண்டம், சூரிய குண்டம் என்று இரண்டு பொய்கைகள் உள்ளன. அவற்றின் துறைகளில் மூழ்கி, காமவேள் கோயிலை அடைந்து, அவனைத் தொழுகின்ற மகளிர், இவ்வுலகத்தில், தம் கணவரோடு பிரியாமல் இருந்து இன்பம் உறுவார்கள்; மறுமையில் போக பூமியில் தம் கணவரோடு பிறந்து நிரந்தரமாகப் பேரின்பம் நுகர்வார்கள். அதனால், நாம் இருவருக்கும் ஒருநாள் அப்பொய்கைகளில் மூழ்கி வழிபடுவோம்." என்று கூறினாள்.

**கண்ணகியின் மறுப்பு**

தேவந்தி கூறியதைக் கேட்ட கண்ணகி. "பீடன்று" —அவ்வாறு நீராடுதல், "பெருமையன்று"- என்று ஒரே சொல்லில் மறுத்துவிட்டாள்.

**விளக்கம்**

தேவந்தி தனது தோழியின் நன்மைக்காக வழிபாடு செய்கிறாள். கண்ணகியோ, பிறரிடம் சொல்ல முடியாத கனவினைச் சொல்லும் தோழியாகத் தேவந்தியைத் தேர்வு செய்கிறாள். கண்ணகியைத் தேற்றுவதற்குரிய யோசனை ஒன்றினைத் தேவந்தி கூறுகிறாள். கனவு பற்றி விரித்துரைத்த கண்ணகி, 'பீடன்று' என்று ஒரே சொல்லில் சுருக்கமாக மறுத்து விடுகிறாள். பத்தினிப் பெண்டிர், பிற தெய்வங்களின் பரிந்துரையினால் கணவனைப் பெறுவது என்பது தன்மானக் குறைவு என்று கண்ணகி கருதினாள் போலும்.

5.கோவலன் -கண்ணகி உரையாடலை எழுதுக

**கோவலனின் வருகை**

கண்ணகியும் தேவந்தியும் உரையாக்கொண்டிருந்தனர். அப்பொழுது, குற்றேவல் செய்யும் ஒருத்தி விரைந்து வந்து" "நீடிய காவலன் போலும் கடைத் தலையான் வந்து நம் கோவலன்" என்று கோவலனின் வருகையைக் கண்ணகியிடம் தெரிவித்தாள். அப்போது, பெருமை பொருந்திய பள்ளியறைக்குள் கோவலன் புகுந்தான்.

**கோவலனின் வருத்தம்**

கோவலன், கண்ணகியின் வாடிய மேனியையும் வருத்தத்தையும் நோக்கி வருந்தினான். "வஞ்சகமும் பொய்மையும் உடைய மாயத்தாளோடு கூடியிருந்தால், முன்னோர் தேடித் தந்த குன்றம் போன்ற பொருள்குவியல்கள் எல்லாம் தொலைந்தொழிந்தன. அதனால் உண்டாகிய வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது", இவ்வாறு மனம் வருந்திக் கூறினான் கோவலன்.

**கண்ணகி தந்த சிலம்பு**

அவன் கூறியதைக் கேட்ட கண்ணகி, தன் முகத்தில் புன்முறுவலைக் காட்டினாள். "சிலம்புகள் உள்ளன. அவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்", என்று கோவலனிடம் அவள் கூறினாள்.

**கோவலனின் திட்டம்**

"சேயிழையே! இப்பொழுது நான் கூறுவதனைக் கேட்பாயாக, இந்தச் சிலம்பினையே முதலாகக் கொண்டு, நான் உன்னிடம் முன்பு வாங்கி அழித்த அணிகலன்களையும் என்னால் தொலைக்கப்பட்ட பொருள்களையும் தேடத் துணிந்தேன். அதற்காகப் புகழுடைய மதுரை மாநகருக்குச் செல்வோம். என்னோடு இப்பொழுதே நீ புறப்படுவாயாக" என்று கோவலன் கண்ணகியிடம் தன் திட்டத்தைக் கூறினான்.

## 5.3 சோதித்தறியும் வினாக்கள்

1. நாடுகாண் காதையில் இடம் பெறும் நாட்டுவளத்தைக் குறிப்பிடுக.

விடை: காவிரி ஆற்றின் ஒலியும் பறவைகளின் ஓசையும் நாட்டுவளமும் என்ற தலைப்பில் அமைந்த செய்திகள்.

2. சாரணர் அறிவுரையும் கவுந்தியின் புகழ்மாலையும் குறித்து எழுதுக.

விடை : சாரணர் அறிவுரையும் கவுந்தியின் புகழ்மாலையும் என்னும் தலைப்பில் அமைந்த செய்திகள்

# பிரிவு-2 மணிமேகலை- சீவகசிந்தாமணி

## கூறு : 6 –மணிமேகலை



**அறிமுகம்**

மணிமேகலை என்னும் இந்நூல் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும்.

“வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்

மாவண் தமிழ்த்திறம் மணிமேகை.ல துறவு

ஆறைம் பாட்டினுள் அறியவைத்த தனன்என்”

என்பதால், நூலாசிரியரின் பெயர் கூலவாணிகள் சாத்தனார் என்பது புலனாகிறது. இவர் இளங்கோவடிகள் காலத்தவராவர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கதைத்தொடர்பின் அடிப்படையில் ஒன்றோடொன்று ஊடுருவி ஒன்றி நிற்பதால் இவற்றை ‘இரட்டைக்காப்பியங்கள்’ என்றும் வழங்குவர். இளங்கோவடிகள் முன்னிலையில் சாத்தனாரும், சாத்தனார் முன்னிலையில் இளங்கோவடிகளும் தத்தம் காப்பியத்தை அரங்கேற்றினர் எனப் பதிகங்கள் வாயிலாக அறியலாம்.

சங்காலத்தில் வாழ்ந்த மதுரைக் கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனாரும் மணிமேகலை ஆசிரியரும் ஒருவரே என்பர் சிலர். இக்கூற்றை மறுப்போர், மணிமேலையில் வடமொழிச் சொற்கள் மிகுதி; பெரும்பாலான பாத்திரங்களின் பெயர்கள் வடமொழிப் பெயர்களே. இதுபோல் வடசொற்களைச் சங்கநூல்களில் காணமுடியாது என்று கூறுவர். மேலும் இந்நூலில் உள்ள தர்க்க முறைகள் வடமொழியைச் சார்ந்த நியாயப் பிரவேசம், நியாயபிந்து முதலான நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை; எனவே கி.பி.4 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்றும் கூறுவர். மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல்களிலும்’ ‘சீத்தலை’ என்ற சொல் சுட்டப்படாமல் இருப்பதும் நோக்குதற்குரியது. மேலும் பௌத்த சமயத்தை மட்டும் போற்றிப் பிறமதத்திடம் காழ்ப்புணர்ச்சியைக் காட்டுபவராக இந்நூலாசிரியர் அமைகிறார். சங்க காலத்தில் இது போன்றதொரு போக்கு இல்லை. சங்ககாலச் சாத்தனார் போல அல்லாமல்

இவர் காதல் களவு மணத்தை வெறுத்துரைக்கிறார். அறத்தையும் வீடுபேற்றையும் மட்டுமே புகழ்ந்துரைத்துள்ளார்.

சம்பாபதி என்ற தெய்வத்தின் பெயரைப் பெற்றிருந்த புகார் நகரம் அகத்திய முனிவரின் கரகத்து நீரைக் காகம் கவிழ்க்கப்பெருகிய காவிரியால் காவிரிப்பூம்பட்டினம் எனப்பெயர் பெற்றது. இவ்வூரில் கோவலன் என்ற வணிகனுக்கும் மாதவி என்ற கணிகைக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வரலாற்றை ‘விழாவறை காதை’ முதலாகப் ‘பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை’ ஈறாக முப்பது காதைகளில்

இளங்கோ அடிகள் கேட்க, கூல வாணிகன் சாத்தனார் 'மணிமேகலைத் துறவு' எனப் பெரிய நூலாகப் பாடியுள்ளார்.



இந்நூலின் மற்றொரு பெயர் 'மணிமேகலைத் துறவு' என்பதாகும். துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார், திருவெங்கைக் கோவையில், 'கொத்தார் குழல்ழ மணிமேகலை நூல் நுட்பம் கொள்வதெங்ஙன்?' என்று குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அம்பிகாபதி கோவை, 'மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே' எனப் போற்றியுள்ளது. இவை இந்நூலின் சிறப்பினைத் தெளிவுபடுத்த உதவும் குறிப்புகளாகும்.

இந்நூலில் 'விழாவறை காதை' முதல் பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை' வரை 15 காதைகள் பாடமாக உள்ளன.

## 6.1 விழாவறைகாதை

### இந்திர விழாவின் தோற்றம்

பண்டைக்காலத்தில் அகத்திய முனிவர் காவிரிப்பூம்பட்டினத்தை வளமுறச் செய்ய நினைத்தார். அவருடைய ஆணையின்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனென்னும் சோழன்,

"மண்ணகத்து என்தன் வான்பதி தன்னுள்

மேலோர் விழைய விழாக்கோள் எடுத்த

நால்ஏழ் நாளினும் நன்குஇனிது உறைக" (6-8)

என இந்திரனை வணங்கிக் குறையிரந்து அவனது அனுமதிபெற்று இருபத்தெட்டுநாள் அந்நகரில் ஒருவிழா நடத்தினான். பிற்காலங்களிலும் அவன் பரம்பரையோரால் ஆண்டுதோறும் அவ்விழா அவ்வாறே நடத்தப்பெற்று வந்தது. கற்றோமம் பெரியோரும் துணைநின்று விழாவைச் சிறப்பித்து மகிழ்ந்தனர்.

### பெரியோர் கூடலும் விழாவின் இன்றியமையாமையும்

அவ்விழாவை நடத்தக் கருதிய அந்நகரத்திலுள்ள பல சமயவாதிகளுள், ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் ஒருங்கு கூடி, 'இந்திரவிழா நடத்துவதை நாம் மறந்தால் நாளங்காடிப் பூதம் துன்பம் செய்யும்; பாவிகளைப் புடைத்து உண்ணும் சதுக்கடிதம் இந்நகரை விட்டு அகலும்; ஆதலால் இவ்விழாவை நடத்துவோமாக' என்று தமக்குள் உறுதிசெய்துகொண்டு, அதனை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குக் கூறினர்.

**வள்ளுவன் முரசறைதல்**

இந்திரனது வச்சிராயுதமுள்ள கோயிலாகியய வச்சிரக் கோட்டத்தில் இருந்த முரசை யானையின் பிடறியால் ஏற்றி முதலில் ஊரை வாழ்த்தியும், 'மேகம் மாதந்தோறும் மும்மழை பொலிக; அரசன் செங்கோலனனாகுக; அறிஞர்களே, இந்திரவிழா நடக்கும் காலத்தில் சொர்க்கலோகம் வறிதாகுமாறு எல்லாத் தேவர்களும் அதனை விட்டு நீங்கி இங்கே எழுந்தருளுவர்; இது பெரியோர் முடிவு. ஆதலில், வீதிகளில் பூரணகும்பங்கள், பொற்பாலிகைகள், பாவை விளக்குகள் ஆகியவற்றைப் பரவலாக வைத்திடுங்கள்; குலைக் கமுகு, குலைவாழை, கரும்பு, வஞ்சிக்கொடி, பூங்கொடி ஆகியவற்றைக் கட்டவேண்டிய இடங்களில் கட்டுங்கள்; தூண்களில் முத்துமாலைகளைத் தொங்கவிடுங்கள்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை நீக்கிப் புதுமணலைப் பரப்புங்கள்; துகிற்கொடிவகைகளை மாடங்களிலும் வாயில்களிலும் கட்டுங்கள்'.

"நுதல்வழி நாட்டத்து துறையோன் முதலா,
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம்ஈறு ஆக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
அறுஅறி மரபின் அறிந்தோர் செய்யுமின்;
தண்மணல் பந்தரும் தாழ்தரு பொதியிலும்,
புண்ணிய நல்உரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;'' (54-61)

யாரிடத்தும் பகைமையும் கோவமும் கொள்ள வேண்டாம்.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி ;
வசியும் வலினும் சுரக்கென" (70-71) வாழ்த்தியும் முரசறைந்து

இந்திரவிழாவை நகரத்தாருக்குத் தெரிவித்தான்.

## 6.2 ஊர் அலர் உரைத்த காதை

**சித்திராபதியின் வேண்டுகோள்**

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடந்தது. அவ்விழாக் காலத்தில் பண்டைய வழக்கப்படி அரங்கில் ஆடுவதற்காக நாடகக் கணிகையாகிய மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் வரவில்லை. அதனால் மாதவியின் தாயாகிய சித்திரபதி மனம் நொந்து மாதவியின் தோழியாகிய வயந்தமாலையை அழைத்து, 'நீ மாதவியிடம் சென்று

விழாவிற்கு அவள் வாரத்திருத்தல் குறித்து இவ்வூரார் கூறும் பழிச்சொல்லை அவளுக்குச் சொல்லி வா' என்று அனுப்பினாள்.

**ஊரார் அலரை வயந்தமாலை மாதவிக்குத் தெரிவித்தல்**

அங்ஙனமே சென்ற வயந்தமாலை, மணிமேகலையோடு மாதவி இருந்த மலர் மண்டபத்தை அடைந்தாள். அங்கே தவத்தால் வாடிய மாதவியின் தோற்றத்தைக் கண்டு வருத்தமுற்று அவளை நோக்கி, 'நீ உன் மகளுடன் இந்திரவிழாவிற்கு வராமலும், உன் குலமரபிற்கு ஒவ்வாத தவவொழுக்கம் பூண்டு இருத்தல் பற்றியும் ஊரார் கூறும் பழிமொழிகள் பலவாகும்' என்று கூறினாள்.

"காலக் கணிதமும் கலைகளின் துணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொன்தொடி நங்கை
நல்தவம் புரிந்தது நாண் உடைத்து என்றே
அலகுஇல் மூதூர் ஆன்றவர் அல்லது
பால்தொகுடி உரைக்கும் பணிபுஇல் வாய்மொழி
நயம்பாடு இல்லை; நாண்உடைத்து" (29-36)

என்று கூறிச்செல்கிறார் சாத்தனார்.

**வயந்தமாலையிடம் மாதவி சொல்லியனுப்பிய செய்திகள்**

வயந்தமாலை கூறியதைக் கேட்டு, காதலன் இறந்ததை அறிந்து உயிரைப் போக்காமல் உயிரோடு நின்ற நான் புகார் நகரின் பொருள்உரையையும், நாணத்தையும் இழந்து நிற்கின்றேன் என்று கூறினாள் மாதவி. மேலும்,

"காதலர் சிறப்பின் கனைஎரி பொத்தி,
ஊதுஉடலைக் குருகின் உயிர்த்துஅகத்து அடங்காது
இன்உயிர் ஈவர்; ஈயார் ஆயின்,
நல்நீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;
நளிஎரிபுகாஅர் ஆயின் அன்பரோடு
உடன்உறை வாழ்க்கைக்கு நோற்றுஉடம்ப அடுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்பநீர் ஞாலத்து" (42-48)

என்று பத்தினிப் பெண்டிரின் இயல்புகளை எடுத்துரைத்தாள். 'தன் கணவன் கொலையுண்டதற்குப் பொறாதவளாப் மிகவும் சினந்து மதுரையை எரித்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியினுடைய மகளாகிய மணிமேகலை தவவழியிற் செல்லுதற்கு உரியவளேயன்றி மிகவும் இழிந்த பரத்தமைத் தொழிலுக்கு உரியவளல்லள்; ஆதலால் அவள் அங்கே வாராள்'.

"மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள்" (55-57)

என்று கூறிய மாதவி, நான் இங்கே வந்து அறவணஅடிகளை வணங்கி, என் காதலன் மதுரையில் கொலையுண்டது குறித்த பெருந்துன்பத்தைச் சொல்லி வருந்தி முறையிட்டேன். அதற்கு அவர்,

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்;
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறிவது அறிக!" (64-67)

என்று நால்வகை வாய்மைகளையும் அருளிச் செய்து, பஞ்ச சீலத்தையும் உபதேசித்து 'இவற்றைக் கடைப்பிடி' என்று கூறி என்னைத் தவவழியில் புகுத்தினார். ஆதலில் நானும் அங்கே வருவதற்கு உரியவளல்லள். இச்செய்தியை என் தோழியர்க்கும் என் நற்றாய் சித்திராபதிக்கும் சொல்' என்று கூறினாள். அதனைக் கேட்ட வயந்தமாலை பெறுதற்கரிய மாணிக்கத்தைக் கடலில் வீழ்த்தியவர் போலச் செயலற்று, மீண்டு சித்திராபதியிடம் சென்றாள்.

**மலர்வனம் புக்க காதை**

**மணிமேகலையின் துயரம்**

மாதவி வயந்த மாலையிடம் வருத்தத்தோடு சொல்லிய சொற்களை அங்கே இருந்த மணிமேகலை கேட்டாள். அதன் மூலமாகப் பற்றுதற்குரிய நற்காலம் வந்து உற்றமையால் அவள் தன்னுடைய தாய்தந்தையர்களான கண்னகிக்கும் கோவலனுக்கும் மதுரையில் சேர்ந்த துயரச் செய்தி தன்காதுகளைச் சுட, மனங்கலங்கி அழுது, சிந்தும் கண்ணீரால் தான் தொடுக்கும் மாலையை நனைத்துக் கொண்டிருந்தாள்.

"தந்தையும் தாயும் தாம்நனி உழந்த
வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்ப,
காதல் நெஞ்சம் கலங்கிக் காரிகை

மாதர் செங்கண் வரிவனப்பு அழித்து

புலம்புநீர் உருட்டிப் பொதியவாழ் நறுமலர்

இலங்கு இதழ் மாலையை இட்டு, நீராட்ட" (5-10)

என மணிமேகலையின் துயரத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறார் சாத்தனார்.

**மாதவியின் கட்டளை**

மணிமேகலையின் துயரத்தைக் கண்ட மாதவி, அவளுடைய கண்ணீரைத் துடைத்து அவளுடைய துக்கத்தை மாற்ற நினைத்து, இப்பூமாலை உன் கண்ணீரால் தூய்மையொழிந்தது; ஆதலால் வேறு மாலை தொடுப்பதற்கு நீ சோலைக்குச் சென்று புதுமலர் பறித்து வா' என்றாள்.

"மாதவி மணிமே கலைமுகம் நோக்கி

தாமரை தண்மதி சேர்ந்தது போல

காமர் செங்கையின் கண்ணீர் போல

தூநீர் மாலை தூத்தகை இழந்தது;

நிகர் மலர் நீயே கொணர்வாய்" (11-15)

என்று கூறினாள்.

**சுதமதி துயரொடும் கூறிய மொழிகள்**

மாதவியின் உயிர்த்தோழியான சுதமதி என்பாள், மாதவியை நோக்கி, 'தாய்தந்தையர்க்கு நேர்ந்த பெரும் துன்பத்தைக் கேட்டு மிக்க துக்கத்தை அடைந்த மணிமேகலையின் கண்ணீரைக் கண்டால் காமன் தன் படைக்கலங்களை எறிந்துவிட்டு நடுங்குவான். இப்பாவையை ஆடவர் புறத்தே காண்பாராயின் விட்டு நீங்குவாரோ? நீங்கார். தம் இயற்கைத் தன்மை குன்றுவர்; குன்றாமல் நிற்பாராயின் அவர்கள் பேடியரல்லரோ?

"ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?

பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்" (24-25)

என்கிறார் சாத்தனார். ஆதலால் இவளை இப்பொழுது புறத்தே பூப்பறிப்பதற்குத் தனியே அனுப்பலாகாது.

இந்நகரத்திற்கு நான் வந்ததற்குரிய காரணத்தைக் கூறுகிறேன்; கேள். நான் சண்பை நகரத்திலுள்ள கௌசிகனென்றும் ஓர் அந்தணனுடைய மகள்; ஒரு நாள் தனியே செல்வதற்கு அஞ்சாமல் அருகிலுள்ள ஒரு

காப்பியங்கள்

குறிப்புகள்

சோலைக்குச் சென்று பூப்பறித்தேன். அப்பொழுது இந்திர விழாவைக் காண்பதற்கு இந்நகரை நோக்கி ஆகாய வழியே வந்த மாருதவேகனென்னும் வித்தியாதரன் ஒருவன் என்னைக் கண்டு உடனே எடுத்துக்கொண்டு மேலே சென்று, தன்வயமாக்கிச் சிலநாள் வைத்திருந்தான்; பின்பு இந்நகரத்தே என்னை விட்டுவிட்டு நீங்கித் தன் நகரம் போய்விட்டான். மகளிர் தனியே செல்லுதலால் உண்டாகும் தீங்கு இத்தன்மையது. ஆதலால், மணிமேகலை தனியே போய்ச் சோலையிற் பூப்பறித்தல் தவறாகும். யாரேனும் துணையாக இவளுடன் செல்ல வேண்டும்.

“மணிப்பூங் கொம்பர் மணிமேகலைதான்

தனித்துஅலர் கொய்யும் தகைமையள் அல்லள்” (42-43)

என்று கூறிச் செல்கிறார் சாத்தனார்.

**ஐந்து வனங்களின் சிறப்பு உரைத்தல்**

இலவந்திகைச் சோலையின்கண் அரசனுடைய பக்கத்திலிருப்போர் பலர் இருப்பர். உய்யவனமென்றாலோ அதில் தேவர்களாலன்றி மனிதர்களால் விரும்பப்படாதனவும் வண்டுகள் மொய்க்கப் பெறாதனவும் ஆன மலர்களையுடைய மரங்களெல்லாம் வாடாத பூமாலைகளைத் தாங்கி நிற்கும். ஆதலால், அவ்வனம் கையிலே பாசத்தையுடைய பூதங்களால் காக்கப்படும் என்று நினைத்து அவ்வனத்தை அறிவுடைபோர் அடையார். சூரிய கிரணத்தால் சிறையிழந்த சம்பாதி இருந்த சம்பாதி வனமும், காவிரியின் தந்தையாகிய கவேரன் இருந்த கவேரவனமும், மிக்க முதுமையையுடையனவும் தீண்டி வருத்துவனவுமாகிய தெய்வங்களால் காக்கப்படுவதால் அவற்றினிடத்தும் அறிவுடையோர் செல்லார்.

“அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்

ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பிற்

பகவனது ஆணையிற் பன்மரம் பூக்கும்” (59-61).

உவவனமென்று ஒரு வனம் உண்டு. அதில் தன் அகத்துள்ளோருடைய ஓசையை வெளிப்படுத்தாமல் அவர்கள் உருவங்களை மட்டும் வெளிப்படுத்துவதாகிய பளிக்கு மண்டபம் ஒன்று உள்ளது. அதனுள்ளே மாணிக்கச் சோதி பரந்த ஒரு பதுமபீடம் இருக்கிறது. இது மயன் என்னும் தெய்வத்தச்சனால் உருவாக்கப்பட்டதாகும்.

**மணிமேகலையும் சுதமதியும் உவவனம் செல்லுதல்**

உவவனமன்றி உன் மகள் வேறு வனங்களுக்குச் செல்வதற்கு உரியவளல்லள்; அவளோடு பூப்பறிப்பதற்கு நானும் துணையாகச் செல்வேன் என்று சொல்லிவிட்டு மணிமேகலையோடு சேர்ந்து அவள் போயினாள். இதனை,

"அவ்வனம் அல்லது அணியிழை நின்மகள்

செவ்வனம் செல்லும் செம்மை தான்கிலள்.

மணிமே கலையொடு மாமலர் கொய்ய

அணியிழை நல்லாய் யானும் போவல் என்று

அணிப்பூங் கொம்பர் அவளொடும் கூடி

மணித்தேர் வீதியில் சுதமதி செல்வுழீஇ" (80-85)

என்பார் சாத்தனார்.

கள்ளை உண்ணும்படி ஒரு கட்குடியன் வற்புறுத்திக் கூற, அவன் பின்னே சில சனங்கள் வியப்புற்றுச் சென்றனர். ஒரு பித்தனுடைய பலவகைப்பட்ட விகாரச் செயல்களைக் கண்டு சில சனங்கள் நின்றனர். தெருவின் இரு புறத்திலுமுள்ள மாளிகைகளில் எழுதப்பட்டுள்ள சித்திரங்களைக் கண்டு சிலர் வியந்து நின்றனர் இவ்வாறான பலவகைக் காட்சிகளைத் தெருவிலே அவர்கள் கண்டனர். அப்போது மணிமேகலையைச் சூழ்ந்து கொண்ட சனங்கள் 'மிக்க அழகுடைய இவளைத் தவ வழியிற் புகுத்திய இவள் தாய் மிகவும் கொடியள்; இவள் பூப்பறிப்பதற்குச் சோலையில் புகுவாளாயின், அங்குள்ள அன்னப்பறவைகள் முதலியன இவள் நடை முதலியவற்றைக் கண்டு என்ன பாடுபடும்?' என்று அவளுடைய அழகைப் பாராட்டி மிகவும் வருந்தி நின்றனர்.

"அணியமை தோற்றத்து அருந்தவப் படுத்திய

தாயோ கொடியள் தகவுகிலள் ஈங்குஇவள்

மாமலர் கொய்ய மலர்வனம் தான்புகின்

நல்இள அன்னம் நாணாது ஆங்குஉள

வல்லுந கொல்லோ மடந்தை தன் நடை?" (149-153)

என மணிமேலையைக் கண்டோர் வியந்து வருந்தினர். சுதமதியோடு மணிமேகலை மெல்லச் சென்று உவவனத்தில் மலர் கொய்யப் புகுந்ததைச் சாத்தனார்,

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்

சிந்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே

ஒப்பத் தோன்றிய உவவனம் தன்னைத்

தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு,

மலர்கொய்யப் புகுந்தனள் மணிமேகலை" (167-171)

எனச் சுட்டிச் சென்றுள்ளார்.

## 6.4 பளிக்கறை புக்க காதை

**சுதமதி காட்ட, மலர்வனக் காட்சிகளை மணிமேகலைகாணுதல்**

அச்சோலையின் வளங்களையும் ஆங்குள்ள பொய்கையின் அழகையும் சுதமதி காட்டிட, மணிமேகலை கண்டாள்.

"பொழிலும் பொய்கையும் சுதமதி காட்ட

மணிமேகலை அம் மலர்வனம்" கண்டாள் என்பார் சாத்தனார்.

**மதயானையை அடக்கிய உதய குமாரன்-எட்டிகுமாரன் உரையாடல்**

அவள் அங்கே அப்படி இருக்க, மதவெறி கொண்டு தெருத்தோறும் வருத்தித் திரிந்ததான காலவேகமென்னும் யானையின் மதத்தை அடக்கி உதயகுமரனென்பான் தேரேறிச் சேனையுடன் வந்தான். மலரணைமேற் காதற் பரத்தை யொருத்தியோடு யாழின் கோட்டைத் தழுவிக்கொண்டு மயங்கிப் பாவைபோலிருந்த எட்டி குமரனை அவன் தெருப்பக்கத்திலுள்ள சாளர வழியால் கண்டு, "நீ அடைந்த துன்பம் யாது?" என்றான். உடனே அவன் துணுக்குற்று எழுந்து விரைந்து அருகே சென்று உதயகுமரனை வணங்கித் துதித்து, "இயற்கையழகு கெட்டு மலர் வனத்திற்கு இவ்வீதி வழியே நடந்து செல்லும் மணிமேகலையைக் கண்டேன்; கண்டவுடன் அவளது தந்தையாகிய கோவலன் மதுரையிலடைந்த கொடுந்துன்பம் நினைவிற்கு வந்து என் மணத்திண்மையை மாற்றி இந்த யாழிலுள்ள பகை நரம்பில் என் கையைச் செலுத்தியது; இதுவே நான் அடைந்த வருத்தம்" என்று சொல்லினான். பல நாளாக மணிமேகலையை விரும்பிக்கொண்டேயிருந்த உதயகுமரன், அவள் சோலை சென்றாளென்பதை அவனால் அறிந்து மகிழ்ந்து, "அங்கே போய் மணிமேலையை என் தேரில் ஏற்றிக்கொண்டு வருவேன்" என்று எட்டி குமரனுக்குச் சொல்லிவிட்டுத் தேரைச் செலுத்திச் சென்று உவவனத்தின் மதில் வாயிலை அடைந்தான்.

"விடுபரிக் குதிரையின் விரைந்து சென்று எய்தி

கடுங்கண் யானையின் கடாத்திறம் அடக்கி

அணித்தேர்த் தானையோடு அரசிளங் குமரன்

மணித்தேர்க் கொடுஞ்சி கையான் பற்றி

கார்அலர் கடம்பன் வுல்லன் என்பது

ஆரங் கண்ணியின் சாற்றினை வருவோன்" (45-50)

ஆன உதயகுமரன், எட்டிகுமரனோடு உரையாடியதன் வாயிலாக மணிமேகலை உவவனம் சென்றதை அறிந்தான். மனமகிழ்ச்சியில்,

"ஆங்குஅவள் தன்னைஎன் அணித்தேர் ஏற்றி

ஈங்குயான் வருவேன் என்று அவற்கு" உரைத்தான்.

**மணிமேகலையைப் பளிக்கறையில் புகுத்தி, சுதமதி அறிவுரை பகர்தல்**

மணிமேகலை அத்தேரொலியைக் கேட்டுச் சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்மேல் மிக்க விருப்பமுடையனென்று மாதவிக்கு வயந்தமாலை சொல்லியதை முன்னம் கேட்டுள்ளேன். அவனுடைய தேரொலிபோலும் இது. இத்துன்பத்திற்கு யாது செய்வேன்!" என்று மயங்கிக் கூறினாள் அதைக் கேட்ட சுதுமதி அவளை ஆங்குள்ள பளிக்கறையிற் புகுத்தித் தாழக்கோலிட்டுக் கொண்டு உள்ளே இருக்கச்செய்து தான் அப்பளிக்கறைக்கு ஐந்து விற்கிடைத் தூரத்தே நின்றாள். அங்ஙனம் நின்ற சுதமதியைச் சோலையிலுள்ளே வந்த உதயகுமரன் கண்டு, "யாருமில்லாத இவ்விடத்தே நிற்கின்றாய்; நீ மணிமேகலையுடன் வந்தாயென்று அறிந்துகொண்டேன். அவள் முதுக்குறைவுற்றனளோ? அவளுடைய செவ்வாய் நகைத்தலைப் பெற்றதோ? கண்கள் பிறழ்ந்து உலாவி வேட்கையைப் புலப்படுத்துமோ? அவள் பௌத்த சங்கத்தாரிருப்பிடத்தை நீங்கி இவ்விடம் வந்ததற்குக் காரணம் யாது? சொல்" என்று தனது வேட்கை தோன்ற வினவினான்.

அப்பொழுது சுதமதி வாயிலில்லாத அறையில் அகப்பட்டோர் போல மனம் வருந்தி, "இளமைப் பருவத்திலேயே முதுமை வேடம் பூண்டு வழக்கைக் கேட்டு உண்மையை வெளிப்படுத்திய சோழன் கரிகாற்பெருவளத்தானுடைய வழித்தோன்றலே! நீ ஆண்டில் இளையையாயினும் அறிவில் முதியை அல்லையோ? உனக்கு மகளிர் தெரிவித்தற்குரியனவும் உளவோ? ஆயினும் ஒன்று தெரிவிப்பேன்; கேட்டருளுக:

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளத் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து

காப்பியங்கள்

குறிப்புகள்

Self Instructional Material

மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (13-21)

என்று உடம்பினியல்பைக் கூறினாள். அவள் அங்ஙனம் கூறிய இனிய வார்த்தை உதயகுமரனது காதை அடையுமுன்னே பளிக்கறையினுள்ளே இருந்த மணிமேலையின் உருவம் அவன் கண்ணுக்குத் தோன்றியது.



## 6.5 மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

உதயகுமரன் அங்ஙனம் தோற்றிய வடிவத்தை மணிமேகலையின் வடிவமென்று நிச்சயித்து அப்பளிக்கறையினுள்ளே சென்றடைதற்கு நினைத்தான். ஆனால் அதன் வாயில் காணப்படாமையால் அ∴து இன்ன இடத்துள்ளது என்ப தை அறிந்துகொள்வதற்குப் பளிக்குச்சுவரைக் கையால் தடவிக்கொண்டு சூழ்ந்து வந்தான். அங்கே சுதமதியைப் பார்த்து, "மணிமேகலை ஏத்திறத்தினள்? சொல்" என்று கேட்கவே சுதமதி, "அவள் தவவொழுக்கமுடையவள்; குற்றஞ் செய்தாரைச் சபிக்கும் வன்மையுடையவள்; சிறிதும் காமவிகாரம் இல்லாதவள்; ஆதலின் நீ அவளை விரும்புதல் தக்கதன்று" என்று கூறினாள். ஆனால் அவன், "அவள் எத்தன்மையளாயினும் ஆகுக; எப்படியும் எனக்கு உரியளாகக்கடவள்" என்று சொல்லிக்கொண்டு போய் மீட்டும் சுதமதியைப் பார்த்து, "துறவொழுக்கம் பூண்ட சமணமாதர்களின் நடுவே ஒரு வித்தியாதரனால் இடப்பட்டவள் என்று எல்லோராலும் கூறப்படும் நீ அவர்களை நீங்கிப் பௌத்த சங்கத்தைச் சார்ந்த மாதவியின் மகளுடன் வந்ததற்குக் காரணம் யாது? சொல்" என்றான்.

அது கேட்ட சுதமதி, 'அரச, சண்பை நகரத்திலுள்ள கௌசிகனென்னும் அந்தணனுடைய மகள்யான் என்இளமைப் பருவத்தில் அன்னை இறந்தனள். அவள் இறந்த பின்பு தந்தையால் ஆதரிக்கப்பட்டுவந்த நான் ஒரு சோலையில் சென்று தனியே நின்று பூக்கொய்கையில் என்னை விரும்பி ஆகாயத்தே எடுத்துச் சென்று தன் வயமாக்கிக்கொண்ட வித்தியாதரன் ஒருவனால் இடப்பட்டு இந்நகரத்தில் இருந்தேன். இதனை அறியாத என் தந்தையார் என்னைக் காணாமல் வருந்தித் தேடிக்கொண்டே கன்னியாகுமரியாற்றிற்கு நீராடச்

செல்பவர்களோடு சென்றார். அப்போது இடையிலுள்ளதான இந்நகரத்துச் சங்கமத்துறையில் நீராடுதற்கு அந்தணர்களோடு வந்து என்னை இந்நகரில் கண்டனர். 'நீ இங்கே எப்படி வந்தனை?' என்று வினவி வருந்தி, அந்தணர்களோடிருத்தற்கு நான் தகுதியில்லேனாயினும் என்னிடத்து மிக்க அன்புடையவராதலின், அவர் என்னைக் கைவிடாதவராகி மனைதோறும் பிச்சையெடுத்து உண்பித்துத் தாமும் உண்டுபொழுது கழிப்பாராயினர். அப்படி இருக்கையில் ஒரு நாள் பிச்சை எடுத்தற்குச் செல்லும்பொழுது இளங்கன்றையுடைய ஒரு பசு அவரை முட்டி வயிற்றைக்கிழித்துவிட்டது. அதனால் சரிந்த குடரைக் கையில் ஏந்திக்கொண்டு நான் இருந்தவிடமென்று

முன்பு அறிந்தவராதலாற் சமணப்பள்ளியிற் புகுந்து, ‘முனிவர்களே, யான் உங்கள் அடைக்கலம்; என்னைப் பாதுகாக்க வேண்டும்’ என்று முறைரயிட்டார். அதைக் கேட் அவர்கள் சினந்து அவரை என்னோடும் புறத்தே தள்ளிவிட்டனர். நாங்கள் இருவரும் மிக்க துக்கத்துடனே புறவீதியிற்சென்று, ‘கதியற்ற எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாரேனும் உண்டா?’ என்று புலம்பி முறையிட்டோம். அப்பொழுது மனைதோறும் சென்று ஐயமெடுக்கும் பாத்திரத்தை ஏந்திய கையையுடையவனும் முழுமதி போன்ற முகத்தினனும் பொன்னிறமுள்ள சீவர ஆடையினனுமாகிய சங்கதருமெனன்னும் முனிவன் ஒருவன் விரைந்து வந்தான்: ‘என்ன துன்பம் அடைந்தீர்கள்?’ என்று எம்மை அருளுடன் பார்த்து இனிய மொழிகளைக் காதுகளில் நிறைத்து எம் மனத்தைக் குளிர்வித்தான்; உடனே தன் கையிலுளள பிச்சைப் பாத்திரத்தை என் கையிற் கொடுத்து என் தந்தையின் துன்பம் முற்றும் நீங்கும்படி அவரைத் தழுவி எடுத்துக்கொண்டு சென்று பௌத்த சங்கத்தார் இருப்பிடத்தைக் காட்டி என் தகப்பனாரின் மரணத்துன்பத்தையும் நீக்கினான். அம்முனிவன் எனக்குச் செவியறிவுறுத்திய,

‘எங்கோ னியல்குணனே தமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலக்தி யுணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை யெய்த
அருள றம் பூண்ட வொருபெரும் பூட்கையின்
அலக்கதி ராழி திறம்பட வுருட்டிக்
காமற் கடந்த வாமன்” (71-77)

பாதங்களையே என்னுடைய நாவானது இடைவிடாமற் பாராட்டுமேயல்லாமல் வேறென்றையும் சொல்ல அறியாது. அது முதல் பௌத்த சங்கத்தைச் சார்ந்திருந்த மாதவியிடத்தில் உறைவேனாயினேன். அதனால் இவளுடன் வந்தேன்” என்று கூறினாள்.

அது கேட்ட உதயகுமரன், “உனது இயல்பை அறிந்துகொண்டேன். மணிமேகலைச் சித்திராபதியால் இனி அடைதலும் கூடும்” என்று சொல்லிவிட்டுக் காமபரவசனாய் அச்சோலையினின்றும் போயினன்; போனவுடன் மணிமேகலை பளிக்கறையினின்றும் வெளியே வந்து சுதமதியை நோக்கி, “அன்பிலளென்றும் தவ உணர்ச்சி இல்லாதவளென்றும் வருணக்காப்பிலளென்றும் விலைமாதென்றும் என்னை உதயகுமரன்

இகழ்ந்தானென்று நினையாமல். அவன் பின்னே என்னுடைய நெஞ்சமானது செல்லுதலுற்றது. இதற்குக் காரணம் யாது? காமத்தின் இயல்பு இதுவோ?" என்றுசொல்லிக் கொண்டே நின்றாள். நின்றபொழுது, இந்நிரவிழாவைக் காணுதலுற்ற மணிமேகலா தெய்வம் அவர்களுக்குத் தெரிந்தவளும் மாயவித்தை செய்பவளுமாகிய ஒரு மடந்தை வேடம் பூண்டு அச்சோலையை யடைந்து பளிக்கறையிலுள்ள பாதபீடிகையை வலங்கொண்டு உயர எழும்பி நின்று,

"புலவன் றீர்த்தன் புண்ணியன் புராணன்

உலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ

குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்

முற்றவுணர்ந்த முதல்வா வென்கோ

காமற் கடந்தோ யேம மாயோய்

தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ

ஆயிர வாரத் தாழியந் திருந்தடி

நாவா யிரமிலே னேத்துவ தெவன்!" (98-105)

என்று துதிக்கத் தொடங்கியது. அங்ஙனம் துதித்துக் கொண்டிருக்கையில் பகற்காலம் நீங்கி அந்திமாலை வந்தது.

## 6.6 சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை

பிறகு அந்திமாலைப் பொழுது நீங்கவே சந்திரன் உதயமாயினான். மணிமேகலா தெய்வம் மீட்டும்,

ஆதிமுதல்வனறவாழி யாள்வோன்

பாத பீடிகை பணிந்தன ளேத்தி (11-2)

அங்கே வாடிநின்ற சுதமதியைப் பார்த்து, "நீங்கள் இங்கே நின்றதற்குக் காரணம் யாது? என்ன துன்பம் அடைந்தீர்கள்?" என்று கேட்டாள். உதயகுமரன் மணிமேகலையை விரும்பிச் சொல்லிய சொல்லையும், பின்பு சித்திராபதியால் அவளைப் பெறலாமென்று அவன் எண்ணிச் சென்றத்தையும் சுதமதி கூறினாள். அப்போது அத்தெய்வம் அவளைப் பார்த்து, "உதயகுமரனுக்கு மணிமேலையினிடத்திலுள்ள ஆசை சிறிதும் தணியவில்லை. 'இது முனிவர்களுடைய தவவனம்; இதில் யாம்தீங்கு செய்யலாகாது' என்று எண்ணியே அவன் இச்சோலையை விட்டு நீங்கிச் சென்றான். இவள் இதனைக் கடந்து செல்வாளாயின், புறவீதியில் அவன் இவளை அகப்படுத்திக்கொள்ளுவான். இது மெய்யே. இச்சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்றிசைக் கண்ணதாகிய சிறிய வாயில் வழியே நீங்கள் போய் முனிவர்கள் இருக்கும் சக்கரவாளக் கோட்டத்தை அடைக; அடைந்தால் ஒரு பொழுதும் யாதொரு துன்பமும் அணுகாது"

என்று சொல்லியது. உடனே சுதமதி, “மாருதவேகனும் நீயுமே அதனைச் சக்கரவாளக்கோட்டமென்று சொல்லுவீர். மற்றையோர் யாவரும் சுடுகாட்டுக்கோட்டமென்றே சொல்லுவர்; சக்கரவாளக்கோட்டம் என்றதற்குக் காரணம் யாது? அதனைச் சொல்லுக” என்று கேட்கவே அத்தெய்வம் அதன் வரலாற்றைக் கூறலுற்றது:

“காவிரிப்பூம்பட்டினம் தோன்றிய காலத்து உடன் தோன்றியதான நன்காடு ஒன்று இச்சோலையின் பக்கத்தேயுள்ளது. அது நாற்புறத்தும் வாயில்களையுடைய மதிலாற் சூழப்பட்டது; காளிகோட்டத்தையும், அருந்தவா், அரசா், கணவன் இறக்க உடன் இறந்த மடவாா் ஆகிய இவா்களுள் இன்னாா் இன்னாா் இன்ன இன்ன இடத்தே புதைக்கப்பட்டனா் என்பதற்கு அறிகுறியாக அவரவா்கள் வருணம், ஆச்சிரமம் முதலியவற்றிற்கும் அவரவா்கள் தகுதிக்கும் ஏற்பச் சிறியனவும் பெரியனவுமாகக் கட்டப்பட்டுள்ள பற்பல கோட்டங்களையும், மயான தெய்வங்களுக்குப் பலியிடுவதற்குரிய தூண்களையும், கற்களை நிறுத்திச் செய்யப்பட்டுள்ள திண்ணைகளையும், காவற்காரா் உண்பதற்கும் உறங்குவதற்கும் அமைந்துள்ள குடிசைகளையும், தோரணங்களையும், பந்தா்களையும் உடையது; குழியிற்புதைத்தற்கும், உள்ளே வைத்து வாயிலே அடைத்ததற்கும், தாழியாற் கவித்தற்குமாக இரவும் பகலும் வருபவா்களுடைய ஓசையும், அங்ஙனம் வந்து செல்பவா்களுடைய ஓசையும், சாப்பறைகளின் ஓசையும். இறந்த துறவிகளைத் தொழுபவரோசையும், மற்றையோா் பொருட்டு அழுபவரோசையும், நரியின் கூக்குரலோசையும், செத்தோரை அழைக்கும் பேராந்தைகளின் ஓசையும், கோட்டானுடைய குரலும், ஆண்டலைப் பறவைகளின் குரலும் அம்மயானத்தில் மிகுதியாக உண்டு. தான்றி, ஒடுவை, உழிஞ்சில், காரை, சூரை, கள்ளி முதலிய பற்பல மரவிசேடங்களும் அங்கே அடா்ந்துள்ளன. பேய்கள் நெருங்கியுள்ள வாகைமரம் நிற்கும் மன்றங்களையும், நிணத்தோடு இறைச்சிகளைத் தின்று மகிழ்ந்து பறவைகள் தங்கியுள்ள விளாமரம் நிற்கும் மன்றங்களையும், காபாலிக சமயத்தோா் வாழும் வன்னிமரம் நிற்கும் மன்றங்களையும், விரதத்தால் இளைத்த உடம்பையுடைய சிலா் உடைந்த தலைகளை மாலையாகக் கட்டும் இலந்தைமரம் நிற்கும் மன்றங்களையும், பிணங்களைத் தின்போா் தனித்து வாழும் வெளியான இடங்கள் உள்ள மன்றங்களையும் அம்மயானம் உடையது. நெருப்பிருந்த பாண்டங்களும், புழலென்னும் சிற்றுண்டியைப் பெய்த மண்டைகளும், பாடைகளும், அறுத்தெறிந்த மாலைகளும், உடைந்த குடங்களும், நெல்லும் பொரியும் சிறுபலியாக இடப்பட்ட அரிசியும் எங்கும் பரவப்பெற்றது.

“தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வா்

ஈற்றிளம் பெண்டி ராற்றப் பாலகர்

முதியோ ரென்னா னிளையோ ரென்னான்

கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்

வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்

கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து

மிக்க நல்லறம் விரும்பாது வாழும்

மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ". (97-104)

இத்தன்மையதான அச்சுடுகாட்டைப் பார்ப்பனச் சிறுவனாகிய சார்ங்கலனென்னும் ஒருவன் ஒரு நகரமாக நினைத்து அதில் தனியே சென்றான். அப்போது அங்கே களித்தாடிய பேயொன்றைக் கண்டு அஞ்சி அதனால் தாக்கப்பட்டுக் கதறிக்கொண்டு ஓடித் தன் தாயாகிய கோதமையை அடைந்து, 'சுடலையிலுள்ள பேய்க்கு என் உயிரைக் கொடுத்தேன்' என்று சொல்லி அவள் முன் வீழ்ந்து இறந்தான். உடனே கோதமை, 'முதுமைப் பருவமடைந்து தளர்ந்த என் கணவரும் யானும் கண்ணிழந்துள்ளோம் என்பதையும் வேறு புகலில்லேமென்பதையும் நினையாமல் எங்கள் மைந்தனுடைய உயிரை உண்டது அணங்கோ பேயோ அறிகிலேனே?' என்று புலம்பினாள். பிறகு, தன் அருமைப் புதல்வனுடைய உடம்பை எடுத்து மார்போடு தழுவிச் சென்று சுடுகாட்டைச் சூழ்ந்த மதில் வாயிலை அடைந்து நின்று, 'சம்பாபதி! நீர்த்துறைகளிலும் மன்றங்களிலும் பழையமர அடிகளிலும் கோட்டங்களிலும் வேறிடங்களிலும் இருந்து யாருக்கும் எந்தச் சமயத்தும் யாதொரு தீங்கும் அணுகாவண்ணம் பாதுகாத்தருளும் நீ என் மகனைக் காவாமல் ஒழிந்ததற்குக் காரணம் யாது? நின்பால் நடுவு நிலைமை இல்லையோ? இனி யான் என் செய்வேன்?" என்று வருந்தி முறையிட்டாள்.

"முறையிடவே சம்பாபதி தோன்றி, 'இவ்விரவில் இம்மயானத்திற்கு பேய்கள் போக்குவரவு செய்யும் வாயிலில் நின்று மிக்க வருத்தமடைந்து நீ என்னை அழைத்தற்குக் காரணம் யாது? சொல்' என்று கூற, கோதமை நிகழ்ந்ததை உரைத்தாள். சம்பாபதி 'உன் மகனுயிரை அணங்கும் பேயும் கவர்ந்தில. அவனுடைய அறியாமையையே பற்றாக்கோடாகக் கொண்டு. இழவூழே அவன் உயிரைக் கவர்ந்து சென்றது' என்று கூறினாள். கோதமை, 'என் உயிரை வாங்கிக்கொண்டு இவன் உயிரைநீ தந்தருள்வாயாயின் இவன் கண்ணற்ற தன் தந்தையைக் காத்தளிப்பான். ஆதலால் அங்ஙனம் செய்தருள்வாயாக' என்று வேண்டினாள். சம்பாபதி மனம் இரங்கி, 'உயிர் உடம்பை விட்டு நீங்கின் அது வினைவழியே சென்றுவேறு பிறப்பை அடையும். இதில் ஏதேனும் ஐயம் உண்டோ? போன உயிரை மீட்டளித்தல்

என்னால் இயலும் காரியமன்று. ஆதலால் உன் மகன் இறந்தததுபற்றி நீ இரங்காதே.



"உலக மன்னவர்க் குயிர்க்குயிர் ஈவோர்

இலரோ இந்த ஈமப் புறங்காட்

டரசர்க் கமைந்தன ஆயிரங் கோட்டம்

நிரயக் கொடுமெழி நீயொழி" (164-7)

என்றாள். கோதமை, 'கேட்ட வரங்களையெல்லாம் தேவர் தருவாரென்று நூல்கள் சொல்லுகின்றன. ஆதலால் யான் கேட்ட இவ்வரத்தை நீ தந்தருள்க. தாராயாயின், இவ்விடத்தில் இப்பொழுதே என் உயிரைத் துறப்பேன்' என்று சொன்னாள். உடனே சம்பாபதி, 'நீ சொல்லியபடியே இச்சக்கரவாளத்துள்ள தேவர்களில் யாரேனும் நீ கேட்ட வரத்தைக் கொடுப்பாராயின் யானும் அதனைக் கொடுப்பேன். என் ஆற்றலைக் காண்பாயாக' என்று சொல்லி நான்கு வகை அருவப் பிரம கணங்களையும், இரு சுடர்களையும், அறுவகைத் தெய்வ கணங்களையும் பல வகை அசுர கணங்களையும் எண்வகை நரகர்களையும், பல விண்மீன் கூட்டங்களையும், அசுவினி முதலிய இருபத்தேழு நாட்களையும், கோட்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கும் சக்கரவாளத்தில் வரங்கொடுக்கும் வன்மையையுடைய தேவர்களையெல்லாம் வருவித்துக் கோதமைக்கு முன்னே நிறுத்தி, 'இவளுடைய வருத்தத்தை அகற்றுவீர்களா? இவளடைந்த வருத்தம் இது வாகும்' என்று நிகழ்ந்தவற்றைச் சொல்லிற்று. அப்போது அத்தேவர்கள் சம்பாபதி கூறியவாறே கூறி முடித்தார்கள். கோதமை அதனைக்கேட்டு உண்மையை அறிந்து ஒருவாறு வருத்தமொழிந்து தன் மகனைச் சுடுகாட்டிற் சேர்த்துவிட்டு இறந்து போயினாள்.

"அப்பால், சம்பாபதியின் வன்மையை யாவருக்கும் புலப்படுத்த வேண்டி, எல்லாத் தேவர்களும் கூடிய இடத்தில் அவர்கள் கூடியதற்கு அறிகுறியாக மயன் இவ்வுலகின் நடுவேயுள்ள மேருமலையையும் அதனைச் சூழ்ந்த ஏழு சிறுமலைகளையும் நான்க பெருந் தீவுகளையும் இரண்டாயிரம் சிறு தீவுகளையும் மற்ற இட விசேடங்களையும் புலப்படுத்தி ஆங்காங்கு வாழ்பவர்களுடைய உருவங்களையும் வகுத்து இவ்விடத்தை நிருமித்தான். ஆதலின் இது சக்கரவாளக் கோட்டமென்று பெயர் பெற்றது. இது சுடுகாட்டைச் சூழ்ந்த மதிலின் புறத்தே இருத்தலின் இதனை எல்லோரும் சுடுகாட்டுக் கோட்டமென்று வழங்குவர். இதன் வரலாறு இதுவாகும்".

மணிமேகலா தெய்வம் இங்ஙனம் சொல்லக் கேட்ட மணிமேகலை, "மனிதர் வாழ்க்கை இத்தன்மைத்து" என்று சொன்னாள். அவள் அங்கே

அப்படி இருக்கையில், சுதமதி துயிலுற்றாள். அப்பொழுது அத்தெய்வம் தன் வித்தையால் மயக்கி மணிமேலையைத் தழுவி எடுத்துக்கொண்டு ஆகாய வழியே முப்பது யோசனையளவு தெற்கே சென்று கடல் சூழ்ந்த மணிபல்லவமென்னும் சிறு தீவை அடைந்து அதில் அவளை வைத்துவிட்டுச் சென்றது.

## 6.7 துயிலெழுப்பிய காதை

பிறகு, 'வாழ்ந்தால் மணிமேலையை எப்படியும் நாம் அகப்படுத்திக் கொள்வோம்' என்று உதயகுமரன் எண்ணிக்கொண்டு காமபரவசனாய்த் துன்பமுற்றுத் தூங்காமலே இருந்தான். அவன் முன்னே மணிமேகலா தெய்வம் தோன்றி,

"..................மன்னவன் மகனே

கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்

மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை

மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்

தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்

தவந்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த

அவத்திறம் ஒழி" (7.14)

என்று அவனுக்கு உபதேசித்து விட்டு உவவனம் போயிற்று, அங்கே தூங்கிய சுதமதியை எழுப்பி, "யான் மணிமேகலா தெய்வம். இந்நகரில் நடக்கும் இந்திர விழாவைக் காணுதற்கு வந்தேன். நீ அஞ்சாதே. பௌத்த சமய வழியே செல்லுதற்குரிய நற்காலம் மணிமேலைக்கு உண்டாயிற்று. ஆதலால் அவளை எடுத்துச் சென்று மணி பல்லவத்தில் வைத்தேன். தன்னுடைய முற்பிறப்பில் நிகழ்ந்த செய்தியையும் அறிந்துகொண்டு அவள் இற்றைக்கு ஏழாவது நாளில் இங்கே வந்து சேருவாள். இந்நகரில் வேறு வடிவம் கொள்வாளாயினும் அவள் உனக்கு ஒளிப்பாளல்லள். அவள் இங்கே புகும் நாளில் இந்நகரின் கண்ணே பல அற்புதங்கள் நிகழும். அவள் நல்ல வழியிற் சென்றதையும் நான் வந்ததையும் மாதவிக்குச் சொல்வாயாக. மாதவி முன்னமே என்னை அறிவாள். கோவலன், 'நம் குலதெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடுக என்று சொல்லி என் பெயரை இம்மணிமேலைக்கு வைத்த நாளின் இரவில் யான் மாதவியின் கனவிற்சென்று, 'காமன் செயலற்று ஏங்கும் வண்ணம் ஆசையை முற்றக்கெடுக்கும் தவமாதைப் பெற்றாய்' என்று நனவிற் கூறுவது போல் கூறியதுண்டு. இதனையும் அவளுக்கு நினைப்பூட்டுவாயாக" என்று கூறிப்போயிற்று.

அப்பாற் சுதமதி எழுந்து மணிமேகலையின் பிரிவால் வருந்தி அச்சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்கேயுள்ள சிறிய வாயில் வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தை அடைந்து ஆங்குள்ள உலகவறவியின் ஒரு பக்கத்தே இருந்தாள். அப்படி இருக்கும்பொழுது அவ்விடத்தே தூணிலுள்ள பாவை ஒன்றை அதிட்டித்திருக்கும் தெய்வமொன்று சுதமதி மயங்கி அஞ்சும்படி,

"இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்பையிற் கௌசிகன் மகளே
மாருத வேகனோ டிந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரை ஆகிய சுதமதி கேளாய்" (98-105)

உன் தங்கையாகிய இலக்குமி தனது முற்பிறப்பையும் உனது முற்பிறப்பையும் அறிந்துகொண்டு இற்றைக்கு ஏழாம் நாள் இரவில் இந்நகரத்துக்கு வருவாள். அவள் பிரிந்ததுபற்றி நீ அஞ்சற்க" என்று தன்னுடைய வாக்காற் கூறியது. அதனைக் கேட்டு மனம் ஈடுங்கிய சுதமதி பொழுது புலருமளவும் அவ்விடத்தே இருந்து, சூரியன் உதித்தவுடன் எழுந்து புறப்பட்டு வீதிவழியே சென்று மாதவியை அடைந்து முதல்நாள் இரவில் நிகழ்ந்தவற்றைக் கூறினாள். அது கேட்ட மாதவி மாணிக்கத்தை இழந்த நாகம்போன்று மிக்க துயரத்தோடு இருந்தாள். மணிமேகலையின் பிரிவாற்றாமையால் சுதமதி உயிரிழந்த உடம்பு போலச் செயலற்றிருந்தாள்.

## 6.8 பயிற்சி வினாக்கள்

1. இந்திரவிழாவின் தோற்றமும் இன்றியாமையாமையும் குறித்து எழுதுக.

   விடை : இந்திரவிழாவின் தோற்றம், பெரியோர் கூடலும் விழாவின் இன்றியமையாமையும் ஆகிய தலைப்பில் உள்ள செய்திகள்.

2. வள்ளுவன் மரசறைதல் பற்றித் தொகுத்துரைக்க

   விடை : வள்ளுவன் முரசறைதல் தலைப்பில் அமைந்த செய்திகள்

3. சித்திரா உயர்ந்தமாலை மூலம் தெரிவித்தது யாது?

   விடை : சித்திராபதியின் வேண்டுகோள், ஊரார் கூறும் அவரை உயந்தமாலை மாதவிக்குத் தெரிவித்தல் ஆகிய தலைப்புகளில் உள்ள செய்திகள்.

காப்பியங்கள் குறிப்புகள்

4. உயந்தமாலையிடம் மாதவி கூறியவை யாவை?

விடை : உயந்தமாலையிடம் மாதவி சொல்லியனுப்பிய செய்திகள் என்ற தலைப்பியமைந்த செய்திகள்

5. மணிமேகலையின் துயரத்தைப் போக்க மாதவி செய்தது யாது?

விடை : மணிமேகலையின் துயரம், மாதவியின் கட்டளை ஆகிய தலைப்புகளில் அமைந்த செய்திகள்.

6. சுதமதி துயரோடு கூறிய மொழிகள் யாவை ?

விடை : சுதமதி துயரோடு கூறிய மொழிகள் என்ற தலைப்பிலமைந்த செய்திகள்

7. சுதமதி கூறும் ஐந்து வனங்களின் சிறப்பினைக் கூறுக.

விடை : ஐந்து வளங்களின் சிறப்பு உரைத்தல் என்னும் தலைப்பிலமைந்த செய்திகள்.

8. மணிமேலையும் சுதமதியும் உவவனம் செல்றுதலை விவரி.

விடை : மணிமேகலையும் சுதமதியும் உவவனம் செல்லுதல் என்ற தலைப்பிலமைந்த செய்திகள்.

9. உதயகுமரன் -எட்டிகுமரன் உரையாடலைக் கூறுக.

விடை : மதயானையை அடக்கிய உதயகுமரன் -எட்டிகுமரன் உரையாடல் பகுதியை எழுதுக.

10. சுதமதி கூறும் அறிவுரைகள் யாவை?

விடை : மணிமேலையைப் பனிக்கறையில் புகுத்தி, சுதமதி அறிவுரை பகர்தல் என்னும் தலைப்பிலமைந்த செய்திகள்.

11. மணிமேகலை தெய்வம் தோன்றியதை எவ்வாறு?

விடை: மணிமேகலை தெய்வம் வந்து தோன்றிய காதைக் செய்திகள்

12. சக்கரவரிளக் கோட்டம் தோன்றிய வரலாற்றையும் அதன் சிறப்பையும் விவரி.

விடை : சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதைச் செய்திகள் முழுவதும்.

*Self Instructional Material*

# கூறு: 7 மணிமேகலை- 8 முதல் 15 காதைகள் .

## 7.1 மணிபல்லவத் துயருற்ற காதை

சுதமதி இங்கே இப்படி இருக்க, மணிபல்லவத்திற் கடலருகே மணலிலே துயின்ற மணிமேகலை துயிலுணர்ந்தாள். அவளுக்குத் தெரிந்த பொருள் யாதொன்றும் அங்கே காணப்படாமையால், தான் முன்பிருந்த இடத்தைத் துறந்து வேற்றிடத்துக்குச் சென்று பிறந்த உயிர் போன்றவளாகித் திகைத்துக்கொண்டிருந்தாள். அப்போது சூரியன் உதித்தான்; உடனே அவள், "இவ்விடம் உவவனத்தில் முன்னம் கண்டறியப்படாத ஒரு பகுதியோ!

"சுதமதி ஒளித்தாய் துயரஞ் செய்தனை
நனவோ கனவோ என்பதை அறியேன்
மனநடுக் குறூஉ மாற்றந் தாராய்
வல்லிருள் கழிந்தது மாதவி மயங்கும்
மெல்வளை வாராய் விட்டகன் றனையோ! (20-24)

மாயவித்தையோடு தோன்றிய அம்மடந்தை செய்த வஞ்சமோ இது! ஒன்றும் தெரியவில்லையே! தனியே இருத்தற்கு மிகவும் அஞ்சுகின்றேன். நீ விரைந்து வருவாயாக" என்று சொல்லிக்கொண்டு பல நீர்த்துறைகளில் சென்று தேடித் தனக்குத் தெரிந்த ஒருவரையும் காணாமல் கூக்குரலிட்டு வருந்தி அழுது தன் தந்தையை நினைந்து,

"கோற்றோடி மாதரொடு வேற்றுநா டடைந்து
வைவாள் உழந்த மணிப்பூ ணகலத்
தையா வோ"

என்று அரற்றினள், அப்போது இந்திரனால் இடப்பட்டதும் தரிசித்தோர்க்குப் பழம் பிறப்பைத் தெரிவிப்பதுமாகிய புத்தபீடிகை அவள் முன்னே தோன்றியது.

"பெருந்தவ முனிவன் இருந்து அறம் உரைக்கும்
பொருஅறு சிறப்பில் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை தோன்றியது ஆங்கு" (61-63)

என்று சுட்டுகிறார் சாத்தனார்.

## 7.2 பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

**மணிமேகலை முற்பிறப்பு உணர்தல்**

காப்பியங்கள்

குறிப்புகள்

மணிமேகலை அப்பீடிகையைக் கண்டு விம்மிதத்தால் தன்னை அறியாளாயினாள். அவளுடைய கைகள் தலைமேற் குவிந்தன. பின்பு ஆனந்தக் கண்ணீரை உகுத்து அப்பீடத்தை மூன்று முறை வலம் வந்து பணிந்து எழுந்தாள். அப்பீடிகைக் காட்சியால் தன் பழம் பிறப்பில் நிகழ்ந்த செய்திகளை அறிந்து, "மாதவ, உறுதிப் பொருளை உணர்ந்தோய்! காயங்கரை என்னும் நதிக்கரையில் நீ சொல்லியவெல்லாம் உண்மையாதலை விளங்கி அறிந்தேன்.

"ஆங்குஅது கண்ட ஆயிழை அறியாள்;
காந்தள்அம் செங்கை தலைமேல் குவிந்தன
தலைமேல் குவிந்த கையள் செங்கண்
முலைமேல் கலுழ்ந்துமுத் தத்திரன் உகுத்துஅதின்
இடமுறை மும்முறை வலமுறை பாரா
கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
இறுறுசுப்பு அலச வெறுநிலம் சேர்ந்துஆங்கு
எழுவோள் பிறப்பு விழுகின்று" (1-8)
உணர்ந்தாள்.

**பிரமதருமன் அத்திபதிக்கு உரைத்த எச்சரிக்கையும் அறவுரையும்**

"காந்தாரமென்னும் பெரியதொரு நாட்டில் உள்ள பூருவ தேசத்தில் இடவயமென்னும் நகரை இராசதானியாகக்கொண்டு அரசுபுரிந்து வாழும் அத்திபதியென்னும் அரசனுடைய மைத்துனனாகிய பிரதமரும, நீ அவ்வரசனிடத்திற் சென்று தருமோபதேசம் புரிகையில், 'இச்சம்புத் தீவில் இற்றைக்கு ஏழாவது நாளில் பூகம்பம் உண்டாகும். அப்பொழுது இந்நகரும் நாகநாட்டில் நானூறு யோசனைப் பரப்பும் பாதலத்தில் வீழ்ந்து கெட்டொழியும். ஆதலால் நீ இந்நகரத்தை விட்டு விரைவில் வேறு நகரம் புகுவாய்' என்று கூறியருளினை. அவன் நகரத்தார் யாவருக்கும் அச்செய்தியைப் பறையறைவித்துச் சாற்றி எல்லோருடனும் அந்நகரை நீங்கி அதற்கு வடக்கேயுள்ள அவந்திநகரம் செல்லுதற்குப் புறுப்பட்டு வழிக்கொண்டு இடையேயுள்ள காயங்கரை என்னும் நதிக்கரையை அடைந்து அங்கே பாடிவீடு செய்து கொண்டிருந்தனன். அப்பொழுது ஐயா! நீ உரைத்தபடியே குறித்த நாளிற் பூகம்பம் உண்டாக இடவயங்கரம் அழிந்துபோயிற்று. அது தெரிந்த அரசனும் மற்றையோரும் உன்பால் அன்புமிக்கு உன்னைச் சரணமடைந்து சூழ்ந்து நின்றனர். அக்காலத்தில் அவர்களுக்கு முத்தி வழியை நீ உபதேசித்தனை.

"நாகநல் நாட்டு நானூறு யோசனை

வியன்மா தலத்து வீழ்ந்துகேடு எய்தும்

இதன்பால் ஒழிக என" (21-25)

எச்சரித்தபின், காயங்கரையில் பிரமதருமன் அறிவுரை நிகழ்த்துகிறார்.

இருநில வேந்தனும்

மாபெரும் பேரூர் மக்கட்கு எல்லாம்

ஆவும் மாவும் கொண்டுகழி என்றே,

பறையில் சாற்றி நிறைவுருந் தானையோடு

இடவயம் என்னும் இரும்பதி நீங்கி

வடவயின் அவந்தி மாநகர்ச்" செல்ல முற்படுகிறான். (23-29)

இடவயம் நகரம் அழிந்த பின்னர்,

"அரசொடு மக்கள் எல்லாம் ஈண்டிச்

சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல ஏத்திய

அருள்அறம் பூண்ட ஒருபேர் இன்பத்து

உலகுதுயர் கெடுப்ப அருளிய" (34-37)

பாங்கினை அழகாகச் சித்திரித்துள்ளார் சாத்தனார்.

**மணிமேகலையின் முற்பிறப்பும் மறுபிறப்பும்**

"அசோதரநகரத்து அரசனாகிய இரவிவன்மன் என்பவனுடைய தேவியான அமுதபதியென்பவள் வயிற்றில் யான் பிறந்து இலக்குமி என்று பெயர்பெற்றேன். அததிபதி என்னும் அரசனுக்கு நீலபதி என்பவள் பாற் பிறந்த இராகுலனுக்கு மனைவியாய்ப் புகுந்தேன். அப்போது என் கணவனோடு வந்து தருமம் கேட்டற்பொருட்டு யான் நின்னை வணங்கியவுடன் நீ என்னை நோக்கி, 'இவ்விராகுலன் இற்றைக்குப் பதினாறாவது நாளில் திட்டிவிடமென்னும் பாம்பால் இறப்பான். நீ இவனோடு தீயிற் புகுவாய். பின்பு காவிரிப்பூம்பட்டினத்திற்கு சென்று பிறப்பாய். அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம் வரும். அப்பொழுது மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி நள்ளிரவில் உன்னை எடுத்துப் போய்க காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே கடலிலுள்ள சிறுதீவு ஒன்றில் வைத்துவிட்டுச் செல்லும். பின் ஆங்குள்ள புத்த பீடிகையை நீ தரிசித்துத் தொழுவாய். உடனே உனது முற்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளை அறிந்து இன்று நான் சொன்ன மொழிகளையும் தெரிந்துகொள்வாய்' என்று சொல்லி

அருளினை. 'என் கேள்வன் இன்னவாறு பிறப்பானென்பதையும் தெரிவிக்கவேண்டும்' என்று நான் கேட்டேன். எனக்கு, 'உன்னைக் கொண்டு சென்ற தெய்வம் மீண்டும் தோன்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும்' என்று அருளிச் செய்தாய்; அத்தெய்வம் வரவில்லையே!" என்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள்.

## 7.3 மந்திரங் கொடுத்த காதை

**மணிமேகலா தெய்வம் புத்தபீடிகையை வணங்குதல்**

மணிமேகலை இப்படி இருக்கையில், 'புத்த பீடிகைக்காட்சியால் இவள் பழம்பிறப்பை அறிந்தாள். இவளுடைய இயற்கையும் அழகியது' என்று எண்ணி ஆகாயத்தினின்றும் இறங்கிவந்த மணிமேகலா தெய்வம் அவள் கேட்கும்படி,

"உயிர்க ளெல்லாம் உணர்வுபா ழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை யுலகத் தறம்பாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோர்
இளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்
நீயே யாகிநற் கமைந்தவிவ் வாசனம்
நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்
பூமிசை ஏற்றினேன் புலம்பறுக" (7-15)

என்று புத்ததேவருடைய பீடிகையை அவராகவே மதித்துத் துதித்து வலம் வந்து பூசித்து வணங்கியது.

**மணிமேகலை தன் கணவனைப் பற்றி வினவுதல்**

அத்தெய்வத்தை மணிமேகலை வணங்கி, "உன் திருவருளால் என்னுடைய முற்பிறப்பை அறிந்தேன்; அப்பிறப்பில் கணவனாக இருந்த இராகுலன் எங்கே பிறந்துள்ளான்?" என்று கேட்டாள்.

அவளை நோக்கி அத்தெய்வம், "இலக்குமி, கேட்பாயாக: நீ ஒரு நாள் சோலையொன்றில் இராகுலனோடு ஊடியிருந்தாய். அப்பொழுது அவன் ஊடலைத் தீர்த்தற்கு உனதடியை வணங்கினான். அச்சமயம் சாதுக்கரனென்னும் பௌத்த சாரண முனிவன் ஒருவன் இரத்தினத் தீவம் சென்று அங்கே தருமசக்கரத்தைப் பிரவிருத்திக்கச் செய்துவிட்டு ஆகாயத்தினின்றும் இறங்கிவந்தான்.

நீ அவனைக் கண்டு மெய்ந்நடுங்கி மயங்கிக் கலங்கி ஒல்கிப் பணிந்தாய்; அதுகண்ட இராகுலன், 'இங்கே வந்தவன் யார்?' என்று கோபித்துக் கேட்கவே நீ அஞ்சி நடுநடுங்கி அவன் வாயைப் பொத்தி, 'ஆகாயத்தினின்றும் இறங்கிய இப்பெரியோனுடைய மலரடியை வணங்காமலும் இவனைத் துதியாமலும் இருந்தது எவ்வளவு பிழை?' என்று அவனுக்குச் சொல்லி அவனோடும் அம் முனிவனுடைய பாதங்களை வணங்கி, 'யாங்கள் தேவரீருடைய அடியே மல்லமாயினும்,

"அந்தீந் தண்ணீ ரமுதோடு கொணர்கேம்" (37)

அமுதுசெய்தருள்க. தேவரீருடைய திருவுளப்பாங்கின் படியே நடத்தற்கு உரிமையுடையேம் என்று தெரிவித்தனை. உடனே அம்முனிவன், 'தாயே, உண்பேன்; இங்கே கொண்டு வருக' என்று சொல்ல, நீ உடனே அவற்றைக் கொணர்ந்து அவனை உண்பித்தாய்.

"அந்நாள் அவனுண் டருளிய அவ்வறம்

நின்னாங் கொழியாது நின்பிறப் பறுத்திடும்" (40-41)

"அவ்விராலேனே உவவனத்தில் உன்பால் வந்த

உதயகுமரன். அதனாலேதான் அவனுடைய மனம் உன்னை விரும்பியதோடு உன் மனமும் அவனை மிகவும் பற்றியது. அந்தப் பற்றை மாற்றி நல்வழிப்படுத்தற்கு நினைந்து உன்னை இத்தீவிற் கொணர்ந்து வைத்து இப்பீடிகையைக் காட்டினேன்".

**முற்பிறப்பில் தமக்கையர் ஆன தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியும்**

"இலக்குமி, இன்னும் கேட்பாயாக; முற்பிறப்பில் உன்னுடைய தமக்கைமாராயிருந்த தாரையையும் வீரையையும் அங்கநாட்டுள்ள கச்சய நகரத்து அரசனாகிய துச்சயனென்பவன் மணஞ் செய்துகொண்டான். ஒரு நாள் அவன் அவர்களோடு சென்று மலைவளங்களைக் கண்டு வந்து

கங்கைக் கரையை அடைந்திருந்தான். அப்பொழுது அறவணவடிகள் அங்கே வரக்கண்டு உடனே அவன் எழுந்து வணங்கி. 'தேவரீர் யாவிர்? எங்கே எழுந்தருளியது? என்று கேட்டான். அவர் ஆதிகாலத்தே புத்ததேவர் எல்லா உயிர்களும் துக்கத்தினின்றும் நீங்கி இன்புற்றிருக்க வேண்டுமென்று நினைந்து அவைகள் யாவும் கேட்டு மகிழும்படி அம்மலையின் உச்சியில் நின்றுகொண்டு தருமோபதேசம் செய்தனர். அப்பொழுது அவருடைய பாதச்சுவடுகள் தங்கப் பெற்றமையால், அஃது அப்பெயரை உடையதாயிற்று. குற்றமற்ற அறிவுடையீர், நீங்கள் அதைத் தரிசித்து வழிபடுமின்' என்று கூறினார். அவர் கூறியவாறு உடனே சென்று

அம்மலையை அடைந்து தரிசித்த புண்ணிய விசேடத்தால் தாரையும் வீரையும் முறையே மாதவியாகியும் சுதமதியாகியும் வந்து உன்னோடு கூடினர்.



இதனை,

"அன்று அவன் உரைத்த அவ்வுரை பிழையாது

சென்றகை தொழுது சிறப்புச்செய்தவன் மாதவி ஆகியும்

சுதமதி ஆகியும் கோதைஅம் சாயல் நின்னொடு கூடினார்" (71-74)

என்பார் சாத்தனார்.

**மந்திரம் கொடுத்தல்**

மணிமேகலை, "நீ பழம்பிறப்பை அறிந்தாய். மற்றச் சமய வாதிகளுடைய கொள்கைகளையும் இனி ஒரு காலத்திற்கேட்பாய். அங்ஙனம் கேட்கும்பொழுது உன்னை, 'இளமைப் பருவத்தினள்' என்று நினைந்து அவர்கள் தத்தம் சமய உண்மைகளைச் சொல்லார்கள். ஆதலால், அக்காலத்து நீ வேற்று வடிவம் கொள்ள வேண்டுவது இன்றியமையாதது" என்று கூறி வேற்று வடிவைக் கொடுப்பதும் ஆகாய வழியே சஞ்சரிக்கச் செய்வதுமாகிய மந்திரங்கள் இரண்டை அவளுக்கு

உபதேதித்தது. அப்பால், "நீ புத்ததேவர் அருளிச் செய்த நல்லறவழியை நணுகுதல் ஒருதலை என்று உணர்வாயாக. இப்பீடிகையை வணங்கித் துதித்துஊர் செல்வாயாக" என்று சொல்லிற்று. பிறகு அது மேலே செல்லுதற்கு எழுந்து "இன்னும் ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேனே" என்று மீட்டும் இறங்கி வந்து, 'சிறந்த விரத ஒழுக்கமுடையாய்! கேட்பாயாக: மக்கள் யாக்கை உணவாலாகிய தொகுதி; இம்மந்திரமோ பசியைத் தொலைக்கும். இதனைக் கொள்வாயாக" என்று சொல்லி அம்மந்திரத்தையும் அவளுக்கு உபதேசித்துவிட்டு எழுந்து ஆகாய வழியே சென்றது.

"விளைபொருள் உரையார் வேற்றுஉரு எய்தவும்

அந்தரம் திரியுவும் ஆக்கும்இல் அருந்திறல்

மந்திரம் கொள்கென" (80-82)

இருமந்திரங்களைக் கொடுத்தோடு,

"சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய்

மக்கள் யாக்கை உணவின் பிண்டம்

இப்பெருமந்திரம் இரும்பசி அறுக்கும் என்று" (90-92)

பசிப்பிணியைத் தொலைக்கும் மந்திரத்தையும் கொடுத்துச்சென்றது.

## 7.4 பாத்திரம் பெற்ற காதை

மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத் தீவில் விட்டுச் செல்ல அத்தீவில் புத்தர் பீடிகையைக் காத்து வரும் தீவதிலகை என்ற தெய்வம் அவள் முன் தோன்றியது. அங்குள்ள கோமுகி என்ற பொய்கையில் இளவேனில் காலத்தே வைகாசித் திங்களில் ஆபுத்திரன்கை அமுதசுரபி தோன்றும் என்றும் அந்நாளும் அந்நேரமும் அன்றே ஆதலால் அவளுக்கு அது கிட்டும் என்றும் கூறியது.மேலும் அப்பாத்திரம் குறித்து அவள் தன் ஊரின்கண் அறவண அடிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றும் குறிப்பிட்டது.அத்தெய்வம் குறிப்பிட்டப்படி பாத்திரம் கிடைக்கப் பெற்றாள் மணிமேகலை. அத்துடன் அமுதசுரபியின் சிறப்பையும் பசிப்பிணியின் கொடுமையையும் அமுதசுரபியைப் பயன்படுத்தும் பாங்கினையும் அத்தெய்வம் எடுத்துரைத்தது.

**தீவதிலகை வருகையும் மணிமேகலை தன் அறிமுகமும்: (1.29)**

மணிமேகலா தெய்வம் மறைந்து போன பின்பு மணிமேகலை மணிபல்லவத் தீவின்கண் உள்ள வெண்மணல் குன்றுகள் மலர்ப்பூஞ்சோலைகள் குளிர்ந்த மலர்ப் பொய்கைகள் ஆகிய இடங்களில் தங்கி அவற்றின் அழகை நோக்கினாள். ஒரு காத தூரம் சுற்றித் திரிந்தாள். அவள் முன்னே அத்தீவின் காவல் தெய்வமாகிய தீவதிலகை கடவுள் உருவத்துடன் தோன்றினாள். தீவத்திலகை மரக்கலம் கவிழ அதனின்றும் உய்ந்து கரையேறிய ஒரு மகள் போன்று இத்தீவை அடைந்த நங்கையே நீ யார்? என்று மணிமேகலையை வினவினாள்.

அது கேட்ட மணிமேகலை தீவதிலகையை நோக்கி பொன் கொடி போன்றவளே, நீ என்னை யார் என அறிந்து கொள்ள விரும்பி வினவியது எப்பிறப்பைச் சுட்டியதோ? கேட்பாயாக! நான் முற்பிறப்பில் நிலத்தை ஆண்ட இராகுலன் என்ற அரசிளங்குமரனின் மனைவி. அப்பிறப்பில் என் பெயர் இலக்குமி. இப்பிறப்பில் நாடகக் கணிகையாகிய மாதவி என்பவளின் மகள் மணிமேகலை. என் பெயருடைய மணிமேகலா தெய்வம் இங்கே என்னைக் கொணர்ந்தது. அதனால் நிலையான பெருமை மிகுந்த பீடிகையால் என் முற்பிறப்பினை உணர்ந்தேன் இதுவே இங்கு வந்ததன் பயனாகும். பூங்கொடி போன்றவளே நீ யார்?" என்று வினவினாள்.

"தீவதிலகை செவ்வனந் தோன்றிக்
கலங்கவிழ் மகளிரின் வந்தீங் கெய்திய
இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றலும்
எப்பிறப் பகத்துள் யார் நீ என்றது
பொற்கொடி அன்னாய் பொருந்தியக் கேளாய்

போய பிறவியில் பூமியங் கிழவன்

இராகுலன் மனையான் இலக்குமி என்பேர்
ஆய பிறவியில் ஆடலங் கணிகை

மாதவி ஈன்ற மணிமே கலையான்" (6-14)

என்று கூறினாள்.

மணிமேகலையின் பிறப்பு உணர்ந்ததை அறிந்து தீவதிலகை அவளிடம் "இந்த மணிப்பல்லவத்தின் அணித்தே இரத்தின தீவம் என்ற தீவு உள்ளது, அதன்கண் மிக உயர்ந்த சமந்தம் என்ற மலையுச்சி உண்டு அவ்வுச்சி மேல் அருளறமுடைய புத்தர்தம் திருவடிகளின் சுவடாகிய பிறவி என்ற பெருந்துயர்க் கடலினின்றும் உயிர்களைக் கரையேற்றும் அறத்தன்மையுடைய மரக்கலம் உள்ளது.ஆதலால் அங்கே சென்று அதனைத் தொழுது வலமுறை வந்து வணங்கி வந்தேன்.குற்றமற்ற மெய்க்காட்சியை நல்கும் அழகிய இப்பீடிகையைத் தேவேந்திரன் ஏவலின்படி காத்து வருகிறேன். என் பெயர் தீவதிலகை" என்றாள்.

மணிமேகலை புத்த பீடிகையைத் தொழுது பழம் பிறப்புணர்சிசி கைவரப் பெற்றமையாலும் மணிமேகலா தெய்வத்தின் பாதுகாவல் தனக்கிருப்பதை உணர்ந்தமையாலும் சிறிதும் அச்சமின்றிக் குன்றம் பொழில் பொய்கை ஆகிய இடங்களில் நின்று நின்று அழகை நுகர்ந்தாள் கணிகையர் பல திறப்படுவர். அவருள் மாதவி அகக் கூத்தாடும் கணிகை ஆதலால் ஆடலங்கணிகை எனப்பட்டாள்.

**புத்தபீடிகையின் சிறப்பைத் தீவதிலகை விளக்கல்: (29.36)**

தீவதிலகை மணிமேகலையிடம் "இது கேட்பாயாக, இப்பீடிகையைக் கண்டதும் இதனை வணங்குவோர். தருமத் தலைவனாகிய புத்தர் தலைமைத் தன்மை காரணமாக உலகிற்கு உரைத்த பெருமைமிக்க நல்லறமாகிய அருளற நெறியினின்றும் பிறழாது நிற்பவர் ஆவர். அத்தகையோர் இதனைக் கண்டதன்பின் தம் பழம் பிறப்புணர்ச்சி கைவரப்பெறுவர். அத்தகு நோன்பினர் உலகில் காணற்களியர். அத்தகையோர்க்குப் புத்தரின் அறமொழி உரியதாகும். அதன் பயனை இவ்வுலகில் ஒரு தலையாகப் பெற்றவள் நீ" என்றாள்.

உலகில் அருளற நெறியினின்றும் பிறழாது நிற்பவர் அரிது: ஆயின் மணிமேகலையோ முற்றவமுடைய பொற்கொடியாய்த் திகழ்ந்து புத்தரின் அறமொழிக்கு உரியவள். 'தவமும் தவமுடையார்க்காகும்' (262) என்றார் திருவள்ளுவர்.

**தீவதிலகை உரைத்தவாறு மணிமேகலை அமுதசுரபி பெறல்:**

தீவதிலகை மேலும் மணிமேகலையிடம் "இதனைக் கேட்பாயாக! இப்பெரும் புகழுடைய பீடிகையின் முன்பக்கத்தே பெரிய மலர்களாகிய

குவளையும் நெய்தலும் விரவிய கோமுகி என்ற பெயருடைய நிரம்பிய நீருடைய பொய்கை உண்டு அதில் பெரும் பொழுதாகிய இளவேனில் காலத்தே கார்த்திகை முதலிய பதின்மூன்று நட்சத்திரங்களும் கழிந்த பின்னர் மீன்களுள் நடுவே நிற்கும் விசாக நட்சத்திரன்கண் ஆபுத்திரன் என்பவனின் கையிலிருந்த அமுதசுரபி என்ற மாபெரும் பாத்திரம் புத்தர் பெருமான் தோன்றிய அந்நாளில் மேலேழுந்து வரும் மடக்கொடியே, இன்னும்கேள். அந்த வைகாசித் திங்கள் இந்நாள்.அப்பாத்திரம் தோன்றும் நேரமும் இதுவே.அது உன்னிடம் வந்தடையும் பார்" என்றாள்.

ஆபுத் திரன்கை அமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்
அந்நாள் இந்நாள் அப்பொழு(து) இப்பொழுது
நின்னாங்கு வருவது போலும் நேரிழை" (44-47)

என்று கூறிய பின்னர் தீவதிலகை அமுத சுரபியின் சிறப்பினைக் கூற முற்பட்டாள். "மணிமேகலையே அவ்வமுத சுரபியில் இட்ட ஆருயிரின் பசிப்பிணி தீர்க்கும் மருந்தாகிய உணவு. ஏற்போர்தம் கையைத் தன் பொறையால் வருத்துவதல்லாமல் தான் ஒரு பொழுதும் ஒழிதல் இன்றி மேன்மேலும் வளரும் தெய்வத் தன்மையது. நறுமலர் நங்கையே இதன் சிறப்பையெல்லாம் உன் ஊரில் உள்ள அறவண அடிகளிடம்கேட்டுத் தெரிந்துகொள்" என்று உரைத்தாள். மணிமேகலை அப்பேற்றினைப் பெற விரும்பி நிலைபெற்ற அப்பீடிகையைத் தொழுது வணங்கினாள். அத்தெய்வத்துடன் சேர்ந்து அக்கோமுகியைத் வலம் வந்தாள். அதனை ஏற்க நின்றபோது தொழத் தக்க அப்பாத்திரம் நீரின்று மேலெழுந்து தன்னை வலம் வந்த மணிமேகலையின் செங்கையில் புகுந்தது.

"ஆங்கதிற் பெய்த ஆருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமையதாகும்" (48-50)

என்ற சிறப்பினையுடைய பாத்திரத்தைப் பெற்ற மணிமேகலை மகிழ் வெய்தினாள்.

நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல்என் நாவிற்(கு)
அடங்கா(து)

என்று அவள் புத்தர் தேவனைப் போற்றினாள்.

மணிமேகலை அருளறம் பூண்டவள்.ஆதலால் அவ்வறத்திற்குக் கருவியாகிய அமுத சுரபியைப் பெற்றமையால் அளவற்ற உவகை பெற்றாள்.இது செல்வம் நிலைக்களனாகப் பிறந்த உவகையாகும்.



**தீவதிலகை பசிப்பணியின் கொடுமையை விளக்கல் (73 91)**

தீவதிலகையும் போதிமர நிழலில் பொருந்திய புத்தரின் பாதங்களை பிறவிப்பிணி நீங்குமாறு வாழ்த்தினாள். அவள் மணிமேகலையை நோக்கி "உலகில் பசிப்பிணி என்ற பாவி உயர்ந்த குடிக்குரிய பண்புகளை அழிக்கும். அக்குடியினரின் சிறப்புக்களைக் கொல்லும்; பிறவியிலிருந்து கரையேறக் கைப்பிடித்த கல்வியாகிய பெரிய தெப்பத்தை அகற்றிவிடும்; நாணாகிய அணிகளைக் களையும் மாட்சிமையுடைய அழகை அழிக்கும்; தம் மனைவியருடன் அயலார் முன்றிலில் நிறுத்தி வைக்கும்; அப்பிணியைத் தீர்த்தோரின் புகழ்ச்சொல்லை முழுமையாகச் சொல்லுதற்கு என் நா துணிந்து எழாது" என்றாள்.

"குடிப்பிறப்(பு) அழிக்கும் விழுப்பங் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்

இசைச்சொல் அளவைக்(கு) என்நா நிமிராது" (76-81)

தீவதிலகை மேலும் பசிப்பிணியை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்கினாள். "ஒரு காலத்தே நிலவுலகில் பசும்புல்லும் மரங்களும் எரியுமாறு தீப்பற்றி மிகுந்தது. மன்னுயிர்கள் அனைத்தும் அழியுமாறு மழை வளம் ஒழிந்தது. அரசுரிமை நீங்கிய வேதத்தில் வல்ல விசுவாமித்திர முனிவன் தனக்குண்டான பொறுத்தற்கரிய பசிப்பிணியை அகற்றப் பெரிய நிலப்பரப்பில் எங்கும் திரிந்தான். உணவு ஏதும் கிடைக்கப்பெறாமல் இறந்த அருவருப்பான நாயினது ஊனைத் தின்னத் தொடங்கினான். உண்ணுவதற்கு முன் செய்வதற்குரிய இந்திர வழிபாட்டைச் செய்தான். அப்போது அவன் முன்னிலையில் அமரர் கோமான் வந்து தோன்றினான். (மகிழ்ந்த அவன்) நிலவுலகில் மழை வளம் பெருக்கினாள். நிலையான உயிர்கள் ஓங்குமாறு பிழைத்தலில்லாது விளை பொருட்கள் பெருகின.

உயிர் குடியில் பிறந்தவர்க்கு உரிய பண்புகள் செப்பம், நாண், ஒழுக்கம், வாய்மை, நகை, ஈகை, இன்சொல்கூறல், பிறரை இகழாமை முதலியன. பசி தீவினைகட்கெல்லாம் காரணம் ஆதலின் பாவி'

எனப்பட்டது.'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்பர். "பிறந்தகுலம் மாயும், பேராண்மை மாயும் சிறந்த தங்கல்வியும் மாயும்" (285)

என்கிறது நாலடியார். "கொடுத்தார் எனும் சொல் மூவுலகம் கேட்குமே" என்பது பற்றி அவர் இசையை அளத்தற்கு நாவெழாது என்றாள். புகழ் அளவுபடாமையை

"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்

றீவார்மேல் நிற்கும் புகழ்" (232)

என்று திருக்குறள் உணர்த்தும்.

**தீவதிலகையின் அறிவுரை : (92-98)**

தீவதிலகை மணிமேகலையை நோக்கி "தாமே முயன்று உண்ணும் உடையோர்க்கு உணவைக் கொடுப்பவர் அறத்தை விற்கும் வணிகரே ஆவர். ஆதலால் உலகில் தாமே முயன்று உண்ண இயலாத வறியவர் தம் அரும்பசி களைவோரிடம் வாய்மையான அறவாழ்க்கை அமைகிறது.

மண் செறிந்த இந்நில உலகில் வாழும் ஆற்றா மக்களுக்கு உணவு கொடுத்தவர் அவருக்கு உயிரையே வழங்குபவர் ஆவர். நீ அவ்வாறு உயிர் வழங்கும் ஆற்றலுடைய தெய்வமேயாகி ஆருயிரின் கலக்கம் நீங்குவதற்குக் காரணமான நல்லறம் செய்வாயாக" எனக் கூறினாள்.

"ஆற்றுநர்க்(கு) அளிப்போர் அறவிலை பகர்வோர்

ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே". (92-96)

உடையோருக்கு உண்டி வழங்கிடுவதை அறம் எனக் கருதிச்செய்பவர் புகழ் விரும்பியோ பிற ஏதேனும் விரும்பியோ செய்பவர் ஆவர். இவரை அறம் விலை பகர்வோர் என்றார். 'இம்மைச் செய்தது மறுமைக்காகும்' என்ற கருத்தோடு ஆற்றுநர்க்கே அளிப்பவரும் உள்ர். இவரை 'அறவிலை வாணிகர்' என்று புறநானூறு (134) சுட்டும். "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரதுடைத்து" (221) என்ற திருக்குறள் இங்கு நினைத்தற்குரியது.

**மணிமேகலை அறக்காட்சியின் பயன் கூறல் : (99-106)**

மணிமேகலை "கழிந்த பிறப்பில் இலக்குமியாகிய நான் காதலித்த என் காதலனைத் திட்டிவிடம் என்ற பாம்பின் நஞ்சு உண்டதால் அவன்

காப்பியங்கள் குறிப்புகள்

உயிர் போனது. அது பொறாமல் உயிரோடு தீயில் வேகும் என் உணர்வு அழியும் போது (முன்னாளில்) வெயில் மிகுந்த நண்பகலில் தோன்றிய சாதுசக்கரன் என்ற துறவோனுக்கு நான் உண்டி கொடுத்து ஓம்பிய காலத்தைப் போன்று ஒரு கனா நெஞ்சத்தே நிகழக் கண்டேன். அப்போது அந்த அறக்காட்சியின் பயனாகவே இப்பாத்திரம் என் கையில் வந்தடைந்தது என்றாள்.

**அமுத சுரபியின் அற்புதம் காண மணிமேகலை விழைதல் :**

மணிமேகலை தீவதிலகையிடம் "நாவலந்தீவு என்ற பெயருடைய பெரிய தீவின்கண் நல்லறமாகிய விதையை விதைத்து அதனால் விளைந்த பயனாகிய பல்வேறு செல்வங்களையும் துய்ப்போர் உள். (மாறாக) கந்தல் ஆடையை உடுத்துத் தம் வயிறு துன்புறுத்தும் பெரும் பசிக்கு ஆற்றாது அலமந்து வெயில் என வெறுக்காமல் மழை எனச் சோம்பாமல் அம் மனைகளிற் புகாது வெளியிடத்தில் நின்று பசிப்பிணி மிகுந்து முற்பிறப்பில் செய்த தீவினை காரணமாக வருந்துவோர் பலர்.

"தான் பெற்ற குழந்தையின் முகம் கண்டு இரங்கி இனிய பாலைச் சுரக்கும் தாயின் மார்பகம் போன்று நினைத்தபடி உணவைத் தோற்றுவிக்கும் இத்தெய்வப் பாத்திரத்தின் அகன்ற உட்பகுதியில் பெய்யப்பட்ட ஆருயிர் மருந்தாகிய உணவானது ஆற்றா மாக்களின் வருந்தும் முகத்தைக் கண்ட மாத்திரமே சுரத்தலைக் காணும் அவாவுடையேன்" என்றாள்.

பௌத்தம் வினைப் பயன்களில் நம்பிக்கை கொள்கிறது.நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஒருசேர நல்லறம் விதைத்து விளைந்த துய்ப்போர் மனையும் அதன் முன்றிலில் முன் அறங்கடைநின்றோர் வறுமை துன்புறுத்த அங்கும் நிற்க முடியாமல் அயரும் நிலையும் உணர்த்தப்பட்டுள்ளன.

தாய் குழந்தையின் பசி முகத்தைப் பார்த்த அளவிலேயே அவள் மார்பு அக்குழந்தை விரும்பும் பாலைச் சுரப்பதைப்போல் பசியால் வருந்துவோர் வந்துற்றபோதே அவர் நெஞ்சம் விரும்பும் உணவை அப்பாத்திரம் சுரக்கும் தன்மையதாகும்.

"ஈன்ற குழவி முகம்கண் டிரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படுஉம் விஞ்சைப் பாத்திரத்
தகன்சுரைப்பெய்த ஆருயிர் மருந்தவர்
முகங்கண்டு சுரத்தல் காண்டல்வேட்கையேன் (114-118)

என்றாள்

**தீவதிலகை அமுத சுரபியின் திறம் கூறல் : (119-123)**

தீலதிலகை மணிமேகலையை நோக்கி "அமுதசுரபியின் பண்பினை உனக்குக் கூற மறந்தேன். நீயே நினைவுரச் செய்தாய் அறமே சான்றாக அருள் சுரந்து உணவு ஊட்டும் சிறப்புடையவர் முதன்முதலில் இதன்கண் ஆருயிர் மருந்தாகும் உணவைப் பிச்சையாகப் பெய்தாலன்றி ஏனையோர் பெய்யின் நன்கு சுரக்காது. ஆதலால் நீ அவ்வாறு (சிறந்தவரிடம்) ஏற்கும் கட்டுப்பாடுடையவள் ஆனாய். அப்படி ஏற்றால் நீ விரும்புமாறு அதன் பயனாகிய அவ்வுணவு சுரக்கும் காட்சியைக் கண்டு மகிழ்வாய். இனி நீ இங்கிருந்து உன் ஊருக்குச் செல்வாயாக" என்றாள்.

"அறங்கரி யாக அருள்சுரந் தூட்டும்

சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவாது

ஆங்ஙன மாயினை அதன்பயன் அறிந்தனை" (120-122)

என்று கூறிய தீவதிலகையை வணங்கினாள் மணிமேகலை.

அறம் அறத்திற்காகச் செய்யப்படுவது ஆதலால் 'அறங்கரியாக' என்றாள். அருள் சுரந்தூட்டும் சிறந்தவரிடம் சென்று முதன் முதலில் பிச்சை ஏற்றால் அப்பாத்திரம் அவ்வாறே சுரந்து விரும்பிய பயனை அளிக்கும் என்றாள்.

**மணிமேகலை புகாரை அடைந்து மாதவி சுதமதியைக் காணல் (124-146)**

மணிமேகலை தீவதிலகை அடிகளில் வீழ்ந்து வணங்கியபின் அமுத சுரபியைத் தன் மலர்க்கரங்களால் ஏந்தினாள்.புத்த பெருமானின் பீடிகையையும் வலம் வந்து, மந்திரத்தின் துணையால் வானத்தின் வழியே பறந்து புகார் வந்தடைந்தாள். "குற்றமற்ற கந்தில் பாவையாகிய தெய்வம் வாய்மையாகக் கூறிய ஏழாம் நாளும் வந்தது. என் மகள் மணிமேகலை இன்னும் வரவில்லையே. அத்தெய்வ மொழி பொய்யாகுமோ" என மயங்கிய மாதவி முன்வந்த தோன்றினாள் மணிமேகலை. அவள் மாதவி, சுதமதி ஆகியோரின் மயக்கம் களைந்து அவர்களிடம் அற்புதமான ஒன்றைக் கூறத் தொடங்கினாள்.

மணிமேகலை அவர்களை நோக்கி "இரவிவன்மனின் ஒப்பற்ற பெருமகளே குதிரைப்படைமிக்க துச்சய மன்னவன் தேவிமாரே முற்பிறப்பில் அமுதபதி தேவியின் திருவயிற்றில் அரிதாகப் பிறந்து (இலக்குமியாகிய) எனக்குத் தமக்கையராயிருந்த தாரையும் வீரையுமாகிய நீவிர் இம்மையில் அன்னையர் ஆயினீர். உம் திருவடிகளைத் தொழுகின்றேன். மக்கட்பிறப்பில் தீவினையை அறுத்தற்குக் காரணமாக உமது செய்தவம் வாய்க்கட்டும். உம் பிறப்புப் பற்றி அறவண அடிகளிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

"என் கையிடத்துள்ள இப்பாத்திரம் ஆபுத்திரன் என்பவன் கையகத்திருந்த மாபெரும் தெய்வத்தன்மையுடையது. நீரும் இதனைத் தொழுவீராக! என்றாள். அதனைத் தொழுது வாழ்த்திய தூய மொழியையுடைய அவர்களைப் பார்த்து 'குற்றமற்ற பெரிய தவமுடைய அறவண அடிகளிடத்தே செல்வோம். புறப்படுங்கள்" என்று கூறி இளங்கொடியாகிய மணிமேகலையும் எழுந்தாள்.

வருவது உரைக்கும் தெய்வம் கந்தில் பாவை. மாதவி தன்மகள் மணிமேகலையைக் காணத் துடித்த நிலை தெய்வத்தையும் அவள் ஐயுறச் செய்யுமாறு வைத்தது.

முற்பிறப்பில் அவர்கள் தாரையும் வீரையும் ஆகிய செய்தி அற்புதமாக முன்னரே அறிந்த செய்தியே எனினும் அதனை இவளும் கூறுதலால் ஈண்டும் அற்புதச் செய்தியாயிற்று. அறவண அடிகள் அவர்களின் முற்பிறப்பையும் இப் பிறப்பையும் நேரில் கண்டவர் என்பது மணிமேகலா தெய்வம் கூறிய கூற்றால் மணிமேகலை அறிந்திருத்தலால் எஞ்சியவற்றை அறவணர் அறிவிப்பார் என்றாள்.

## 7.5 அறவணர்த் தொழுத காதை

மணிமேகலை மாதவியோடும் சுதமதியோடும் அறவண அடிகள் உறையும் பள்ளியடைந்து அவரைத் தொழுதாள்.தான் முன்பு உவவனத்துக்குச் சென்றபோது உதயகுமரன் வந்ததும் பிறகு தான் மணிபல்லவத் தீவிற்குத் தூக்கி வரப்பட்டதும் ஆங்குத் தன் முற்பிறப்புச் செய்தியறிந்ததும் முற்பிறப்பில் தமக்கையரான தாரை வீரை இருவரும் இப்பிறப்பில் மாதவி சுதமதியாகப் பிறந்ததைக் குறித்து அறவண அடிகளிடம் விளக்கம் கேட்குமாறு மணிமேகலா தெய்வம் கூறியதும் ஈங்குத் தீவதிலகை அமுதசுரபியின் திறம் அறவண அடிகளிடம் கேட்டுத் தெரியுமாறு கூறியதும் அவளால் அறவண அடிகளிடம் எடுத்துரைக்கப்படுகின்றன. அவை குறித்து அறவண அடிகள் தரும் விளக்கங்கள் இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

**மணிமேகலை தன் திறத்தில் நிகழ்ந்தவற்றை அறவண அடிகளிடம் இயம்பல் : (1-30)**

பூங்கொடி போல்வாளாகிய மணிமேகலை மாதவியிடனும் சுதமதியுடனும் சேர்ந்து நரைத்து முதிர்ந்த யாக்கையினையும் நடுக்கமற்ற செந்நாவினையுமுடைய அறம் உரைத்தலில் சிறந்த முதிய அறவண அடிகள் உறையும் தவப்பள்ளியை அடைந்தாள்.

"ஆங்கவர் தம்முடன் அறவண அடிகள்
யாங்குளர் என்றே இளங்கொடி வினாஅய்
நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
உரைமூ தாளன் உறைவிடம் குறுகி"ய (1-4)

கருங்குழலுடைய அவள், அத்தவத்தினரின் திருந்திய நடையினையுடைய திருவடியை மும்முறை வலம் வந்து வணங்கி நூன் முறைப்படி வாழ்த்தினாள்.

தான் மலர் கொய்வதற்கு உவவனம் பொருந்தியதும் அம்மலர் வனத்துள் உதயகுமரன் தன்மீது காமமுடையனாய் வந்து கூறியதும் மணிமேகலா தெய்வம் தன்னை மணிபல்லவத் தீவிடை வைத்ததும் அத்தீவில் புத்தபெருமான் இருக்கையாகிய தருமப் பீடிகை தனக்குப் பழம் பிறப்புணர்த்தியதும் அப்பிறப்பில் தனக்குக் கணவனாகிய இராகுலன் பற்றிக் களிக்கின்ற கயல் போன்ற நெடிய கண்ணையுடைய மணிமேகலா தெய்வத்தால் அறியப்பெற்றதும் ஆகிய இச்செய்திகளை அறவண அடிகளிடம் மணிமேகலை எடுத்துரைத்தாள். மேலும் அத்தெய்வம் "முற்பிறப்பில் உனக்குத் தமக்கையராக இருந்த தாரை வீரை என்போர் முற்செய்த தீய ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுதலால் இறந்த அவ்வுடம்பு ஒழிந்த பின்னர் நின் தாயாகிய மாதவியும் தோழி சுதமதியும் ஆகப் பிறப்புற்று நின்னொடும் தொடர்புடையராயினர். பூங்கொடி போலும் அழகுடையவளே நின்னூரின்கண் தாரையும் வீரையுமாகிய நின் தமக்கையர் செய்தியை அறவண அடிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்" என்றதையும் அவரிடம் கூறினாள்.

மேலும் அவள் மணிமேகலா தெய்வம் ஒப்பற்ற மூன்று மந்திரங்களைத் தனக்குக் கூறி வானத்தில் ஏறிமறைந்ததும் பின்னர்த் தீவதிலகை என்ற தெய்வம் ஐயென்று தான் வியக்குமாறு வானின்றும் தோன்றி அருளொடும் தன்னை எய்தியதும் ஆபுத்திரன் கையகத்துப் பயின்று அமுதசுரபி என்னும் பாத்திரத்தின் இயல்பை வாய்மையுடன் கூறித் தன் கையில் புகுமாறு செய்தருளியதும் பின்பு ஆபுத்திரன் வரலாற்றை அறவண அடிகளிடம் கேட்டறிக என்றதும் ஒளி விளங்கும் அத்தெய்வம் தன்னைத் தன்னூர்க்குச் செல்லுமாறு விடுவித்ததும் தான் வான்வழிப் புகார் வந்ததும் ஆகிய இவற்றை அறவண அடிகளை வணங்கிக் கூறினாள்.

அறவண அடிகள் யாக்கை நரைத்து முதிர்ந்திருப்பினும் மொழி குழறல் முதலியயன இன்றி நன்கு அறம் உரைக்கும் ஆற்றலோடு இருந்தார். ஆதலால் 'நடுங்கா நாவின் உரை மூதாளன்' எனப்பட்டார். ஒழுக்கத்தின் வல்லவர் என்பதை அவர்தம் மேலேற்றித் 'திருந்தடி' என்றார்.

மீன் தன் குஞ்சுகளைப் பார்ப்பதுபோல் மணிமேகலைபால் அருட்பார்வை கொண்ட தெய்வம் மணிமேகலா தெய்வம் ஆதலால் 'களிக்கயல் நெடுங்கண் கடவுள்' எனப்பட்டது.

**மாதவி சுதமதி முற்பிறப்பு வரலாற்றை அறவண அடிகள் கூறல் : (31-50)**

காப்பியங்கள்

குறிப்புகள்

மணிமேகலை உரைத்தவற்றைக் கேட்ட அறவண அடிகள் அவள் அடைந்த ஆக்கங்கள் குறித்துப் பேரின்பம் அடைந்தார். பின் அவளை நோக்கி "பொற்கொடி மாதர் நல்திறம் (நற்பண்புகள் உன்னால்) சிறக்க! மாதவி சுதமதி ஆகியோர் வரலாற்றை நான் கூறுகிறேன். நீ உள்ளம் பொருந்திக் கேட்டுணர்ந்து கொள்வாயாக. உன் குலதெய்வமாகிய மணிமேகலா தெய்வம் உனக்குக் கூறிய அந்த நாளில் நான் சென்றதன்றியும் போக்கற்கரிய வினைகளை முழுமையாகப் போக்கும் ஆதி முதல்வனாகிய புத்தருடைய திருவடித் தாமரையின் சுவடு கிடக்கும் அப்பாதபங்கய மலையை உள்ளத்தால் நினைந்து வாழ்ந்த மீண்டும் ஒரு நாள் அதனை வலம்வருதற் பொருட்டுச் சென்றேன். கச்சய நகரை ஆளும் கழல் அணிந்த வேந்தனாகிய துச்சயனை முன்போலவே மரங்கள் சூழ்ந்த ஒரு சோலையிலே கண்டேன்" என்றார்.

மேலும் அறவண அடிகள் "அப்போது நான் அம்மன்னனை நோக்கி மாபெருந்தானை மன்னவனே! உனக்கும் மனைவிமார் இருவருக்கும் தீது ஏதுமின்றி இனிது வாழ்கின்றீரோ?' என வினவினேன். அதற்கு அம்மன்னன் துன்பத்தால் அழியும் நெஞ்சத்தோடே புலம்பி தம் மனைவியர் இருவருள்

இளையாளாகிய வீரை என்பவள் கள்ளுண்டு களித்தமையால் உண்டான மயக்கங் காரணமாகப் புதுவதாகப் பற்றிக் கொணர்ந்த யானையின் முன் சென்று அதனால் கொல்லப்பட்டதும், மூத்தாளாகிய தாரை அப்போதே வீரையின் இறப்பைக் கேள்வியுற்று ஆற்றாமல் நெடுநிலை மாடத்து உச்சியிலுள்ள நிலா முற்றத்தில் ஏறிஅங்கிருந்து நிலத்தில் குதித்து இறந்ததும் ஆகிய மிகப்பெரிய துயரச் செய்திகளை உரைத்தாள். அதுகேட்ட நானும் இவையெல்லாம் பழவினையின் பயன்களே ஆகும். அவற்றிற்காக வருந்துதல் பயனில்லை வருந்தற்க' என்று ஆறுதல் கூறிச் சென்றேன்" என்றார்.

**அறவண அடிகள் மறம் நிரம்பிய உலகின் நிலை கூறல் : (51-71)**

அறவண அடிகள் மணிமேகலை முதலியோரிடம் "முற்பிறப்பில் தாரை, வீரை, இலக்குமி என்ற பெயர்களுடன் சிறந்த அரசியராய்த் திகழ்ந்த நீவிர் கூத்தாட்டரங்கில் ஒரு கோலம் புனைந்து ஆடிய நாடக மகளிர் அவ்வேடத்தைக் களைந்து மாறுபட்வராக வேடம் புனைந்து வருவதுபோல் என் முன் வந்தீர்.நும் வரவு வியக்கத் தகுந்தது" என்றார்.

"ஆடுங் கூத்தியர் ஆணியே போல
வேற்றோர் அணியோடு வந்தீ ரோவென" (51-52)



வியந்தார். மெய்ப் பொருளுணர்ந்த அத்தவமுனி மணிமேகலையிடம் மாதவியும் சுதமதியும் ஆகிய அம்மடந்தையர் முற்பிறப்பில் தாரை வீரை

என்ற அரசியராயிருந்து இறந்துபட்ட நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் அறிவித்தும் அமையார். "பழம்பிறப்பும் அறநெறியும் நன்குணர்ந்த நறுமலர்க் கோதாய் கேட்பாயாக! அறத்தின் முதல்வனாகிய புத்த பெருமான் இறைமைத் தன்மை காரணமாக உரைத்த பெருமை மிக்க அருளறம் பெருகாது ஒழிய இறுதியில் நற்கதி செல்லும் அவ்வற நெறியானது அறுகம் புல்லும் நெருஞ்சியும் அடர்ந்து குற்றங்களே அடைத்தாற் போலாகி விட்டது. உயிர்கள் செல்லுதற்கமைந்த பெரிய வழியானது பயில வழங்கும் தீய வழியாகத் திறக்கப்பட்டது. அவ்வுயிர்கள் துன்பத்தால் ஆரவாரிக்கும்

தன்மையை உடையதாயின" என்று அன்றைய உலக நிலையை எடுத்துரைத்தார்.

"நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்
தரும தலைவன் தலைமையில் உரைத்த
பெருமைசால் நல்லறம் பெருகா தாகி
இறுதியில் நற்கதி செல்லும் பெருவழி
அறுகையும் நெருஞ்சியும் அடர்ந்துகண் ணடைத்தாங்குச்
செயிர்வழங்கு தீக்கதி திறந்து கல்லென்று
உயிர்வழங்கு பெருநெறி ஒரு திறம் பட்டது'.

"இந்நிலவுலகில் புத்தபெருமான் ஓதிய நல்லறமானது குளிர் பனியால் மறைக்கப்பட்ட செங்கதிர் சூரியன் இவ்விடம் உண்டு என மனத்தால் மட்டும் உணரப்படுவதன்றிச் சிறிதும் காட்சியால் காணமுடியாத மானதக் காட்சி போன்றது; சிறிய சாலகை (இரும்புக்கம்பி) துளைத்துப் புகுந்த மணியின் கண்ணதாகிய சிறிய துளையினூடே பெரிய கடலிலே உலாவும் நீர் முழுவதும் புகுந்து செல்லாது ஆயினும் அச்சிறு மணித்துளை வழியே ஒழுகும் நீர் போன்று இவ்வுலகில் அந்நல்லறம் புகுதலும் உண்டு என்ற கருத்தினால் நான் அவ்வறத்தை அறிவுறித்தலும் உண்டு. அதனைக் கேட்பவர் வளமுடைய இவ்வுலக வாழ்க்கையை விரும்பும் மக்களே ஆதலால் அதனைக் கேட்டுத் தெளிவுறார்" என்றார்.

'நாடகமாடும் கூத்தியர் மாறுவேடம் புனைந்து வந்து தோன்றுதல் போல் முன்னர் அரசியராய் வேடம் புனைந்து நடித்த நீவிர் இப்போது பிக்குணி வேடம் புனைந்து எம்முன் வந்தீர்' என அறவண அடிகள் வியந்தார். "ஆடுங்கூத்தர் போல ஆருயிர் ஒருவழிக் கூடிய கோலத் தொருங்கு நின்றியலாது" என்ற சிலப்பதிகாரத் தொடர் நினைக்கத்தக்கது. காமம் முதலிய செயிர்கட்கு அறுகையும் நெருஞ்சியும் உவமை. மாந்தர்

வாழ்க்கையில் அறம் முழுவதும் அழிந்தது. மறமே எங்கும் பெருகியது என்று குறிப்பிட்டார் அறவண அடிகள்.

கதிர் மண்டிலத்தைப் பனி விழுங்கினும் அதன் பேரொளி அதனையும் ஊடுருவி அப்பனி மண்டலத்தின் புறத்தினும் புலப்பட்டு அதனுள்ளே தனது உண்மையைப் புலப்படுத்தாமல் இராது. ஆதலின் நல்லறம் இக்காலத்தே பனியால் விழுங்கப்பட்டுக் கண்ணுக்குப் புலப்படாமல் கருத்தளவைக்குப் புலப்படும் சூரியன் போல் காட்சியளவைக்குப் புலப்படாமல் மானதக் காட்சிக்கே புலப்படுவதொன்றாயிருக்கிறது என்றார்.

**புத்தரும் அற்புதங்களும் தோன்ற இருப்பதை அடிகள் விளக்கல் : (72-103)**

"சக்கரவாளத்துத் தேவர்கள் கூடித் தேவருலகிற்குச் சென்று அங்கே தேவர்களுள் சிறந்த தேவனாம் பிரபாபாலன் திருவடிகளில் வீழ்ந்து வேண்டினதால் இருள்மிகு உலகில் ஒளிக் கதிரவன் தோன்றினாற் போல் இற்றை நாளிலிருந்து ஆயிரத்து அறுநூற்றுப் பதினாறாம் ஆண்டில் பேரறிவுடையவனாகிய புத்த பெருமான் பிறந்தருளுவான். அதன் பிறகு பெருங்குளத்தின் கண் மதகாகிய சிறிய வழியினால் மிகப்பெரிய வெள்ளம் புகுவதுபோல் எண்ணிறந்த மாந்தர் தம் சிறிய செவிவழி அளத்தற்கரிய நல்லறம் அவரது உயிர் மன மகிழ்வுடன் ஏற்குமாறு இனிது புகும்.

"ஞாயிறு தோன்றும்போது, அதன் ஒளியை வெளிப்படுத்தும் சூரிய காந்தக்கல்லைப்போல், இருள் மிகுந்த மாந்தர்தம் மன அழுக்கு அகலுமாறு புத்தன் என்னும் அறிவொளிப் பிழம்பு உலகில் தோன்றும். அக்காலத்தே வானத்தியங்கும் திங்களும் ஞாயிறும் தீங்கு நிகழாதபடி விளங்கும். சிறிதும் தங்காமல் இயங்கும் அசுவினி முதலிய நாண்மீன்கள் அவ்வாறே நன்னெறியில் இயங்கும். மழையும் பொய்க்காது; மாநிலம் வளம்படும்: ஊன் பொதிந்த உயிர்கள் துன்பம் அடையா; காற்றும் இனிதே வலம் வரும்; மலைகளும் செல்வத்தால் சிறக்கும்; பெரிய கடலும் நன்மை பல வழங்கும்.

"பால் கறக்கும் பசுக்கள் தம் கன்றின் வயிறு நிறையச் சுரந்தூட்டிய பிறகும். கலங்கள் நிறையுமாறு பாலைச் சுரக்கும். பறவைகள் தம் இரைகளைப் பெற்றுத் தாம் இருக்கும் இடங்களின்றும் பிறவிடங்களுக்குச் செல்லா. விலங்குகளும் மக்களும் ஒன்றற்கொன்று அஞ்சுவதற்குக் காரணமான பகைமைப் பண்புகள் இலவாம். மனம் கலங்குவதற்குக் காரணமான துன்பத்தை நரகரும் பேய்களும் விட்டொழியும். கூனும், குறளும், ஊமையும், செவிடும், ஊன்தடியும், மருளும் என்ற குறையுடை பிறப்புக்களை உயிர்கள் பெறா. புத்தபெருமான் பிறக்கும் அக்காலத்தே தாமும் பிறந்து அவரது அருளறத்தைக் கேட்டோர், துன்பப் பிறப்பென்னும் பெருங்கடலைக் கடந்தவர் ஆவார் ஆதலால், போதி மரத்தின் நிழலில் அமர்ந்த, சிறப்பினையுடைய நம் இறைவனின்

திருவடிகளை வாழ்த்திப் பிறப்பு அறும்படி வணங்குதலை நான் பிறவிதோறும் மறவேன்" என்றார் அறவண அடிகள்.



தேவருலகில் (துடிதலோகத்தில்) உறைகின்ற பிரபாபாலன் என்ற தேவன், தேவா் தம் வேண்டுகோளுக்கு இணங்கி நிலவுலகில் பிறந்தான் என்று பௌத்த நூல்கள் இயம்பும். தாம் கூறும் அறம் சலாகை நுழைந்த மணித்துளையினூடே ஒழுகும் நீா் போன்று ஒரு சிலா் செவியினூடே மிகவும் சிறிதே புகும். மேலும் அவா் மாக்கள் ஆதலால் அதனையும் தெளிவா அல்லா். புத்த பெருமான் தோன்றி அறங்கூறுமிடத்தே மதகுவழிக் குளத்தினூடே புகும் நீா் போன்று மிகுதியாக மாந்தா் செவியில் புகும். அவரது அவரது தெய்வத் தன்மையால் அவா்களும் அவ்வறங்களைக் கேட்கும்போதே தெளிந்து மகிழ்வா் எனப் புத்தருக்கும் தமக்கும் உள்ள வேற்றுமையை அடிகளாா் ஈண்டு மணிமேகலைக்கு எடுத்துரைக்கின்றாா். 1616 ஆம் ஆண்டில் புத்தா் தோன்றுவாா் என்று கூறியது, யாதேனும் ஒரு சகாப்தத்தைக் குறிப்பாகத் துணிவதற்கில்லை. புத்த சகாப்தம் என்று ஒன்றைக் கணக்கில் கொண்டால் அறவணா் காலம் வரை கழிந்த ஆண்டுகள் போக அவற்றிற்கு மேல் நிகழும் ஆண்டுகளாகக் கொள்ளல் வேண்டும். பொதுவாக, உலகில் அறம் பிறழும் போதெல்லாம் நிலவுலகில் புத்தா் பிறந்து அறத்தினை நிலைநிறுத்துவாா் என்பது பௌத்த சமயத்தாா் கொள்கையாகும்.

மாசு தீா்ந்த நெஞ்சமே அறத்தின் பிழம்பு ஆகும். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற' (34) என்கிறது திருக்குறள். காற்று வலஞ்சுற்றின் உலகின் வளம் பெருகும். இதனை 'வலகுமாதிரத்தான் வளி கொட்ப' எனவரும் மதுரைக்காஞ்சியிலும் காணலாம். மலைதரும் பண்டங்கள் 'தக்கோலம் தீம்பூத்தகைசால் இலவங்கம் கப்பூரம் சாதியோடைந்து ஆகும். கடல் தரும் பண்டங்கள் 'ஓா்க்கோலை சங்கம் ஒளிா் பவளம் வெண்முத்தம் நீா்ப்படும் உப்பினோடைந்து' ஆகும்.

உலகம் வளம் பெற்றிருத்தற்கு ஆப்பயன் மிகுதல் அறிகுறியாகும். அவ்வாறே உலகம் வறட்சி அடைவதற்கு அறிகுறியாக. 'ஆபயன் குன்றும் அறு தொழிலோா் நூன்மறப்பா் காவலன் காவான் எனின்' (560) என வள்ளுவா் குறிப்பிடும்போது ஆப்பயன் குன்றும் என்பது உணரப்படும். கூன் முதலிய பிறப்புக்கள் பயனில்லாப் பிறப்புக்கள் புத்தா். தோன்றிய பின்னா் உயிா்கள் கூன் மதலிய உறுப்புக் குறையுடையனவாகப் பிறவா.

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்

கூனுங் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்(கு)

எண்பே ரெச்சம் என்றிவை எல்லாம்

பேதைமை அல்ல(து) ஊதிய மில்" (28)

என்ற புறநானூற்றுப் பாடல் ஈண்டு நினைக்கத்தக்கது.

**அறவண அடிகள் மணிமேகலைக்கு நல்லறம் உரைத்தல் (103-121)**

மேலும் அறவண அடிகள், "பூங்கொடி போலும் மணிமேகலையே, உன்னைத் தலைமையாக்கி இந்நகரில் நிகழக் கூடிய பழவினை நிகழ்ச்சிகள் பல உள. அத்நிகழ்ச்சிகள் நிகழ்ந்து முடிவதன்றி மெய்ப்பொருள் அறிவுரை உனக்குப் பொருந்தாது. இங்கு இத்தாரையும் வீரையும் ஆகிய மாதவியும் சுதமதியும், கழிந்த பிறப்பில் ஆதிபுத்தா் தம்

பாதபங்கய மலையை வலம் வந்து தொழுத நல்வினை உடையா் ஆதலால், இவா்கள் உன்னோடு சிறப்புடைய புத்தா்தம் பாதங்களைத் தொழுது வலம் செய்யும் தன்மையால், பிறவிதோறும் தொடரும் வினைப்பயன்கள் நீங்கிக் குற்றமற்ற நன்னெறியாகிய வீட்டு நெறியில் செல்வா் மணிமேகலையே, நீ ஆருயிா்க்கு மருந்தாகிய அமுதசுரபி என்ற மிகவும், சிறபப்புடைய பாத்திரத்தைப் பெற்றிருக்கிறாய்' என்று மணிமேகலையிடம் கூறினாா்.

மேலும் அவா், "மக்கள் தேவா் என்ற இரு சாரார்க்கும் ஒத்த முடிவுடைய ஒப்பற்ற அறத்தைக் கூறுகிறேன் கேள். அதுதான் பசிப்பிணி தீா்த்தல் ஆகும்." என்று தீவதிலகை கூறினாற் போன்றே கூறினாா். வருந்தும் உயிா்களின் பசித்துயா் தீா்ப்பதற்கு, மணிமேகலை அமுத சுரபி என்னும் பாத்திரத்தைக் கையில் ஏந்தினாள்.

"ஆருயிா் மருந்தாம் அமுத சுரபியெனும்

மாபெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை

மக்கள் தேவா் என இரு சாா்க்கும்

ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்

பசிப்பிணி தீா்த்தல் என்றே" (114-118)

உடம்பொடு வாழும் உயிா்கட்கு உணவு இன்றியமையாதது ஆதலால் பசி தீா்க்கும் அறம் மக்கள் தேவா் இருசாரார்க்கும் பொதுவாயிற்று, மக்கள், தேவா்க்கு அவிசொரிந்து வேள்வியாற்றி அரும்பசிகளைய, தேவரோ மழை வளம் தந்து அரும்பசி களைகின்றனா்.

## 7.6. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை



ஆபுத்திரன் வரலாற்றை அறவண அடிகள் மணிமேகலைக்கு அறிவித்த செய்திகள் இப்பகுதியில் அமையும்.கொல்லப்பட இருந்த பசுவை

ஆபுத்திரன் காத்தமையும், அவன் சிந்தாதேவி அருளால் பெற்ற அமுதசுரபியைப் பல்லுயிர்க்கும் பசிப்பிணி நீங்க உதவியமையும் சிறப்பு மிக்கன.

**ஆபுத்திரன் பிறப்பும் வளர்ப்பும் (1-26)**

அறவண அடிகள் மணிமேகலையை நோக்கி, "மகளிர்க்கு அணி கலனாய் விளங்கும் மணிமேகலையே, மிகச்சிறப்புடைய இவ்வமுதசுரபியை உனக்கு வழங்கிய ஆபுத்திரன் வரலாற்றைக் கேட்பாயாக! வாரணாசி என்ற ஊரில் மறை நூலாசிரியன் அபஞ்சிகன் என்ற ஒரு பார்ப்பனன் இருந்தான். அவன் மனைவியாகிய சாலி என்பவள் தன் கற்பினைக் காக்கும் காவலைக் கடந்து ஒழுகித், தன் கணவனுக்குப் பொருந்தாதவளாகப் பிழை செய்த தண்டனைக்கு அஞ்சி (அதற்குக் கழுவாயாக), தென் திசையின் கண்ணுள்ள கன்னியாகுமரித்துறையில் நீராடற்கு வந்தாள்; தன் வயிற்றுக் கரு முதிர்ந்த பருவத்தில், மக்கள் துஞ்சம் நள்ளிருள் யாமத்தில் செல்லும் வழியில் கருவுயிர்த்தாள். பழியஞ்சித் தான் ஈன்ற மகவிற்கும் இரங்காமல், பிறர் கண்ணில் படாத மறைவிடமான ஒரு தோட்டத்தில் அம்மகனைப் போட்டுச் சென்றாள்.

"தாயின்றிப் பால் உண்ணாத அக்குழவி ஒழியாது அழும் துயர ஒலியைக் கேட்ட ஒருகறவைப் பசு, அக் குழந்தையின் துன்பம் தீருமானு தன் நாவினால் நக்கி, நல்ல பாலைப் பிலிற்றி ஊட்டியது. ஏழு நாள் வரை அதற்குப் பாதுகாவலாக நின்றது.

"தாயில் தூவாக் குழவி துயர் கேட்டோர்

ஆவந் தணைந் தாங்(கு) அதன்துயர் தீர

நாவால் நக்கி நன்பால் ஊட்டிப்

போகா தெழுநாட் புறங்காத் தோம்ப" (11-14)

அதன்பின், வயனங்கோடு என்ற ஊரில் உறையும் இளம்பூதி என்ற பார்ப்பனன் அவ்வழியில் வந்தான். அக்குழந்தை ஏங்கி அழுத கூக்குரலைக் கேட்டுத் துன்புற்றுக் கண்ணீரைச் சொரிந்தான். அங்கே ஆவினையும் கண்டான். 'ஆவின்மகன் ஆகான். இனி என் மகனே' என்று கூறிய அவன்,

தன் மனைவியுடன் இறைவனை நினைந்து கை கூப்பித் தொழுது அன்புடன் அம்மகவை எடுத்துச் சென்றான்.

"மகப்பேறில்லாத நமக்கு நம்பி பிறந்தான். இவனால் நம் மரபு சிறந்து பொலிக" என மகிழ்ந்தான் இளம்பூதி. தன் ஊருக்குச் சென்ற அவன், தன் சுற்றத்தாருடன் கூடி அக்குழந்தையின் மார்பில் பூணுநூல்

புனையும் முன்பே நாவிடத்தே நன்மை தரும் மெய்ந்நூல் பயிற்சியை நன்றாகச் செய்வித்தான். மறை நூலை உடைய அந்தணர்க்குப் பொருந்திய கலைகள் அனைத்தையும் நாவினால் பிறர்க்குத் தோல்வியுறாதவாறு ஆபுத்திரன் நன்கு கற்றுத் தெளிந்தான்" என்றார்.

'மணிமேகலை, ஆபுத்திரன் திறம் அறவணன் தன்பால் கேள்' என்று தீவதிலகை கூறிற்று என்று கூறியதை நினைவில் கொண்டு அறவணர் 'ஆபுத்திரன் திறம் கேள்' எனறு தொடங்குகிறார். வாரணாசி என்பது இன்று காசி என்று அழைக்கப்படுகிறது. மறையானது எழுதாக்கிளவி ஆதலால். பிறர்க்கு ஓதுவித்து அது இறந்து படாமல் காப்பவன் (உபாத்தி) என்ற பொருளில் இளம்பூதி 'மறைஓம்பாளன்' எனப்பட்டான்.

'ஆமகன் அல்லன் என் மகன் என்றே காதலி தன்னொடு கை தொழுது எடுத்து' என்ற தொடரால் இளம்பூதியும் அவன் மனைவியும் மகப்பேறில்லாதவர் என்பதும், இறைவனே இம்மகவினை அருளினன் என்று மகிழ்ந்து எடுத்துச் சென்றனர் என்பதும் தெளிவாகும்.

'அந்தணர்க்கு ஒப்பவை எல்லாம் நாத்தொலைவின்றி நன்கனம் அறிந்த பின்' என்றமையால் ஓத்துக்களில் அந்தணர்க்கு ஒவ்வாதனவும் பல உளவாக அவற்றையெல்லாம் ஓதாமல் அந்தணர்க்கு ஒத்தவற்றையே நன்கு பயின்றான் ஆபுத்திரன்.

**ஆபுத்திரனின் அருள் திறம் (27-48)**

மேலும் அறவண அடிகள் ஆபுத்திரனின் வரலாறு கூறுத்தொடங்கினார். ஒருநாள் ஆபுத்திரன் வயனங்கோடு என்ற அவ்வூரின்கண் தான் வாழும் பார்ப்பனச் சேரியில், ஓர் அந்தணன்

இல்லின்கண் புகுந்தான். அங்கேயுள்ள பார்ப்பனர்கள் ஊன் தின்னுதற்கு ஏதுவாக வேள்வி செய்வதாக ஒரு சூழ்ச்சி செய்து அதனை நிகழ்த்தினார்கள். அக்களத்தில் பலியாக இருந்த நிறமுடைய மலர் மாலை கொம்பில் சுற்றப்பட்ட 'ஆ' ஒன்று தன்னைக் கொல்லவரும் பார்ப்பனர்க்கு அஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பியது. கொல்லும் வேடர்தம் வில்லிற்கு அஞ்சி ஓடி அவரது வலையில் அகப்பட்ட மான்போல்அந்த ஆ அம்மா எனக் கதறி அழைத்தது.

"கொலைநவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி

வலையிடைப் பட்ட மானே போன்(று) ஆங்கு" (31-32)

அஞ்சிய அதன் துன்பம் கண்ட ஆபுத்திரன் நெஞ்சம் நடுங்கிக் கண்ணீர் சொரிந்தான். துன்பத்தைக் களைய நடு இரவில் எவரும் அறியாவண்ணம் அதனைக் கவரவேண்டும் என்ற எண்ணத்தை (பிறரறியாமல்) மறைத்தான்.

அவ்வேள்விக் களத்தின் ஒருபுறம் ஒதுங்கிய அவன் இடையாமத்தே அவ் ஆவினைக் கைப்பற்றி அவ்வூரை விட்டுப் புறப்பட்டான். பருக்கைக் கற்களையுடைய அருவழியில் அவன் செல்லும்பொழுது, அப்பார்ப்பனர் சிற்றின மாக்களோடு சேர்ந்து அவனை ஆவினோடு ஒருசேர வளைத்துக் கொண்டனர். “ஆவைக் கவர்ந்து இவ்வாறு அருநெறியில் போகும் நீ கீழ் மகன் இல்லையே! இளம்பூதி மகனாகிய நீ இவ்வாறு செய்வதற்கு யாது காணரம்? கூறு. புலையன் சிறுமகனே, சொல்லாவிடில் உன் உயிர் போக்கப்படுவாய்” என்று அச்சுறுத்திய அவர்கள் கைக்கோலால் அவனைப் புடைத்தனர். அவ்வாறு அவனைத் துன்புறுத்தியவருள் மிகவும் வருத்திய தலைவன் ஒருவனை அப்பசு தன் கொம்பினால் குத்திக் குடலைச் சரித்து விரைவாகக் காட்டிடைத் துள்ளி ஓடியது.

### ஆபுத்திரன் பார்ப்பனர்க்கு அறிவுரை கூறல் (49-56)

ஆபத்திரன் அப்பார்ப்பனரை நோக்கி, “பழமையான வேதநூலுக்கு உரிய அந்தணர்களே, பிற உயிர் துன்புறுதற்கான தீய செயல்களைச் செய்யாதீர்கள். யான் கூறுவன கேளுங்கள். பயிர் செய்யாது கைவிட்ட நிலத்தில், தானே தோன்றிய புல்லை மேய்ந்து. மாந்தர் அனைவர்க்கும் அவரவர் பிறந்த நாள் தொடங்கி வாழும் நாள்தோறும், சிறந்த பருகற்கினிய பாலை அறம் இது எனக்காட்டும் நெஞ்சத்துடன் அருளோடு தானே சுரந்து ஊட்டுகிறது இப்பசு. இதனிடம் உமக்கு உண்டான பழம் பகைதான் யாது? இதனைக் கொல்ல நினைத்தற்குக் காரணம் கூறுக” என்றான்.

“நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்
விடுநில மருங்கின் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ(டு) அருள் சுரந்(து) ஊட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை
முதுமறை அந்தணிர் முன்னிய துரைமோ” (50-56)

என்று கூறிய அவனை அப்பார்ப்பனர் இகழத் தொடங்கினர்.

‘தானே தோன்றிய புல்லை மேய்ந்து’ என்பது, ஆவிற்கு நாம் உணவிட வேண்டா, என்ற பொருளை உள்ளடக்கும். பிறர் உதவியின்றித் தம்மைப் பேணி, தம் பாலால் பிறரைஊட்டும் இச்செயல் முழுவதும் அறமே ஆதலின் பசுக்கள் நெஞ்சம் அறத்தை மக்கட்குக் காட்டும் நெஞ்சம் என்று பாராட்டினான்.

**பார்ப்பனர் ஆபுத்திரனை இகழ அவன் அவரைப் பழித்தல் (57-69)**

பார்ப்பனர் ஆபுத்திரனை நோக்கி, ‘திருமகளை மார்பில் அணிந்தவனும், அசுரரை வெற்றி கொள்ளும் நேமி என்ற சக்கரப்படை ஏந்திய கையனும், நிலையான உயிர்களுக்குக் காரணமானவனும் ஆகிய திருமாலின் மகனாகிய நான்முகன், எமக்கே அருளிய அருமறை நூலின் பெருமைகளை அறியாமல் எம் வேள்வியை இகழ்ந்தாய். நிலையின்றிச் சுழலும் நெஞ்சம் சிறுமையும் உடைய நீ உன் பெயராகிய ‘ஆபுத்திரன்’ என்பதற்கு மிகவும் பொருத்தமாகவே இருக்கின்றாய்.

எம்மியல்பு அறியாத மடவோனே, நீ மக்கட் பிறப்புடையவன் இல்லை (விலங்குப் பிறப்புடையவன்)” என அவன் பிறப்பை இகழ்ந்தனர்.

“அருமறை நன்னூல் அறியா திகழ்ந்தனை
தெருமரல் உள்ளத்துச் சிறியை நீயவ்
ஆமக னாதற்(கு) ஒத்தனை அறியாய்
நீமகன் அல்லாய் கேளென இகழ்தலும்”. (59-62)

அதனைக் கேட்ட ஆபுத்திரன், “நான்கு மகைளையும் உடைய மாக்களே, கேளுங்கள். அசல முனிவன் ஆவின் வயிற்றில் பிறந்தவன்; சிருங்கி முனிவன் மான் வயிற்றில் பிறந்தவன்; விரிஞ்சி முனிவன் புலிவயிற்றில் பிறந்தவன் என்றும் நீவிரே கூறுவீர். உங்களில் உயர்ந்தோரால் போற்றப்படும் கேசகம்பள முனிவன், (இழிந்த) நரிவயிற்றில் பிறந்தவன் அல்லனோ? இவர்களை உம் குலத்து உதித்த அறவோர் கூட்டத்தினர் என்று கூறிப் புகழ்வீரன்றோ? ஆவுடன் தொடர்புடையதாகி வந்ததனால் இழிந்த குலம் என உம் நான்மறைகளில் எங்கேனும் குறிப்பிட்ட துண்டோ?” என்று அவர்களின் பிறப்பு முறையைப் பழித்தான்.

“ஈங்கிவர் நுங்குலத்(து) இருடி கணங்களென்(று)
ஓங்குயர் பெருஞ்சிறப் புரைத்தலும் உண்டால்
ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ?” (66-68

என அவன் கூறக்கேட்ட அவர்கள் சினந்தனர்.

‘நீ ஆறறிவுடையை அல்லை, ஐயறிவே உடையை; ஐந்தறிவே உடைமையின் ஆமகன் அதற்கு ஒத்தனை’ என்று ஆபுத்திரனை இகழ்ந்தனர். ‘மாவும் மாக்களும் ஐயறிவுயிரே’ என்பர் தொல்காப்பியர். நீ விலங்குதான் என்ற கருத்தை வலியுறத்தவே, ‘நீ மகனல்லாய்’ என்றனர். ‘தக்க இன்ன தகாதன இன்னவென்று ஒக்க உன்னலராயின் உயர்ந்துள்ள மக்களும் விலங்கே’ என்ற கம்பர்தம் வாக்கும் (வாலி.112) ஒப்பு நோக்கத்தக்கது.

நீர் கற்ற நூலும் மெய்ந்நூல் அல்ல என்றும் நீவிரும் மக்கள் அல்லீர் என்றும் ஒருசேரப் பழிக்க, 'நான்மறை மாக்காள்' என்றும், 'நன்னூல்' என்றும் திறமையாக இகழ்ச்சிபட எடுத்துரைத்தான். 'தம்மை இகழ்வாரைத் தாம் அவரின் முன் இகழ்க' எனவரும் நாலடியார் வாக்கிற்கும்.

"பிறன்வழி கூறுவான் தன்பழி யுள்ளும்

திறன் தெரிந்து கூறப்படும்" (186)

என்று வள்ளுவர் வாக்கிற்கும் சிறந்த எடுத்துக்காட்டு இதனினும் வேறெந்த இலக்கியத்தினும் காண்டல் அரிது என்பர்.

**ஆபுத்திரன் வரலாறு கூறி ஓர் அந்தணன் இகழ்தல் (70-91)**

அப்பார்ப்பனருள் ஒருவன் பிறரை நோக்கி, "இவ் ஆபுத்திரன் பிறப்பினை நான் அறிவேன். (முன்பொருநாள்) வழி நடை வருத்தமுடன் இளைத்த மேனியுடைய பார்ப்பனி ஒருத்தி வேதத்தில் கூறப்பட்ட தீவினைக் கழுவாய் செய்யும் விதியின்படி குமரியில் நீராடி, ஆங்கெழுந்தருளிய குமரித்தெய்வத்தின் திருவடிகளை வணங்க வேண்டும் என்ற கோட்பாட்டின்படி வணங்கித் தனியே வந்தாள். சாலி என்ற பெயருடைய அவளைக் கண்டு. 'உன் ஊர் யாது? இங்கு வருவதற்குக் காரணம் யாது?" என நான் வினவினேன்.

சிறந்த மறையோர் குலத்தவளான அவள், அவ்வாறு வருதற்கியன்ற காரணத்தைக் கூறினாள். 'என் ஊர் வாரணாசி, அவ்வூரில் வேதத்தை ஓதிச் சிறந்தவனும், அதனை ஓதுவிக்கும் தொழிலையுடையவனும் ஆகிய ஒரு பார்ப்பனனுக்கு அரும்பேறாக வாய்த்த மனைவிநான். பார்ப்பனனுக்குப் பொருந்தாத பண்பான தீய ஒழுக்கம் தலைப்பட்டு ஒழுகி, கற்புக் காவலின் எல்லையைக் கடந்தேன்.

அதனால் கணவனுடன் வாழும் வாழ்க்கையை இழந்தேன். ஆறலை கள்வர் அலைப்பர் என்ற அச்சத்தில், என்போல் நிலை கெட்டுச் செல்லும் அயலாரோடு தென் கோடியிலுள்ள குமரித் துறையில் நீராடற் பொருட்டு வந்தேன். பொன்னால் அமைந்த தேரையுடைய பாண்டியனின் கொற்கை என்ற பெரிய ஊரைக் கடந்து ஒருகாததூரம் வந்த போது கருவுயிர்த்தேன். அங்கிருந்த ஆயர் சேரியின் அருகே மறைவிடமான தோட்டத்தின்கண், பெற்ற குழந்தைக்கு இரங்காமல் அதனைப் போட்டு வந்தேன். மாபெருந் தீவினையுடைய எனக்கு வேறொரு புகலிடம் உண்டோ?" என்று துன்பமுற்று அழுதாள் அச்சாலி. அவளுடைய மகனே இந்த ஆபுத்திரன். இதுவரை இவ்வரலாற்றை நான் பிறர்க்குச் சொல்லத் துணிந்ததில்லை. ஏனெனில் அவ்வாறு சொல்லுதலால் இவனுக்குப் பழியேயன்றி வேறொரு பயனும்

இல்லை. இவன் இழிந்த கீழ்மகன். இவனை எவரும் தீண்டவும் வேண்டாம். பேணவும் வேண்டாம்" எனக் கூறினான்.

நிலை கெட்டுத்திரியும் வறியோர் தீர்த்தமாடும் துறைகட்கும், திருவிழா நிகழும் திருப்பதிகட்கும் திரள் திளராகச் செல்லும் வழக்கமுடையர் ஆதலால், 'இரியல் மாக்களொடு.. வருவேன்' என்றாள். இடையர் வாழ்க்கை குற்றமற்றது என நம்பியே அவர் தம் இருக்கையில் குழந்தையைப் போட்டுச் சென்றாள். 'ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடில்லை எனவரும் சிலப்பதிகார வரி நினைக்கத்தக்கது. 'சொற்பயன் இன்மையின்' என்று அப்பார்ப்பனன் கூறும் மொழிகள்.

'சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க

சொல்லின் பயனிலாச் சொல்" (200)

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப அமைந்தவை. ஆயின் இவ்வறத்தைக் கடைப்பிடியாமல் இங்கே அவன் கூறியதே அவன் அறவோன் அல்லன் என்பதைத் தெளிவுறுத்தும்.

**ஆபுத்திரன் அப்பார்ப்பனரை மீண்டும் எள்ளல் (92-99)**

ஆபுத்திரன் மீண்டும் கேட்போர் விரும்புமாறு 'பெரிய மறை நூல்களையுடைய மாக்களே, நீர் பிறந்து வந்த குலத்தின் வரலாறும் கேளுங்கள். பழைய வேதமுதல்வனாம் பிரமனிடம் உங்கள் குலத்தில் முதன்முதலாகப் பிறந் அருமறை அந்தணராகிய விதிட்டனும் அகத்தியனும் நாடகக் கணிகையாகிய திலோத்தமைக்குப் பிறந்து அன்பு செலுத்தப்பட்ட மக்கள். முப்புரி நூலுடைய பார்ப்பனரே, அது பொய்யுரையாகுமோ? சாலிக்கு மட்டும் அவ்வொழுக்கம் தவறாகிவிடுமோ?" என்று நால்வேதம் ஓதும் அவர்களை எள்ளினான்.

தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலும் என்ற இரண்டனுள் பிறரால் எள்ளப்பட்ட வழித்தான் (ஆபத்திரன்) நகுதலை மேற்கொண்டான். பின்னது பிறர் பேதமை பொருளாகப் பிறந்த நகை, ஏனெனில் அப்பார்ப்பனன் கூறும் பழி தனக்கும் உண்மையறியாமை பற்றிய பிறந்தது இவற்றை,

"எள்ளல் இளமை பேதைமை மடனென்(று)

உள்ளப் பட்ட நகைநான் கென்ப"

என வரும் தொல்காப்பியக் கருத்தாலும், பேராசிரியர் உரையாலும் உணராலும்.

**ஆபுத்திரன் மதுரையை அடைந்துஅறச்செயல் புரிதல் (100-115)**

ஆபுத்திரன் அந்தணர் பிறப்பையும், வேத, வேதியரையும் இகழ்ந்தமை கேட்டு வேத அந்தணர்க்குப் பொருந்தியவன் அல்லன் எனக்

கருதிய வளர்ப்புத் தந்தை இளம்பூதி, தன் இல்லத்திற்கு வராதவாறு அவனை விலக்கினான். ஆபுத்திரன் பார்ப்பனர் வாழும் ஊர்களில் சென்று பிச்சை ஏற்க, அவ்வூரார் 'ஆ' கவர்ந்த கள்வன் என்று கலத்தில் கற்களை இட்டனர். செல்வவளமிக்கோர் வாழும் தென்திசையிலுள்ள மதுரையை அடைந்தான்.

கலைமகள் எழுந்தருளிய 'கலை நியமம்' என்ற அழகிய திருக்கோயிலின் வாயிலாகிய அவ்விடத்தே உள்ள அம்பலமாகிய மேடையில் தங்கியவன், அதனை உறைவிடமாகக் கொண்டான். அங்கே ஒரு பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்திக் குற்றமற்ற சிறப்பினையுடைய மனைகள் தோறும் ஊக்கத்துடன் சென்று பிச்சை ஏற்றான். பிறகு குருடர், செவிடர், கால் முடப்பட்டோர், பாதுகாப்போர் இல்லாதவர், பிணிகளால் வருந்துவோர் ஆகியோரை வருக என அழைத்து ஒருங்கே உணவூட்டினான். அவர் உண்டபின் எஞ்சிய உணவைத் தான் உண்டு ஆருயிர்க் காவலனாகிய அவன் அத்திருவோட்டைக் கவிழ்த்து தலையணையாகக் கொண்டு அமைதியோடு துயின்றான்.

ஆபுத்திரன் பிச்சை ஏற்போனாயிருந்தும் பிறர்க்கு அளிக்கும் அருளுடையவன். இத்தகைய அருளாளன் மீண்டும் பிறப்புற்றானே என்றால் அது தானும் புத்தர் அறத்திற்குப் பெரிதும் பொருந்தும். புத்தரே தமக்குக் கைவந்த வீட்டினையும் வேண்டாது கைவிட்டுப் பிறர்க்கறம் முயலும் பொருட்டுப் பரல்வேறு பிறப்புகளிலே பிறந்து உழன்றார் என்பர். ஆதலால் இதனை 'வீடும் வேண்டா விறல்' என்ற பெருநிலை எனக் கொள்ளலாம். அறச்செயலால் ஆருயிர்களைப் பேணியவன் ஆதலால். பிச்சை ஏற்பவனாயிருந்தும் 'காவலன்' எனச் சிறப்பிக்கப் பெற்றான். அறவண அடிகளார் ஆபுத்திரன் வரலாற்றைக் கூறும் நிலையில், அவனைப் போல் அறச்செயலை மணிமேகலை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பாகச் சுட்டுகிறார்.

## 7.7 பாத்திரமரபு கூறிய காதை

மணிமேகலை கையில் ஏந்திய அமுதசுரபி என்ற அரும்பெறல் பாத்திரம் ஆபுத்திரனுக்குத் கிடைத்த வரலாற்றை அறவண அடிகள் இப்பகுதியில் விளக்குகிறார். இதனால் அப்பாத்திரத்தின் தெய்வீகத் தன்மை புலனாகும்.

**ஆபுத்திரன் அமுதசுரபியைப் பெறும் சிறப்பு( 1-21)**

அறவண அடிகள் மணிமேகலையிடம் "பூங்கொடி நல்லாய், ஆபுத்திரனுக்கு ஒருநாள் அம்பலப் பீடிகையிடத்தே நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கேள்" என்று கூறி அதனைக் கூறத்தொடங்கினார். மழை பெய்துகொண்டிருந்த ஒரு நாள் நள்ளிரவில் அருவழியில் நடந்து வருந்திய

சிலா், ஆபுத்திரன் உறைந்த அம்பலத்தை அடைந்து துயிலும் அவனைத் தொழுது புகழ்ந்தனா். 'வயிறு எம்மைச் சுடுதற்குக் காரணமான பெரிய பசி கொல்லுகிறது' என்றனா். அவன் பகலில் இரந்து உண்ணும் உணவுடையவன். இரவில் வேறு உணவு உடையவன் அல்லன். ஆதலால் அவன் அவா்தம் பசியைப் போக்குதற்குரிய வழி காணாமல் கடுந்துன்பம் உற்றான்.

"வயிறகாய் பெரும்பசி மலைக்கும் என்றாலும்

ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்

ஆற்றுவது காணான் ஆரஞா் எய்த" (6-8)

அவ்வேளையில், "ஏடா ஆபத்திரனே, இதனைக் கேள் வருந்தாதே. நின் துயரம் கெடுக. எழுந்து இதை ஏற்க" என்று கூறி யாவரும் வணங்கும் பெரிய கலை நியமம் என்ற திருக்கோயிலில் உறையும் கலை மகளாகிய சிந்தா விளக்கு என்ற தெய்வம் அவன் முன்தோன்றியது. "நாடு வறட்சியடைந்தாலுர்ம் இப்பாத்திரம் வறட்சியேயுறாது. உணவை வழங்கி ஏற்போா் கைகளைத் துன்புறுத்துதல் அல்லாமல் தான் உணவற்றுப் போதல் என்பது இதில் இல்லை' என்று சொல்லி தன் திருக்கையிலுள்ள பாத்திரத்தை அவன் கையில் அத்தெய்வம் கொடுத்தது.

"நாடுவறங் கூரினும்இவ் ஓடுவறங் கூராது

வாங்குநா் கையகம் வருந்துதல் அல்லது

தான்தொலை வில்லாத் தகைமைய தென்றே

தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்" (13-16)

ஆபுத்திரன் அப்பாத்திரத்தைப் பெற்றதும், "கலை கவினுற்றுத் திகழும் இத்திகும் கோயிலில் எழுந்தருளிய கலைமகளாகிய அழியாத பேரொளியே, வானோா் தலைவியே, உலக மாந்தா்தம் முதல்வியே, உலகின்கண் ஆற்றாமாக்களின் அருந்துயராகிய பசிப்பிணியைக் களைபவள் நீயே" என்று தான் தொழுது ஏத்தி அத்தலைவியை வணங்கினான்.

ஆபுத்திரன் அருளுடைய நெஞ்சத்தன் ஆதலால், இரவில் வந்தோா் தம் பசியைப் போக்க முடியாதமைக்கு மிகவும் துன்பப்பட்டான். 'இன்னா திரக்கப் படுதல் இரந்தவா் இன்முகம் காணும் அளவு' (224) என்ற குறள் தொடா்பு நோக்கற்குரியது.

சிந்தா விளக்கு (சரசுவதி) கலைதத்தெய்வம் ஆதலால் அவன் துயா் பொறாமல் செவ்வியறிந்து தானே எளிதில்வந்து பாத்திரம் நல்கிச் சென்றது. இக்கலைத் தெய்வம் அருள் தெய்வமாய் விளங்கும் தன்மையும் புலப்படும். மதுரை மாநகரம் சங்கம் வைத்துத் தமிழ் வளா்த்த மாண்புடையது.

ஆதலின் அறிவை வளர்க்கும் நகரமான அங்கே கலைமகட்குத் திருக்கோயில் எடுக்கப்பட்டிருந்தமை பொருத்தமே.

கலைத்தெய்வம் அறிவுச் சுடர் ஆதலால் அவியாத விளக்கு என்றான் பசி களையும் தொழில் திருமகளுடையது. கலைத் தெய்வம் பேரருள் காரணமாக அவள் அருளை நாடாத ஏனையோர் இடர்களைதற்கு எளிதாக வந்து மாபெரும் பாத்திரத்தை நல்கியது.

**ஆபுத்திரன் அமுதசுரபியால் ஆருயிர் ஓம்பல் : (22-35)**

ஆபுத்திரன் அமுதசுரபி பாத்திரம் கிடைக்கப்பெற்றதும் ஆற்றாமாக்களின் அரும்பசி போக்கினான். அந்நாள் முதலாக உணவை ஏற்பவர் தம் கைகள் வருந்துமளவிற்கு உணவு வழங்கி நிலையான உயிர்களைக் காத்தான். மாந்தரும் விலங்குகளும் மரத்திலுறையும் பறவைகளும் ஒருங்கே கூடி அவனைச் சூழ்ந்ததால் பழுமரத்தின்கண்கூடி ஆர்க்கும் பறவையின் ஆவாரம்போல் எழும் இம்மென்னும் பேரொலி இடையறாது ஒலித்தது.

“ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்
மக்களும் மாவும் மரஞ்சேர் பறவையும்
தொக்குடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையின் எழூஉம்
இழூமென் சும்மை இடையின் றொலிப்ப”(22-27).

இவ்வாறு ஆபுத்திரன் மேற்கொண்ட அறச் செயல் வானுலக இந்திரனது பாண்டு கம்பளம் என்ற இருக்கையைக் குலுக்கியது. இந்திரன் ஒரு கூன் விழுந்த யாக்கையுடைய முதிய பார்ப்பனனாகக் கோலங்யெகாண்டு கைத்தண்டைக் காலாக ஊன்றித் தளர்ந்த நடையினனாக வந்தான். இப்பெரும் உலகில் உயிரினங்களைக் காக்கும் உயிர் முதல்வனாம் ஆபுத்திரன் முன்னர் நின்று “உனது பேரறங் காரணமாக உன்னைக்காண தேவேந்திரன் வந்துளேன். பேரறம் செய்தற்குநின் கருத்து யாது? அவ்வறத்தால் விளைந்த பயனைக் கொள்வாயாக” என்றான்.

**குறிப்புகள்**

மக்களே அன்றி விலங்குகளும் பறவைகளும் உணவு வேண்டி வருதலின் அவற்றுக்கும் ஏற்ற உணவினை அம்மாபெரும் பாத்திரம் சுரந்தளித்தலால் மன்னுயிர் அனைத்தையும் ஓம்பினான். ‘பழுமரத் தீண்டிய பறவையின் எழூஉம் இழுமென் சும்மை என்பதோடு,

"பழுமரம் உள்ளிய பறவையின் யானுமவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின் (64-65)

என்ற பொருநராற்றுப்படை வரிகள் ஒப்புநோக்கற்குரியன.

நிலவுலகில் ஏதேனும் பேரறம் செய்வோர் இருப்பதை இந்திரனின் இருக்கை அசைந்து அவனுக்கு அறிவுறுத்தும். இருக்கை அசைவதற்குக் காரணமான அறவோரைச் சென்று கண்டு அவர் விரும்புவன அளித்து அவரை மகிழ்விப்பான். அவர்க்கு இடையூறு நேர்ந்த வழியும் அவன் இருக்கை அசைய அவன் அவர்தம் துன்பங்களைக் களைய முற்படுவான். இக் கொள்கை பௌத்த சமயத்தவர்க்கும் பொதுவான ஒன்றாகும் என்பது

முறையே இந்நூலாலும், சமண நூலாகிய சீபுராணத்தாலும் அறியப்படும். இந்திரன் அறவோர்க்கரசன் ஆதலால் வானுலகத்தேயன்றியும் நிலவுலகிலும் அறவோர் திறத்தில் அவன் அருளாட்சி செய்யும் கடப்பாடுடையன் என்பது இவ் இரு சமயத்தார்க்கும் பொதுக் கொள்கை போலும்.

**ஆபுத்திரன் நகுதலும் இந்திரன் ஒறுத்தலும் : (36-72)**

உயிரோம்பும் பேரறத்தை இந்திரன் தடை செய வந்த பேதமை குறித்துப் பேதைமகன் போல் விலா எலும்பு இறும்படி பெருகச் சிரித்தான் ஆபுத்திரன் இந்திரனை எள்ளிய அவன் போமையா என்று கூறி அவனுக்கு விளக்க முற்பட்டான். "இவ்வுலகில் இம்மைச் செய்தது மறுமைக்காகும் என்னும் பயன் கருதிச் செய்த நல்வினைப் பயனை நுகருபவர் உம் குடிகளாகிய அமரர் ஆவர். அவர்போல் அல்லாமல் அறத்தை அறத்திற்காகச் செய்வோர் பிறர் பசி களைந்து காக்கும் வள்ளன்மையுடையோர் நல்ல தவம் மேற்கொள்வோர் பற்றறுத்தற்கு முயல்வோர் ஆகிய மெய்ந்நெறி வாழ்க்கையுடையவர் ஒருவரும் இல்லாத தேவர் தம் நாட்டுத் தலைவனாகிய பெரிய வெற்றியுடைய வேந்தரே கேட்டருள்க" என்றான்.

"ஈண்டுச் செய்வினை ஆண்டு நுகர்ந் திருத்தல்
காண்தகு சிறப்பின் நுங் கடவுளர் அல்லது
அறஞ்செய் மாக்கள் புறங்காத்(து) ஓம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர் நன் னாட்டுக்(கு)
இறைவன் ஆகிய பெருவிறல் வேந்தே" (38-43)

என்று கூறிய ஆபுத்திரன், "தேவர்க்குத் தலைவனே! எனது தெய்வத் தன்மையுடைய அமுதசுரபி பசியால் வருந்தி வருபவர் தம் அரும்பசியைக் களைந்து அவர்தம் இன்பமடைந்த முகத்தைக் காட்டும் (அதுவே எனக்குப் பேரின்பம்)

உம் நாட்டில் இன்பப் பொருள்கள் எனக் கொண்டாடும் அமிழ்தமோ, பொன்னாடைகளோ, அரம்பையரோ, பணியாளரோ எனக்கு அத்தகு பேரின்பம் அளிக்கவல்லவையோ?” என்று வினவினான். உடனே ஆயிரங்கண்ணுடைய தேவேந்திரன் ஆபுத்திரனை ஒறுக்க நினைத்தான். ஆருயிர் காக்கும் அவன் பாத்திரம் உணவைச் சுரப்பதாக இருக்க அதனைப் பெறும் இரப்போரைக் காணாமல் அவன் ஏமாறுமாறு செய்ய முற்பட்டான். நீண்ட அந்நாவலந் தீவு முழுவதும் வறுமையின்றி இருக்குமாறு மழை பரப்பும் நீரால் பல்வேறு வளங்களையும் பெருக்கச் செய்தான். அங்கு வாழும் மாந்தர்க்குச் செல்வப் பேறாகிய பெருஞ் சிறப்பு வழங்கினான்.

இதற்கு முன் பாண்டி நாடு பன்னிரண்டு ஆண்டுகள் உயிரினம் இறக்குமாறு மழை வளம் இல்லாமலிருந்தது. இன்று மழை பெய்யும் தொழிலால் மாநிலம் செழித்தது. உயிரினம் சிறிதும் பசிப்பிணி அறியாத ஒரு தன்மை பெற்றது ஆருயிர் காக்கும் ஆபுத்திரன் அம்பலப் பீடிகையிடத்தே உணவு உண்ணும் ஆரவார ஒலி ஒடுங்கிவிட்டது. மாறாகத் தீயொழுக்கமுடையவரும் பரத்தமை ஒழுக்கமுடையவரும் கல்லெறிந்தன்ன இன்னாச் சொல் கூறுகின்றவரும் ஊர் சுற்றித் திரிபவரும் சிரிப்பொலியுடன் வந்து குழுமினர். வட்டுருட்டலும், சூது ஆடலும், வறுமொழியாளர் ஆரவாரித்தலும் ஆகிய புன்னெறி வாழ்க்கை குறைவின்றி நடக்கும் முறைமை ஏற்பட்டது. இரப்போர் எவரும் காணப்பெறாததால் அங்கிருந்தம் புறப்பட்ட ஆபுத்திரன் ஊர்ஊராகச் சுற்றி இரவலரை வினவினான். இவ்வாறு வினவும் இவன் யாவன் என ஊரார் இகழ்ந்தனர். பிறர் அருந்தித் தான் இன்பம் காணுதற்கு ஏமாந்த ஆபுத்திரனை வினவுவார் இல்லை. ஊழ்வினையால் செல்வத்தைக் கடல் கொள்ளத் தனியனாய் உய்ந்து கரையேறி வரும் ஒரு வணிகன் போல் ஒரு வழியில் வந்து கொண்டிருந்தான்.

“திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள

ஒரு தனி வரூஉம் பெருமகன் போலத்

தானே தமியன் வருவோன்”. (70-72)

நிலவுலகில் நூறு வேள்வி செய்தவன். இந்திரப் பதவி பெறுதற்குரியவன். அந்நிலையில் இந்திரன் தன்பதவி இழப்பான். ஆதலால் ஆபுத்திரன் செய்யும் அறவேள்வி தன் பதவிக்கு இடையூறாக அமையுமோ என நினைத்தே இந்திரன் ‘தானத்து உறுபயன் கொள்க’ எனக் கூறினான். இப்புன்மை கண்டே ஆபுத்திரன் விலாவிற நகைத்தான். தேவர்களை அறவிலை வணிகர் என்று ஆபுத்திரன் கருதியதால் இவ்வுலகில் அவர் செய்த அறத்தைச் ‘செய்வினை’ என்றும் அவர்களைத் தேவர் என்னாமல் ‘நும் கடவுளர்’ என்றும் சுட்டினான். அறம் புரியும் மெய்ந்நெறி

காப்பியங்கள்

குறிப்புகள்

வாழ்க்கையோர் யாவரும் இல்லாத நாட்டை நன்னாடு என்றதும் இகழ்ச்சிக்குரிய இந்திரனைப் பெருவிரல் வேந்தே என்றதும் இகழ்ச்சியாகும்.

இரப்போர் தம் திருந்து முகங்காணல் ஆபுத்திரனுக்குப் பேரின்பம் என்பதால் அதைமாற்ற இந்திரன் விரும்பியே அத்தகையோரை வரவிடாமல் செய்ய முற்பட்டான். எப்படியிருப்பினும் ஆபுத்திரனது அறச் செயல் இந்திரனால் உலகிற்கு மழை கிடைக்கும் நன்மைக்கே காரணமாயிற்று.

இவ்வுலகம் மாந்தர் உழைப்பு ஏதுமின்றி ஏதேனும் ஒரு தெய்வத்தால் வளமுடையதாக்கிவிடப்பட்டால் அப்போது இவ்வுலகம் தீநெறியாளர்களால் எத்துணைக் கீழ்டையுடையதாகிவிடும் என்பதை இந்நூலாசிரியர் நுண்ணிதின் எண்ணிப் பார்த்துள்ளார்.உண்போரை வினவிவருவோர் உலகில் இல்லை என்பதால் ஆபுத்திரனைப்பித்தேறியவனோ என இகழ்ந்தனர். திருத்தகு செல்வத்தைக் கடல் கொள்ள அதனை இழந்த வணிகன் தான் மட்டும் தனியனாய் வருவது உவமை; வணிகன் ஆபுத்திரனுக்கும் செல்வம் ஆபுத்திரனுடைய அருள் அறச் செல்வத்திற்கும் உவமைகளாகும்.

**ஆபுத்திரன் மணிபல்லவத்தீவில் உயிர் துறத்தல் : (73-104)**

கடலில் கலம் ஏறி வந்திறங்கி வந்த வணிகருள் சிலர் ஆபுத்திரனை வணங்கினர். “ஆருயிர் ஓம்பும் ஆற்றலுடையாய் சாவகம் என்ற நல்ல நாட்டில் நீண்ட காலமாக மழை பெய்யாததால் உயிரினம் மடிந்தது”

என்றனர். “இந்திரன் கட்டளையால் இரப்போரைப் பெறாமையால் காதலனைப் பெறாமல் கன்னியாகவே இருந்து மூப்படைந்த ஒரு மகளைப் போல் வறிதே காலங் கழியப்பெறும் பாத்திரத்தை ஏந்தி அச்சாவக நாட்டிற்கு செல்வது என் கருத்து” என்று மகிழ்ச்சியுடன் ஆபுத்திரன் கலம் ஏறினான்.

“அமரர்கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்தஎன் பாத்திரம் ஏந்தி
அங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறி”ச் (76-79)

சென்ற போது காற்றின் விசை மிகுதியாகக் கடல் கொந்தளித்தது. மரக்கலம் தன் பாய்களை இறக்கி மணிப்பல்லவத் தீவின்கண் ஒருநாள் தங்கியது. ஆபுத்திரன் அத்தீவின்கண் இறங்கினான். (காற்று விசை தணிய) அக்கப்பலோட்டி இறங்கிய ஆபுத்திரன் ஏறினான் எனக் கருதிச் செறிந்த இருளின்கண் கப்பலைச் செலுத்தினான்.

இவ்வாறு மரக்கலம் சென்றபின் பெரிதும் வருந்தினான் ஆபுத்திரன் அத்தீவில் வாழும் மாந்தர் எவரும் இல்லை. “நிலைபெற்ற உயிர்களை

ஓம்பும் இம்மாபெரும் பாத்திரம் என் உயிரை மட்டும் ஓம்புதலை நான் பொறுக்கமாட்டேன். முற்பிறப்பின் நல்வினை தீர்ந்தமையால் பெருந்துயரம் நுகா்ந்தேன்; இந்நிலையில் இத் தெய்வப்பாத்திரத்தைச் சுமந்து என்ன பயன்?" என்று அதனைத் தொழுதான். அங்கிருந்த கோமுகி என்ற பொய்கை நீரில் முழுக விடுபவன், "தெய்வப் பாத்திரமே நீ ஓர் ஆண்டிற்கு ஒரு முறை ஒரு நாள் மட்டும் நீரின் மேலெழுந்து தோன்றுவாயாக! அப்பொழுது இங்கு அருளறம் மேற்கொண்டு ஆருயிர் காப்பவர் எவரேனும் வருவராயின் அவர் கையில் சென்றடைக" என்று வேண்டி விட்டான். அவ்விடத்திலேயே உண்ணா நோன்புடன் வடக்கிருந்து உயிர்விட முற்பட்டான்.

"கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சியின்
ஓரியாண் டொருநாள் தோன்றென விடுவோன்
அருளறம் பூண்டாங்(கு) ஆருயிர் ஓம்புநர்
உளரெனில் அவர்கைப் புகுவாய் என்றாங்(கு)
உண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்புழி" (91-95)

நடந்ததையும் அறவண அடிகள் மணிமேகலையிடம் கூறிவந்தார். அவர் 'மணிமேகலாய் கேள். அவன் உயிர்விட முற்பட்ட அந்நாளில் நான் அங்கு அவனிடம் சென்றேன். "நீ இவ்வாறு உயிர்விடக் காரணம் யாது?" எனக் கேட்டேன். அவன் தனக்கேற்பட்ட துயரங்கள் பலவற்றையும் எடுத்துரைத்தான். கீழ்த்திசையில் தோன்றித் தன் பேரொளியால் கரிய இருளைப் போக்கி மேல்திசை மறையும் ஞாயிறு போல் உயிர்கட்குப் பசிப்பிணி போக்கியவன் ஆபுத்திரன். மணிபல்லவத் தீவினிடைத் தன்னுடலைப் போக்கிப் பின்னரும் நிலைபெற்ற உயிரினங்களைக் காக்கும் தணியாத ஆர்வங் காரணமாக (மறுபிறப்பில்) அச்சாவக நாட்டை ஆட்சி புரியும் மன்னவன் நாட்டில் ஓர் ஆவினது வயிற்றில் (மகன் உருவில்) கருவாகிப் பிறந்தான்" என்று ஆபுத்திரன் வரலாற்றைக் கூறினார்.

கலம் ஏறி வந்த வணிகர் ஆபுத்திரனை வணங்கினர் என்றமையால் இவனைப் பண்டறிந்தவர் என்பது தெளிவு. தனக்கும் பிறர்க்கும் வறிதே காலம் கழித்த அமுதசுரபிக்கு தானும் மகிழாமல் காதலனை மகிழ்வியாமல் வறிதே காலம் போக்கும் மணமின்றித் தமியளாக மூப்படையும் கன்னிப்பெண் உவமையாக அமைகிறாள்.

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றாள்த மியள்மூத் தற்று" (குறள் 1007)

என்ற குறள் ஒப்பிடற்குரியது. இருளில் கப்பல் போனமையால் ஆபுத்திரன் அது போனமை அறிந்திலன். ஈத்துவதற்குஇடம் இல்லாமையால் அவ்வின்னாமையோடு உயிர் சுமந்து வாழ்தலை ஆபுத்திரனால் பொறுக்கமுடியவில்லை.



“சாதலின் இன்னாத தில்லை யினிததூஉம்

ஈதல் இயையாக் கடை (230)

என்ற திருக்குறளுக்கு அவன் சிறந்த எடுத்துக்காட்டு உண்ணா நோன்பினால் உயிர் துறத்தலை வடக்கிருத்தல் என்பர்.

உயிர் நீங்கும்போது அவாவின் நிலைக்கேற்ப வழிமுறைத் தோற்றம் வரும் ஆதலால் சாவகநாடு சென்று ஆங்கே ஆருயிர் காக்கும் கருத்துடன் ஆபுத்திரன் இறந்தமையால் அந்நாட்டில் சென்று பிறந்தான். அவன் தன்னை வளர்த்த ஆவினிடம் பேரன்புடையன் ஆதலால் ஆ வயிற்றில் பிறந்தான். அப்பிறப்பில் செய்த நல்வினைப் பயனாக மன்னனுக்கு அணுக்கராகிய முனிவருடைய பசு வயிற்றில் பிறந்து மன்னன் ஆனான்.

## 7.8 பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை

அமுத சுரபியின் மாண்புபற்றி அறவண அடிகள் கூறியதைக் கேட்டறிந்தாள் மணிமேகலை. பின்னர் அப்பாத்திரத்தை அங்கை ஏந்தி அதன்பால் ஆருயிர் மருந்து ஒழிவின்றிச் சுரத்தற் பொருட்டு முதன்முதலில் பத்தினிப் பெண்டிற் இடும் பிச்சை ஏற்றல் சிறப்பு எனப் பிக்குணிக் கோலத்தோடு பெருந்தெருவில் பிச்சை ஏற்பதற்குச் சென்ற நிகழ்ச்சி இங்கே எடுத்துரைக்கப்படுகிறது.

**ஆபுத்திரன் தன்னைப் புரிந்த ஆகியவற்றில் தோன்றல் : (1-21)**

அறவணஅடிகள் மேலும் மணிமேகலையை நோக்கி “இயங்கொடிமாதே இன்னும் கேட்பாயாக. முன்னாளில் ஆபுத்திரனுக்குப் பால் சுரந்தூட்டிய நல்ல பசுவானது குளிர்ந்த சாவகநாட்டில் தவளமால்வரை என்ற மலையில் மண்முகன் என்ற பெயருடைய சிறந்த முனிவரின் தவப்பள்ளியில் ஆவாகப் பிறந்தது. அது பொன் கொம்புகளையும் குளம்புகளையும் உடையதாகத் தன் அழகால் பிறர் தொழுமாறு தோன்றியது. தான் கன்றினை ஈனும் முன்னே (உயிர்களுக்கு) தன்மடி சுரந்து பாலை உண்பித்தது.

“முக்காலங்களையும் தெளிவுற உணர்ந்த மாட்சிமையுடையவன் அம்மண்முக முனி. அவன் ‘சாவக நாட்டில் மழை வளம் சுரக்குமாறும்

நிலையான உயிர்களைக் காக்குமாறும் உயிர்களின் காவலனாக ஒருவன் அப்பசுவின் வயிற்றில் பிறப்பான். குடர்மாலை பூண்டு பிற உயிர்களைப் போல் அவன் பிறக்கமாட்டான். பொன் தகட்டாவான முட்டையின் உள்ளே இருப்பவனாகப் பிறப்பான்’ என்று கூறினான்.

'ஆபுத்திரன் நோய்த்துன்பம் ஏதுமின்றியும் மீண்டும் பிறந்து அறம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடனும் மணிபல்லவத் தீவில் நிலையான உயிரைத் துறந்தவன். அவன் தன்னைக் காத்து உதவிய பெருந்தகைமையுடைய அப்பசுவினிடத்தே (நன்றியால்) நினைவு கூர்தலில் தளரா உள்ளத்துடன் இருந்தமையால் மண்முக முனிவனிடத்திருந்த அப்பசுவின் வயிற்றில் பிறந்தான்.தேவர் கூட்டம் மனம் மகிழவும் இவ்வுலகினர் தொழவும் இனிய கனிகளையுடைய நாவல் மரம் ஓங்கிய இத்தீவில் ஒப்பற்றவனாகப் பிறந்தான்' என்றார்.

**ஆபுத்திரன் பிறப்பும் கந்தில் பாவை விளக்கமும் : (22-39)**

அறவண அடிகள் மேலும் மணிமேகலையை நோக்கி ஆபுத்திரன் ஆகியிற்றில் பிறந்த தன்மையைக் கேட்பாயாக. இளவேனில் பருவத்தே கதிரவன் வெம்மை மிகுந்த வைகாசி மாதத்தில் கார்த்திகை முதலாகப் பதின்மூன்று நட்சத்திரங்கள் கழிந்த பின்னர் நட்சத்திரங்களுள் நடுவில் உள்ள விசாக நன்னாளில் புத்தர்தம் பிறந்த நாளுடன் பொருந்திய பொழுதில் ஆபுத்திரன் பிறந்தான். அன்று உலகெல்லாம் மழையின்றி இருந்தம் புண்ணிய பயனுடைய நல்ல நீரானது கற்பக மலர்களோடு விரவிப் பொழிந்தது.

"போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து
மண்ணக மெல்லாம் மாரி இன்றியும்
புண்ணிய நன்னீர் போதொடு சொரிந்தது" (26-28)

"அரசமர நிழலில் பொருந்திய தவமுடைய புத்தர் பிறந்த காலத்தில் இவ்வாறு அற்புதம் தோன்றுமே அல்லாமல் இக்காலத்தும் சிறப்பு நிகழக் கண்டோம்" என்று சக்கரவாளக் கோட்டத்தில் உறையும் தவத்துறவிகள் வியப்பெய்தி அதனை அறிய விரும்பினர்.

நீண்ட நிலையினதான தூணில் கடவுள் படிமம் எழுதிய அவ்விடத்தில் உள்ள கந்தில் பாவை அருள் செய்து அறிவிக்குமானால் உண்மை அறியலாம் என்று நள்ளிரவில் அங்கே சென்றனர்.'மணிபல்லவத் தீவிடை நிலைபெற்ற உயிரை நீத்தவனான ஆபுத்திரன் சாவக நாட்டில் பசிப்பிணி நீங்கப் பெறாமல் வருந்தும் உயிர்கள் உய்தி பெறுமாறு பிறப்பெய்தினான். அவன் வரலாற்றினை அறவண அடிகள் அறிவர் என்று கூறிய கந்தில் பாவை அவர்களுக்கு அவன் வரலாற்றைக் கூறும்படி என் நாவை வருந்துமாறு செய்தது" என்றார்.

தூணில் உள்ள பாவைக் கடவுள் அருகில் சென்றவர்க்கு அவர் வினவும் முன்னரே தன் தெய்வத் தன்மையால் அவர் அறிய விரும்பியதை

உரைக்கும். ஆதலால் மாதவா் வினவுமுன் அத்தெய்வமே விளக்கமளிக்கத் தொடங்கியது. அறவண அடிகள் ஆபுத்திரன் வரலாறு அறிவாா் என்று அத்தெய்வம் கூறியதால் அவா்கள் அனைவரும் அவரிடம் வினவ, அவா் பன்முறை கூறியதால் 'என் நாவை வருத்தியது' என்றாா்.

**ஆபுத்திரன் வேந்தன் ஆயினமை : (39-45)**

பெரியோனாகிய ஆபுத்திரன் வளா்ந்த பேற்றினைக் கேட்குமாறு அறவண அடிகள் மேலும் தொடா்ந்தாா். "சாவக நாட்டை ஆண்டு வந்த மன்னன் பூமிசந்திரன் இததனை (ஆவயிற்றில் குழந்தை பிறந்ததை)க் கேள்வியுற்றான். மண்முக முனிவரின் திருவடிகளை வணங்கி 'நான் மக்கட்பேறு இல்லாதவன். மாதவராகிய தங்கள் அருளால் ஒரு புதல்வனைப் பெற்றேன் என்று கூறி அம்மகவை வாங்கி வளா்த்து வந்தான். அரசாளும் செல்வச் செழுமை அவனிடத்தே இருந்தமையால் அவனுக்குப் பின்னா் அந்த ஆபுத்திரன் தானும் மாலையணிந்த வேந்தனானான்" என்றாா்.

மண்ணாள் வேந்தன் என்பது சாவக நாட்டு மன்னனைக் குறித்தது. அரசாளும் செல்வச் செழுமை என்பது படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறுவகை உறுப்புகளைக் குறித்தது.

**அறவண அடிகள் மணிமேகலையை அறம் செய்ய அறிவுறுத்தல் :(46-55)**

மணிமேகலையிடம் அறவண அடிகள் "வானவா் தலைவனாகிய இந்திரன் அவியுணவு அற்றுப் போய்விட்டானோ? அன்றி அறக்கோலுடைய சோழன் அருள் அற்றவனாகப் போய்விட்டானோ? காவிரி ஆறு நீா் சுரந்து உயிா்களைக் காத்து வளத்தைப் பரவச் செய்தும் நலன் இன்றி உயிா்கள் வறுமையால் துன்புறுத்தும் காலமாகிவிட்டதே? ஆயிழையே, வெள்ளிய அலைகளையுடைய திருப்பாற் கடல் வழங்கிய அமுதத்தை வானவா் உண்டது போக எஞ்சியதைப் பிறா்க்குப் பயன்படாதபடி ஒளித்து வைத்தனா். அதுபோல் வறுமையுடன் இருக்கும் உலகின் மிக்க துன்பத்தைப் போக்கும் அமுதசுரபியைப் பயன்படுத்தாமல் இருத்தல்தகாது" என்றாா்.

"வெண்திரை தந்த அமுதை வானோா்
உண்டொழி மிச்சிலை ஒழித்துவைத் தாங்கு
வறனோ(டு) உலகின் வான்துயா் கெடுக்கும்
அறனோ(டு) ஒழித்தல் ஆயிழை தகாதென" (51-54)

மணிமேகலையிடம் அறிவுறுத்தினாா்.

**மணிமேகலை அமுதசுரபியை ஏந்திச் செல்லல் : (46-86)**

மணிமேகலை தாயாா் தம்முடன் அறவண அடிகளை வணங்கி ஏத்தினாள். தன் கையில் ஏந்திய கடவுள் தன்மையுடைய

அப்பாத்திரத்துடன் தவக்கோலந் தாங்கியவளாய் புகாரின் பெரிய தெருவை அடைந்தாள். அவளைக் கண்டதும் ஆரவாரம் செய்து சிறுவர்களும் நெஞ்சம் நெகிழ்ந்துருகும் தீயொழுக்கமுடையரும் பரத்தரும் ஒருங்கே கூடினர். கொடி உயர்த்திய கோசம்பி நகரை ஆளும் தேர்ப்படையுடைய வத்தவ நாட்டு மன்னன் உதயணகுமரனை (உஞ்சயைரசன் பிரச்சோதனன்) வஞ்சமாகச் சிறை செய்த போது அவனது பெரிய தளையினின்றும் காக்க யூகி என்ற அமைச்சன் மாறுவேடங் கொண்டு தன் உருவத்திற்குப்

பொருந்தாதபடி பித்தேறினான் போல் பேசிய நிலைகண்டு வருந்திய மாந்தர் போல் மணிமேகலை நிலைக்கு அவர்கள் வருந்தினர்.

சிலநாள் முன் உதயகுமாரன் உள்ளத்தைக் கவர்ந்து பிறர் அறியாதவாறு இந்நகரத்தினின்றும் மறைந்து போனவள் இம்மணிமேகலை. தேன் துளிக்கும் மலர்க் கூந்தலையுடைய இவள் மீண்டும் இங்கு வந்து தோன்றியுள்ளாள். பிச்சைத்திருவோட்டைக் கையில் அவள் ஏந்திய காட்சி தெய்வத் தன்மையது என்று அவள் நிலைக்கு நெஞ்சழிந்தனர். இல்லறம் பேணுவோர் இனிது வாழும் மங்கல மனைகளையுடைய தெருவில் மாதவி பெற்ற அழகிய பூங்கொடி போன்ற மணிமேகலை தனக்கு அருகிலுள்ள பெண்ணிடம் “விருந்தினரைக் கண்ட போதே உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் பத்தினிப் பெண்டிர் அன்புடன் இடும் பிச்சையை இப்பாத்திரத்தில் முதன் முதலில் ஏற்றல் பெருந்தன்மையுடையது” என்று கூறினாள்.

“அணிமலர்ப் பூங்கொம்(பு) அகமலி உவகையில்
பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம்
பிச்சை ஏற்றல் பெருந்தக வுடைத்து ( 72-74)

என்று கூறியதும் அப்பெண் “குளத்தினை அழகு செய்யும் தாமரையின் கொழுவிய மலர்களின் நடுவே ஒப்பற்றதாகி உயர்ந்த அழகிய மலர் போன்று மழை பெய்விக்கும் தெய்வத் தன்மையுடைய கற்பில் சிறந்த இல்லறப் பெண்டிருள் ஆதிரை என்ற பெண்மணி தனிச் சிறப்புடையவள. நேரிழையே, இதோ அணித்தான அவள் மனையில் நீ பிச்சை புகுதல் வேண்டும்” என்றாள்.

ஆதிரை மனையை மணிமேகலைக்கு அறிவித்த அப்பெண்மணி காயசண்டிகை ஆகும். அவள் வடதிசையில் விச்சாதரர் நகரங்களுள் காஞ்சன புரத்தில் பிறந்து தென்திசைப் பொதியமலை அருகில் ஓர் ஆற்றின் கரையிடத்தே முற்பிறப்பின் தீவினை உருத்து வந்து ஊட்டுதலால் துறவோன் ஒருவனது சாபத்தினால் மாபெரும் துன்பம் நுகர்ந்தாள். அச் சாபத்தால் அழிவற்ற கொடிய பசித்துன்பத்தோடும் அதனைப் போக்கும்

காப்பியங்கள்

குறிப்புகள்

பேராவலோடும் தெருக்களில் இடையறாமல் சுற்றித் திரியும் நிலைக்கு ஆளானாள்.

**சோதித்தறியும் வினா விடைகள் :**

**1.மணிமேகலையின் பண்பு நலன்கள்**

மாதவி பெற்ற மகளாகிய மணிமேகலையை மாசற்றவள் எனச் சுட்டவே சாத்தனார் "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை" என்று சிறப்பிக்கின்றார். அவளைத் தவநெறியுடையவளாக்கும் அவரது உட்கோளுக்கேற்ப அவள் தன் பண்பு நலன்களை அவர் தம் காப்பியத்தில் சித்திரித்துள்ளார். பாடப் பகுதியின் வழி மணிமேகலை பாத்திரப் பண்பு நலன்களை நோக்கலாம்.

**அருளற நெஞ்சினள்**

மணிபல்லவத் தீவில் உள்ளபுத்த பீடிகைவழித் தன் பழம்பிறப்பினை அறிந்தவள் மணிமேகலை. 'மன்பெரும் பீடிகை என் பிறப்பு உணர்ந்தேன்' எனறு அவளே தீவதீலகையிடம் கூறுகிறாள். புத்த பீடிகையைக் கண்டபோதும் அருளறம் பூண்ட அறவோர்க்கன்றிப் பழம் பிறப்புணர்ச்சி பிறர்க்கு உண்டாதல் இல்லை. புத்தபெருமான் உலகிற்குத் தருவாய் மலர்ந்தருளிய நல்லறமாகிய அருளற நெறியில் பிறழாது இருந்தவர்க்கே அவ்வுணர்ச்சி கைவரப்பெறும் என்றெல்லாம் குறிப்பிட்ட தீவதிலகை அத்தகையோர் உலகில் மிக அரியர் என்கிறாள். "உலகத்து ஒரு தலையாக ஆங்ஙனம் ஆகிய அணியிழை" என்று மணிமேலையைச் சுட்டுவது அவள் அறச் செல்வி என்பதை உணர்த்தும்.

மணிபல்லவத்தீவில் ஆபுத்திரன் தன் கையகத்து இருந்த அமுதசுரபியை, 'அருளறம் பூண்டு ஆங்கு ஆருயிர் ஓம்புநர் உளர் எனில் அவர் கைப்புகுவாய்' என்று கோமுகிப் பொய்கையில் விட்டான். புத்தர் தோன்றிய விசாக நாளில் அப்பாத்திரம் மணிமேகலை கையில் வந்து புகுந்தது. இந்நிகழ்ச்சி அவள் அருளற நெஞ்சினள் என்பதைத் தெளிவுறுத்தும்.

அமுத சுரபியைத் தான் பெற்ற பிறகு மணிமேகலை அதனை அடைந்ததற்கான காரணத்தைத் தீவிதிலகையிடம் எடுத்துரைக்கின்றாள். முற்பிறப்பில் தன் காதலனை அரவம் நீண்ட தீயில் உயிரோடு வெந்த தான் அப்பிறப்பில் சாதுசக்கரன் என்ற துறவோனுக்கு உணவு நல்கி ஓம்பிய காலம் போன்று ஒரு கனாவைக் கண்ட அறக்காட்சியின் பயனால் இப்பிறப்பில் அப்பாத்திரம் தன்னிடத்து வந்துள்ளது என்று விளக்கம் அளிக்கின்றாள். கடந்த பிறப்பிலும் அருளறச் செயல் புரிந்த அவளது மாண்பினை இவ்விளக்கம் உணர்த்தும்.

*Self Instructional Material*

அருள் அறச்செயலைக் காணும் ஆவலால் அவள் உள்ளம் ஏங்குகிறது. பெற்ற குழந்தையின் பசியால் வாடிய முகத்தைக் கண்டதும்

பாலைச் சுரக்கும் தாயின் மார்பு போல் ஆருயிர் மருந்தாம் உணவை இப்பாத்திரம் சுரப்பதைக் காணும் வேட்கையில் இருக்கின்றாள். 'ஆருயிர் மருந்து அவர் முகம் கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்' என அவள் சுட்டுவது அவளது நன்னெஞ்சை உணர்த்தும்.

**பௌத்த நெறியில் பிறழா நோன்பினள்**

தரும தலைவனாகிய புத்தபெருமான் உரைத்த பெருமை மிகுந்த நல்லறத்தினின்றும் சிறிதும் பிறழாத நோன்பினை உடையவர் மட்டுமே, புத்தபீடிகையைத் தொழற்கு உரியவர்; அவர்க்கே பழம் பிறப்புணர்ச்சி கைவரப்பெறும் எனத் தீவதிலகை குறிப்பிடுகிறாள். அத்தகையோர்க்குப் புத்தர் அறிவுறுத்திய திருவறமொழி முழுவதும் உரியது என்று மேலும் விளக்குகிறாள். அத்தகு நிலையினள் மணிமேகலை என்றும் அவள் உரைப்பதால், பௌத்த சமய நெறியில் உயர் தவச் செல்வியாக மணிமேகலை ஒளிர்ந்தமை தெளிவாகும்.

அமுதசுரபியைப் பெற்ற மாத்திரத்திலேயே பேருவகை அடைந்த மணிமேகலை அப்பேற்றினைத் தனக்கு அருளிய புத்த பெருமானை வணங்கி வாழ்த்துகிறாள். 'மாரனை வெல்லும் வீர நின்னடி…. நின்னடி வணங்குதல் அல்லது வாழ்த்தல் என் நாவிற்கு அடங்காது' என்று பலபடியாகப் போற்றுகிறாள். இது புத்தரிடத்துக் கொண்டிருந்த அவளது ஆழ்ந்த பற்றினை உணர்த்தும்.

**தெய்வ அருட்சிறப்புப் பெற்ற பொற்றொடி**

மணிமேகலா தெய்வம், தீவதிலகை போன்ற தெய்வங்களின் அருட்பேறு பெற்ற நங்கையாக மணிமேகலை விளங்கினாள். அவளிடத்துப் பிரிவுகொண்ட அவள் குலதெய்வம் அவளைக் காக்க எண்ணியே அவளை மணிபல்லவத்தீவில் இட்டுச் சென்றது. அத்தெய்வத்தின் அருட் பயன் தனக்குண்டு என்ற காரணத்தினால்தான் அவள் அச்சமின்றி, அத்தனித்தீவில் வெண்மணல் குன்று, மலர்வனம், தண்மலர்ப்பொய்கை ஆகியவற்றை மெல்லென நடந்தே கண்டு களிக்கின்றாள். மேலும் அத்தெய்வத்தின் அருட்பாவை, "அந்தரம் திரியவும் ஆக்கும் இவ் அருந்திறன் மந்திரம் கொள்க" என அருளியதன் விளைவாக மணிமேகலையால் மணிபல்லவத் தீவினின்றும் புகார் நகரத்திற்கு வான்வாழிப் பறந்துவர முடிந்தது.

புத்தர் தம் அற நெறியினின்றும் பிறழாதவரே பாதபீடிகையின் வழிப் பழம் பிறப்புணர்ச்சி பெறுவர். அத்தகையோருக்குப் புத்தரின் அறமொழி உரியது. உலகத்தில் அத்தகையோர் அரியர். அத்தன்மைக்கு உரியள் மணிமேகலை எனக் கூறுகிறது, தீவதிலகை என்ற காவல் தெய்வம். மேலும் அமுதசுரபி என்ற தெய்வீகப் பாத்திரத்தைப் பெறற்குரிய

சிறப்பினை உடையவள் மணிமேலையே என்று உணர்ந்து 'நின்னாங்கு வருவது போலும் நேரிழை' என அவள் புகழை எடுத்தியம்புகிறது.

மணிமேகலா தெய்வம், தீவதிலகை ஆகியோரால் பாராட்டப்பட்ட அறவண அடிகளாலும் போற்றத்தக்க பண்பினள் மேகலை. பொற்கொடி போன்ற பெண்களின் நல்திறம் மணிமேகலையால் சிறக்க என அறவண அடிகளின் வாழ்த்தினைப் பெற்ற பேறுடையவள் அவள், மேலும், 'மடக்கொடி நின்னால் வருவன இவ்வூர் ஏது நிகழ்ச்சி யாவும் பலவுள' எனப் பின்னால் விளையப் போகும் செயலுக்கு அடையாளமாகப் பல நிகழ்ச்சிகள் மணிமேகலையால் நடைபெறக் கூடியன என அவள் சிறப்பை விதந்தோதுகிறார். அவள் முற்பிறப்பின் வரலாற்றையும் அறநெறியின் தன்மையையும் தகுதியுடன் உணர்ந்தவள் என்பதை அறிந்து, 'பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த நறுமலர்க் கோதாய்' எனப் போற்றுகிறார். 'ஆருயிர் மருந்தாம் அமுதசுரபியெனும் மாபெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை' என அவளைப் போற்றுபவர், அப்பாத்திரத்தின் திறன் அறிந்து அவளைப் பயன்படுத்தவும் தூண்டுகிறார். பாற்கடல் ஈந்த அமுதை வானோர் தாம் உண்டது போக எஞ்சியதைப் பிறர்க்குப் பயன்படுத்தாமல் மறைத்ததுபோல் அமுதசுரபியை வறிதே வைத்திருக்க வேண்டாம் என அறிவுரை கூறியும் அமைகிறார். 'வறனோடு உலகின் வான் துயர் கெடுக்கும் அறனோடொழித்தல் ஆயிழை தகாதென' அவளை அறத்தின்பால் செலுத்துகிறார்.

இவ்வாறு தெய்வங்களாலும் தெய்வீக அருளுடைய அறவண அடிகளாலும் போற்றத்தக்க சிறப்பினையுடையவள் மணிமேகலை.

**பணிவுடையள்**

'என்றும் பணியுமாம் பெருமை' என்பார் திருவள்ளுவர். தவத்துறவியாம் மணிமேகலை பெரியோரிடத்தும், பிற பொருளிடத்தும் மிகுந்த பணிவுடையாளாகத் திகழ்கிறாள். ஆபுத்திரனது தெய்வீகப் பாத்திரத்தை கொண்ட கோமுகி பொய்கையின் சிறப்பை உணர்ந்தபின், அதனை வலம் வந்து தொழுது எழுகிறாள். 'கோமுகி வலம் செய்து... எழுந்து வலம் புரிந்த இளங்கொடி' என்ற தொடர் அவள் அடக்கச் சிறப்புடையவள் என்பதைச் சுட்டும். தன் முற்பிறப்பின் நல்வினைப்பயனால், அமுதசுரபியைப் பெற்றபோதும், தனது உயர்பண்பினை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல், "தீவதிலகை தன்னடி வணங்கி மாபெரும் பாத்திரம் மலர்க்கையின் ஏந்திக்கோமகன் பீடிகை தொழுது' எழுகிறாள். தன்னை உயர்வாகக் கருதாத அவளது உளப்பாங்கு புலனாகும்.



புகார் நகரினை அடையும் மணிமேகலை, மாதவி சுதமதியைக் காணும்போதே, 'தவ்வையராகிய தாரையும், வீரையும் அவ்வையர் ஆயினீா

நும்மடி தொழுதேன்' என்று கூறி அவர்கள் இருவரையும் வணங்குகிறாள். அறவண அடிகளிடம் உயர் மதிப்புக் கொண்டவள் மணிமேகலை. மாதவி சுதமதி இருவரையும் நோக்கி, 'பழுதறு மாதவன் பாதம் படர்கேம் எழுக' என்று கூறி அவர்களையும் அவரிடம் அழைத்துச் செல்கிறாள். 'மாதவன்

திருந்தடி மும்முறை வணங்கி' அவரைப் போற்றுகிறாள். மேலும் அவரிடம் மணிபல்லவத்தீவில் நடந்தவைகளையெல்லாம் எடுத்துரைக்கும்போது, மீண்டும் அவர் பாதம் வீழ்ந்து வணங்குகிறாள். அறவண அடிகளின் அறிவுரையின்படி அமுதசுரபியைப் பயன்படுத்த எழுந்தபோது மீண்டும் மாதவி சுதமதியுடன் அவரைப் பணிந்து பலவாறாகத் துதித்துச்செல்கிறாள். இவையெல்லாம் சான்றோரிடத்தும், பிறரிடத்தும் அவள் கொண்டிருந்த பணிவினை உணர்த்தும்.

இவ்வாறாகக் காப்பியத் தலைவியாம் மணிமேகலை, துறவுக்குரிய அருளற நெஞ்சினையுடையவளாக, பௌத்த நெறியில் பிறழா நோன்பினளாகத் தெய்வ அருட்சிறப்புப் பெற்ற பொற்றொடியாக, என்றும் பெருமைக்குரிய பணிவுடையளாக ஒளிர்ந்தவள் என்பது புலனாகும்.

**2. மணிமேகலையில் கிளைக் கதைகள்**

எல்லா நாடுகளிலும் கதை கூறும் வழக்கம் உண்டு. எழுத்து வடிவில் காணப்படும் கதைகளுள் பல முதன்முதலில் வாய்மூலம் வழங்கப்பட்டவை என்பர். என்றைக்கும் கதைகளைக் கேட்பதில் மக்களுக்கு ஆர்வம் இருந்தமையால், கற்பனையும் கருத்தும் நிறைந்த பலகதைகள் நாட்டில் வழங்கி வருகின்றன. புராணங்கள், காப்பியங்கள் ஆகியவற்றில் பல்வேறு கிளைக் கதைகளைக் காண இயலும்.

தமிழ்ப் புலவர்கள் கிளைக்கதைகளைக் காப்பியங்களிலும், புராணங்களிலும் பல்வேறு நோக்கங்களுக்காக அமைத்திருக்கின்றனர். காப்பியத்தலைமைக் கதைப் பொருளை ஒவ்வொரு காதையிலும் தொடர்ந்து கூறிக்கொண்டே சென்றால் படிப்பவர்களுக்குச் சுவைக்காது. மனநிலையைச் சற்று வேறு திசையில் திருப்பும் போக்கில் (Divirsity) கிளைக்கதைகள் அமையும் போது ஆர்வ நிலை தூண்டப்படும். சில கிளைக்கதைகள் தலைமைப் பாத்திரங்களின் பண்பு நலன்களைச் சிறப்பிக்க உதவும். காப்பியத் தலைமை மாந்தர்களைத் தவிரப் பல்வேறு பாத்திரங்களைப் படைத்து, பல்வேறு பாத்திரப் பண்புகளை உணர்த்த சிறந்த சாதனங்கள் கிளைக் கதைகளே ஆகும். மேலும் ஆசிரியரின் சொந்தக் கருத்துக்களை நிறுத்தவும் அறிவுரைகளை வலியுறுத்தவும் இக்கிளைக் கதைகள் உதவும். மணிகேமலைக் காப்பியத்தில் உள்ள பல கிளைக் கதைகள்

ஒன்றற்கொன்று தொடர்பு உள்ளவைகளாக உள்ளன. சாத்தனார்தம் காப்பியத்தில் சில கிளைக் கதைகளைப் படைத்துள்ளார்.

**இலக்குமியின் கதை**

அசோதர நகரத்து வேந்தனாகிய இரவிவன்மனுக்கும் அவன் மனைவி அமுதபதிக்கும் மூன்று பெண் மக்கள் பிறந்தனர். தாரை, வீரை, இலக்குமி ஆகிய அம்மூவருள் இலக்குமி என்பவள் இராகுலன் என்ற மன்னனை மணந்தவள். அவள் சாதுசக்கரன் என்ற முனிவனுக்கு உச்சிப்பொழுதில் உணவு நல்கி அன்புடன் பேணினாள். இராகுலன் திட்டி விடத்தால் மாண்டபோது, அவள் உயிருடன் தீப் புகுந்தாள். தீயில் அவளுடைய உணர்வுகள் ஒடுங்கிய நேரத்தில் சாதுசக்கரனுக்கு உணவூட்டிய காலத்தைப் போன்றதொர் கனவினை உடையவளாகி இறந்தாள். அக்கனவின் பயனால் மறுபிறப்பில் அவள் மணிமேகலையாகப் பிறந்து ஆருயிர் மருந்தாம் உணவை அளிக்கும் அமுத சுரபியைப் பெற்றாள்.

“சாது சக்கரன் தனையான் ஊட்டிய

காலம் போல்வதோர் கனாமயக் குற்றேன்

ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்

ஈங்கிப் பாத்திரம் என் கைப் புகுந்தது”

என்றாள் மணிமேகலை.

இக்கதை நல்வினைச் செயல் மறுமையில் நன்மையை விளைவிக்கும்; உயிர்களுக்கு மறுபிறப்புண்டு என்பவனவற்றை விளக்க எழுந்ததாகும். முற்பிறப்பில் பூண்டிருந்த அருளறக் காட்சி காரணமாக மறுபிறப்பில் அவ்வறத்தை மேற்கொள்ளும்படி நல்வினை அமுதசுரபியை அவள் கையில் புகுவித்ததைப் பௌத்த சமயத்தவர் ‘ஏது நிகழ்ச்சி எதிர்தல்’ என்பர்.

**துச்சயன் கதை**

கச்சய நகரத்து வேந்தனாகிய துச்சயன், இலக்குமியின் மூத்த சகோதரிகளாகிய தாரையையும் வீரையையும் மணந்தான். ஆதி முதல்வனாகிய புத்தபிரானின் திருவடிகளாகிய பீடிகை பொருந்தியிருந்த பாதபங்கய மலையினைப் போற்ற அறவண அடிகள் சென்றபோது துச்சயனை ஒரு மொழிலில் சந்தித்தார். அவன் மனைவியரின் நலங்குறித்து அடிகள் வினவியபோது, தன் மனைவியர்க்கு நேர்ந்ததை உரைத்தான். வீரை மதுவுண்ட மயக்கத்தால் ஒரு யானையின்முன் சென்று வீழ்ந்து மாண்டாள். தங்கையிறந்த துன்பம் தாங்காமல் தாரையும், ஒரு மாடத்தின் மீதேறி வீழ்ந்து மாண்டாள். இதனால் துச்சயன் மிகவும் வருந்தி இச்செய்திகளை அறவண அடிகளிடம் கூறினான். ‘இது பழவினைப்பயன்; நீ

வருந்தாதே' என்று அவனுக்கு அவர் ஆறுதல் அளித்தார். முன்னாளில் தாரையும் வீரையும் பாதபங்கய மலையைத் துதித்த பயனால், மறு பிறவியில் மாதவி சுதமதியாகிய அவர்கள் மீண்டும் புத்த தேவனை வணங்கித் தொடர்வினை நீங்கிக் குற்றமற்ற வீட்டுலகை அடைவர் என்றும் அறவண அடிகள் குறிப்பிட்டார்.

"ஆதிமுதல்வன் அருந்துயர் கெடுக்கும்

பாதபங் கயமலை பரசினர் ஆதின்

ஈங்கிவர் இருவரும் இளங்கொடி நின்னோ(டு)

ஓங்குயர் போதி உரவோன் திருந்தடி

தொழுது வலங் கொண்டு தொடர்வினை நீங்கிப்

பழுதில் நன்னெறிப் படர்குவர்".

கள்ளுண்ணாமை பௌத்தர்தம் ஐவகைச் சீலங்களுள் ஒன்று. வீரை கள்ளுணடமையால் அடைந்த முடிவை இக்கதையில் காட்டி அத்தீச்செயல் கடியத்தக்கது என்பதை நிறுவமுயலுகிறார் சாத்தனார். தாரை, வீரை ஆகியோாதம் முடிவுவழிப் பழவினைப் பயன் பாடக அணிபோல் தன்

பயனைத் தந்தே தீரும் என்று பௌத்த மதக்கொள்கையையும் விளக்க இக்கதையைப் பயன்படுத்துகிறார் அவர். முற்பிறப்பில் புத்தர் தம் திருவடிகளை தொழுதவர்க்கு மறுபிறப்பில் தொடர்வினை நீங்கப் பெறும் என்ற கோட்பாடும் காட்டப்படுகிறது.

**ஆபுத்திரன் கதை**

வாரணாசியில் அபஞ்சிகன் என்ற அந்தணனின் மனைவி சாலி என்பவள். அவள் ஒழுக்கம் தவறிய நிலையில் கன்னியாகுமரிக்கு நீராடப் போகும் போது ஓர் ஆண் மகவை ஈன்றாள். பழிக்கு அஞ்சிய அவள் அக்குழந்தையை மறைவிடமான தோட்டத்தில் போட்டுச் சென்றாள். அக்குழந்தையின் அழுகுரலைக் கேட்ட ஒரு பசு ஏழுநாள்வரை அக்குழந்தையை நாவால் வருடிப் பாலைச் சுரந்து காத்தது.

"தாயில் தூவாக் குழவிதுயர் கேட்டோர்

ஆவந்(து) அணை ந்தாங்(கு) அதன்துயர் தீர

நாவால் நக்கி நன்பால் ஊட்டிப்

போகாது எழுநாள் புறங்காத்து ஓம்ப".

அக்குழந்தை அவ்விடத்தே அந்த ஏழுநாளும் கிடந்தது. வயனங்கோடு என்ற ஊரைச் சேர்ந்த இளம்பூதி என்ற அந்தணன் அக்குழந்தையின் அழுகுரல்

கேட்டு, 'ஆமகன் அல்லன் என் மகன்' என்று கூறி எடுத்துச் சென்றான். அந்தணர்க்குரிய கலைகளைக் கற்பித்து ஆபுத்திரனை வளர்த்தான்.

ஒரு நாள் அந்தணர் வீட்டு வேள்வியில் பலியிட இருந்த பசு ஒன்றைக் காக்க எண்ணிய ஆபுத்திரன், இரவில் அதனைக் களவாடச் சென்றான். அதனைப் பிடித்துத் துன்புறுத்திய அந்தணர்களிடம் 'நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்' எனக் கூறிப் பசுவைக் கொல்லுதல் பாவம் என்று பரிந்து பேசினான். பசுமகன் என அவனை இழித்துரைத்த அவர்களிடம், முனிவர்கள் சிலரின் பிறப்பை எடுத்துரைத்துப் பிறப்பினால் இழிவில்லை என்றான். மேலும் அக்கூட்டத்துள் ஓர் அந்தணன் சாலியின் வயிற்றில் ஆபுத்திரன் பிறந்ததைச் சுட்டி இகழ்ந்தான். அந்தணரை இழிவுபடுத்தினான் என ஆபுத்திரனை விரட்டினான் இளம்பூதி

தென்மதுரையில் சிந்தாதேவி கோயிலில் உறைந்த ஆபுத்திரன் பிச்சை ஏற்றுப் பிறவுயிர்க்கு ஈந்தான். இரவு நேரத்தில் வந்தவர்க்கு உணவளிக்க முடியாது வருந்திய அவனுக்கு, சிந்தாதேவி அமுத சுரபியை அளித்தான்.

"ஆங்கவர் பசிதீர்த் (து) அந்நாள் தொட்டு

வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்

மக்களும் மாவும் மறஞ்சேர் பறவையும்

தொக்குடன் ஈண்டிச் சூழ்ந்தன"

இவ்வாறு பல்லுயிரையும் ஓம்பினான்.

அவன் செய்த தானத்தின் பயனைத் தருவதற்கு வந்த இந்திரனிடம் பசித்தவர் துயர்நீக்கி அவர்தம் இனிய முகம் காணலே பேரின்பம் என்றான். 'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர் திருந்தும் முகம் காட்டும் என் தெய்வக் கடிஞை' என்று கூறியதைக் கேட்டுச் சினந்த இந்திரன், உலகில் மழைவளம் தந்து அவனிடம் உணவு பெறுவோர் எவரும் இல்லாமல் செய்துவிட்டான். உணவு பெறுபவர் எவரும் இல்லையாதலால் வருந்திய ஆபுத்திரன். சாவக நாட்டில் பசித்துயர் தீர்க்கக் கப்பலில் புறப்பட்டான். மணிபல்லவத் தீவில் இறங்கிய கப்பல் ஆபுத்திரனைக் கவனியாது புறுப்பட்டதால் தனித்தீவில் அமுதசுரபியைப் பயன்படுத்த முடியாமைக்கு மிகவும் வருந்தினான். 'ஆருயிர் ஓம்புநர் கையில் அடைக' என அங்கிருந்த பொய்கையில் அப்பாத்திரத்தை இட்டு உண்ணா நோன்பிருந்து இறந்தான்.

சாவக நாட்டில் உயிர் அறம் செய்யக் கருதிய நினைவுடன் ஆபுத்திரன் இறந்ததால், அந்நாட்டிலே மண்முக முனிவன் தவப்பள்ளியில் (முன்னாளில் தனக்குப் பாலூட்டிக் காத்த பசு மறுபிறப்பில் பசுவாகப் பிறக்க) ஓர் ஆவின் வயிற்றில் பொன் முட்டையினின்று மகனாகப் பிறந்தான்.

"பிணிநோய் இன்றியும் பிறந்தறம் செய்ய

மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்

தற்காத் தளித்த தகைஆ அதனை

ஒற்கா உள்ளத் தொழியான் ஆதலின்

ஆங்கவ் ஆவயிற்று"

அமரர் வியக்கத் தோன்றினான். அந்நாட்டு வேந்தனாகிய பூமிசந்திரன், அம்மகனை எடுத்து வளர்த்து மன்னனாக்கினான். (நம் பாடப் பகுதிக்குரிய கதை இது வரையே)

ஆபுத்திரன் கதை வரலாறு பசிப்பிணி தீர்க்கும் அறம் எல்லா அறங்களினும் மேலானது என்பதை நிறுவவே எழுந்தது. இக்கதை காப்பியக்கதைப்போக்கிற்கு உதவும் நிலையில், மணிமேகலையை அந்த அறச்செயலுக்கு ஊக்குவிக்கவும் துணை நிற்கிறது. பசுவைக் கொல்லுதல் பாவம், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை, பசி நீக்கப்பட்டோரின் இனிய முகம் காணலே வாழ்க்கையில் பேரின்பம், பிறப்பால் வேற்றுமையில்லை-இவை போன்ற அறக்கருத்துக்களை வெளியிட இக்கதை உறுதுணையாகிறது. முன்னாளில் ஆபுத்திரனை வளர்த்த பசு அவ்அன்பு காரணமாக மறு பிறப்பிலும் அவனுக்குத் தாயன்பைச் சுரக்கும் பசுவாகப் பிறந்தது. உயிர் அறம் ஓம்பும் ஒரே நினைவில் மணிபல்லவத் தீவில் இறந்த ஆபுத்திரன் அதன் விளைவாகச் சாவக நாட்டிலேயே உயிர் காக்கும் வேந்தனாகப் பிறந்தான். 'அவாவின் வழித்தாக வழிமுறைத் தோற்றம் வரும்' என்ற பௌத்தமதக் கோட்பாட்டை விளக்கவும் சாத்தனார் இக்கதையைப் பயன்படுத்துகிறார். இக்கதைப் பகுதியில் வைதிக முனிவர் தம் பிறப்பை எள்ளி நகையாடித் தம் காழ்ப்புணர்ச்சியைக் காட்டவும் தவறவில்லை, சாத்தனார்.

**விசுவாமித்திரன் கதை**

ஒரு காலத்தில் கொடும் வறட்சி காரணமாக உலகில் உயிர்கள் மடிய மழை வளம் அறவே நீங்கியது. அரசப் பொறுப்பினின்றும் விலகிக் காட்டில் தவம் மேற்கொண்ட விசுவாமித்திர முனிவன் உண்ணுவதற்கு யாதொன்றும் இன்றி வருந்தினான். இறுதியில் இறந்த அருவருப்புடைய நாயின் ஊனைத் தின்ன முற்பட்டான். உண்பதற்கு முன்பு இந்திரன் வழிபாட்டை நடத்தும்போது. இந்திரனே அவன் முன்தோன்றி அருள்

செய்தான்; மழை வளத்தைப் பெருக்கினான். அதனால் மன்னுயிர்கள் பெருகின; விளை பொருள்களும் மிகுந்தன. இக்கதை பசிப்பிணியின் கொடுமையைத் தலைமைப்பாத்திரமாகிய மணிமேகலை உணர இடம் அளிக்கிறது. பசிப்பணி போக்கும் பேரறத்தின்பால் அவளைத் தூண்டவும் உதவுகிறது.

இவ்வாறு கிளைக்கதைகள் மணிமேகலைக் காப்பியத்தில் தனியிடம் பெறுகின்றன.

**4. திருக்குறளும் மணிமேகலையும்**

எக்காலத்தவர்க்கும், எம்மதத்தினர்க்கும் பொருந்துவதான வள்ளுவம் பல்வேறு இலக்கியங்களாலும் போற்றப்பட்ட ஒன்றாகும். பௌத்த மதக் காப்பியமான மணிமேகலையில் சாத்தனார் பல இடங்களில் திருக்குறளின் கருத்துக்களைப் போற்றுகின்றார். பல்வேறு இடங்களில் குறள் சொற்களையும், சொற்றொடர்களையும் பயன்படுத்தும் அவர், சில இடங்களில் முழுக் குறளையும் அப்படியே கையாண்டுள்ளார்.

இறைவன் அடியை வணங்குவோர் பிறவிழ என்னும் பொயி கடலைக் கடப்பார்கள். அவ்வடியை வணங்காதவர் அக்கடலைக் கடக்க மாட்டார்கள் என்று கூறும் திருவள்ளுவர்

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார்' (10)

எனக் குறிப்பிடுகிறார். மணிமேகலையில் 'தீவதிலகை வாயிலாகப் புத்தர்தம் பெருமையைக் குறிப்பிடும் சாத்தனார். உயர்ந்த சமந்தம் என்ற மலை உச்சியில் அறநெறியில் நிற்க்கும் புத்ததேவனின் இணைடியகள் உண்டு என்பர். அவற்றின் சிறப்பைப் போற்றும் அவர் இக்குறளின் கருத்திற்கேற்ப,

"ஓங்குயர் சமந்தத்(து) உச்சி மீமிசை

அறவியங் கிழவோன் அடியிணை ஆகிய

பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்

அறவி நாவாய் ஆங்குளது' (11-22-25)

எனப் பாராட்டுகிறார்.

பசியின் கொடுமையை நன்குணர்ந்தவர் சாத்தனார். அதனைப் 'பசிப்பிணி என்னும் பாவி' என்றழைப்பார். அது ஒருவனது குடிப்பிறப்பின் பெருமையை அழிக்கும், சிறப்பையும் கொன்று விடும் என ஆழ்ந்துணர்ந்து கூறுகிறார்.

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்" (11-76)

என்ற அத்தொடரின் கருத்து, வறுமையினது கொடுமையின் விளைவைக் குறிப்பிடும் வள்ளுவரின்,

"தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக

நல்குரவு என்னும் நசை" (1013)

என்ற குறட்கருத்தை ஒத்திருக்கின்றது. இக்குறளில் வறுமை என்று சொல்லப்படும் ஆசையானது ஒருவனைச் சார்ந்துவிடின், அவனது பழங்குடிப் பெருமையையும் புகழையும் ஒன்றாக அழித்துவிடும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதே வறுமையின் இழிவை அவர் சுட்டும்போது நல்ல நூற்பொருளை நன்குணர்ந்த ஒருவர் எடுத்தியம்பினும், அவர் வறியராயிருப்பின் அவர் சொற்பொருள், கேட்பார் இன்றிப் பயன்படாமல் போகும் என்பர்.



"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்

சொற்பொருள் சோர்வு படும்" (1046)

என்ற குறளை மனத்திற்கொண்ட சாத்தனார், இவ்விளைவையே பசியின் கொடுமைக்கும் சுட்டுகிறார். அதாவது பசிப்பிணி ஒருவனது கல்வியாகிய தெப்பத்தைப் போக்கிவிடும் என்பதை, 'பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்' என்று குறிப்பிடுகிறார்.

ஆபத்திரன் இரக்க சிந்தையுடையன், சித்தாதேவியின் கோயிலில் உறைந்த அவன், பிச்சை ஏற்று அவ்வுணவை எல்லோர்க்கும் அளித்தான். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' (322) என்ற குறளின் கருத்திற்கேற்ப அவன், காணார், கேளார்,

கால் முடப்பட்டோர், பேணுநர் இல்லோர், பிணி நடுக்கு உற்றோர் யாவருக்கு ஊட்டி அதன்பின் எஞ்சியதைத் தான் உண்டான்.

இல்லாதார்க்கு ஒன்று ஈவதே கொடை; ஏனைய கொடைகள் ஏதேனும் ஒரு பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையன என்று சுட்டும் குறள்,

"வறியார்க்(கு) ஒன்றீவதே ஈகைமற் றெல்லாம்

குறிஎதிர்ப்பை நீர(து) உடைத்து" (221)

என்பதாகும். இக்கருத்தை மனதில் கொண்ட சாத்தனார், தீவதிலகை வழி மணிமேகலைக்கு எடுத்துரைக்கிறார். உயிர் அறம் பேணும் நிலையில் எவர்க்கும் ஆருயிர் மருந்தாம் உணவை அளிக்க வேண்டும் என்று மணிமேகலைக்குத் தீவதிலகை எடுத்துரைக்கும்போது,

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்

ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" (11-92-94)

என்று அறிவுரை கூறுகிறாள்.

பௌத்தமானது பிறப்பில் வேற்றுமையில்லை என்பதை ஏற்கிறது. ஆபத்திரனது பிறப்பை எள்ளிநகையாடுகின்றனர். அந்நணர். அவர்களிடம் முனிவர் சிலரின் பிறப்பை எடுத்துரைத்த ஆபுத்திரன் ஆவுடன் தொடர்புடையதாகி வந்ததால் தன் குலம் இழிந்தது என்று எங்கேனும் வேதத்தில் கூறப்பட்டுள்ளதா என்று அவர்களிடம் கேட்கிறான்.

“பிறப்போக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்” (972)

என்ற வள்ளுவரின் கருத்தில் அவன் பேசுகிறான்.

“அற்றார்க்(கு) ஒன்று ஆற்றா தான் செல்வம்மிக நலம்

பெற்றாள் தமியள்மூத் தற்று” (1007)

என்ற குறளில், வள்ளுவர் பொருள் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவாதவனின் செல்வம், மிக்க அழகு பெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமை அடைந்ததைப் போன்றது என்கிறார். இந்திரன் வளத்தினைப் பெருக்கி ஆபுத்திரனின் அமுதசுரபியைப் பயன்படுத்தாமல் இருக்கச் செய்கிறான். அந்நிலைக்கு வருந்திய ஆபுத்திரனிடம் வணிகர் சிலர் சாவக நாட்டில் பசிப்பிணியால் உயிர்கள் துன்புறுவதைக் கூறுகிறார்கள் இந்திரன் ஆணையால் உணவருந்துபவரைப் பெறாமல் குமரியாகவே மூப்படைந்த தன் அமுதசுரபியை அங்கு எடுத்துச் செல்வதாக அவன் கூறுகிறான். “அருந்துவோர்ப் பெறாது குமரி மூத்த என்பாத்திரம் ஏந்தி” (14-76-77) என்ற தொடர் மேலே குறிப்பிட்ட திருக்குறளின் கருத்தையும் உவமையையும் கொண்டிலங்குிறது எனலாம்.

“அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்

தவாஅப் பிறப்பீனும் வித்து” (361)

என்ற குறள் எல்லா உயிர்க்கும் எப்போதும் தவறாமல் பிறப்பைத தரும் விதை ஆசையே என்ற கருத்தைக் கொண்டதாகும். ஆபுத்திரன் வரலாற்றின் ஒரு பகுதி இக்கருத்தைப் பிரதிபலிக்கும். அவன் இறக்கும்போது சாவக நாட்டில் மீண்டும் அறம் செய்யவேண்டும் என்ற குறிக்கோளுடன், குழந்தைப் பருவத்தில் தன்னைப் பாலூட்டிக் காத்த பசுவையே நினைந்த நினைப்புடனும் இறந்ததால், சாவகநாட்டில் அதே பசுவின் வயிற்றில் மீண்டும் மனிதனாகப் பிறப்பெடுத்து, மன்னனாகி அறம் செய்து ஒப்பற்றவனாகி உலகு தொழத் தோன்றுகிறான்.

“பிணிநோய் இன்றியும் பிறந்தறம் செய்ய

மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்

தற்காத் தளித்த தகைஆ அதனை

ஒற்கா உள்ளத் தொழியான் ஆதலின்

ஆங்கவ் ஆவயிற் றமரர்கணம் உவப்பத்

தீங்கனி நாவல் ஓங்குமித் தீவினுக்(கு)

ஒருதா னாகி உலகு தொழத் தோன்றினான்" (15-15-21)

இவ்வாறு முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்ற நினைத்த சாத்தனார், தம் காப்பியத்தில் அறநூலாம் திருக்குறளின் கருத்துக்களை ஆங்காங்கே விரவிடச் செய்துள்ளார்.

**பயிற்சி வினாக்கள்:**

இத்துடன், மணிமேகலையின் நும் பாடப்பகுதியின் கண்காணப்படும் இவ் உவமைகளை விளக்குக. வினாவிற்குச் சில விடைக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

1. கலங்கவிழ் மகளிரின் வந்தீங்கு எய்திய இலங்குதொடி நல்லாய் யார் நீ? (11.7.8)
2. ஈன்ற குழவி முகங்கண்டு இரங்கித் தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே. (11.114-115)
3. ஆடுங் கூத்தியர் அணியே போல வேற்றோர் அணியொடு வந்தீரோ? என (12.51-52)
4. அறுகையும் நெருஞ்சியும் அடர்ந்து கண்ணடைத் தாங்கு (12.60)
5. தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்
   உண்டென உணர்தல் அல்லது யாவதும்
   கண்டினிது விளங்காக் காட்சி போன்றது (12.63-65)
6. அங்கத் துளைவழி உகுநீர் போல
   ஈங்கு நல்லறம் எய்தலும் உண்டென (12.68-69)
7. இருள் பரந்து கிடந்த மலர்தலை உலகத்து
   விரிகதிர்ச் செல்வன் தோன்றினன் என்ன (12.75-76)
8. பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
   இரும்பெரு நீத்தம் புகுவது போல (12.79-80)
9. கதிரோன் தோன்றும் காலை ஆங்கவன்
   அவிரொளி காட்டும் மணியே போன்று (12.83-84)
10. மடுத்த தீக் கொளிய மன்னுயிர் (12.120)
11. கொலை நவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி
    வலையிடப் பட்டமானே போன்று (13.31-32)
12. பழுமரத் தீண்டியப றவை யின் எழூஉம்
    இழுமென் சும்மை இடையின் றொலிப்ப (14.26-27

13. வெள்ளை மகன்போல் விலாவிற நக்கு (14.36)
14. திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
    ஒருதனி உரூஉம் பெருமகன் போல (14.70-71)
15. குமரி மூத்த என் பாத்திரம் ஏந்தி (14.77)
16. குணதிசைத் தோன்றிக் காரிருள் சீத்துக்
    குடதிசைச் சென்ற ஞாயிறு போல (14.99-100)
17. வெண்திரை தந்த அமுதை வானோர்
    உண்டொழி மிச்சிலை ஒழித்து வைத்தாங்கு (15.51-52)
18. அறவண அடிகள் மணிமேகலைக்கு உரைத்த நல்லறங்கள் யாவை?
19. ஆபுத்திரன் பாத்திரம் பெற்ற வரலாற்றை எழுதுக.

# கூறு :8 சீவகசிந்தாமணி கோவிந்தையார் இலம்பகம்



**கதைச்சுருக்கம்**

ஆயர்கள், கட்டியங்காரனுடைய ஆநிரைகளைக் காட்டில் மேய்த்தனர். அவற்றை வேடர்கள் கவர்ந்துகொண்டு செல்லவே, ஆயர்கள் கட்டியங்காரனால் ஏவப்பட்ட படை வேடர்களிடம் போரிட முடியாமல் தோற்றுத் திரும்பி வந்தது. செய்வதறியாத கட்டியங்காரன் வாளாவிருந்தான். ஆயர் தலைவனாகிய நந்தகோன் அச்செய்தியை அறிந்து வருந்தினான்; வேடரை வென்று ஆநிரையை மீட்டு வருபவனுக்குத் தன் மகள் கோவிந்தையை அளிப்பதாக முரசறைவித்தான். வேடருக்கு அஞ்சிய வீரர்கள் பலரும் வாளா இருந்தனர். அஃதறிந்த சீவகன், அவ்வேடருடன் போரிட்டுப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். ஆநிரையை அவன் மீட்டதை அறிந்த நந்தகோன், கோவிந்தையைச் சீவகனுக்கு மணம் முடிக்க முன்வந்தான். சீவகன் அதனை ஏற்றுக்கொள்ளாமல், தன் தோழனாகிய பதுமுகனுக்கு அவளை மணம் செய்வித்தான்.

**கட்டியங்காரன் வருத்தம்**

ஆயர்கள், தாம் மலைந்திருந்த முல்லை மலர்க் கண்ணிகள் சிதறும்படிக் கட்டியங்காரனிடம் ஓடிச் சென்று, அவனது படை தோற்றது என்று கூறினார்கள். அது கேட்டு அவன் துன்பத்தில் ஆழ்ந்தான்.

“கொண்ட வாளொடுங் கோலொடுங் கூப்புபு

சண்ட மன்னனைத் தாடொழு தாயிடை

உண்டொர் பூசலென் றாற்குரை யாயெனக்

கொண்ட னா்நிரை போற்றெனக் கூறினான்.

எனக் கூறிச் சென்றுள்ளார் திருத்தக்தேவர் (1)

**நந்தகோனின் அறிவிப்பு**

வேடர்கள் கைப்பற்றிய அரசனது ஆனிரையை மீட்டுக்கொண்டு வரும் வீரருக்கு அழகிய கன்னியைத் தருவதாகத் தெருக்களில் முரசறிவித்தான் நந்தகோன்.

மன்னிரை பெயர்த்து மைந்தர் வந்தனர் கொள்க வாட்கட்

பொன்னிழை சுடரு மேனிப் பூங்கொடி யனைய பொற்பிற்

கன்னியைத் தருது மென்று கடிமுர சியம்பக் கொட்டி

நன்னகர் வீதி தோறு நந்தகோ னறைவித் தானே.

என்னும் பாடல், போரில் பெற்றிபெறும் வீரனுக்குத் தன் மகள் கோவிந்தையைத் திருமணம் செய்து வைப்பதாக நந்தகோன் அறிவித்ததை எடுத்துக்காட்டுகிறது. (2)



**ஆடவா் நிலை**

அவ்வறிவிப்பினைக் கேட்டனா் அந்நகரத்து ஆடவா்கள் வேடா்களின் அம்புகளால் வேந்தனின் படைக் கூட்டமே சிதறிப் போயிற்று, நந்தகோன் கூறிய மகளேயேன்றி, வானத்துத் தெய்வமகனே கிடைப்பதாக இருந்தாலும் , கூற்றுப் போன்ற வேடா்களை வென்று கொள்ளவல்லவா்கள் இல்லை என்று அவா்கள் ஒதுங்கினா்.

வெதிா்ங்குதைச் சாபங் கான்ற வெந்நுனைப் பகழி மூழ்க
உதிா்ந்தது சேனை யீட்டங் கூற்றொடு பொருது கொள்ளும்
கருந்தடங் கண்ணி யன்றிக் காயமா றாக வேகும்
அரும்பெற லவளு மாகென் றாடவா் தொழுது விட்டாா்.

என்பாா் திருத்தக்கத்தேவா் 3

**சீவகனின் வஞ்சினம்**

மகளிா்மேல் காமுகா் உள்ளம் ஓடுவதுபோல ஓடும் தோ்க் குதிரையை அதன் செலவிலே செலுத்திப் பிறகு தாரினால் அதன் வட்டத்திலே செல்லும்படிக் கற்பித்துக்கொண்டிருந்தான் சீவகன். அப்போது,

செய்தி உணா்ந்துவந்த ஒருவன், ஊா்படும் துன்பத்தைச் சீவகனிடம் கூறினான், இதனை,

“காா் விரி மின்ன னாா்மேற் காமுகா் நெஞ்சினோடும்
தோ்பரி கடனவித் தோ்ந்தாா்ச் சீவகனருளிற் போகித்
தாா்பொள புரவி விடந் தான்புகக் காட்டுகின்றாற்
காா்பரி வுற்ற முதல்லா மொடுமக நுணா்ந்தினானே”

என்ற பாடல் சுட்டிச் செல்கிறது -4

நல்லொழுக்கத்தையும் ஆக்களையும் துறவிகளையும் மகளிரையும் குழவிகளையும் பாா்ப்பாரையும் தான் காப்பாற்றவில்லை என்றால், தன்னுடைய மனைவியை அயலானிடம் கண்டபின்னும் மேலும் (உயிா் வாழ) இனிய பாற் சோற்றை விரும்புகிற பேடி போன்றவனாவதாக வஞ்சினம் கூறினான் சீவகன்.

தன்பான் மனையா ளயலான் றலைக் கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவா்கின்றகைப் பேடி போலா
நன்பால் பசுவே துறந்தாா்பெண்டிா் பாலா் பாா்ப்பாா்

என்பாரை யோம்பே னெனின்யாவை னாக வென்றான்.

என்னும் பாடல் சீவகனின் வஞ்சினத்தைக் காட்டுகிறது. (5)

**சீவகனின் போர்க்கோலம்**

சீவகன், குதிரைகளைப் புனைந்து தேரின் நுகத்திலே பூட்டினான்; வில்லை வளைத்துக் கணைகளை ஆராய்ந்தான். அவன் தேரைச் செலுத்தியபோது குதிரைகளின் குளம்பினால் எழுந்த புழுதியால் ஞாயிறு மறைந்தது.

போர்ப்பண் ணமைத்து நுகம்பூட்டிப் புரவி ப்ணித்

தேர்ப்பண் ணமைத்துச் சிலைகோலிப் பகழி யர்ந்து

கார்க்கொண்மு மின்னி னிமிர்ந்தான்கலி மான்கு ளம்பிற்

பார்க்கண் ணெழுந்த துகளாற்பகன் மாய்ந்த தன்றே.

டின்ற பாடல் சீவகன் கொண்ட போர்க்கோலத்தைத் விளக்கிக் காட்டுகிறது. (6)

**நிமித்திகனின் எச்சரிக்கை**

தேரில் வருகின்றவன், காமுகரிடம் மகளிர் நோக்கும் நோக்கைப் போலத் தப்பின்றித் தைக்கும் கணைத் தொழிலில் வல்லவன்; எல்லாத்திக்கிலும் ஒரு தேரினையே செலுத்தும் ஆற்றலுடையவன். அவனை எதிர்க்கும் காலம் தற்போதன்று. எனவே, உடனே ஆனிரைகளை விட்டுவிட்டுப் போய்விடவேண்டும். இவ்வாறு புள்ளின் குரல் கேட்ட நிமித்திகன், வேடர்களை எச்சரித்தான்.

இழுதென்று வாட்க ணிளை யாரிளை யார்க ணோக்கிற்

பழுதின்றி மூழ்கும் பகழித்தொழில் வல்ல காளை

முழுதொன்று திண்டேர் முகஞ்செய்தவன் றன்னொடேற்கும்

முழுதொன்று திண்டோர் முகஞ்செய்தவன் றன்னொடேற்கும்

பொழுதன்று போதுமெனப் புண்மொழிந்தான் மொழிந்தான்.

என்று நிமிதிகன் எச்சரித்தான். (7)

**வேடர்கள் மறுத்தல்**

ஆழமான நீரில் பெரிய முதலையினும் வலிமையானது இல்லை. அப்படி இருக்குமானால், தம் காட்டில் தம்மினும் வலியவரையும் காண்பதாக வேடர்கள் கூறினர். பசியினால் இளைத்த பாம்பு, தான் பற்றிய இரையை விடாததைப்போல, வேடர்களும் தாம் பற்றிய ஆனிரையை விடாமல் சீவகனோடு போரிட விரைந்து சென்றனர்.

மோட்டும் முதுநீர் முதலைக்கு வலிய துண்டேற்
காட்டுண் ணமக்கு வலியாரையுங் காண்டு நாமென்
றேட்டைப் பசியி னிரைகவ்விய நாக மேபோல்
வேட்டந் நிரையை விடலின்றி விரைந்த தன்றே.

என்னும் பாடல் வேடர்களின் மறுப்பைக் காட்டுவதாக அமைகிறது. (8)

**இரு படையின் ஆரவாரம்**

அரசனுடைய கடல்போன்ற படையை வென்ற வேடர்கள் என்ற கூற்றுவனிடம் அகப்படாமல், தப்பித்து ஓடிவிடும்படி வேடர்கள் கூறினர்; துத்திக் (இரலை) கொம்பை ஊதி; கொக்கரிப்பையும் சீழ்க்கையையும் எழுப்பினர்; அவ்வொலிக்கு எதிராகச் சங்கு, பறை, கொம்பு ஆகியவற்றைச் சீவகன் படை முழங்கியது. இரண்டு படையின் ஒலியும் கார்மேகமும் கடலும் போல ஒத்து எழுந்தன.

**சீவகனின் கன்னிப்போர்**

சீவகனின் தேர், கையினால் விசையோடு வீசும் கொள்ளிக் கட்டையும் காற்றும்போல, எல்லாத் திக்கிலும் விரைந்தது. வேகத்தோடு வளைத்தது, சீவகனின் வீரர்கள் ஆரவாரித்தனர்; வேடர்களும் ஆரவாரித்தனர். சீவகன் பின்னர் நடத்தும் பெரும் போருக்கு இப்போரை நாள் செய்ததுபோல், முதல் விளையாட்டை ஆடினான்.

**வேடர்களின் ஓட்டம்**

திருமாலின் ஊர்தியான கருடனுடைய சிறகுகளின் ஓசையால், பாம்பு மயங்கிப் படம் ஒடுங்கும். அதுபோல, சீவகனுகடைய தேர் முழக்கத்தாலும் தம்மைச் சூழ்ந்த புழுதியின் மயக்கத்தாலும் வேடர்களின் ஊக்கம் குறைந்தது; வலைப்பட்ட கோழி போலச் செயல் குறைந்தது; தம் நெஞ்சிலே அறத்தைப் புகவிடாமல் கைவிட்டதைப்போலவே, தம் வீரத்தையும் அவ்வேடர்கள் கைவிட்டனர்.

சீவகனின் ஒரு தேர், வேடர்களுக்கு எண்ணற்ற தேர்கள் தம்மை வளைப்பதுபோலத் தெரிந்தன. ஆந்தை ஒரு தேரே வரும் என்று சொல்கின்றது என்று சிறு தலையுடைய வேடன் (நிமித்திகன்) தம்மிடம் பொய் கூறிவிட்டதாக வேடர்கள் புலம்பினர். இதிலிருந்து தப்பிக்க, எலிலோரும் ஒட்டுமொத்தமாகக் கடுமையுடன் போரிட்டு, ஒ ருவருள்ளம்போல ஒன்றாக விலகி ஓடிவிட வேண்டும் என்று முடிவு செய்து, சீவகன் மேல் அம்பு மழையை ஆரவாரித்துச் சொரிந்தனர்.

**சீவகன் வெற்றி**

மலையில் சூழ்ந்த கருநிற மழை சிதறுமாறு, காற்று எழுந்து கல் என்று ஒலித்துத் தாக்கியதுபோல, தன்மேல் வரிசையாக எழுந்த வேடரின்

அம்பு மழையை அம்புகளை வரிசையாகச் சொரியும் தன் வில்லினாற் சீவகன் நீக்கினான்.

வேடர்கள் அழியும்படிச் சீவகன் அம்பு தொடுத்ததும் பசுத் திரள்கள் திரும்பின; இடையர்கள் மகிழ்ந்து ஆரவாரித்தனர். சீவகனின் தோள்களில் ஒன்று முடங்கிற்று; ஒன்று நிமிர்ந்தது. அந்த வில்லேந்திய வேடர்களுக்குப் பெய்யும் மழை போல அம்புகள் தாரையாய்ப் பொழிந்தன.

ஐயாயிரத்தைத் தலையிலிட்ட ஆறாயிரவர்களின் உடம்பைத் துகளாக ஆக்க வல்ல முனையை உடைய கணைகளைச் சொரிந்து வேடரின் நூற்றுக்கணக்கான விற்களையும் அம்புகளையும் சீவகன் வெட்டினான். பொதுமகளிரின் மனம்போல நிலையின்றி ஒருநொடியிலே வேடர்கள் ஓடி மறைந்தனர்.

இராகுவின் வாயிலிருந்து திங்களைத் திருமால் விடுவித்ததுபோல, வாள் வடுவும் அம்பின் வடுவும் உண்டுபண்ணாமலே, வில்லின் ஒலியால் ஆனிரையைத் திருப்பித் திரும்பும் சீவகன், நாள்தோறும் வளரும் முழுமதி செல்வதுபோல் சென்றான்.

**கட்டியங்காரனும் நகர மக்களும்**

இரு படையிலும் ஓர் ஆளுக்கும் குறைவு ஏற்பாடமல், மன்னவனின் ஆனிரையைச் சீவகன் தன் தோழர்களுடன் சென்று மீட்டான் என்று கூறக் கேட்டான் கட்டியங்காரன்; பொறாமையினால் தன் ஆயுள் முடியும் நிலைக்கு ஆனான்; வாளால் ஏற்பட்ட புண்ணில், வேல்பட்டு முரிந்து நின்றதைப்போல வருந்திச் சீனினான். நகர மக்களோ, மகிழ்ந்து ஆரவாரித்தனர்.

வெற்றி பெற்ற சீவகன் தெருக்களிற் சென்றான். உயர்ந்த கொடிகளைக் கொண்ட மாடங்களில் மகளிர் நின்றனர். நறுமணப் புகையும் கண்ணப் பொடியும் தவழும் அம்மகளிர்,

மலர்மாலைமாலைகளைத் தொங்கவிட்டனர்; நறுமணப் பொடிகளை எங்கும் தெளித்தனர்; முத்துமாலை அணிந்தனர்; ‘அரவுக்கொடியானாகிய துரியோதனின் படையை வென்று வெள்ளைக் குதிரை பூட்டிய தேரில் சென்ற அருச்சுனனைப் போன்ற சீவகன்’ என்று வாழ்த்தினர்.

அம்மகளிரின் பெருங்கண்கள், அரத்தால் அராவிய கூரிய வேல்கள் இரண்டு தமக்குள் சண்டையிடுவனபோலுள்ள அழகிழய மலர் போன்றவை; ஆடவர்களின் வரவினைப் போக்கிய சிறப்புடையவை. ஞாயிறு போகும் வழியெல்லாம் பார்க்கும் நெருஞ்சி மலர்களைப் போல. சீவககனின் தேர் செல்லும் தெருவெல்லாம் அந்தக் கண்களும் பார்த்தன இதனை,

வாளரந் துடைத்த வைவே லிரண்டுடன் மலைந்த வேபோல்

ஆள்வழக் கொழிய நீண்ட வணிமலர்த் தடங்க ணெல்லாம்

நீள்சுடர் நெறியை நோக்குநிரையிதழ் நெருஞ்சிப்பூப்போற்

காளைதன் றேர்செல் வீதி கலந்துடன் நொக்க வன்றே.

என்னும் பாடல் மூலம் விளக்கிச் செல்கிறார்.

காதல் ஒழுகும் மயில் போன்ற மகளிர் (பரத்தையர்) முறைப்படி வாழ்த்தி. ‘நம்பியே வருக. நிலமகளும் கூடுக’ என்பார்; வருந்துமாறு எங்கும் சுண்ணப் பொடியை அவன்மேற சிதறுவார்; மகரந்தம் சிந்தும் மாலைகளை எறிவார்; சந்தனத்தைக் கையிலெடுத்து வீசி நிற்பார். இச்செய்தி,

மாதுகு மயிலி னல்லார் மங்கல மரபு கூறிப்.

போதக நம்பி யென்பார் பூமியும் புணர்க வென்பார்

தோதக மாகவெங் குஞ்சுண்ணமேற் சொரிந்து தண்ணென்,

றாதுகு பிணையல்வீசிச் சாந்துகொண்டெறிந்து நிற்பார்.

என்ற பாடலின் வழி புலனாகிறது.

இம்மண்ணுலக ஆடவர்கள் இளங்களிறு போன்ற சீவனுக்கு ஒப்பாகார்; இனி அவனை ஒப்பவர்கள் வானுலகத்தில் இருப்பதாகவும் தெரியவில்லை. அவனைத் தவத்தினாலே பெற்றவர் யாவரோ? அவர் அளிக்கத் தக்கவர். இவ்வாறு இனிய மொழி மங்கையர் அவனது நல்ல அழகை நுகர விரும்பிக் கூறினர்.

விண்ணகத் துளர்கொன் மற்றிவ் வென்றிவேற குருசி லொப்பார்,

மண்ணகத் திவர்க ளொவ்வார் மழகளி றனைய தோன்றல்,

பண்ணகத் துறையுஞ் சொல்லார் நன்னலம் பருக வேண்டி,

அண்ணலைத் தவத்திற் றந்தார் யார்கொலோ வளிய ரென்பார்.

என்பது இபபாடலடிகள் வாயிலாகப் பெறப்படும்

வட்டுடையில் அழகாகக் காணப்பட்ட சீவகனைக் கண்டபொழுதே, மகளிரின் காய்ச்சிய செவ்வரக்கனைய சிவந்த வாய், நலம் கருகியது. அவர்கள் தம் பட்டாடையைச் சுற்றி அணிந்த மேகலை பஞ்சுமெல்லடியைச் சூழவும் கைவளைக் கழலவும் உடல் மெலிந்து நின்றனர்.

வட்டுடைப் பொலிந்ததானை வள்ளலைக்கண் போழ்தே

பட்டுடை சூழ்ந்த காசு பஞ்சிமேல் லடியைச் சூழ

அட்டரக் கனை யலெ்வா யணிநலங் கருகிக் காமக்

கட்டழ லெறிப்ப நின்றார் கைவளை கழலநின்றார்.

சீவகனைக் கண்ட மகளிர் உடல்மெலிந்து நின்றதனை இப்பாடல் சுட்டுகிறது. (4)

## சீவகன் மனையுட் புகுதல்



சீவகன் மேல் காதல் கொண்ட மகளிர், நாணாகிய முதல் தளை தடுக்க நடுங்கி நின்றனர். அதனால், அவர்கள் தமது ஒளி முகத்தில் மலர்ந்த மலர் போன்ற கண்களை வளைத்து, தோளின் பசப்பு நீங்குமாறு சீவகனைப் பருகினர். அவர்கள் நிற்பதைக் கருதாமல் நில்லாதவனாய், புலி போன்ற சீவகன் தன் மனையக மதிலுக்குள் புகுந்தான்.

குதிரைகள், தேரின் பொன்நுகத்திலிருந்து பூட்டு நீங்கித் தம் பந்தியில் புகுந்தன; மாணிக்கக் கிண்ணம் நிறைய மதுவை வார்த்து, 'மதுவாகிய பலியும் பூவும் சந்தனமும் விளக்கும் ஏந்தி வெற்றி நிலை பெறுக' என்று வாழ்த்தியதும், தேர், செம்பொன் கொட்டிலிலே புகுந்தது.

மங்கையர் ஆயிரத்தெண்மர் கூடினர்; எட்டு மங்கலப் பொருள்களை ஏந்தினர் ; மெல்லிடையையும் பிடரையும் மேலாடை அலைக்கவும் பட்டமும் குழையும் ஒளிரவும் அணிகள் ஒலி செய்யவும் சீவகனை எதிர்கொண்டு சூழ்ந்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

தாயும் தந்தையும் சீவகனை எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர்; சீவகனை ஆலத்தி முதலியவற்றால் கண் எச்சில் போக்கினர்; ஆயிரம் கண்களையுடைய இந்திரனது வானுலகை அடைந்ததைப் போன்ற ஒரு செல்வத்தைத் தாம் அடைந்தவராயினர்.

## நந்தகோனின் வேண்டுகோள்

சீவகனைக் கண்டு, ஆனிரையை ஆளும் நந்தகோன் இவற்றைக் கூறினான்.

கேட்டிது மறக்க நம்பி கேண்முதற் கேடு சூழ்ந்த
நாட்டிறை விசயை யென்னு நாறுபூங் கொம்ப னாளை
வேட்டிறைப் பார மெல்லாங் கட்டியங் காரன் றன்னைப்
பூட்டிமற் றவன் றனாலே பொறிமுக லடாக்கப் பட்டான் (1)

'நம்பியே! இதனைக் கேட்டு மறப்பாயாக, நடப்பு முதலாக நாட்டிற்குக் கெடுதியை எண்ணினான் சச்சந்தன்; விசயை என்பவளை மணந்தான்; அரசு உரிமை முழுவதையும் கட்டியங்காரனுக்குச் சேர்த்தான்; அவனாலே தன் உயிர் கொள்ளப்பட்டான்.

கோலிமுக் குற்ற ஞான்றே கொடுமுடி வரையொன் றேறிக்
காலிமுக் குற்று வீழ்ந்தே கருந்தலை களைய லுற்றேன்
மால்வழி யுளதன் றாயின் வாழ்வினை முடிப்ப லென்றே

ஆலம்வித் தனைய தெண்ணி யழிவினு ளகன்று நின்றேன் (2)

“அரசன் இறந்த அன்றே மலையுச்சி ஒன்றில் ஏறி, கால் தவறி வீழ்தவன் போல் வீழ்ந்து இறக்க முயன்றேன்; அரசன் கால்முளை இல்லை என்று அறிந்த பிறகே வாழ்வை முடிப்பேன் என்று நினைத்து, இறப்பினை நீங்கி நின்றேன்.

காப்பியங்கள்

குறிப்புகள்

குலத்தொடு முடிந்த கோன்றன் குடிவழி வாரா நின்றேன்.

நலத்தகு தொறுவி னுள்ளே னாமங்கோ விந்த னென்பேன்

இலக்கண மமைந்த கோதா வரியனெ விசையிற் போந்த

நலத்தகு மனைவி பெற்ற நங்கைகோ விந்தை யென்பாள். (3)

“குலத்தோடு மடிந்த அரசனுடைய குடிகளின் வழியிலே வருபவன்யான்; ஆனிரை உடையேன்; ‘கோவிந்தன்’ என்று பெயர் கூறப்படுபவன்; ‘கோதாவரி என்ற என் மனைவி பெற்ற நங்கை’கோவிந்தை’ எனப்படுவாள்.

“ஐயனே! பாடகம் அணிந்த செம்பொன் போன்ற சிற்றடியும், பரவிய அல்குலையும், வளையல் அணிந்த முன்கையும், “ஒளிவிடும் மணியுடைய கோவிந்தையை, “ஆடகப் பொன்னலாகிய புதுமைகள் ஏழுடன் தருவேன்; திருமணம் புரிந்துகொண்டு மணமகன் ஆவாயாக.

“செந்நிறப் பசுவின் மணமுறு நெய்யும் இனிய பாலும் ஆடைத்தயிரும் பாதால உலகினும் நிறையச் செய்வேன்; ஆகக் கடவது யாதோ! அதனை முற்றும் ஆராய்ந்து உன் அடித் தொண்டுக்குரிய கோவிந்தைக்கு மாலை அணிவாயாக.

“நம்பியே! வள்ளியின் நலத்தை முருகன் துய்த்தான் அன்றோ? திருமாலும் ஆனிரையை உடைய நப்பின்னையின் வாய் அமிர்தத்தை நுகர்ந்தான் அல்லனோ? ஆதலால். நம் இருவரின் குல வேற்றுமையை நினையாதே”.

முல்லைக் கண்ணியும் துவரூட்டிய ஆடையும் முல்லை மாலையும் அணிந்த இடையர் தலைவனாகிய நந்தகோன் மிகவும் மகிழ்ந்து சென்றான்; கடையும் தயிர் முழங்கும் மனையுள் புகுந்தான்;

“மான் கறித்ததால் கடை குறைந்த முல்லையும் இருவாட்சியும் சூழ்ந்த பந்தரிலே மணவினை நடைபெறுக என்று கூறினான்.

இதனை,

Self Instructional Material

தேன்சொரி முல்லைக் கண்ணிச் செந்துவ ராடை யாயர்

கோன்பெரி துவந்து போகிக்க குடைதயிர் குழுமப் புக்கு

மான்கறி கற்ற கூழை ளெவல்சூழ் மயிலைப் பந்தர்க்

கான்சொரி முல்லைத் தாரான் கடிவினை முடிக வென்றான். (4)

எனப் பாடிச்சென்றுள்ளார்.

**கோவிந்தை திருமணம்**

கோவிந்தையின் அழகிழய சிறிய நெற்றியும் புருவமும் காமனுடைய வளைந்த வில்லைக் கொன்றன; குவளை மலர்க் கண்கள். கயல்மீனைக் கொன்றன. ஆகையால், இனி ஆயர்கள் இவளைக் கண்டால் உயிருடன் இரார். இவ்வாறு சிலம்புகள் வாய்விட்டுப் புலம்பும்படி மாதர்கள் அவளை அழைத்துவந்து அப்பந்தரிலே அமர்த்தினர்.

இக்காட்சியை

கனிவளர் கிளவி காமர் சிறுநுதல் புருவங் காமன்

குனிவளர் சிலையைக் கொன்ற குவளைக்கண் கயலைக்கொன்ற

இனிபுள ரல்ல ராய னெச்சிலம் பரற்றத் தந்து

பனிவளர் கோதை மாதர் பாவையைப் பரவி வைத்தார். (5)

இடைச்சியர், நாழியில் உள்ள நெய் இழுதைக் கன்று தின்று கழித்த புல்லிலே தோய்த்தனர்; ஊழிகளெல்லாம் பசுவும் தொழுவும்போல' ஒன்றுபட்டு அவளும் அவள் கணவனும் ஒருங்கே மூப்புற்று வாழ வேண்டும் என்று கோவிந்தையின் தலையிலே அந்நெய்யை வார்த்து வாழ்த்தினர்; அகப்பையாலே நீரைச் சொரிந்து ஆட்டினார்.

நாழியு ளிழுது நாகான் கன்றுதின் றொழிந்த புற்றோய்த்

தூழிதொ றாவுந் தோழும் போன்றுடன் மூக்க வென்று

தாழிருங் குழலி னாளை நெய்தலைப் பெய்து வாழ்த்தி

மூழைநீர் சொரிந்து மொய்கொ ளாய்த்திய ராட்டி னாரே. (6)

கோவிந்தை அணிந்திருந்த நெய்விலையாற் கிடைத்த பொன்தோட்டையும் மணிக் குழையையும் நீக்கினர்; மங்கலக் கடிப்பினையும் பிணையல் மாலையும் அணிந்தனர் ; ஓர் இலையிலே கொணர்ந்த சந்தனத்தையும் பூசி, சிற்றணியாகிய மணக் கோலத்தைச் செய்தனர். செய்த பின், அவளின் பேரழகு கண்டு திகைப்புற்றனர்.

நெய்விலைப் பசும்பொற் றோடு நிழன்மணிக் குழையு நீவி

மைவிரி குழலி னாளை மங்கலக் கடிப்புச் சேர்த்திப்

பெய்தனர் பிணையன் மாலை யோரிலைச் சார்ந்து பூசிக்

செய்தனர் சிறுபுன் கோலந் தொறுத்தியர் திகைத்துநின்றார். (7)

இடையர்கள், ஏறுகோட்ட பறை முழங்க, அவளை அழைத்துக் கொண்டு ஊர் எங்கும் விழாக் கொண்டாடும்படிச் சென்று, கந்துகன் மனையிலே புகுந்தனர். அதன் பின்னர், கலசத்திலிருந்து நந்தகோன் தன் கையாலே நீரைச் சொரிந்தான்;

"பாறுகொள் பருதி வைவேல்

பதுமுக குமரற்கு" என்றே

அந்நீரைச் சீவகன் ஏற்றான்.

இவ்வாறு, திருமண இறுதிக் கட்டத்தில் தனக்குப் பதிலாகத் தன் நண்பன் பதுமுகனை மணமகனாக அறிவித்துத் திகைக்கச் செய்கிறான் சீவகன்.

**சீவகனின் பண்பு விளக்க உவமைகள்**

மகளிர் மேல் காமுகர் உள்ளம் ஓடுவதுபோல ஓடும் தேர்க்குதிரையை அதன் செலவிலே செலுத்திப் பிறகு தாரினால் அதன் வட்டத்திலே செல்லும்படிக் கற்பித்துக்கொண்டிருந்தான் சீவகன். இவ்வுவமை மூலம் முதலில் எதனையும் தடுக்காமல் அதன் போக்கிலேயே விட்டுப்பின்னர் திருத்தும் உத்தி படைத்தவன் சீவகன் எனப் பெறப்படுகிறது.

தன்னுடைய மனைவியை அயலானிடம் கண்டபின்னும், மேலும் (உயிர் வாழ) இனிய பாற் சோற்றை விரும்புகிற பேடி போன்றவன் என்று சீவகன் கூறும் வஞ்சினம் அவன் வேடரை வென்றே தீருவான் என்ற உறுதியைக் காட்டுகிறது.

**வேடரின் பண்பு விளக்கம்**

தேரில் வருகின்றவன். காமுகரிடம் மகளிர் நோக்கும் நோக்கைப் போலத் தப்பின்றித் தைக்கும் கணைத் தொழிலில் வல்லவன்;

ஆழமான நீரில் பெரியல் முதலையினும் வலிமையானது இல்லை. அப்படி இருக்குமானால், தம் காட்டில் தம்மினும் வலியவரையும் காண்பதாக வேடர்கள் கூறினர். பசியினால் இளைத்த பாம்பு, தான் பற்றிய இரையை விடாததைப்போல, வேடர்களும் தாம் பற்றிய ஆனிரையை விடாமல் சீவகனோடு போரிட விரைந்து சென்றனர். இரண்டு படையின் ஒலியும் கார்மேகமும் கடலும் போல ஒத்து எழுந்தன.

திருமாலின் ஊர்தியான கருடனுடைய சிறகுகளின் ஓசையால், பாம்பு மயங்கிப் படம் ஒடுங்கும். அதுபோல, சீவகனுடைய தேர் முழக்கத்தாலும் தம்மைச் சூழ்ந்த புழுதியின் மயக்கத்தாலும் வேடர்களின் ஊக்கம் குறைந்தது; வலைப்பட்ட கோழிபோலச் செயல் குறைந்தது; தம் நெஞ்சிலே

அறத்தைப் புகவிடாமல் கைவிட்டதைப்போலவே, தம் வீரத்தையும் அவ்வேடர்கள் கைவிட்டனர்.

இதிலிருந்து தப்பிக்க, எல்லோரும் ஒட்டுமொத்தமாகக் கடுமையுடன் போரிட்டு, ஒருவருள்ளம்போல ஒன்றாக விலகி ஓடிவிட வேணடும் என்று

மலையில் சூழ்ந்த கருமையான மழை சிதறுமாறு, காற்று எழுந்து ‘கல்’ என்று ஒலித்துத் தாக்கியது போல, தன்மேல் வரிசையாக எழுந்தவேடரின் அம்பு மழையை, அம்புகளை வரிசையாகச் சொரியும் தன் வில்லினாற் சீவகன் நீக்கினான்.

இராகுவின் வாயிலிருந்து திங்களைத் திருமால் விடுவித்ததுபோல, வாள் வடுவும் அம்பின் வடுவும் உண்டுபண்ணாமலே, வில்லின் ஒலியால் ஆனிரையைத் திருப்பித் திரும்பும் சீவகன், நாள்தோறும் வளரும் முழுமதி செல்வதுபோல் சென்றான்.

**கட்டியங்காரனின் பண்பு விளக்கம்**

வாளால் ஏற்பட்ட புண்ணில் வேல் பட்டு முரிந்து நின்றதைப்போலக் கட்டியங்காரன் வருந்திச் சீறினான்.

துரியோதனின் படையை வென்று வெள்ளைக் குதிரை பூட்டிய தேரில் சென்ற அருச்சுனனைப் போன்ற சீவகன் என்று வாழ்த்தினர்.

**மகளின் பண்பு விளக்கம்**

அம்மகளிரின் பெருங்கண்கள் அரத்தால் அராவிய கூரிய வேல்கள் இரண்டு தமக்குள் சண்டையிடுவனபோல் காணப்பெறும் நீண்ட அழகிய மலர்கள் போன்றவை; ஞாயிறு போழும் வழியெல்லாம் பார்க்கும் நெருஞ்சி மலர்களைப் போல, சீவகனின் தேர் செல்லும் தெருவெல்லாம் அந்தக் கண்கள் கலந்து நெருங்கின.

**நந்தகோனின் பண்பு விளக்கம்**

“நம்பியே! வள்ளியின் நலத்தை முருகன் துய்த்தான் அன்றோ?

திருமாலும் ஆனிரையை உடைய நப்பின்னையின் வாய் அமிர்தத்தை நுகர்ந்தான் அல்லனோ? ஆதலால், நம் இருவரின் குல வேற்றுமையை நினையாதே”.

**கோவிந்தையின் பண்பு விளக்கம்**

கனிமொழியாள் கோவிந்தையின் அழகிய சிறிய நெற்றியும் புருவமும் காமனுடைய வளைந்த வில்லைக் கொன்றன. குவளை மலர்க் கண்கள் கயல்மீனைக் கொன்றன. ஆகையால், இனி ஆயர்கள்

இவளைக் கண்டால் உயிருடன் இரார். இவ்வாறு சிலம்புகள் வாய்விட்டுப் புலம்பும்படி மாதர்கள் அவளை அழைத்துவந்து பந்தரிலே அமர்த்தினர்.

ஊழிகளெல்லாம் பசுவும் தொழுவும்போல ஒன்றுபட்டு அவளும் அவள் கணவனும் ஒருங்கே மூப்புற்று வாழ வேண்டும் என்று மகளிர் வாழ்த்தினர்.

இவ்வாறு உவமைகளைப் பாத்திரங்களின் பண்புக்கேற்பப் பயன்படுத்துவதில் திருத்தக் தேவர் வல்லவராக விளங்குகிறார்.

**பயற்சி வினாக்கள்**

1. கோவிந்தையார் இலம்பகம் வழி நீவிர் அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2. வேடர்களை வென்று மீண்ட சீவகன் பெற்ற வரவேற்பை விளக்குக.

# பிரிவு -3: பெரியபுராணம் - வில்லிபாரதம் - தேம்பாவணி



**கூறு : 9- பெரியபுராணம் - கண்ணப்ப நாயனார் புராணம்**

## 9.1. பெரியபுராணம் - அறிமுகம்

**நூற்பெயர்**

**பெயரிடுமுறை**

பெயரிடும் வழக்கம் இன்று பெருவழக்கில் உள்ளது. மனிதர்க்கோ பொருளுக்கோ பெயரென்பது இல்லாத நிலையே இன்று இல்லை. துணுக்குப் போன்ற புதுக்கவிதைகளும் பெயரிடப்படுகின்றன. தலைப்பிடல் என்பது இலக்கிய உலகில் ஒரு தேவையாக மட்டுமின்றிப் பயனள்ளதாக கலையாக ஓர் உத்தியாகக் கூட இன்று உள்ளது. ஆனால் ஒரு காலத்தில் தனிப்பாடல்களுக்குத் தலைப்பிடாமல் தொகைகளுக்கும் தொடர்நிலைச் செய்யுள்களுக்குமே தலைப்பிடும் வழக்கம் இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்களால் அறிகிறோம் அதன்பின் நூல்கள் எழுந்தபோது நூற்பெயரிடுதல் பற்றி இலக்கணமே எழுந்தது. நன்னூலர் என்னென்ன அடிப்படையில் நூற்பெயர். எழலாம் எனப் பட்டியலிட்டே காட்டுகிறார்.

**ஆசிரியர் இட்ட பெயர் :**

பெரியபுராணத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது.

"இங்கிதன் நாமங் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டின் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்"

என்பதால் (பாயிரம்-10) இது பெறப்படும்.

**புராணம் என்றதன் காரணம் :**

புராணம் என்பது ஓர் இலக்கிய வகை. தமிழில் பல புராணங்கள் எழுந்துள்ளன.திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம்,

கந்த புராணம் முதலியன. புராணம் என்ற இலக்கிய வகையின் இலக்கணம் வட நூல்களிலும் கூறப்படுகிறது. உலகப் படைப்பு, பிரதி படைப்பு, மன்னா் முனிவா் குலமுறை வருணனை அன்னோரது வழிமுறையின் வருணனை, மனுவந்தரம் ஆகிய ஐந்தும் புராணத்தின் இயல்புகள். திருவிளையாடற் புராணம் மதுரையை ஆண்ட பாண்டியரது குலமுறை கிளத்தும் படலமாகவே அமைதல் காணலாம். ஆனால் பெரியபுராணம் வடநூல் கூறும் ஐந்தனுள் ஒன்றேனும் பெற்றிலது. அவ்வாறாயின் புராணம் என்ற பெயா் இதற்குப் பொருந்துமாறு எங்ஙனம்?

புராணம் என்னும் சொல்லின் தாதுப்பொருள் - அடிப்படைப் பொருள் ‘பழமையுடையது’ என்பதாகும். எனவே ‘பழையகதை’ என்னும் பொருளில் ஈண்டு நூற்பெயராய் அமைந்துள்ளது.

இவ்விடத்தில்

“தொன்மை தானே

உரையொடு புணா்ந்த பழமை மேற்றே”

என்ற தொல்காப்பிய நூற்பாவைப் பொருத்திப் பாா்ப்பின் வடநூலா் கூறும் புராணம் ‘தொன்மை’ என்னும் வனப்போடு ஒப்பிடற்கு உரியதாதல் உணரலாம்.

**தொண்டா் புராணம் ஆன கதை**

பழைய கதையினைக் கூறலாற் புராணம் என்னும் பெயா் பெற்ற இந்நூல் ‘தொண்டா் புராணம்’ ஆனதன் பொருத்தம் அடுத்து ஆராயப்படுகிறது.

“தொண்டா்கள் தூசிசெல்லீா்! பக்தா்காள் சூலப்போகீா்

ஒண்திறல் யோகிகளே பேரணி யுந்தீா்கள்

திண்திறல் சித்தா்களே கடைக்கூழை செல்மின்கள்

அண்டா்நா (டு) ஆள்வோம் நாம் அல்லற்படை வாராமே”

என்னும் பாசுரத்தில் (திருவாசகம் திருப்படை எழுச்சி -2) இறையடியாா்களில் பலவகையினா் குறிப்பிட்டிருத்தலைக் காணமுடிகிறது.

வழிபடும் முறைக்கேற்பச் சரியையா், கிரியையா், யோகியா், ஞானியா் எனத் தொண்டா்கள் நால்வகைப்படுவா். தொண்டா் தொண்டு செய்பவா் என்று பொருள்படும் பொதுச்சொல். மெய்யினாற் செய்யும் தொண்டானது. கைத்தொண்டு செய்யும் கிரியையாரையே பெரும்பான்மை உணா்த்தும்; எனினும் ஏனையோரும் தத்தம் தொண்டா்களுடன் கைத்தொண்டும் செய்வராதலின் தொண்டா் என்னும் சொல் ஈண்டு அனைத்தடியாரையும் சுட்டுவதாகவே கொள்ள வேண்டும்.

மேலும் இந்நூலுக்கு முதனூலான சுந்தரர் பாடிய நூலும் திருத் தொண்டத் தொகை என்றே பெயர் பெற்றுள்ளது.அத்திருப்பதிகத்தின் பெயர் கொண்டே இந்நூலின் பெயரும் அமைந்ததாதல் வேண்டும்.

அன்றியும் ‘ஒரு மொழி ஒழிதன் இனம் கொளற்குரித்தே’ என்னும் இலக்கண விதிப்படி ‘தொண்டர் என்னும் சொல் அனைவரையும் குறிப்பதாகக் கொள்வதும் சாலும். உயர்வு சுட்டும் அடைமொழியாகத் ‘திரு’ அமைந்தது.

**பெரியபுராணம் பெயர் விளக்கம்**

இங்ஙனம் திருத்தொண்டர் புராணம் எனப்பெயர் பெற்ற இந்நூலுக்குப் ‘பெரியபுராணம்’ என்னும் பெயர் யாரால் எக்காலத்தில் எவ்விடத்தில் ஏன் இடப்பட்டது என்பதை உறுதியாகத் தெரிவித்தற்கு இல்லை உமாபதி சிவாசாரியார் இயற்றிய சேக்கிழார் நாயனார் புராணத்திலும் பெரியபுராணம் என்னும் பெயர் குறிப்பாகவும் கூறப்பட்டிலது. எனவே அவர் காலம் வரை ‘திருத்தொண்டர் புராணம்’ என்ற பெயரே வழங்கியதாதல் வேண்டும். அதன் பின்னரே தமிழில் வழங்கும் ஏனைப்புராணங்களினின்றும் இது வேறுபட்டிருப்பது சுட்டப் ‘பெரியபுராணம்’ என வழங்கினர் போலும்.

இந்நூலைப் பொரியபுராணம் எனக் கருத அகச்சான்று ஏதேனும் உண்டோவெனின், ஆசிரியர் ‘எடுக்கும் மாக்கதை’ என்று

கூறியிருப்பதைச் சுட்டலாம் ஆயின் கச்சியப்பசிவாசாரியாரும் கம்பரும் கூட மாக்கதை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.

“அறுமுகம் உடையவோர் அமலன் மாக்கதை

சிறியதோர் அறிவினேன் செப்ப நின்றதே”

என்று கந்தபுராணமும்,

“நடையினின்றுயர் நாயகன் தோற்றத்தின்

இடை நிகழ்ந்த இராமாவ தாரப்பேர்த்

தொடை நிரம்பிய தோமறு மாக்கதை”

என்று கம்பராமாயணமும் மாக்கதை எனச் சுட்டுகின்றன. ஆனால் கச்சியப்பரும் கம்பரும் அறுமுகம் உடையவனது மாக்கதை என்றும் இராமனது மாக்கதை என்றும் பிறதினியைபு படுத்திக் கூறச் சேக்கிழாரோ “எடுக்கும் மாக்கதை” என்று கூறுகிறார். எனவே அடியவர் வரலாற்றின் பெருமை கருதி ஆசிரியரே இதனைப் பெரியகதை எனக் கொண்டனர் எனலாம்.

காப்பியங்கள் குறிப்புகள்

சிலர் விரிநூலாகலின் முன்னைய முதனூல் வழிநூல் போலத் தொகையாக அன்றி விரிவாக உள்ளமையின் பெரியபுராணம் என்று பெயர் பெற்றது என்பர் ஆயின் விரிநூலைப் பெருநூல் என வழங்கல் மரபன்று; அன்றியும் அடைமொழி நூலின் ‘கவிப்பொருட் பெருமைகளைச் சுட்டுவதாகக் கோடலே சிறப்பாகுமேயல்லது. நூலின் அளவினைச் சுட்டுலதாகக் கொள்ளல் பொருந்தாது.

எனவே சிவனடியார்கள் வரலாறுகளாகிய பழங்கதைகளைக் கூறும் சிறந்தநூல் ‘பெரியபுராணம்’ எனப்பெயர் பெற்றது எனலாம்.

எனவே, இந்நூலை ஆசிரியர் கருதியவண்ணம் ஒரு புராணமாய்க் கோடல் பொருத்தம் ஆயினும் பெருங்காப்பிய அமைதிகள் பல இந்நூலில் உள்ளன. பாடப்பகுதியாகக் கண்ணப்ப நாயனார் புராணம் அமைந்துள்ளது

## 9.2. நோக்கம் : கண்ணப்ப நாயனார் வரலாற்றை மாணவர் அறியச் செய்வது.

## 9.3. கண்ணப்ப நாயனார் புராணம்

### 9.3.1. பொத்தப்பி நாடு

அசுரரின் முப்புரம் எரித்தவரும் ஆனேற்றை ஊர்தியாகக் கொண்டவரும் நான்மறைகளின் உட்பொருளாய் நிற்கும் காவலருமான திருக்காளத்தி மலையில் இருந்தருளும் புண்ணியடுக்குத் தம் கண்ணினை எடுத்து அப்பிய கண்ணப்ப நாயனார் தோன்றிய திருநாடு நாவன்மைமிக்க புலவர்கள் புகழ்ந்து போற்றிடும் நல்ல வளங்கள் பலவும் பெருகி நிற்கும் பூக்கள் மலரும் குளங்களும், பூஞ்சோலைகளும் சூழ விளங்கியிருக்கும் பொத்தப்பி நாடு ஆகும்.

“மேவலர் புரங்கள் செற்ற
விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக்
கண்ணப்பர் திருநா டென்பர்
காவலர் புகழ்ந்து போற்றும்
நல்வளம் பெருக நின்ற
பூவலர் வாவி சோலை
ஆழ்ந்தபொத் தப்பி நாடு”

பொத்தப்ப நாடு வேடர் நிறைந்த ஒரு மலைநாடு. அதில் கண்ணப்பர் தோன்றியருளிய திருநகரம், மிகவும் பழமைவாய்ந்த உடுப்பூர் என்னும் நகரமாகும்.

“இத்திரு நாடு தன்னில்
இவர்திருப் பதியா தென்னில்
… …. ….
… …. ….

ஒத்தபே ரரணஞ் சூழ்ந்த

முதுபதி உடுப்பூர் ஆகும்”.

### 9.3.2. திண்ணார்பிறப்பு

உடுப்பூரில் வேட மன்னன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நாகன்.

“பொச்சையி னறரவும் ஊனின்

புழுக்கலும் உணவு கொள்ளும்

நச்சுழற் பகழி வேடர்க்

கதிபதி நாக னென்பான்”.

நாகன், தத்தை என்பாளை மணந்து இல்லறம் நடத்தி வந்தான். தனக்கு மகப்பேறின்மை கருதி வருந்தி நாளும் முருகப்பெருமானை வழிபடலானான்.

சிறந்த மயிலினைத் தம் வெற்றிக்கு அறிகுறியாக ஊர்தியாகக் கொண்டவரும். வஞ்சனையாய இரவுஞ்ச மலையின் நீக்க முடியாத வலியினைக் கிழித்த திண்மையுடைய வேலைத் திருக்கையில் கொண்டவருமான வெற்றிதரும் ஆறுமுகப் பெருமாளின் திருவருளாலே, இவ்வுலகம் செய்த அளவிலாத நற்றவத்தினாலே, நிறைமதியை உவர்க்கடல் பெற்றெடுத்தது போல, கரிய மேனியையுடைய ஓர் ஆண்குழந்தையைத்தத்தை பெற்றெடுத்தாள். அக்குழந்தையை நாகன் கையில் ஏந்தியபோது, அது திண்மையாகத் தோன்றியது. அதனால் அவன் அதற்குத் திண்ணன் என்னும் திருப்பெயரைச் சூட்டினான்.

“அண்ணலைக் கையில் ஏந்தல்

கருமையால் உரிமைப் பேரும்

திண்ணன்என் றியம்பும் என்னத்

திண்சிலை வேட ரார்த்தார்” (17)

### 9.3.3. விற்பயிற்சி

திண்ணனார் வேடர்கள் போற்ற வளர்ந்து விற்பயிற்சிக்குரிய பருவத்தை அடைந்தார்.

“தந்தையும்மைந்த னாரை

நோக்கித்தன் தடித்த தோளால்

சிந்தையுள் மகிழப் புல்லச்

சிலைத்தொழில் பயிற்ற வேண்டி

முந்தையத் துறையின்மிக்க

முதியரை அழைத்துக் கூட்டி

வந்தநாட் குறித்த தெல்லாம்

மறவிற்குச் சொல்லி விட்டான்."

தன் மைந்தன் திண்ணனைக் கட்டித்தழுவிய நாகன், தன் மைந்தனுக்கு வில்வித்தை பயிற்றுவிக்க வேண்டி, அத்துறையில் முதிர்ந்த மூத்தோரைக் கலந்து வில்வித்தைப் பயிற்சி தொடங்குதற்குரிய நாளைக்குறித்து அச்செய்தியைத் தன் குடியிலுள்ள வேடர்கட்கெல்லாம் அறிவிக்குமாறு சொல்லியனுப்பினான். சுற்றத்தார் அனைவரும் பாராட்ட, தெய்வத்திற்குரிய பூசைகள் யாவற்றையும் செய்து, பின்னர் விற்படிக்கும் விழாவை நீங்கள் மேற்கொள்ளுங்கள் எனக் கூறினான் நாகன்.

"பல்பெருங் கிளைஞர் போற்றப்

பராய்க்கடன் பலவும் நேர்ந்து

வில்விழா எடுக்க வென்று

விளம்பினன்வேடர்கோமான்" (31)

வெய்ய கதிரவன் உச்சியில் வரும் நல்ல வேளையில், மங்கல வாழ்த்துக்கள் எங்கும்பெருகி விளங்க, அருகில் பல இன்னியங்கள் முழங்க, தாங்கள் வழிவழியாகக் கற்று வந்த வில் தொழில்வித்தையில் வல்ல வீரர்கள், ஒளிமிகும் உரிய மேனியையுடைய அரியேறுஅனைய

திண்ணனாரைப் போரிடக் கொல்லும் வில்லை அவர் கைக்கொடுத்து ஒப்பற்ற வில்லினைப் பிடிக்கச் செய்தனர்.

"வெங்கதிர் விசும்பின் உச்சி

மேவிய பொழுதில் உச்சி

மங்கல வாழ்த்து மல்க

மருங்குபல வியங்க ளார்ப்பத்

தங்கள்தொல் மரபின் விஞ்சைத்

தனுத்தொழில் வலவர் தம்பால்

பொங்கொளிக் கரும்போர் ஏற்றைப்

பொருசிலை பிடிப்பித் தார்கள்"

விற்பயில்வதற்கமைந்த களத்திற்குச்சென்று, ஆசிரியனையும் கடவுளையும் முறைமையால் வணங்கி, விற்பயிலத்

தொடங்கியநாள்முதலாக, நாள்தோறும் வலியுடைய போர் வில்லைக் கைக்கொள்ளும் வீரம்முதிர்ந்து தெளிவுற வில்வித்தை கற்றார்.

### 9.3.4. திண்ணார்க்கு முடிசூட்டல்

திண்ணார்க்குப் பதினாறு வயது ஆயிற்று, அவர்தந்தை நாகன், முதுமையில் மெலிவுற்றார். அதனால் காட்டிற்குச்சென்று வேட்டையாட இயலாதவனானான்.

ஒருநாள், வேடர்குழு ஒன்று, நாகனிடம் போந்து, 'அரசே! மாதந்தோறும்வேட்டையாடுதல் தவறியபடியால், கொடியவிலங்குகள் பெருகிப்புனங்களை அழிக்கின்றன' என்று முறையிட்டது.அதற்கு நாகன், 'நான் மூப்பால் மெலிந்து விட்டேன். இனி வேட்டையாடுதல் என்னால் இயலாது. என் மகன் திண்ணனை உங்களுக்குத் தலைவனாக்குகிறேன் என்று சொல்லித் தேவராட்டியை அழைப்பித்துத் திண்ணானார்க்கு அரசுரிமை வழங்கினான். தேவராட்டியுந் திண்ணானாரை வாழ்த்திச் சென்றார்

தந்தையின் நிலையை மனத்தில் கொண்டு, குலத்தலைமைக்கு வந்த குறைபாட்டை நிரப்ப வேண்டுமென்பதற்காக அப்பொறுப்பினை மறுக்காது திண்ணனார் ஏற்றுக்கொண்டார்.

"காதல் உற்றிலன் இகழ்ந்திலன்

கடன் இது என்று ணர்ந்தும்

யாது கொற்றவன் ஏவியது

அது செய லன்றோ

நீதிஎற்கு என நினைந்தும்

அப்பணி தலை என்றான்" (கம்ப அயோத்தி மந் 69)

எனவரும் கம்பர் வாக்கும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

### 9.3.5. வேட்டை

வேடமன்னாகிய திண்ணனார், வேட்டைக்குரிய கோலந்தாங்கிக் காடு நோக்கினார். வேடவீரர்களும் அவருடன் புறப்பட்டார்கள். நாய்களுஞ் சூழ்ந்து ஓடின. வேடர்கள் காட்டில்நுழைந்து ஆங்காங்கே முறைப்படி வலைகளை வளைத்துக் கட்டினார்கள். திண்ணனார் காட்டிலே சுழன்று சுழன்று வேட்டையாடினார் கொடிய விலங்குகளை வீழ்த்தினார். அப்பொழுது கொழுத்த பன்றியொன்று வீறிட்டு எழும்பிவலைகள் அறும்படி கடுவிசையில் ஓடிற்று. அப்பன்றியைத் தொடர்ந்து திண்ணனாரும் அவ்விசையில் ஓடினார். இக்காட்சிகளை,

"ஏனமோடு மானினங்கள்
எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானைவெம்
ஆனமாவ னேகமா
வெகுண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து
சீறிஅம்பில் நூறினார்" (78)

"இவ்வகைவரு கொலைமறவினை
எதிர்நிகழ்வுழி அதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை
கானெழுவதொர் ஏனம்
பெய்கருமுகி லெனஇடியொடு
பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலைகளை அறநிமிர்வுற
முடுகியசுடு விரிசையில் (87)

ஆகிய பாடல்கள் சுட்டும். பன்றியைத் தொடர்ந்து ஓடிய திண்ணைனார் அதை நேருக்கு நேராய் நின்று வெட்டி வீழ்த்தினார்.

**9.3.6. காளத்திக் காட்சி**

அதற்குமேல் இருவரும் திண்ணனாரை நோக்கி, 'நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம். பசி நம்மை அரிக்கிறது. இப்பன்றியைக்காய்ச்சித் தின்று தண்ணீர் அருந்திப் பசி தணித்துக் கொள்வோம்; பின்னே, வேட்டைக் காட்டுக்குப் போவோம்' என்றனர். திண்ணனார், 'நல்லது இக்காட்டில் தண்ணீர் எங்கே யிருக்கிறது?' என்று கேட்டார். நாணன், 'அதோ பெரிய தேக்குமரம் தெரிகிறதன்றோ? அதற்கு அப்பால்நீண்ட குன்று ஒன்று இருக்கிறது. அதற்கு அயலில் பொன்முகலி ஆறு ஓடுகிறது' என்றான். திண்ணனார், 'நாம் அங்கே போவோம். இப்பன்றியை எடுத்து வாருங்கள்' என்றுசொல்லி, அக்குன்று நோக்கிப்போனார். போகும்போது அரைக்காதத்துக்கப்பால் திருக்காளத்தி மலைச்சாரலிலுள்ள சோலை அவர்தங்கண்ணுக்கு விருந்தளித்தது. அவ்விருந்துண்ட திண்ணனார், 'நாணனே! நமக்கு முன்னே தோன்றும் இக்குன்றினுக்குப் போவோம்' என்றார்.அதற்கு அவன், 'இக்குன்றில் நல்ல காட்சி காண்போம். அங்கே குடுமித்தேவர் வீற்றிருக்கிறார். கும்பிடலாம்' என்றான். 'என்ன நாணா! மலையை நெருங்க நெருங்க என்மேலுள்ளசுமை குறைகிறது போலத்

தோன்றுகிறது. ஒருவிதப் புது விருப்பமும் பொங்கி எழுகிறது. அது விரைந்து என்னுள் பாய்கிறது. தேவர்இருக்கும் இடம் எங்கே? கடிது செல்க' என்று திண்ணனார் விரைந்து நடந்தார்.



"நாணனே தோன்றும் குன்றில

நண்ணுவேம் என்ன நாணன்

காணநீ போதின் நல்ல

காட்சியே காணும்இந்தச்

சேணுயர் திருக்கா ளத்தி

மலைமிசை யெழுந்து செல்வே

கோணமில் குடும்பத் தேவர்

இருப்பர்கும் பிடலாம் என்றான்:

"ஆவதென் இதனைக் கண்டிங்

கணைதொறும் என்மேல் பாரம்

போவதொன் றுளது போலும்

ஆசையும் பொங்கி மேன்மேல்

மேவிய நெஞ்சும் வேறோர்

விருப்புற விரையா நிற்கும்

தேவரங் கிருப்ப தெங்கே

போகென்றார் திண்ண னார்தம்". (97)

**9.3.7. பொன்முகலி அடைதல்**

கரையில் வளரும் மூங்கிலின் முத்தும், கரிய அகில மரத்தின் கட்டைகளும், மலை தரும் மணிகளும், பொன்னும் வயிரமும் மணற் பரப்புகள் எங்கும் திரைகள் முன்பு கொணர்ந்து திரட்டி வைக்கும் பெருந்திருவுடைய பொன்முகலி ஆற்றினைச் சேர்ந்தனர்.

"வரைதரு மணியும் பொன்னும்

வயிரமும் புளினம் தோறும்

திரைகள்முன் திரட்டி வைத்த

திருமுக லியினைச் சார்ந்தார்".

காப்பியங்கள்

குறிப்புகள்

மூவரும்பொன்முகலியை அடைந்தபின்னர் அவ்வாற்றங் கரையிலுள்ள ஒருமர நிழலிலே பன்றி வைக்கப்பட்டது. நீக்கடைக்கோலால் நெருப்பை உண்டுபண்ணி வைக்குமாறு காடனுக்குக் கட்டளையிட்டுத் திண்ணனார் நாணனேடு மலை நோக்கிச் சென்றார்.

**9.3.8. தத்துவப்படி ஏறல்**

முன்னைத் தவம்திண்ணனாரை வேற்றுருவாக்குகிறது. அவர்பால் அன்பு பெருக்கெடுக்கிறது; காதல் கூர்ந்து கூர்ந்தெழுகிறது; என்பு நெக்கு நெக்குருகுகிறது. இவ்வாறு உள்ளத்தெழும் வேட்கையோடு திண்ணனார் மலையேறுகிறார். நாணன் முன்னே செல்கிறான். அவனுக்குப் பின்னே அன்பு செல்கிறது. அதற்குப் பின்னே திண்ணனார் மலைப்படிகளென்னும் தத்துவப்படிகளை ஏறிச் செல்கிறார்.

**9.3.9.அன்பேயாதல்**

திண்ணனார் சிவபெருமானைக் காண்பதற்கு முன்னே, சிவபெருமான் அவரைத் திருக்கண்ணோக்கஞ்செய்தார். செய்ததும், வேடர்கோமான், ஒளி மயமாய் அன்புருவம் பெற்றார். அவர் மலைக்கொழுந்தென விளங்கும் மகாதேவரைக் கண்டார்; கண்டதும் கட்டித் தழுவுகிறார்; மோந்து மோந்து நிற்கிறார்; பெருமூச்சு விடுகிறார். அவர்தம் மெய்ம்மயிர் சிலிர்க்கிறது; புளகம் போர்க்கிறது; கண்களினின்றும் அருவி பெருகுகிறது. 'அச்சோ! இவர் அடியேனுக்கு அகப்பட்டார்' என்று திண்ணனார் கூறுகிறார்; ஆனந்தக் கூத்தாடுகிறார். 'இதுகொடிய விலங்குகள் திரியுங் கானம்! இங்கே வேடரைப்போல ஐயன் தனித்திருப்பதென்னே! துணைவர் ஒருவருமிங்கில்லையே! அந்தோ! கெட்டேன்! கெட்டேன்; என்று அவர் நைந்து நைந்து உருகுகிறார். கைச்சிலை நழுவி விழுந்தது. அஃது அவருக்குத் தெரியவில்லை. பின்னர் அவர் சிறிது தெளிவுற்று, 'இவர் முடிமீது நீரை வார்த்துப் பச்சிலையும் பூவுமிட்டுச் சென்றவர் யாரோ?' என்கிறார்; சுற்று முற்றும் பார்க்கிறார். அருகிருந்த நாணன், 'யார் என்பது எனக்குத்தெரியும். முன்னெரு நாள் உம் தந்தையாருடன் வேட்டையாடி இங்கே வந்தோம். அப்பொழுது ஒரு பார்ப்பான் இவர் மீது நீரை வார்த்தான்; பச்சிலைகளையும மலர்களையுஞ் சூட்டினான்; உணவூட்டினான்; முன்னின்று சில மொழிகளைச் சொன்னான். இவற்றை நான் பார்த்தேன். அவனே இன்றும் இச்செயல்கள் செய்திருத்தல் வேண்டும்' என்றான். அதைக்கேட்ட அன்பர்,

'இவை இறைவனார்க்கு இனியவை போலும்' என்று அவற்றை உளங்கொண்டு, ஆண்டவனைப் பிரிந்து செல்ல மனமில்லாதவராய், 'இவர் இங்கே தனியாய் இருக்கிறார். இவர் அழுதுசெய்ய இறைச்சியும் அளிப்பாரில்லை. இவரைப் பிரிதலும் ஒண்ணாது. என் செய்வேன்! இவருக்கு இறைச்சி கொண்டுவந்தே தீர்தல் வேண்டும்' என்று நினைந்து சிறிது தூரம்

*Self Instructional Material*

போவார் ; மீண்டுந் திரும்புவார் ; தழுவிக்கொள்வார் திரும்பவும் போவார்; காதலால் நோக்கி நோக்கி நிற்பார் ; கன்றை விட்டகலும் பசுப்போலாவார் ; 'ஐயனே! திருவமுதுசெய்ய நல்ல இறைச்சியை நானே கொண்டுவருவேன். இங்கு உனக்குச் சுற்றத்தார் ஒருவருமில்லை. உன்னைப்பிரிந்து செல்லவும்மனம் எழவில்லை. பசியோடிருந்தலையும் மனம் விரும்பவில்லை. ஆதலால் போய்வருகிறேன்' என்று கூறிக் கண்களில் அருவிபாய, வில்லை எடுத்து, மலையினின்றும் இழிந்த சோலை சேர்ந்தார். நாணனும் அவர் பின்னே தொடர்ந்து போனான்.

கெய்தவும் வேண்டுமென்று"

"போதுவர் மீண்டு செல்வர்

புல்லுவர் மீளப் போவர்

காதலின் நோக்கி நிற்பர்

கன்றகல் புளிற்றாப் போல்வர்

நாதனே அமுது செய்ய

நல்லமெல் லிறைச்சி நானே

கோதறத் தெரிந்து வேறு

கொண்டிங்கு வருவே னென்பார்" (112)

என்று சேக்கிழார் பாடியிருப்பது படித்தின்புறத்தக்கது.

**9.3.10.நாணன் -காடன் வருந்தல்**

அங்கிருந்த காடன், திண்ணனார் எதிரேசென்று பணிந்து, "தீக்கடைந்து வைத்துளேன். பன்றியின் உறுப்புக்களையெல்லாம் உமது குறிப்புப்படி பார்த்துக்கொள்க. இவ்வளவு நேரந் தாழ்த்தது என்னை?' என்றான். அதற்கு நாணன், நிகழ்ந்தவைகைக் கூறி, 'குடுமித் தேவர்க்கு இறைச்சி கொண்டு போகும்பொருட்டு இவர்இங்கே வந்திருக்கிறார்; நமது குலத் தலைமையை விட்டுவிட்டார் ; அத்தேவர் வழி பட்டுவிட்டார்' என்று சொன்னான். அதைக்கேட்ட காடன், 'திண்ணனாரே! என் செய்தீர்! நீங்கள் எங்கள் குலத்தலைவ ரல்லரோ! என்ன பித்துக்கொண்டீர்' என்று கூறினார். இறைவனுக்கு இறைச்சியைத் தயாரிக்கும் திண்ணனாருக்கு

"கோலினிற் கோத்துக் காய்ச்சிக்

கொழுந்தசை பதத்தில் வேவ

வாலிய சுவைமுன் காண்பான்

வாயனில் அதுக்கிப் பார்த்துச்

சாலவும் இனிய எல்லாம்

சருகிலை யணைத்து கல்லை

ஏலவே கோலக் கூட

அதன்மிசை இடுவா ரானார்". (118)

ஆவதொன் றறியோர் தேவ

ராட்டியை நாக னோடு

மேவிநாங் கொணர்ந்து தீர்க்க

வேண்டும்அவ் வேட்டைக் கானில்

ஏவலாட் களையுங் கொண்டு

போதுமென் றெண்ணிப் போனார்". (120)

**9.3.11.ஞானார்ச்சனை**

இருவருஞ் சென்றது சிவத்தில் ஈடுபட்டுள்ள திண்ணனார்க்குத் தெரியாது. அவர் ஊனமுதைகல்லையிலே வைத்தார் ; திருமஞ்சனத்துக்குப் பொன் முகலியாற்று நீரை வாயிலே முகந்தார்; பச்சிலைகளையும் மலர்களையும் குடுமியிலே செருகினார் ; ஒரு கையில்ஒரு வில்லையும் அம்பையும் தாங்கினார் மற்றொரு கையில் ஊனமுதமுள்ள இலைக்கலத்தை ஏந்தினார் எனக்கினிய பெருமான் சாலப் பசித்திருப்பார் என்று இரங்கி ஏங்கி விரைந்து நடந்து மலையை அடைந்தார் ; அங்கே சிவனார் திருமுடிமீதிருந்த மலர்களைக் கால்செருப்பால் மாற்றினார் ; வாய் நீரைத் திருமுடிமீது அன்புபோல் உமிழ்ந்தார் ; குடுமியில் செருகிவந்த பூக்களை ஆண்டவனுக்குச் சாத்தினார் ; ஊனமுதைத் திரு முன்னே வைத்து, ' 'ஆண்டவனே! இவ் விறைச்சிகள் நல்லன; இவற்றை யானே சுவை பார்த்துத் திருமுன்னர்ப் படைத்துள்ளேன் ;அமுது செய்தருள்க' என்று இன்சொல் கூறி அமுது ஊட்டுவித்தார்.

"கொழுவிய தசைக ளெல்லாம்

கோலினில் தெரிந்து கோத்தங்

கழலுறு பதத்திற் காய்ச்சிப்

பல்லினா லதுக்கி நாவிற்

பழகிய இனிமை பார்த்துப்

படைத்தஇவ் வறைச்சி சால

அழகிது நாய னீரே

அமுதுசெய் தருளும் என்றார்".

**9.3.12.அன்பில் சிவத்தைக் காணல்**

அப்பொழுது கதிரவன் மறைந்தான். 'இரவில் கொடிய விலங்குகள் ஐயனுக்குத் தீங்கு செய்யும்' என்று திண்ணனார் கருதி அஞ்சித் திருக்கையில் சிலை தாங்கிச் சிவபிரானை நோக்கி நின்றார். காடுகளில் நுழைந்தும் மலைகளிற் புகுந்தும் பன்னெடு நாள் அருந்தவங் கிடந்த தேவர்களும் முனிவர்களும் காண்டற்கரிய பெருமானைத் திண்ணனார் அன்பினில் கண்டுகொண்டார். பொழுது புலர்ந்தது. பறவைகள்ஒலி செய்தன. இரவு முழுவதும் கண்துயிலாத வீரர், ஆண்டவனுக்கு ஊனமுது கொண்டுவர வேட்டைக்குப் புறப்பட்டார்.

"வேறுவே றினங்கள்வேட்டை

வினைத்தொழில் விரகி னாலே

ஊறுசெய் காலம் சிர்தித்

துருமிகத் தெரியாப் போதின்

மாறடு சிலையுங் கொண்டு

வள்ளலைத் தொழுது போந்தார்". (133)

**9.3.13.சிவகோசரியர் ஆகமப் பூசை**

திண்ணனார் சென்ற பின்பு, சிவகோசரியார் அங்கே வந்தார். சிவகோசயார் என்பவர், திருக்காளத்தியப்பரை நாள்தோறும் ஆகமவிதிப்படி அருச்சிப்பவர். அவர், வழக்கம் போலத் தொண்டாற்றத் திருமுன்னர்ச் சென்றார்; அங்கே வெந்த இறைச்சியையும் எலும்பையும் பார்த்தார் அகல மிதித்து ஓடினார்; 'இவ்வநுசிதத்தைச் செய்தவர் யாவர்? வேடப்புலையர்களே இதைச் செய்திருத்தல் வேண்டும். இக்கொடுமைக்குத்தேவ தேவன் திருவள்ளமும் இசைந்ததே' என்று கலங்கினார் தெளிவடைந்தார் ; இறைச்சி, இலை, செருப்படி, நாயடி முதலியற்றைத் திருவலகால் மாற்றினார்;

பொன்முகலி போந்து மூழ்கினார்; விரைந்து சந்நிதி சேர்ந்து பிராயச்சித்தம் செய்தார்; முறைப்படி அருச்சித்துத் தமது தபோவனம் போனார்.

**9.3.14.மாறுபட்ட ஆசைகள்**

திண்ணனார் கான்புகுந்தார்; வேட்டையாடிப் பன்றிமான் முதலிய விலங்குகளைக் கொன்றார்; அவற்றின் ஊனெடுத்துப் பதஞ்செய்து தேன் கலந்து கல்லையிலே வைத்தார்; முன் போலவே மஞ்சனமும் மலருங்

காப்பியங்கள் குறிப்புகள்

கொண்டார்; இவற்றைக் கொண்டு மலையேறிப் பழையபடி பார்ப்பனார் பூசையை அகற்றித் தமது பூசையைச் செய்தார்; இறைச்சிகளைத் திரு முன்னே வைத்து, 'ஐயனே! இவ்விச்சிகள் முன்னவைகளைவிடச் சிறந்தன; இவை பன்றி, மான், கலை, மரை, கடமை இவற்றின் இறைச்சிகள்; யானுஞ் சுவை பார்த்தேன் ; தேனுங் கலந்துள்ளேன் ; தித்திக்கும்! அமுதுசெய்தருள்' என்று இன்மொழி பகர்ந்து அமுது செய்வித்தார். இவ்வாறு திண்ணனார் பகலில் வேட்டையாடி ஆண்டவனுக்கு ஊனமுதம் படைத்தும், இரவிலே உறங்காமல் ஆண்டவன்முன்னே நின்று திருத்தொண்டு நிகழ்த்தி வந்தார். சிவகோசரியாரும் சிவசந்நிதி போந்து வனவேந்தர் பூசனையை மாற்றி மாற்றிஆகம முறைப்படி அருச்சித்து வந்தார்.

### 9.3.15 நாகன் முயற்சி பலியாமை

நாணனுங் காடனும் ஊருக்குச் சென்று, திண்ணனார் செயல்களை நாகனுக்கு அறிவித்தார்.நாகன்ஊணுறக்க மின்றித் தேவராட்டியையும் அழைத்து மைந்தரிடம் போந்தான் ; அவரைத் தன் வழிப்படுத்தப் பற்பல வழியில் முயன்றான் ;முயன்றும் பயன் விளையாமை கண்டான் ; மனம் நொந்து வீட்டுக்குத் திரும்பினான்.

### 9.3.16 சிவகோசரியார் ஒளித்திருத்தல்

சிவகோசரியார் நாடொறும் அநுசிதத்தை விலக்கி விலக்கிச் சலிப்புற்றார்; ஒருநாள் ஆண்டவன் எதிரே நின்று, 'என்னுடைய நாயகனே! இவ்வநுசிதஞ் செய்தாரைக் காண்டல் கூடவில்லை. இதனை உன்னருளாலேயே ஒழித்தல் வேண்டும்' என்று வேண்டிச் சென்றார். அன்றிரவு சிவபெருமான் சிவ கோசரியார் கனவிலே தோன்றி, 'அநுசிதந் செய்யும் ஒருவனை வேடுவன் என்று நீ நினைத்தல் வேண்டா, அவன் அன்பன். அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கலுள்ளஅன்பேயாகும். அவனுடைய அறிவெல்லாம் நம்மை அறியும் அறிவேயாகும். அவனுடைய செயல்களெல்லாம். நமக்கு இனியவையாகும். அவன் நிலை இத்தகைத்து. நீ நாளை நமக்குப் பின்னே ஒளித்திரு; அவன்தன் அன்புச் செயல்களைக் காண்பாய்; கவலையொழிக' என்றருளி மறைந்தார். சிவகோசரியார் கண் விழித்தார். பொழுது விடியும்வரை அவருக்கு உறக்கம் வரவில்லை. பொழுது விடிந்தது. சிவகோசரியார் எழுந்து பொன் முகலியில் நீராடினார் ; மலையேறினார் வழக்கம் போல ஆண்டவனை வழிபட்டார் ; ஆண்டவன் ஆணைப்படி பின்பக்கம் ஒளித்திருந்தார்.

"அவனுடைய வடிவெல்லாம்
நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்

நமையறியும் அறிவென்றும்

அவனுடைய செயலல்லாம்

நமக்கினிய வாமென்றும்

அவனுடைய நிலைஇவ்வா

றறிநீயென் றருள்செய்வார்".

துயில் நீங்கிய சிவகோசரியார்,

"மன்னுதிருக் காளத்தி

மலையேறி முன்புபோல்

பிஞ்ஞகனைப் பூசித்துப்

பின்பாக ஒளித்திருந்தார்.



### 9.3.17.ஒரு கண் அகழ்ந்து அப்பல்

ஆறாம்நாள் வழக்கம்போலத் திண்ணனார் இறைச்சி முதலியவற்றைத் தாங்கிவிரைந்து வருகிறார்; அவர் அன்று வழியில் துர்ச்சகுணங்களைக்காண்கிறார்; 'இவை உதிரங்காட்டுங்குறிகள். என்ஐபனுக்கு என்ன நேர்ந்ததோ!' என்று கலங்கி ஓடிவருகிறார். திருக்காளத்திப் பெருமான்,. திண்ணனார்தம் அன்பின் பெருமையைக் காட்டத் தமது வலக் கண்ணின்றும் உதிரம் பெருகச்செய்தார். அக்காட்சியைத் தூரத்தே கண்டதிண்ணனார், ஓடோடிவந்தார்; இரத்தங்கண்டார்; மயங்கினார். அவர் தம் வாயிலுள்ள நீர் சிந்திற்று; கையிலுள்ள ஊன் சிதறிற்று; வில்லும் விழுந்தது; தலைமயிரினின்றும் மலர்கள் விழுந்து அலைந்தன. திண்ணனார் பதை பதைத்து வீழ்கிறார்; எழுகிறார்; எழுந்துபோய் இரத்தத்தைத் துடைக்கிறார்; துடைத்தும் இரத்தம் நிற்கவில்லை. அவர்பெருமூச்சு விட்டு விழுந்தார்; திசை திசை ஓடிப்பாக்கிறார்; வில்லை எடுக்கிறார்; அம்பைத் தொடுக்கிறார்; 'எனக்கு மாறாக இத்தீங்கை வேடர்செய்தனரோ? கொடிய விலங்குகள் செய்தனவோ?' என்று கூறிக்கொண்டே மலைப் பக்கங்களில் ஓடுகிறார் ; நெடுந்தூரம் ஓடிப் பார்க்கிறார். திண்ணனார் வேடரையுங் கண்டாரில்லை; அன்பர் திரும்பி வந்து, ஆண்டவனைக்கட்டி, 'ஐயனே! உனக்குஅடுத்தது என்னே? என்னே? என்று கதறிக் கதறி அழுகிறார்; 'இ∴து என்செய்தால்தீரும்? பச்சிலை மருந்துகளைத் திரட்டி வருவேன்' என்று காடெலாஞ் சுற்றிப் பச்சிலைகளைப் பறித்து வந்தார் ; அவற்றைப்பிசைந்து பிசைந்து ஐயன் கண்ணில்

வார்க்கிறார். இரத்தம் நிற்கவில்லை. 'இனி என்செய்வது?' என்றுஅண்ணல் சிந்தித்து நிற்கிறார். அப்பொழுது 'ஊனுக்கு ஊன்' என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. வந்ததும், திண்ணனார் அம்பால்தமது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்து ஐயன் திருக்கண்ணில் அப்பினார். இரத்தம் நின்றுவிட்டது. அன்பர் பெருமான் குதிக்கிறார் ; தோள் கொட்டுகிறார் ; கூத்தாடுகிறார் ; நான் செய்தது நன்று நன்று!' என்று கூறிக்கூறி மகிழ்ச்சி யடைகிறார். மகிழ்ச்சிப் பெருக்கால் அன்பர் உன்மத்தர் போலானார்.

**9.3.18.மற்றொரு கண்ணகழ்தலும் கண்ணப்பராதலும்**

இன்னும் திண்ணனார் அன்பின் உண்மையைக் காட்டச் சிவபிரான் தமது இடக்கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார். அதைக்கண்ட திண்ணனார், 'இதற்கு யான் அஞ்சேன் ; மருந்து கைக் கண்டிருக்கிறேன் ; இன்னும் எனக்கொரு கண்ணுன்டு; அதை அகழ்ந்து அப்பி ஐயன் நோயைத் தீர்ப்பேன்' என்று அடையாளத்தின் பொருட்டுக் காளத்திநாதர் திருக்கண்ணில் தமது இடக்காலை ஊன்றினார் ; உள்நிறைந்த விருப்பத்தோடும் தமது இடக்கண்ணைத் தோண்ட அம்பை ஊன்றலானார். ஊன்றியபொழுது, தடங்கருணைப் பெருங்கடலாகிய தேவதேவர் மனந்தாளாதவராய்,'கண்ணப்ப நிற்க! கண்ணப்ப நிற்க! கண்ணப்ப நிற்க!' எனறருளிக்கொண்டே திண்ணனார்கையைத் தமது திருக்கையால் பிடித்துத்தடுத்தார்.

அவ்வரும் பெருங்காட்சி கண்ட சிவகோசரியார் ஆனந்தவாரிதியில் மூழ்கினார். கண்ணப்பர் திருக்கையைப் பற்றிய முக்கணப்பா, கண்ணப்பரைப்பார்த்து, 'மாறிலா அன்பே! என் வலப்பக்கத்தில் இருக்கக் கடவாய்' என்று அவருக்குப் பேரருள் புரிந்தார்.

கண்ணப்பர் வரலாற்றைப் போற்றும் வண்ணம், 'கண்ணப்பர் திருமறம்' என்றும் பெயரில் நக்கீரதேவர், கல்லாடதேவர் ஆகிய இருவரும் இருநூல்களைப் படைத்துள்ளனர். இவற்றுள் நக்கீரதேவர் திருமறமே இவ்வரலாற்றிற்கும் பெரிதும் துணை நின்றுள்ளது.

**9.4.சோதித்தறியும் வினாக்கள்**

1. பெரியபுராணம் பெருங்காப்பியமாகுமா? ஆய்க.

விடை: பெரியபுராணம் அறிமுகம், நூற்பெயர், பாயிரச்சிறப்பு, பெருங்காப்பியம் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகள்.

2. திண்ணனார் பிறப்பு- வளர்ப்பினை எழுதுக.

விடை : திண்ணனார் பிறப்பு, விற்பயிற்சி ஆகிய தலைப்புச் செய்திகள்.

3. வேடர்குலத் தலைவனாகத் திண்ணனார் முடிசூட்டப்பட்டதை விவரி.

விடை : திண்ணனாருக்கு முடிசூட்டல் என்ற பகுதியிலுள்ள செய்திகள்.

4. திருக்காளத்திநாதரைக் கண்ட திண்ணனார் செய்த செயல்களைக் கட்டுரைக்க.

விடை : வேட்டை, பன்றியைத் தொடரல், காளத்திக் காட்சி, பொன்முகலி அடைதல், தத்துவப்டி ஏறல், அன்பேயாதல் அன்புப்பித்தம், ஞனார்ச்சனை தலைப்புகளில் உள்ள செய்திகள்.

5. சிவகோசரியரின் ஆகமப்பூசை குறித்து எழுதுக.

விடை: சிவகோசரியர் ஆகமப்பூசை என்ற தலைப்பிலமைந்த செய்திகள்.

6. திண்ணனார் கண்ணப்பரான வரலாறு குறித்துத் தொகுத்துக்கூறுக.

விடை : சிவகோசரியார் ஒளித்திருத்தல், ஒருகண் அகழ்ந்து அப்பல், மற்றொரு கண்ணகழ்தலும் கண்ணப்பராதலும் ஆகிய தலைப்புகளில் அமைந்த செய்திகள்.

## 9.5 பயிற்சி வினா:

பெரியபுராணப் பெருங்காப்பியமாகுமாற்றை ஆராய்க.

பொருளறிக:

பொச்சை-மலை; நறவு-தேன்; பறழ்-முயற்குட்டி; சேடர்-அறிவுடையாா; தோரை-மலைநெல்; சேடை-ஆசி வழங்கும் முழுமையான அரிசி; சரணம்-மயிற்பீலி; மெய்ப்பொற்பு-மெய்யழகு; நிரை-வரிசை.

## 9.6.மேலும் படித்தறிக:

1. இராசமாணிக்கம், மா,- பெரியபுராண ஆராய்ச்சி பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-1980
2. ஞானசம்பந்தன், அ,ச – பெரியபுராணம் ஓர் ஆய்வு, தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்-1987.

# கூறு: 10 வில்லிபாரதம் -கன்னப்பருவம்

## 10.1.போர்க்களம் அடைதல்

பதினாறாம்நாட் காலையில் துரியோ தனனுடைய படை கன்னன் தலைமையில் போர்க்களத்தை அடைந்தது. கன்னன் தனது படையை மகர வரிசையாக நிறுத்தினான். திட்டத்துய்மன் தனது படையை உருளைவடிவாக நிறுத்தினான்.

“கற்கியும், வண்டுஇனம் மொய்க்க மதம் மொழி கரியும், தேரும், காலாளும், பொற்கொடியும்,குடை வர்க்கமும், மாலையும், ஒன்னார் எண்ணும் பூபாலர், மல்கெழு திண் நிற்கும் நிலம்தொறும், நின்று நின்று வினை செய்ய புய அர்க்கன் மகன் பெரு மகரவியூகம் வகுத்தானே”.என்று பாடியுள்ளார் வில்லிபுத்தூரார்.

### வீமன் யானைமேல் ஏறுதல்

வீமன் யானைமீது ஏறிப் போர்செய்ய விரும்பினான். அதற்குத்தக்க ஒரு யானைமேல் ஏறிக்கொண்டான். காசி நகரத் தரசனாகிய கேமதூர்த்தி என்பவனும் யானைமீது ஏறிக்கொண்டு வீமனோடு போர்செய்யத் தொடங்கினான். இரண்டு வீரர்களும் மிகுந்த ஊக்கங்கொண்டு போர் புரிந்தார்கள். தாக்கலும் மோதுதலும் வலிந்திரிதலும் இடந்திரிதலும் ஆகிய போர்ச் செயல்களில், இரண்டு யானைகளும் ஓரிடத்திற் கற்றனவோ என்னுமாறு தன் தன் பாகர்களின் குறிப்படியே நின்று, தம்முள் உண்மையிற் பகைத்தனபோன்று போர்செய்து கொண்டிருந்தன. அவற்றின்மேல் இருந்த வீரர்கள் இருவரும், கைகளில் வில்லேந்திக் கணைகளை ஒருவர்மேல் ஒருவர் பொழிந்து போர்செய்து கொண்டிருந்தார்கள். வீமனின் கணைகளைக் காசிமன்னனால் தாங்க முடியவில்லை. அவன் சினம் அடைந்தான். வேலான்றை எடுத்துச் சுழற்றி

வீமன் மேல் எறிந்தான். அதனை வீமனது கணை ஒன்று தூளாக்கி விட்டது. காசி அரசனுபம் வீமனும் யானை மீதேறிப் பொருத காட்சியை,

“அடிக்கை கனத்து, மதம் மொழி அழியின் அளவும் புகரால் அழகு எய்தி, மடிக்கினும், மண் உறு கையது; செந்நிற வாயது; தேயா மதிதன்னை

ஒடித்து இரு பக்கமும் வைத்தென மகரிகை ஒன்றி, ஒன்றி ஒன்னார் மெய் இடிக்கும் மருப்பது; புன்னையின் நாள்மலர் என்னும் சீரது, இரு கண்ணும்.”

“திலகமும் ஓடையும் இலகுறு நெற்றியது; ஆலவட்டச் செவியாலே, பல திசை மாருதம் உய்ப்பது; செம் புகர் பட்டின் தொழிலின் பயில்கிற்பது; உலகினை மேல்கொளுமவனது எனக் களி ஊறியதால்; அங்குலம் ஒத்து, குலவிய மத்தகம் ஒத்த கழுத்தில் உயர்ந்தது, அம் பொன் குவடு என்ன”.

"உரத்தினில் முச் சுழி உடையது; தாள் வலி கலதூண் ஒப்பு என்று உரை செய்யும் தரத்தது; வெண்ணெய் நிறத்த நகத்தது; தண் அம் துளவன் நிலை ஒத்த திரத்தினது; ஆமை கிடந்த எனும் புற அடியது; அங்கம் திண்ணென்றே உரத்தது; நல் உதரத்தது; இளங் கமுகு ஒத்தது அம்ம, வாலதி;"

"தூணும் விலங்கும் முறிப்பது; பாகு பரிக்கோல் யாவும் தூரத்தே காணினும், நின்ற கொதிப்பது; தன் நிழல் கண்டு சீறும் கருத்தது; நீள் நடம் முதலிய தொழில் ஒரு நாலும் நிரந்தது; மேரு நிகர் என்னச் சேண் உயர் போதர, ஏழு முழம் உடையது; தெவ்வர் அஞ்சும் அவ் வேழம்".

"ஆசு இல் அருந் திறல் ஆசுகன் மைந்தனும், ஆண்மைக்கு எண்ணும் அடல் வீரன் காசி நரேசனும், ஏழ் உயர், ஏழ் மத மாரிசிந்தும், கரி மேலோர், தூசியின் வந்து, முனைந்து முனைந்து இரு தோலும் தோலும் போர் செய்ய, வாசவர் ஓர் இருவோர், இரு கார்மிசை மலைவது என்ன, மலைவுற்றார்"

ஆகிய பாடல்கள் புலப்படுத்தும்.

**காசிமன்னன் முடிவு**

மேலும் சில கணைகளால் வீமன் காசிமன்னனுடைய யானையைக் கொன்று வீழ்த்தினான். காசிமன்னன் அந்த யானையில் நின்றும் திடீரெனக் கீழே குதித்து நிலத்தில் நின்றான். கையில் ஒருவயிரத் தண்டத்தை ஏந்திக்கொண்டு ஓடிவந்து வீமன் ஏறியிருந்த யானையை அடித்துத் தள்ளி விட்டான். உடனே வீமன் நிலத்திற் பாய்ந்தான். தானும் ஒரு கதையைக் கையில் எடுத்துக்கொண்டு அவனுடன் கதைப்போர் புரிந்தான். இருவரும் நீண்டநேரம் கண்டவர்கள் வியப்புடையுமாறு கதைப்போர் செய்துகொண்டிருந்தார்கள். காசிமன்னனால் வீமனுடைய கதையடிகளைத் தாங்க முடியவில்லை. குருதி கக்கிக்கொண்டு நிலத்தில் விழுந்து இறந்தான். அவனுடைய படைகள் யாவும் முறிந்தோடிப் போயின. துரியோதனனுடைய படையே சிதறத் தொடங்கிற்று. கன்னன் அப் படைகளை ஒன்றுபடுத்தி மேலும் போர்புரியச் செய்தான். அரசரோடு அரசரும், யானைவீரரோடு யானைவீரரும், குதிரைவீரர்களளோடு குதிரைவீரர்களும், தேர்வீரர்களோடு தேர்வீரர்களும் எதிர்த்தார்கள். உலக முடிவுக்காலமோ என்று செல்லுமாறு கடும்போர் நடைபெற்றது. இருபக்கத்திலும் பலர் மாண்டார்கள்.

**நகுலனும் கன்னனும்**

கன்னனும் நகுல சகாதேவர்களும் எதிர்த்துப் போர் செய்தார்கள். அவர்கள் குதிரை வீரர்களாகவே நின்று போர் புரிந்தார்கள். குதிரைகளும் போருக்குத் தக்கவைகளாக இருந்தன. தம் தலைவர்களுடைய குறிப்பறிந்து அவைகள் போர்புரிந்தன. நகுலனும் கன்னனும் நேருக்கு நேர் நின்று போராடினார்கள் நகுலன் தளர்ச்சியடைந்தான். நகுலன் தளர்ந்த சமயத்தில் கன்னன் அவனைக்ட கொன்றுவிடலாம். ஆயினும் கன்னன் அவ்வாறு

செய்யவில்லை. தாயாகிய குந்திக்குக் கொடுத்த உறுதிமொழியை எண் நகுலனைக் கொல்லாமல் விட்டுவிட்டான். நகுலனோடு துணையாக நின்ற மகதமன்னனையும் விடதரனையும் கன்னன் போர்முகத்தில் கொன்று வீழ்த்திவிட்டான்.

“இருவர் பரிகளும் உரன் உற முழுகின;

இருவர் வலவரும் விழ, எரி கதுவின;

இருவர் இரதமும் அழிய, முன் முடுகின;

இருவர் துவசமும் அற, விசை கடுகின;

இருவர் சிலைகளும் நடு அற, மருவின;

இருவர் கவசமும் இடை இடை கெழுமின;

இருவர் கவிகையும் மறிதர, வருடின;

இருவர் உடலமும் எழுதின கணைகளே”;

“கன்னனும் பரி நகுலனும் தம காலின் நின்றிடவே,

பின்னரும் பொரு பாகர் தந்த பிறங்கு தேர்மிசையார்,

முன்னர் அம்பு தொடுத்த போரினும் மும் மடங்கு பொர,

மன்னர் யாரும் மதிக்குமாறு மலைந்து போர் செய்யவே,

ஆகிய பாடல்கள் நகுலன் -கன்னன் போரிட்டதைச் சுட்டுகின்றன. குதிரையிலும் தேரிலும் நின்று அவ்விருவரும் ஆவேசமாகப் போரிட்ட காட்சியை இப்பாடல்கள் தெளிவாகப் பளிச்சிட்டுக் காட்டுவவனவாய் அமைகின்றன.

**அருச்சுனனும் கன்னனும்**

நகுலனைத் தோற்கடித்தபிறகு கன்னன் அருச்சுனன் மேலே திரும்பினான். அருச்சுனன் மிகுந்த சினங்கொண்டான். இருகணைகளைக் கன்னனுடைய மார்பிலே செலுத்தினான். கன்னனும் அருச்சுனனும் ஒருவருக்கொருவர் தளராமல் போர்செய்து நின்றார்கள். பெரும்போருக்குப் பிறகு அருச்சுனன் கணைகளால் கன்னன் தளர்ந்துநின்றான். அருச்சுனன்

மேற்கொண்டு அவனை யாதும் செய்யாமல் விட்டுவிட்டான். கன்னன் சேரனோடு சென்று போர் புரிந்தான். ஒருபக்கத்தில் சகுனியும் பாண்டியனும் போர்செய்து கொண்டிருந்தார்கள். ஒருபக்கத்தில் துச்சாதனனும் சகதேவனும் போர்செய்து கொண்டிருந்தார்கள். ஒருபக்கத்தில் அசுவத்தாமனும் வீமனும் போர்புரிந்து கொண்டிருந்தார்கள். வீமன் அசுவத்தாமனுடைய தேரை யழித்தான். தேரோட்டியையும் குதிரைகளையும் கொன்றான். அவன் மற்றொரு தேரில் ஏறிக்கொண்டு வில்லில் கணைகளைத் தொடுத்து வீமன்மேல் சொரிந்தான். கேகய மன்னனும் சுருதகீர்த்தியும் போர்புரிந்தார்கள். கிருதவன்மனோடு நின்று போர்செய்த சிகண்டி சிறிது நேரத்தில் புறங்காட்டி யோடிவிட்டான். திட்டத்துய்மன் கிருபனோடு போர்புரிந்தான்; தேர் முதலியன இழந்து தோற்று ஓடிப்போனான். இவ்வாறு இரு திறத்தினரும் போர் புரிந்தபோது அந்தப் போர்க்களம் எங்கம் தலை, கால், கை தேர்ச்சில் என்னும் சிதைந்த உறுப்புக்களே நிறைந்திருந்தன. பேய்கள் பல நின்று கூத்தாடின. கழுகுகள் விண்ணிற் பறந்து பந்தரிட்டன. அந்தப் போர்க்களத்தின்நிலை, புலவர்களாலும் ஒழுங்குபடுத்திச் சொல்ல முடியாமல் இருந்தது, இப்போர்க்களச் செய்தி,

“அல்லி நாள் முகை அம்புயங்கள் அலர்த்தும் நாதன் மகன்
சொல்லினால் உயர் ஆயுள் வேதியர் சுதனை, ‘இன்று அமரில்
கொல்லின் நா தவறும்கொல்?’ என்று, ஒரு கோலினால் அழியா,
வில்லின் நாண் அழியா, ‘நடக்க’ என மீள விட்டனனே”

“நின்ற மா நகுலற்கு வன் துணையாகி நின்றிடலால்,
மன்றல் மாலை விசால மார்பினன் மகத பூபனையும்,
வென்றி வேல் முருகற்கு நேர் புகழ் விடதரன்தனையும்,
கொன்று, வாசவன் மைந்தன் மா முனை குறுக ஏகினனே”,

“மடங்கல்மேல் எழு மதமும் மேலிட வரு பணைக் கரிபோல்,
விடம் கொள் சாயக வில்லி சென்று, தன் வில் குனித்து, அடு போர்
தொடங்கும் முன், பலர் வில் எடுத்தவர் சொல்லும் வில்லி அவன்
திடம் கொள் மார்பினில் அம்பு இரண்டு தெரிந்து விட்டனனே”,

“அருண வெங் கதிர் ஆயிரத்தவன் அன்பினால் உதவும்
கருணனும் சில பகழி ஓர் இரு கண்ணர் மார்பில் விடா,
‘வருணமும் பெயரும் பிறிந்திலர்; மனனும் ஒன்று’ எனவே

தருண வாள் நிலவு எழ நகைத்து, உரைதந்து போயினனே",

"அன்று போர் புரி சேனையின் பதியான வீரனை, 'நீ
இன்று போய் இனி நாளை வா' என இனிது இயம்பினனால்
வென்றி கூர் வரி வின்மையால் அடல் வெவ் அரக்கரை முன்
கொன்ற காளையை ஒத்த பேர் இசை கொண்ட ஆண்மையினான்."

ஆகிய பாடல்களில் பளிச்சிடுகிறது. மேலும் அசுவத்தாமளோடு வீமன் செய்த வெம்போரினை,

வேரி அம்புயன் வேதம் யாவையும் வில்லின் வேதமும் வல்
ஆரியன் தரு கடவுள் மைந்தனும், அனிலன் மைந்தனுமே,
தூரியம் பல கோடி கோடி துவைப்ப, 'வெஞ் சமரே
காரியம்; பிறிது இல்லை' என்று, கலந்து மோதினரே",

"சுரர் உலோகம் மகிழ்ந்து அணைந்த துரோணன் மா மகன் -மேல்
வரு சதாகதி மகனை நால் -இரு வாளி ஏவி, வெகுண்டு
இரத நேமி குலைந்து, சூதனொடு இவுளி நாலும் விழ,
பொருது சீறினன், -முன் பயந்த புராரியே அனையான்",

"மீள மற்று ஒரு தேரில் ஏறிய வீமன் வெஞ் சினம் மேல்
மூள, மல் புய கிரி தடித்திட, மூரி வில் வளையா,
வாளம் ஒப்பு என மற்று அவன் கொடி வாசி பாகொடு தேர்
தூளம் உற்றிட முதுகிடும்படி தொட்டனன், கணையே",

ஆகிய பாடல்கள் சுட்டும்.

**சஞ்சத்தகர் முதலியோர் முடிவு**

துரியோதனன் பக்கத்துப்படை தோற்பதற்குமுன் போர் மேலுங் கடுமையாக நடைபெற்றது. சஞ்சத்தகரும் நாராயணகோபாலர்களும் அருச்சுனனை எதிர்த்து நின்றார்கள். சத்தியசேனன் என்பவன் ஒரு தோமரத்தை எடுத்து அருச்சுனனுடைய வில்லிலே மோதியடித்தான். சித்திரசேனன் என்பவனை அருச்சுனன் விண்ணுலகிற்கு அனுப்பிவிட்டான். மற்றும் பல கணைகளைச் செலுத்திச் சஞ்சத்தகரையும், கண்ணபிரான் மக்களாகிய நாராயண கோபாலர்களையும் கொன்றுவிட்டான். இதனைப் பாத்த அரசர்கள் அஞ்சி நடுநடுங்கினார்கள். முதுகிட்டோடியவர்கள் அனைவரும் தோற்றோடி வந்ததைக் கண்ட துரியோதனன், மற்றும் படைகளைத் திரட்டிக்கொண்டு அருச்சுனன் மீது போருக்கு வந்தான்.

**தருமரும் துரியோதனனும்**

துரியோதனனை மடக்கிக்கொண்டு தருமர் போர் செய்யத் தொடங்கினார். நீண்ட நேரம் இருவரும் பெரும் போர் செய்தார்கள். போர்க்களம் செங்களமாகிவிட்டது. யானைகளும் குதிரைகளும் மிகுதியாக அழிந்தன. தேர்கள் ஒழிந்தன. காலாட்கள் கணக்கில்லாமல் மடிந்தார்கள். துரியோதனன் தருமருடைய மார்பில் குருதி புறப்படுமாறு பல கணைகளைத் தூவிவிட்டான். தருமர் அவைகளையெல்லாம் விலக்கிவிட்டார். துரியோதனனுடைய தேர் குதிரை முதலியவற்றை அழித்துவிட்டார்; தேரோட்டியை ஒழித்துவிட்டார். துரியோதனன் நிலத்தில் நிற்குமாறு செய்துவிட்டார். பிறகு துரியோதனனை வளைத்துக் கொண்டு, "மன்னவர் அவையில் மாமனுடைய வஞ்சனையால் ஆடி வெற்றி பெறப்பெறும் சூதுபோர் என்று நினைத்துக்கொண்டா இங்கு வந்து விட்டாய்? இது நால்வகைப் படைகளையுங்கொண்டு மோது போராயிற்றே. இஃது உண்மை ஆற்றல் உடையவர்கட்குத்தான் வெற்றியைக் கொடுக்கக் கூடியது. இனியும் என்னுடைய கணைகள் புறப்படுமானால் உள்ளன அழ்த்துக் கொன்றுவிடும். உன்னைக் கொல்வதாக வீமன் வஞ்சினம் கூறியிருப்பதால் உன்னை விட்டு வருகிறேன். இனி போர்முகத்தில் தலைகாட்டடதே என்று கூறினார். இன்னும்

தோல்வியே கிடைத்து என்று துரியோதனையும் அவனுடைய படைவீரர்களும் நாணத்துடன் ஓடிவிட்டார்.

**போர்க்களம் புகுதல்**

முன்னாட்போரில் தோற்றுப்போன துரியோதனன் எஞ்சியிருந்த தன்னுடைய படைகளையெல்லாம் ஒருங்கு திரட்டிக்கொண்டு, பலவகைப் போர்க்கருவிகள் முழங்கச் கன்னனோடு போர்க்களத்தை யடைந்தான். பதினாறு நாள் நடந்த போரில் உற்றார் உறவினர்களில் பெரும்பாலானவர்களை அழிவுக்குள்ளாக்கிய அவனுள்ளம் வெற்றியையோ தோல்வியையோ விரைந்து நாடியது. அந்த இரண்டில் ஒன்றை அடைதற்கு அவன் துடித்து நின்றான். படைத்தலைவனான கன்னனுக்கு அன்று முடிவு நாள். அதனை உணர்ந்துதானோ என்னவோ அவனை நன்றாக ஆடை அணி கலன்களால் அழகுபடுத்தியிருந்தான். கன்னனுடைய அழகைக் கண்டு எல்லோரும் உள்ளங் களித்தார்கள். பதினாறாம்நாள் போரில் புறங்காட்டி யோடிய அரசர்கள் பேராரவாரத்துடன் போர்க்களத்திற்கு வந்து சேர்ந்தார்கள். தருமர் தம் உடன்பிறந்தவர்களாகிய வீமன் அருச்சுனன், நகுலன், சகதேவன் ஆகியவர்களோடும் கண்ணபிரானோடும் போர்களத்தை யடைந்தார். அருச்சுனனுடைய தேரிலே இருந்த கண்ணபிரானைப் பார்த்து, "போரிலே அழிவு மிகுதியாக ஏற்படுகிறதே. கன்னன் எப்பொழுது முடிவான்?"

இன்றைப் போரிலே கன்னனுக்கு முடிவு ஏற்படுமா?" என்று மனத்தளர்ச்சியுடன் கேட்டார். இச்செய்திகளை,

ஆகிய பாடல்களின் வழி அறியமுடிகிறது.



**கண்ணபிரான் கூறுதல்**

கண்ணபிரான் தருமரைப் பார்த்து, "இன்றைக்குக் கன்னன் அருச்சுனன் கணைகளால் இறப்பான், நாளைக்குத் துரியோதனனும் வீமன் கையால் இறப்பான். பிறகு அத்தினாபுரியும் நிலவுலகும் நின்னுடையவைகளாகிவிடும்", என்று பதிலுரைத்தார். இதனை,

"இத் தினம் இரவி சிறுவனும் விசயம்
ஏவினால் இறந்திடும்; நாளைத்
தத்தின புரவித் தேர்ச் சுயோதனனும்
சமீரணன் தனயனால் மடியும்;
அத்தினபுரியும் ஈர்-இரு கடல் சூழ்
அவனியும் நின்ன ஆம்' என்றான்
சித்தினது உருவாய் அகண்டமும் தான் ஆம்
செய்ய கண் கருணை அம் திருமால்"

என்னும் பாடல்வழி அறியலாம்.

**நன்றி பாராட்டுதல்**

கண்ணபிரான் அருளிய உரைகளைக் கேட்ட தருமர் கண்ணபிரான் செய்தருளிய நற்செயல்களை யெல்லாம் எடுத்துப் பாராட்டத் தொடங்கினார். "காத்தல் தொழிலுக்குத் தலைவனாக விளங்கும் பெருமானே! விளையாட்டுக் காலத்தில் துரியோதனன் கங்கையாற்றிலே நீர் விளையாடும் இடத்திலே நாட்டிவைத்த கொடிய கழுமரத்தின் நுனியில் விழுந்து இறவாமல், வண்டின் வடிவத்தோடு வந்து வீமனுடைய உயிரைக் காப்பாற்றி யருளினாய்; பசிய வீரக் கழலையணிந்த அரசர்களுடைய அவையில் கணவர்களாகிய யாங்கள் ஐவரும் யாதும்செய்ய முடியாதிருந்த நிலைமையில், திரௌபதியனுடைய மானத்தைக் காப்பாற்றி யருளினாய்; காட்டிலிருக்கையில் கடும்பசியுடன் வந்த துருவாச முனிவனால் கொடிய சாபத்தை அடையாமல் காப்பாற்றியருளினாய்; என்னை ஒரு பொருளாக மதித்துத் துரியோ தனனிடம் தூது சென்றருளினாய்; அப்பொழுது விதுரனுடைய வில்லை அவனே ஒடித்தெறியுமாறு செய்து எங்களைக் காப்பாற்றினாய்; கன்னனுடைய கவசகுண்டலங்களையும் அகற்றினாய்; பகைவர்களுக்கு வெற்றியேற்படாதவாறு நாளையுங் கோளையும் மயக்கிப் பகைவர்கட்கு

உரியனான இராவானைப் பலிகொடுத்து வெற்றியை எமக்கே தேடினாய்! அச்சத்தினாலோ அருளாலோ போர் செய்ய மறுத்த அருச்சுனனுக்கு மெய்யறிவைக் கொடுத்து அவன் போரில் இறங்குமாறு செய்தாய்; அருச்சுனன் மேல் பகதத்தன் எறிந்த வேலை உன்னுடைய மார்பிலே ஏற்றுக்கொண்டு அருச்சுனனைக் காப்பாற்றினாய்; அபிமன்னன் இறந்த அன்று அருச்சுனனும் இறந்தொழியாமல் முனிவரைக் கொண்டு சூழ்ச்சியாக அருச்சுனனைப் பாதுகாத்தாய்; ஓர் இரவிலேயே திருக்கயிலைக்கு அழைத்துக்கொண்டு போய்த் திரும்பினாய்; சுதாயுவின் கதையை உன்னுடைய மார்பிலே ஏற்றுக்கொண்டு, அந்தச் சுதாயுவே இறக்கும் படி செய்தாய்; அரசர்கள் மயங்குமாறு சங்கை ஊதினாய்; உருளைப்படையால் கதிரவனை மறைத்து அருச்சுனன் தன்னுடைய குளுரையை நிறைவேற்றுமாறு செய்தாய்; அசுவத்தாமனுடைய நாராயணக் கணையால் எல்லோரும் அழிந்துபடாமல் எங்களையெல்லாம் சிறிது நேரமேலும் யோகியாக்கினாய்; நீ மேலும் செய்துள்ள அருட்செயல்களையெல்லாம் நான் எடுத்துரைப்பது அருமையாகும்” என்று கூறிப் பணிந்தார். கண்ணபிரான் தருமரைத் தழுவிக்கொண்டார். “நீங்கள் ஐவரும் போரில் இறக்கா வண்ணம் நான் காப்பாற்றுகிறேன்” என்றார். திட்டத்துய்மனைப் படையை அணிவகுக்குமாறு கட்டளையிட்டார்.

**கன்னன் சல்லியனைத் தேரோட்டியாக்க வேண்டுதல்**

பாண்டவர்களுடைய படை அணிவகுக்கப்பட்டதைக் கன்னன் கண்டான். அவன் துரியோதனனைப் பார்த்து அங்குக் கூடியிருந்த அரசர்கள் எல்லோரும் கேட்குமாறு “ஓ துரியோதன மன்னனே! நான் கூறுவதனைக் கேள். அருச்சுனனுக்குக் கலகங்களையெல்லாம் செய்கின்ற வஞ்சகங்களையே பழகிய கள்ளனாகிய கண்ணன் தேர்ப்பாகனாக நிற்கின்றான். அவனுக்கு ஒப்பானவர்கள் தேவர் உலகினும் இல்லை. எல்லாத் திக்குகளிலும் ஆரவாரம் உண்டாகும்படி எதிர்த்துவருகிற நடைகளையுடைய குதிரைகளின் மனத்தை அறிபவனும் சமயத்திற்கு ஏற்ற சூழ்ச்சிகளைத் தெரியப்படுத்துபவனும் தேர்செலுத்துந் தொழில் வல்லவனும் ஆகிய சல்லியன் தேரோட்டுவதில் கண்ணனுக்கு ஒப்பானவனாவான். நீ அந்தச் சல்லியனை எனக்குத் தேரோட்டியாக எவ்வாறேனும் செய்துவிடுவாயானால் நான் இன்று ஒரு பொழுதுக்குள்ளேயே பகைவர்கள் எல்லோரையுங் கொன்று உலகங்களை எல்லாம் உனக்கே உரிமையாக்கி என்னுடைய செஞ்சோற்றுக்கடனைத் தீர்த்துவிடுவேன். எனக்கு என்று ஒரு ஊரும் ஒரு குலமும் இல்லாத என்னை உங்கள் குலத்தவரில் ஒருவனாகப் பாவித்துத் தேரோட்டியின் மனையிலே வளர்ந்த எனக்கு முடி சூட்டி

உன்னினும் சிறப்புப்பொருந்திய அரசனாக வைத்தாய் இத்தகைய பேருதவிசெய்த உனக்கு அல்லாமல் என்னுடைய அரிய உயிரைப் போரில் வேறு யாருக்குக் கொடுக்கப்போகிறேன்" என்று கூறினான்.

காப்பியங்கள்

குறிப்புகள்

"ஓர்ஊரும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள்குலத் துள்ளோரில் ஒருவன் ஆக்கித்
தேரூரும் அவர்மனைக்கே வளர்ந்த என்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி அம்பு ராசி
நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினுஞ்சீர் பெறவைத்தாய் நினக்கே அன்றி
ஏரூரும் கதிர்முடியாய் உற்ற போரில்
யார்க்கினிஎன் உயிர் அளிப்ப தியம்பு வாயே."

**துரியோதனன் சல்லியனை வேண்டுதல் :**

கன்னன் கூறியவைகளைக் கேட்ட துரியோதனன் சல்லியனிடம் சென்றான். சல்லியனைப் பார்த்துச் "சல்லிய நண்பா! நான் சொல்வதைக் கேள் நீ எனக்கு ஒரு வரங்கொடுத்தல் வேண்டும் என்று கூறிக் கையெடுத்து வணங்கினான். துரியோதனனுடைய குழுவினைக் கண்ட சல்லியன் "நண்பா! ஏன் இவ்வாறு தயங்குகிறாய்; ஆக வேண்டியதைக் கூறு; முடிக்கின்றேன் என்றான். மேலும் துரியோதனன் சல்லியனைப் பார்த்துக் கண்ணபிரான் பாண்டவர்களைக் காப்பாற்றுவதைப்போல நீ எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். இப்பொழுதுங்கூடச் சல்லியனுக்குத் துரியோதனனுடைய எண்ணம் இன்னதென்று தெரியவில்லை. மேலும் அவன் துரியோதனைப் பார்த்து "கண்ணபிரான் பாண்டவர்களைக் காப்பதுபோல் உங்களை நான் எப்படிக் காக்கமுடியும்? அவர் எல்லா ஆற்றல்களும் உடையவர். அத்தகைய கண்ணபிரானுக்கு நான் ஈடாவேனோ என்று கூறினான். தன் குறிப்பைச் சல்லியன் உணர்ந்துகொள்ளாததைக் கண்டு

துரியோதனன் மேலுஞ் சல்லியனைப் பார்த்து "அருச்சுனனுக்குக் கண்ணபிரான் தேர் செலுத்துவதுபோல இன்றுமட்டும் நீ கன்னனுக்குத் தேரோட்டியாக இருந்து தேர்செலுத்த வேண்டுகிறேன். நீ அவ்வாறு செய்தால் அல்லாமல் நான் பாண்டவர்களை வென்று சிறப்படைய முடியாது. இதனைத்தான் நின்னிடத்தில் இரக்கின்றேன்" என்று கூறினான். இவ்வாறு சல்லியனிடம் வேண்டுவதை,

"நேர் செலுத்தும் தனிச் செங்கோல் உடையாய்! யாது
நினைவு உனக்கு? என்று அவன் வினவ

*Self Instructional Material*

நிருபன்தானும்

தார் செலுத்தும் பெருஞ் சேனை சூழ நின்ற

சல்லியனை முகம் நோக்கி தனஞ்சயற்குத்

தேர் செலுத்தும் முகுந்தனைப்போல் நீயும் இன்று

தேர் இரவி மகன் திண் தேர் செலுத்தின் அல்லால்

போர் செலுத்தி ஐவரையும் வென்று வாகை

புனைதல் நமக்கு அரிது என்று போற்றினானே

என்ற பாடல் புலப்படுத்தும்.

**சல்லியன் சினந்து கூறுதல்:**

துரியோதனன் சொல்லியதைக் கேட்டுச் சல்லியன் சினம் அடைந்தான். அவன் துரியோதனனைப் பார்த்து “நீ சிறிதும் எண்ணிப்பாராமல் பேசிவிட்டாய். மானுக்குப் புலி ஏவல் செய்யுமா? புரியுமாயின் மந்திர நாட்டு மன்னனாகிய யான் கன்னனுக்குத் தேரோட்டியாவேன். நின்னைத் தவிர வேறொருவர் இந்த மொழியைப் பகர்ந்திருப்பாயின் சொன்னவர்கள் நாவை இந்நேரம் துணித்திருப்பேன். சொன்னது நீயாகையால் நான் பொறுத்துக்கொண்டேன்” என்று கூறிக் கண்கள் சினத்தால் சிவக்கப் பெற்றான். மேலும் அவன் துரியோதனனைப் பார்த்து “நால்வகைப்பட்ட தேரோட்டியினுடைய மகனுக்குத் தேரோட்டுதல் இழிவுதருஞ் செயலன்றோ? நீ என்னுடைய ஆற்றலை நன்கு

அறிந்துகொள்ளாமலே பேசிவிட்டாய். பகைவர் படையை இரு கூறுபடுத்தி ஒரு கூற்றை எனக்கும் மற்றொரு கூற்றைக் கன்னனுக்குமாக விட்டுப்பார். நான் என்னுடைய பகுதியை விரைவில் அழித்து விட்டுக் கன்னன் பகுதியையும் அழிக்கிறேன். அவ்வாறு அழிக்கவில்லையென்றால் நான் கன்னனுக்குத் தேரோட்டுகிறேன்” என்று கூறினான்.

“புல்லிய சொல் மதியாமல் என்னைநோக்கிப்

புகன்றுனையால் புல்மேயும் புல்வாய்க்கு என்றும்

வல்லிய மாப் பணித்த தொழில் புரியின் அன்றே

மத்திரத் தான் கன்னனுக்கு வலவன் ஆவான்?

சொல்லிய நா எனப்படும் மற்று ஒருவன் சொன்னால்?

சுயோதனன் ஆதலின் பொறுத்தேன் சொன்னது ‘

என்று

சல்லியன் மா மனம் கொதித்து புருவம் கோட்டி

தடங் கண்ணும் மிகச் சிவந்தான் தறுகணானே.”

“சதுர் விதத் தேர் வீரருக்கும் தடந்தேர் ஊரும்

சாரததின் தனயனுக்குத் தடந் தேர் ஊர்தல்

மது மலர்த் தார் வலம்புரியாய்! இழிவு அன்றே? நீ

மதித்த விறல் கன்னனுக்கும் எனக்கும் இப்போது

எதிர் மலைக்கும் சேனை தன்னை இரு கூறி ஆக்கி

இகல் புரிந்தால் என் கூற்றை இரிய வென்று அக்

கதிர்அளித்தோன் கூற்றினையும் அழித்திலேனேல்,

கடவுவன் தேர் அவற்கு என்று கனன்று சொன்னான்.”

**துரியோதனன் மேலும் வேண்டுதல் :**

சல்லியன் உரைகளைக் கேட்ட துரியோதனன் சல்லியனைப் பார்த்து “நண்பா! சினந்துகொள்ளாதே இன்று ஒருநாளைக்கு நமது காரியம் வெற்றிபெறுவதற்காக நீ தேரோட்டுவதில் என்ன இழிவு வந்துவிடும் என்று நீ எண்ணுகிறாய்? அந்நாளில் சிவபிரானுடைய தேரை நான்முகன் ஓட்டினான். இப்பொழுது அருச்சுனனுடைய ரேரோட்டியாக இருக்கிற கண்ணனும் திருப்பாற் கடலிலே பள்ளிகொண்ட திருமாலின் ஒருகூறு என்று எல்லோரும் கூறுகிறார்கள். ஆநிரை கவர்ந்த காலத்தில் வில்வீரனாகிய அருச்சுனன் உத்தரருழ குாரனுடைய தேரோட்டியாக இருந்தான். இவர்கள் யாவரும் இழிவடைந்தா போனார்கள்? பேராண்மையாளனாகிய கன்னனுடைய தேரை ஓட்டினால் பெருமைதான் ஏற்படுமே தவிரச் சிறுமையேற்படாது. எல்லாவற்றிலும் சிறந்தவர்கட்கு தான் நன்கு தேர்விடத் தெரியுமே தவிர எல்லாருக்கும் தெரியுமா? என்று கூறினான்.

**சல்லியன் இணக்கம் :**

துரியோதனன் வற்புறுத்தி வேண்டிக்கொள்ளவே சல்லியன் நல்லியல்போடு இணங்கினான். இச்செய்தி துரியோதனனுடைய படையில் உள்ள யாவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவர்கள் “இனிமேல் நம் துரியோதன மன்னனுக்கே வெற்றியுண்டாகும்” என்று களிப்படைந்து ஆரவாரித்தார்கள்.

**சல்லியன் தேரோட்டுதல் :**

சல்லியன் தேரோட்டுதற்கு இசைந்துள்ள செய்தியைக் கன்னன் அறிந்தான். தான் தானங்கொடுத்து இழந்துபோன கவசகுண்டலங்களை மீளவும் பெற்றாற் போலக் களிப்படைந்தான். சல்லியன் தகுந்த குதிரைகளைத் தெரிந்தெடுத்துத் தேரிற் பூட்டிக்கொண்டு தேரை ஓட்டத் தொடங்கினான். கன்னன் படையை அணிவகுத்து ஒழுங்காக நிறுத்தினான். துரியோதனன் வெற்றியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் தெரிந்தவர்

தெரியாதவர் உறவினர் பகைவர் என்னும் மாறுபாடு காட்டாமல் தானதருமங்களை மிகுதியாகச் செய்தான். பிறகு சல்லியனைப் பார்த்து "நான் சிறந்த வில்லைப் பெற்றிருக்கிறேன். அருச்சுனனைத்

தொலைப்பதற்குப் பாம்புக்கணையையும் பெற்றிருக்கிறேன். கண்ணனுக்கு ஒப்பான நின்னைத் தேரோட்டியாகவும் அடைந்துள்ளேன். எனது நல்வினை வியக்கத்தகவாறு இருக்கிறது. எனக்கு ஒப்பானவர் அருச்சுனன் அல்லாமல் வேறு எவரும் இலர் நாங்கள் இருவரும் ஒத்த பேராண்மையாளர்களாவோம். துரியோதனன் மனம் மகிழும்படியாக இன்று நான் செய்கிற போராண்மையைப் பார்ப்பாயாக" என்று தன்னுடைய பெருமிதந் தோன்றப் பேசினான். கன்னனுடைய தற்புகழ்ச்சியும், பெருமிதமும் சல்லியனுக்குப் பிடிக்கவில்லை. அவன் கன்னனைப் பார்த்து, இளநகை புரிந்தான். "நீ உன்னுடைய வெற்றியையும் ஆண்மையையும் வீணாக எனக்குச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டா. நீங்கள் இரண்டுபேரும் எதிர்த்து நின்றுபோர் செய்யும்பொழுது உங்களுடைய ஆண்மை விளங்கும். ஒத்திராத ஆற்றல் பொருந்திய நீங்கள் இருவரும் போர் செய்த பொழுதெல்லாம், நாங்கள் பலர் பக்கத்தில் பார்த்துக் ரெகண்டுதான் இருந்தோம். மறந்துங்கூட அஞ்சுதலை யடையாத அருச்சுனனை நீ ஒரு பொழுதாவது வெற்றி கொண்டதை நாங்கள் பார்த்தோம் அல்லேம். நீங்கள் இரண்டுபேரும் பகைமை கொண்டு சொன்ன வஞ்சினத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சினத்துடன் செய்யப்போகிற போரின் முடிவு இப்பொழுது தெரியுமா? அது பிறகல்லவோ தெரியப்போகிறது" என்று கன்னனுடைய செவியில் படும்படியாகச் சல்லியன் சுடச்சுடப் பதில் உரைத்தான்.

சல்லியன் சாற்றிய மாற்றங்களைக் கேட்ட கன்னனுக்கு மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. அவன் சல்லியனைப் பார்த்து, "நான் அருச்சுனனுக்கு ஒப்பானவன் அல்லன் என்று இங்குள்ள படைத் தலைவர்களுக்கு முன்னர், இகழ்தல் வேண்டா. முடியுமானால் தேரை ஓட்டு, இல்லாவிட்டாற் பேசாமற் போ, என்னுடைய போர்த்திறமையைப் பற்றிப் பேசுவதற்கு நீ யார்?" என்றான்.

கன்னன் மாற்றத்தைக் கேட்ட சல்லியனுக்கும் மிகுந்த சினம் உண்டாகிவிட்டது. அவன் தேரை விட்டுக் கீழே இறங்கினான் வாளைக் கையில் எடுத்துக்கொண்டு சுழற்றத் தொடங்கிவிட்டான்.

அஃதோடு கன்னனைப் பார்த்து "உனக்கு நான் தேர் ஓட்டுவேனா? எலியினது ஆரவாரம் பூனைக்கு முன்னே வந்தால் பயன்படுமா?" என்று கூறி இடிபோலச் சினந்து பகைத்தான். கன்னனும் வாளுடன் குதித்தான். இருவரும் வாட்போர் புரிதற்குத் தொடங்கினார்கள். துரியோதனன் இதனைக் கண்டான். விரைந்து இருவர்க்கும் நடுவிற் சென்றான். நன் மொழிகள் கூறிக்

கெஞ்சி இருவரையும் உறவுபடுத்தினான். மீளவும் இருவரும் தேர்மீது ஏறினார்கள்; இருவரும் பகைமை தீர்ந்து தேரில் ஏறியதைக் கண்ட துரியோதனன் அருச்சுனனைக் கொன்று வெற்றியடைந்து விட்டாற் போன்று களிப்படைந்தான். இருவரையும் பார்த்துச் சில மொழிகள் கூறலானான்.

காப்பியங்கள்

குறிப்புகள்

**துரியோதனன் முகமன் கூறியது**

"விதுரனானவன் கண்ணடத்தே நண்பு மிகுந்த தன்மையினால், வில்லை யொடித்துப் போட்டுவிட்டு, நன்னீராடலுக்குச் சென்றுவிட்டான். பலராமன் என் பக்கத்துக்குத் துணைபுரிவதாக இருந்தும், அவனும் எக்காரணம் பற்றியோ விதுரனோடு சேர்ந்து போய்விட்டான். எம் பிதாமகனாகிய வீடுமரும் போர் செய்து தேவர்களில் ஒருவராகப் போய்விட்டார். எங்களுக்கு வில்லாசிரியராக இருந்த துரோணரும் சில நாள் போர் செய்து வீடுபேற்றையடைந்துவிட்டார். சுப்பிரமணியக் கடவுள், அசுரர்களைக் கொன்று தேவர்கட்கு நல்வாழ்வளித்ததுபோல், நீர் என் பகைவர்களைக் கொன்று எனக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும்; என் ஆருயிர் நண்பனாகிய கன்ன! சல்லியன் பாண்டவர்களுடைய உறவினன் என்று உள்ளத்தில் எண்ணாதே. அவன் உண்மை யன்புகொண்டு எனக்கு உதவிபுரிவதற்கு வந்துள்ளான். வஞ்சகத்தனம் சிறிதும் உடையவன் அல்லன். நல்லொழுக்கம் உடையவன். மறைகளாற் சிறந்த கணைகளோடு கூடிய வில் தொழிலில் வல்லவன். இவனோடு எவர் போர் செய்ய வல்லார்? என் மொழிக்குக் கட்டுப்பட்டு இன்று உனக்குத் தேரோட்டியாகி யிருக்கிறான்; நன்மொழி நவில்வதைத் தவிரத் தீமொழி பேசியறியான். அத்தகையானோடு நீ வீண் மொழி பேசிக் கலாம் விளைக்காமல் வெற்றியையே குறியாகக்கொண்டு போரை நடத்துவாயாக" என்று உரைத்தான்.

**கன்னனுடன் போர்**

துரியோதனன் கன்னனிடம் மேற்கண்டவாறு கூறிக்கொண்டிருக்கையில், பாண்டவர் படைத்தலைவனாகிய திட்டத்துய்மனும் சோமககுலத்துத் தலைவராயுள்ள வீரர்களும் கன்னன் நின்ற அப்போர்க்களத்தினிடத்தில் விரைந்து வந்து, வில்லை வளைத்துக் கணைகளைத் தூவினார்கள். இரு பக்கத்தார்கட்கும் போர் கடுமையாக நடந்தது. இரு பக்கத்திலும் பலர் இறந்தொழிந்தார்கள். திட்டத்துய்மனும் கன்னனும் எதிர்த்துப் போர் செய்தார்கள். இருவரும் விட்ட கணைகள் ஒவ்வொருவருடைய உடலையும் மறைத்து விட்டன. திட்டத்துய்மன் கன்னனுக்குத் தோற்றுத் தான் ஏறிய தேருடனே உயிர் தப்பி ஓடிப்போனான்.

**வீமனும் கன்னனும்**

திட்டத்துய்மன் கன்னனுக்குத் தோற்றோடுதலைத் தருமர் கண்டார். கன்னனை எதிர்த்துப் போர் புரியுமாறு வீமனுக்குக் கட்டளையிட்டார். வீமன் கன்னன்மேல் மிகுந்த கடுமையுடன் சென்றான். கன்னனும் வீமனும் மிகுந்த

சீற்றத்துடன் வில்லை வளைத்தார்கள். கணைகளை ஒருவர்மேல் ஒருவர் அளவில்லாமல் தூவிக் கொண்டார்கள். வீமன் கன்னனுடைய தோள்களிலும் உடம்பு முழுவதிலும் கணைகளை எய்தான். வீமனுடன் போர் செய்த கன்னன் நிலையழிந்து தளர்ந்தான். ஆயினும், தான் கன்னனைக் கொன்றால் அருச்சுனனுடைய வஞ்சினத்திற்கு இடையூறு ஏற்படும் என்று கருதிக் கன்னனைக் கொல்லாமலே விட்டுவிட்டு அப்பாற்சென்றுவிட்டான்.

**விடேசேனன் சாத்தகி முதலியோர்**

விடசேனன் என்பவன் சாத்திகியுடனே போர் புரிந்தான். சாத்தகி விடசேனனுடைய தேர் முதலியவைகளை அழித்தான். சோழனும் மாகதன்என்பவனும் யானை மீதிருந்து போர் புரிந்தார்கள். சோழன்மாகதனைக் கொன்று வீழ்த்தினான். மாகதன் வீழ்ந்த அளவிலே துரியோதன்னுடையபடை புறங்காட்டி யோடியது. இதைக் கண்ட அசுவத்தாமன் மனம் வெதும்பிப் பாண்டவர்படையோடு போர்புரியத் தொடங்கினான். அருச்சுனன் அசுவத்தாமனை எதிர்த்து அவனுடைய ஆற்றலை அழித்து விரட்டினான். சுதக்கண்ணன் என்பவன் துரியோ தன்னுடைய இளவல்களில் ஒருவன். அவன் படைக்குப் பின்னே நின்றுகொண்டிருந்தான். தன் படை தோற்றலைக்கண்டு கனன்று வந்தான். அவன் ஓடிவந்த விரைவை நகுலன் கண்டு நகைத்தான். சில கணைகளைத் தொடுத்துவிட அவன் வந்த விரைவைப்போலவே விரைவாக ஓடிப்போய்விட்டான். கன்னன் மீண்டும் போருக்கு வந்தான். அவ்வாறு வந்தவனோடு தருமர் எதிர்த்தார். தருமருடைய கையம்பினான் கன்னன் பக்கத்தார்கள் பலர் இறந்து விழுந்தார்கள். கன்னன்கையம்பினால் தருமர் பக்கத்திலே பலர் மாண்டொழிந்தார்கள். இறந்தவர்களின் தொகை கணக்கிட முடியாமல் இருந்தது. கன்னனும் தருமரும் புரிந்த விற்போரைக் கண்டு தேவர்களும் வியப்படைந்து வாழ்த்தினார்கள். கன்னன் தருமருடைய தோளிலும் மார்பிலும் அம்புகளை எய்தான்.தருமர் கன்னனுடைய தோள்களிலே அம்பெய்து தோள்களைப் பிளந்தார். கன்னனுடைய வில்லையும் முறித்தார். கன்னன் வேறு வில்லையெடுத்துக் கொண்டு போர் செய்து பலரையுங் கொன்று வீழ்த்தினான். அதனால் குருதியாறு பெருகியது. திட்டத்துய்மன் தன்னுடைய தம்பிமார்களாகிய சகதேவன், தண்டதரன், தண்டகன், சித்திரதேவன் முதலியவர்களோடு சென்று கன்னனை எதிர்த்துப் போர் செய்தான். கன்னன் எய்த அம்புகளால் தான் ஏறிய தேரும் பிளந்து வில்லும் முறிபட்டான். திட்டத்துய்மன் தளர்ந்ததைக்கண்டு தருமர் சென்று எதிர்த்தார். கன்னனுடைய வில்லை முறித்தார். கொடியை அறுத்தார். தேரின் கொடிஞ்சியை இடறித் தள்ளினார். தேரோட்டியான சல்லியானது உடலைச் சல்லி சல்லியாகக்கிழித்தார். குதிரைகளையும் வீழ்த்தினார். கன்னனுடைய இரண்டு தோள்களையும் காயப்படுத்தினார். வட கலிங்கர்

காப்பியங்கள்

குறிப்புகள்

முதலியவர்களோடு போர்செய்து அவர்களை விண்ணுலகிற்கு அனுப்பினார். தமது வெற்றிச்சங்கை வாயிலே வைத்து முழக்கினார். அச் சங்கொலியால், உலக உருண்டை வெடித்தது. திக்குகள் செவிடுபட்டன. தேவலோகம் அழிந்தது. கீழுள்ள பாம்புகள் உலகம் முழுவதும் இடிந்தது.

**கன்னனுக்கும் தருமருக்கும் போர்**

கன்னன் தன்னுடைய தேரைச் செலுத்திக்கொண்டு தருமர் இருந்த இடத்திற்கு வந்தான். அவன் தருமருடைய சங்கு முழக்கத்தைக் காட்டிலும் பெரிய முழக்கமாகச் சங்கை முழக்கிக்கொண்டு வந்தான். வந்தவன் தருமருடைய மார்பிலும், வலிய தோள்களிலும் கூர்மையான ஒளியை உடைய பல கணைகள் அழுந்தவும். அச்சுக்களும் மேல்முகடும் உருளைகளும் அழிந்து தேரின் நடுவிடம் பிளக்கவும், சிறந்த கட்டமைந்த வில் நாணியோடு அறுபடவும், வலிமையோடு விளங்குகிற குதிரைகள் பல துண்டுகள் பட்டுப்போகவும், வலிமையுடைய தேரோட்டியினது உடம்பைத் துளைத்து மார்பில் தைத்த அம்புகள் முதுகின் வழியாய் நீங்கவும், கொடிமரம் முரசத்தை எழுதிய அழகிய கொடிச்சீலையுடனே ஒடிபடவும் கன்னன் தன்னுடையவில்லை வளைத்துக் கணைகளைப் பெய்தான். தருமரும் கணைகளை நன்றாகப் பொழிந்து கன்னனுடைய கொடி முதலியவைகளை அறுத்தார். மேலும் தருமர் தளருமாறு கன்னன் போர் செய்தபொழுது வீமன் தருமருக்குத் துணை வந்தான். விமனும் கன்னனும் வீரவெறிகொண்டு போர் செய்தபோது, கன்னன் மூர்ச்சித்து விழுந்தான். சல்லியனால் தெளிவுபடுத்தப்பெற்று எழுந்தான். தன்னை எதிர்த்து நின்ற பலரைக்கொன்று வீழ்த்தினான்.

கன்னன் கணையால் சிங்கசேனன் முதலிய பாஞ்சாலர் எழுவர் மாய்ந்தார்கள். வீமனும் தன்னுடைய படையோடு புறங்காட்டி ஓடத்தொடங்கினான் அச்சமயத்திலே அருச்சுனன் அங்கு வந்து சேர்ந்தான்.

**கன்னனுக்கும் அருச்சுனனுக்கும் போர்**

அருச்சுனன் படையில் உள்ள அரசர்களும், கன்னன் படையில் உள்ள அரசர்களும் எதிர்த்தபோது கன்னன் கணைகளும் அருச்சுனன் கணைகளும் விண்ணை மறைத்தன. அந்தச் சமயத்தில் அசுவத்தாமன் திடீரென்று தோன்றினான். கண்ணனது உருவமும் அருச்சுனனது உருவமும் மறையும்படி கணைகளைப் பொழிந்தான்.அருச்சுனனும் சினங்கொண்டான். அசுவத்தாமனுடைய வில்லுந் தேரும் அழியம்படி கடுமையாகக் கணை

பொழிந்தான். அசுவத்தாமன் வேறு தேரில் ஏறிக்கொண்டு வந்து மீண்டும் பெரும்போர் செய்தான். அதனால் அருச்சுனனும் தளர்ச்சி அடைந்தான். கண்ணன் அருச்சுனனுடைய தளர்ச்சியைப் பார்த்தும் பல உரைகள் கூறி அருச்சுனனைத் தெளிவித்தார். மேலும், அருச்சுனனை நோக்கி, "அசுவத்தாமனைப் பொதுவான ஒரு மனிதன்போல்எண்ணாதே. இப்பொழுது அவனுடைய மார்பிலே அம்பெய்து மார்பைப் பிளப்பாயாக" என்று கூறினார்.

அருச்சுனனும் பிறைமுகக் கணையால் அக்கணமே அவ்வாறு செய்தான். அசுவத்தாமன் பெருமூச்சு விட்டுத் தேரின்மேலே சோர்ந்து வீழ்ந்தான். அசுவத்தாமன் சிரஞ்சீவிகளில் ஒருவனாகையால், அவனுடைய உயிர் போகவில்லை. அசுவத்தாமன் அவ்வாறு வீழ்ந்ததைக் கண்ட துச்சாதனன் விரைந்து வந்து, அவளை அப்புறப்படுத்திக்ொகண்டு போனான்.

**அசுவத்தாமவும் சித்திரவாகனும்**

சோர்ந்து வீழ்ந்து சென்ற அசுவத்தாமா விரைவில் களைதெளிந்து எழுந்துவந்து மீண்டும் போர்செய்யத் தொடங்கினான். அவனைச் சித்திரவாகன பாண்டியன் கண்டு மடக்கிக்கொண்டு கடும்போர் செய்தான். தேரின் மேலும் தேரோட்டியின் மேலும் தேர்க்குதிரைகள் மேலும் பல கணைகளைப் பொழிந்தான். அசுவத்தாமனுடைய வில்லை முறித்துவிட்டான். அன்று அவன் காட்டிய ஆற்றலை எல்லோருழ போற்றினார்கள். பாண்டியனால் வில்லையும் தேரையும் இழந்த அசுவத்தாமா வேறு வில்லுடன் வேறு தேரில் ஏறிக்கொண்டு வந்தான், நூறு கணைகளைப் பாண்டியன்மீது செலுத்தினான். அசுவத்தாமனுடைய களைகளையெல்லாம் பாண்டியன் தக்க தக்க மாற்றுக் கணைகளைக் கொண்டு போக்கினான். மேலும், மூன்று கணைகளைத் தொடுத்துவிட்டான். முற்காலத்தில் அலைகளையுடைய ஏழு கடல்களையும் கால்களினால் மிதித்து வேற்படையினால் வற்றச்செய்த வெற்றிக்கு அடையாளமான கொடிய மீனைக் கொடியை உடைய பாண்டியன் மதமயக்கத்தோடு போர் செய்கிற யானைகளும், குதிரைகளும், தேர்களும், காலாள்களும் அழியும்படி அம்பினால் பகைவர்களுடைய பகையாகிய அக்கடலை வற்றச்செய்தான். மேலும் அசுவத்தாமன் செய்த போரினால் பாண்டியனுடைய அழகிய தேர் அழிந்தது. பாண்டியன் யானைமேல் ஏறிக்கொண்டான். அந்த யானை மிகச் சிறந்தது. அந்த யானையின்மேல் இருந்தபடியே அசுவத்தாமனோடு விற்போர் புரிந்தான். அசுவத்தாமா கணை ஒன்றினாலே அந்த யானையைக்கொன்றுவிழ்த்தினான். யானை இறந்தபிறகு பாண்டியன் வேறு ஊர்தியில்லாமல் காலாளாகவே நின்று விற்போர் புரிந்தான். அசுவத்தாமனை நன்கு காயப்படுத்திய பிறகு அவனுடைய கைக்கணையொன்றினாலே இறந்து வீழ்ந்தான். பாண்டியன் இறக்கவே பாண்டவர்படை புறங்காட்டியது. துரியோதனன் படையோ வெற்றி முழக்கத்தோடு போர் புரிந்தது.

**அசுவத்தாமனும் சோழனும்**

கொற்கையானாகிய பாண்டியன் இறந்ததும் கோழியானாகிய சோழன்ட அசுவத்தாமனை எதிர்த்தான். அசுவத்தாமனைப் பார்த்துத். “தேர்வீரனாகிய நீ காலாள் வீரனாக நின்று போர்செய்த பாண்டியனைக் கொன்றது தகுதியன்று”, என்று இகழ்ந்து கூறினான். “தந்தையைக்

கொன்றவனைக் கொல்லாத நீயும் ஒரு வீரனோ?" என்று எள்ளி நகையாடினான். இருவரும் கடுமையாகப் போர் புரிந்தார்கள். சோழன் அசுவத்தாமனுடைய தோள்களிலும் மார்பிலும் நெற்றியிலும் கணைகளைப்பெய்தான். பிறகு வேல் ஒன்றை அசுவத்தாமன் மீது வீசினான். அவ்வேலால் அசுவத்தாமன் கலங்கி வீழ்ந்தான். சகுனி முதலியோர் அவனை அப்புறப்படுத்தி அவனுடைய துன்பத்தை மாற்றினர். சோழன் மற்றும் பல அரசர்களோடும் போர் புரிந்தான். துன்மருடணன் மகனாகிய சுவாகு, துன்முகன் மகனாகிய சுவாது, கன்னன் மகனாகிய சங்கன் ஆகியோரைக் கொன்று வீழ்த்தினான். எல்லோரும் சோழனுடைய ஆற்றலைப் பாராட்டினார்கள்.

**துச்சாதனன் அழிவு**

துச்சாதனும் அவனுடைய தம்பியர் ஒன்பதின்மரும் வீமனுக்கு முன்னே வந்தார்கள். துச்சாதனன், வீரமொழிகள் பேசிக்கொண்டுவந்தான். வீமன் துச்சாதனனைப் பார்த்து, "துச்சாதனனே! உன்னைப்போன்ற வேறு வீரர்கள் உள்ளரோ? நீ அந்த நாளிலே அரசர்கள் கூடிய அவையில் செய்த ஆண்மையை இந்த நாளிலும்கூட எல்லோரும் புகழ்கிறார்கள். தேரில் ஏறிச்செய்கிற போரிலும் உனக்கு எதிராக யார் இருக்கிறார்கள்? உன்னை நமனுக்கு விருந்திடுநாள் இன்றுதான்; உன்னுடைய தலையை அறுத்து அதிலிருந்து வழிகிற குருதியில் குளித்திடுகிற நாள் இன்று தான்; திரௌபதியின் கூந்தலை முடிக்கவேண்டிய நாளும் இன்றுதான்; நீர்வேட்கை கெடும்படி கையால் நீர் அள்ளிக் குடிக்கப்போகிற நாளும் இன்றுதான். எண்ணத்தகாத எண்ணங்களை யெல்லாம் எண்ணிச் சூதுபோரை உண்டாக்கி எங்கள் ஆட்சியை அழியச்செய்தவனே! நிலவுலகத்தையெல்லாம் அரசாளும் உன்னுடைய தமையனை நாளைக்குக்கொன்று தேவருலகிற்கு அனுப்புகிறேன். நீ இன்றே சென்று அவனுக்கு இடம் பார்த்து வைப்பாயாக", என்று கூறினான்.

வீமன் இவ்வாறு கூறவும் துச்சாதனனோ அவனுடைய தம்பியரோ யாதும் பதிலுரைக்கவில்லை. வில்லைவளைத்துப் போரைத் தொடங்கினார்கள். துச்சாதனனுடைய தம்பியர் ஒன்பதுபேர்களும் வீமனுடைய கணைகளால் விரைவில் மாண்டார்கள். தன்னுடைய கண்ணுக்கு முன்னாலேயே தம்பியர் ஒன்பதின்மர் மாண்டொழிந்ததைத் துச்சாதனன் கண்டான். சினங்கொண்டு வீமனோடு போர்புரியத் தொடங்கினான். தன்னுடைய கணைகளால் வீமனுடைய தேர் முதலியவைகளை அழித்துவிட்டான். வீமனும் துச்சாதனனுடைய தேர், குதிரை மதலியவைகளை அழித்துச் துச்சாதனனுடைய தோள்களிலேயே இரண்டு கணைகளை எய்தான். துச்சாதனனும் வீமனும் தேர் அழியப்பெற்றபடியால் நிலத்தில் குதித்துக் கதைப்போர் செய்யத் தொடங்கினார்கள். தோள்களில் நன்றாகத் தட்டிக்கொண்டு கதைகளை

இறுக்கிப் பிடித்தார்கள். கதைகள் ஒன்றோடொன்று தாக்கி நெருப்புப்பொறி சிதறுமாறு தாக்கினார்கள். வலசாரியும் இடசாரியுமாக முன்னே மண்டலகதியைப் பழக்கினார்கள். அண்மையில் சென்று நெருங்கினார்கள். இடிபோல அதட்டிக்கொண்டார்கள். அவ்வதட்டுதலால் திக்கு யானைகள்கூட வீறிட்டன. பார்த்தவர்கள் யாவரும் மனந்திடுக்கிடும்படி, இருமலைகள் போர் புரிவதைப்போலச் சினம் மிகுதி கொண்டு கொக்கரித்தார்கள். விரைவொடு மேல்எழும்பிக் குதித்தார்கள். களிப்பு மிகுமாறு கொடிய கதையைச் சுழற்றி

உயர்ந்த விண்ணிலே வீசி மீளவும் ஒரு கையால் பிடித்தார்கள். அதிரும்படி நகைத்தார்கள். வஞ்சினங்கள் பலவற்றைச் சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் கதாயுதத்தினால் தாக்கிக்கொள்வதால் உண்டாகிற ஒலி மிகவும் கொடிய இடியின் முழக்கத்தைப்போன்று இருந்தது. இருவருடைய கண்களும் சினத்தாற் சிவந்தன. நெற்றியில் வியர்வைத்துளிகள் அரும்பின. பெரிய இடிகள் போல வீரமொழிகள் உண்டாயின. இருவரும் கதைப்போர் பேராற்றலுடன் புரிந்தமையால் இருவருடைய கதைகளும் பிளவுபட்டு ஒடிந்துபோயின. கதைப்போரை நிறுத்திக் குத்துப்போரைத் தொடங்கினார்கள். ஐந்து விரல்களையும் மடக்கிக்கொண்டு ஒருவரையொருவர் குத்தினார்கள். வீமன் துச்சாதனனுடைய தலையிலே நெருப்புப் பொறிசிந்தவும் அதிர்ச்சியடையவும் நன்றாகக் குத்தினான். இரண்டு கன்னங்களும் நெரியச்செய்தான்; அழகிய காதுகள் உள்ளே மறையச்செய்தான். வலிமைபெற்ற பற்கள் நுனி ஒடிந்து சிந்தச்செய்தான். கண்கள் வெளியே வந்து பிதுங்கலாயின. வீமனுடைய பலமான குத்துக்களால் துச்சாதனன் தளர்ந்து சோர்ந்துபோனான். அவனுடைய இரண்டு கால்களும் விரல்களும் மற்றும் பல உறுப்புக்களும் எலும்போடு சதைக்கு உள்ள தொடர்பு ஒழிந்து அழிந்தன. பலவகையான குதுதுப்பட்டு இடிபட்டபடியால் கட்டுப்பட்ட நரம்புகள் சந்துகளிலே சிந்திவிட்டன. வலிமையை உடைய அழகிய பெரிய மலைகள்போன்ற தோள்கள் அறுபட்டுப்போயின. பல இரேகைகளோடு கூடிய அழகிய கழுத்தும் அறுபட்டன. துச்சாதனனைக் கைகளின் மடக்கினால் நன்கு குத்தியபின் அவனுடைய முகம் முதுகுப்பக்கமாகப் போகும்படி கழுத்தைப் பிடித்துத் திருகினான். குடுமியைக் கைகளால் பிடித்து இழுத்து நன்றாகப் பொருந்துமாறு கீழே தள்ளினான். மார்பைப் பிளந்தான்; வீமன் செயல், நரசிங்கம் இரணியன் குடலைப் பிடுங்கியதுபோன்று விளங்கியது. துச்சாதனனது உடலில் இருந்து குருதி மிகுதியாகப் பெருகியது. துச்சாதனன் உயிர்போகாமல் துடிதுடித்துப் பதைத்துக்கொண்டு கிடந்தான்.

**படைகள் புறங்காட்டல்**

துரியோதனனுடைய தலைமைத் தம்பிக்கு நேர்ந்த கதியைத் துச்சாதனனுடைய படைகள் பார்த்தன. நான்கு பக்கங்களினும் சிதறி ஓடத்தொடங்கின. அவைகளின் ஓட்டத்தைக் கன்னனாலும், மற்றைய

காப்பியங்கள்

குறிப்புகள்

அரசர்களாலும் நிறுத்த முடியவில்லை. வீமன் தோற்றம் அந்தப் படைகளை மிகுதியாகக் கலங்கச் செய்துவிட்டது.

**கண்ணன் முதலியோர் வருதல்**

வீமன் துச்சாதனனைக் கொலைபுரிந்து தன்னடைய வஞ்சினத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறான் என்னும் செய்தி கண்ணபிரான் அருச்சுனன் முதலியோருக்குத் தெரிந்தது. அவர்கள் வீமன் இருந்த இடத்திற்கு வந்தார்கள்.

**கைவிரல்களைப் பிடுங்கல்**

துச்சாதனனுடைய உடலைத் துகையல் செய்த வீமன் தன்னுடைய சினம் முழுவதையும் தீர்த்துக்கொள்ளவில்லை. துச்சாதனனுடைய கைவிரல்கள் பத்தையும, "இந்த விரல்கள்தாமே திரௌபதியினுடைய கூந்தலைப் பற்றி இழுத்தன. இந்த விரல்கள் தாமே அரையில் இருந்த ஆடையை ஆண்மையுடன் உரிந்தன?" என்று கூறித் தனித்தனியாக அறுத்துத்தள்ளினான்.

**குருதி குடிக்கத் தொடங்கல்**

துச்சாதனனைக் கொன்ற வீமனுக்கு வெறிமிகுந்து விட்டது. அவனுடைய உடலிலே வாயைவைத்து உறிஞ்சிக் குருதியைக் குடிக்கத் தொடங்கினான். துச்சாதனன் குருதியை வீமன் குடிக்கத் தொடங்கியதைக் கண்ட கண்ணபிரான், "வீமா! அவனுடைய குருதியைக் குடிக்காதே; கொப்பளித்துத் துப்பிவிடு" என்று கூறினார். வீமனும் கண்ணபிரான் கட்டளைப்படியே செய்தான். "என்னுடைய வஞ்சினம் முடிந்தது", என்று கூறி இன்பக் கூத்தாடினான்.

**தருமருக்குச் செய்தி உரைத்தல்**

விரைந்து சென்று தன் முன்னோனாகிய தருமரைக் கண்டு பணிந்தான். "துரியோதனன் தம்பியர்களில் ஒன்பதுபேர்களை இன்று கொன்று தொலைத்ததோடு, துச்சாதனனையும் கொன்றுமுடித்து எனது சூளுரையை நிறை வேற்றிவிட்டேன்" என்று கூறினான்.

**கன்னன் மயங்கி யிருத்தல்**

துரியோதனனுடைய தலைமைத்தம்பி அழிவுற்றதைப் பார்த்த கன்னன் திகைத்து வருந்தி யாதுஞ் செய்யாமல் சோர்ந்து போனான். தருமருடைய படைகளோ வெற்றி முழக்கஞ்செய்து தருக்கிநின்றன. சல்லியன் பாண்டவர்களுடைய படையின் ஆரவாரத்தைப் பார்த்தான். கன்னனைப் பார்த்து, "பாண்டவர்களுடைய படை வெற்றிமுழக்கஞ்செய்து கூத்தாடுகிறதா, நீ போரை நிறுத்திவிட்டு ஏன் பேசாமல் இருக்கிறாய்?" என்று

*Self Instructional Material*

இடித்துரைத்தான். கன்னன் தான் அஞ்சிச் சும்மா இருந்துவிட வில்லையென்றும், துச்சாதனன் இறந்தது கண்டு திகைத்து நிலைதடுமாறிவிட்டதாகவும் பதிலுரைத்தான்.



**மீண்டும் போர் புரிதல்**

புறங்காட்டி யோடிய படைகளையெல்லாம் ஒன்றுபடுத்திக் கன்னன் மீண்டும் போரைத் தொடங்கினான். திட்டத்துய்மனும் தன் படையை ஒழுங்கு செய்து கொண்டு போரை நடத்தினான். எல்லா இடங்களிலும் போர்ப்பறை யொலியும் வில்நாணியின் டங்கார ஒலியும் மிகுந்தன. கன்னன் மகனாகிய விடசேனன் நகுலனோடு எதிர்த்துப் போர்செய்து அவனை மூர்ச்சித்து விழச்செய்தான். அருச்சுனன் விடசேனனுடைய ஆற்றலைக் கண்டான். அவனைத் தொலைத்துவிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு அவன்மேற் சென்றான். விட சேனனுக்கும் அருச்சுனனுக்கும் போர் கடுமையாக நடந்தது. அருச்சுனன் விடசேனனுடைய தலையை ஒரு கணையினால் அறுத்துத் தள்ளிவிட்டான். எஞ்சிய படைகள் மிகுந்த அச்சத்தை யடைந்தன. படைத்தலைவனாகிய கன்னனுடைய தேரைச் சூழ்ந்துகொண்டன. கன்னன் தன்னடைய மகன் தன்னுடைய கண்ணுக்குமுன்னே இறந்து விழுந்ததைக் கண்டு உள்ளங் கலங்கினான். அவனைச் சல்லியன் தேற்றினான்.

**அசுவத்தாமனும் துரியோதனனும்**

கன்னனுடைய மகனும் துச்சாதனனும் இறந்து பட்டது அசுவத்தாமனுக்கு மனவருத்தத்தை உண்டாக்கியது. இப்போரில் இதுவரையிலும் அழிந்தவர்கள் போக எஞ்சியவர்களையேனும் அழியாமல் பாதுகாக்கலாம் என்று அசுவத்தாமன் எண்ணினான். அவன் துரியோதனனிடஞ் சென்றான். துரியோதனனைப் பார்த்து, "நீயும் தருமனும் ஒழிதலற்ற போர் செய்யத் தொடங்கினீர்கள். இதனால் ஏற்படுகிற அழிவொ பெரிதாக இருக்கிறது. உண்மையான கீர்த்திகளையுடைய வீடுமர் முதலாகிய பெரியோர்களும், உறவினர்களும், மற்றைய அரசர்களும் நால்வகைப் படைகளோடும் போர் செய்து மாண்டுபோனார்கள். சங்கொலியற்ற மங்கல விழாவும், நல்லொழுக்கம் இல்லாத குலமும், தொன்றுதொட்டு வருகிற விளைதல் இல்லாத அரிய கழனியும், முத்தீ வளர்க்காத அந்தணர்களுடைய இல்வாழ்க்கையும், துளையில்லாத அழகிய முத்தும், அழகிய குளிர்ந்த நீர்த்துறையில்லாத நாடும், உறவினர்கள் இல்லாத அரசாட்சியின் தன்மையும் சிறப்படைய மாட்டா. அழிந்தவை போகக் குறைந்துள்ளவைகளாகிய யானைகளும் குதிரைகளும் உள்ளன; தேர்கள் உள்ளன. உன் தம்பிமார்களுக்குள்ளே அழியாமல் மிகுந்தவர்களுடனும், நல்லறிவினையுடைய வீமன் முதலிய தருமன்

தம்பிமார்களுடனும் உன் தமையனாகிய வெற்றியையுடைய சிறந்த தருமபுத்திரனோடும் ஒன்றாகக்கூடிப் பெரிய நிலவுலக ஆட்சியை மேற்கொள்வதே முறைமையாகும்”, என்று கூறினான்.

“வளையி லாதன மங்கல விழவுநல் வரம்பிலா மரபுந்தொல்
விளைலி லாவரும் புலமுமுத் தீயிலா வேதியர் மனைவாழும்
துளையி லாமணி முத்துமந் தண்புனற் றுறையிலோ வளநாடும்
கிளை லாவர சியற்கையு நன்றெனக் கேட்டறி குவதுண்டோ.”
“தும்பி மாபரி மாவுள தேருள சுருங்கின சுருங்காமல்
நும்பி மார்களில் இருந்தவர் தம்மொடும் நுவலரும் பலகேள்வித்
தம்பி மாரொடும் நும்மு னாகிய தருமன்மா மகனோடும்
பம்பிமா நிலம் புரப்பதே கடன்எனப் பார்த்திவற்குரைசெய்தான்”

அசுவத்தாமன் கூறிய உரைகளைக் கேட்ட துரியோதனன் அசுவத்தாமனைப் பார்த்து, “நீ கூறுவது உலக ஆட்சியில் அவாக்கொண்டிருப்பவர்கட்கன்றோ பொருந்துவதாகும். போர்ப்பறைகள் முழங்குகின்ற போர்க்களத்தில் உடல் விழவும் உயிர் தேவலோகத்தை அடையவும், வீரத்தன்மையைப் பெறுதலே இனி எனக்குப் பயனாகும்,” என்று கூறினான். இவ்வாற அசுவத்தாமன் உரைகளை மறுத்த பின்பு அவனுடைய உள்ளங் குளிருமாறு நன்மொழிகள் பலவற்றைக் கூறினான். மகனை யிழந்து வருந்துங் கன்னனைத் தழுவிக்கொண்டு ஆறுதலுரைகள் கூறினான். அருச்சுனனுடைய உயிரை விரைவில் போக்கிடுமாறு வேண்டிக்கொண்டான்.

**கன்னனுக்கும் அருச்சுனனுக்கும் போர்**

துரியோதனன் உரைகளால் கன்னன் வருத்தந் தணிந்தான். சல்லியன் அசுவத்தாமன் முதலியோர் கேட்க, “என்னுடைய உள்ளமானது சிறிதுங் கலங்காது. என்னுடைய மகனை என் கண்ணுக்குமுன்னே கொன்று வீழ்த்திய அருச்சுனனை நான் விரைவில் கொன்று வீழ்த்துவேன்,” என்று கூறினான். இருபக்கத்துப் படைகளும் ஒன்றுகூடின. யானைவீரர்களோடு யானைவீரர்கள் எதிர்த்தார்கள். தேர்வீரர்களோடு தேர்வீரர்கள் எதிர்த்தார்கள். காலாட்களோடு காலாட்கள் எதிர்த்தார்கள். அருச்சுனன் தன்னுடைய தம்பியர்களோடு வந்தான். கன்னன் அசுவத்தாமா முதலியோர் புடைசூழச் சென்று அருச்சுனனை எதிர்த்தான். இருவரும் தத்தம் விற்களை வளைத்தார்கள். நிலம முழுவதுக்கும் பந்தரிட்டதுபோல விரைவு மிகுமாறு கணைகளைச் செலுத்தினார்கள். தனுமறையிற் சொல்லப் பெறுகிற நால்வகை நிலைகளும் தவறாமல் வில் வளைத்ததையும், எய்த பக்குவத்தையும் எவரும் உணர்ந்தார் இலர், வித்தியாதரர்களும் ஊழிக்காலமோ என்று எண்ணி அச்சத்தை அடைந்தார்கள். எதிரே

செல்லுகிற கணைகள் ஒன்றோடொன்று நுனியோடு நுனியாகப் பொருந்தி மிகுதியாக விழும். ஒன்றொடொன்று பிளவுபடும்படி விரைவோடு தாக்கும். ஒன்றோடொன்று மோதி ஒடியும் ஒன்றினை ஒன்று இறகைப் பறிக்கும். இவ்வாறு நிகழும் போரில் இருவர் தேர்களும் சுற்றிச்சுற்றி வந்தன. தேர் செலுத்தவதில் கண்ணபிரானும் சல்லியனும் ஒப்பான ஆற்றலுடையவர்களாக விளங்கினார்கள். இரு தேர்களிலும் பூட்டப்பட்டிருந்த குதிரைகளும் எல்லா இலக்கணங்களும் அமைந்திருந்த தன்மையினால் ஒரே மாதிரியாக விளங்கின. அருச்சுனனும் கன்னனும் போர்செய்த தன்மை சிவபெருமான் ஒரே காலத்தில் இரண்டு வடிவங்களை எடுத்துக்கொண்டு இரு மேருமலைகளைக் கையில் வில்லாகப் பிடித்துப் போர் செய்தாற்போன்றிருந்தது.

அருச்சுனன் 'தேவதத்தம்' என்னும் தன் சங்கை வாயில்வைத்து ஊதினான். சிறந்த பல தேவர்கள் இடம் இருந்துபெற்ற பலகணைகளை ஆராய்ந்து எடுத்துக் கன்னன்மேலே செலுத்தினான். கன்னன் 'பராபரம்' என்னும் தன் சங்கை யெடுத்து ஊதினான். அருச்சுனன் தன்மேற் செலுத்திய கணைகளையெல்லாம், கதிவரன் தனக்கு வழங்கிய கணைகளைக்கொண்டு துணித்தான். இதனை

'மலை கலங்கினும், மாதிரம் கலங்கினும், மாதிரங்களில் விண்ணோர் நிலை கலங்கினும, நெடுங்கடல் கலங்கினும், நிலம் கலங்கினும், சேடன் தலை கலங்கினும், பேர் அவை மூன்றினும் தளர்வு இலாதவர் கற்றகலை கலங்கினும், போர்முகத்து என் மனம் கலங்குமோ? கலங்காதே.

'என் மகன் தலை என் எதிர் துணிய அம்பு ஏவிய புருகூதன் தன் மகன் தலை துணிப்பன், இக் கணத்தில், ஓர் சாயகம்தனில்' என்று, மன்மகன்தனக்கு, இரதம் ஊர் மத்திரன் மகன்தனக்கு, உயர் வேள்விவில் மகன்தனக்கு, உளம் மகிழ்ந்து உரைத்தனன், வெயிலவன் மகன் அம்மா,"

"தேவதத்தமும் முழக்கி, உயர் தேவர் பலரால்
ஆவம் மெத்தும் வகை பெற்ற பல அம்ப தெரிய,
மூவர் தம்தம் வடிவாம் முதல்வன் மெய்ப் புதல்வன்மேல்
பூவின் மொய்த்த அறுகாலின் நிரை போல விடவே,"

"பரித அன்பொடு வழங்கிய பராபரம் எனும்
பெரு வலம்புரி குறித்து, விறல் அங்கர் பெருமான்,
வரி நெடுஞ்சி சிலை வலாரி திருமைந்தன் விடு திண்
சரம் அடங்க அமர் தந்த சரம் எய்து தறியா"

காப்பியங்கள் குறிப்புகள்

ஆகிய பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**அம்புக்கூடம் அமைத்தல் :**

அருச்சுனனுடைய தேர் இஅயங்காதவாறு கன்னன் கணைகளைக்கொண்டு பின்னற்செறிவு ஒன்றை அமைத்து விட்டான். இதனால் அருச்சுனனுடைய தேர் இயங்கமுடியவில்லை. கன்னனது செய்கையைக் கண்ட கண்ணபிரான் தமது மாயையினால் அம்புக்கூடு ஒன்றைக் கன்னன் பக்கத்திலும் உண்டாக்கிவிட்டார். கணைக்கூடத்திற்குள் அகப்பட்ட கன்னன் செயலற்றிருந்தான். அருச்சுனனும் யாதும் செய்யாமல் செயலற்றிருந்தான். கண்ணபிரான் அருச்சுனனைப் பார்த்து, "நீ ஏன் செயலாற்று நிற்கிறாய்?" என்று உசாவினார். அருச்சுனன் கண்ணபிரானைப் பார்த்து, "அந்த அம்புக் கூட்டுக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பவன் என்னுடைய மூத்தோனாகிய தருமபுத்திரன்போல் காணப்படுகிறான். அதனால் இனிமேல் என்னால் போர் செய்ய முடியாது' என்று கூறினான். இதனை,

"மாயா சரகூடம் வளைத்திடலால்,

வலையுள் படு வீர மடங்கல் என,

சாயாபதி மைந்தனும் நின்றனன்; மெய்

தளர்வுற்றனன், நின்ற தனஞ்சயனும்;

'ஏயா இது என்கொல் முனைந்து பொராது

எழுது ஓவியம் ஆயினை' என்று விறல்

காயாமலர் வண்ணன் விளம்புதலும்

கவி வெங் கொடியோன் இரு கை குவியா,"

என்ற பாடல்வழி அறியலாம்.

**அருச்சுனனும் தருமரும்**

அருச்சுனன் உரைத்ததைக் கேட்ட கண்ணபிரான் தருமர் இருந்த இடத்திற்குத் தேரை விரைவாகச் செலுத்திக் கொண்டு சென்றார். தருமரை அருச்சுனனுக்குக் காட்டினார். தருமர் அருச்சுனனைப் பார்த்து, "கன்னனைக் கொன்று விட்டாயா?" என்று உசாவினார். அருச்சுனன் "இன்னும் இல்லை", என்று கூறினான். அருச்சுனன் கூறியதைக் கேட்ட தருமர், "இன்னும் கன்னனைக் கொன்று தொலைக்கவில்லையா? உன்னுடைய கையில் இருக்கிற வில் என்ன வில்? நீ பகைவனை எவ்வாறு அழித்துத் தொலைக்கப்போகிறாய்?" என்று சினத்துடனும் சீற்றத்துடனும் உரைத்தார்.

தருமர் உரையைக் கேட்ட அருச்சுனன் மிகுந்த சினங்கொண்டான். என் வில்லைப் பழித்துரைப்பவர்களைக் கொலை புரிவது என்பது என்னுடைய சூளுரையாகும். என்னுடைய சூளுரைப்படி என் வில்லைப்

*Self Instructional Material*

பழித்துரைத்த உன்னைக் கொன்று விடுகிறேன்" என்று கூறிக்கொண்டு தருமா்மேற் பாய்ந்தான். இதனைக்கண்ட கண்ணபிரான், "பெரியவா்களை இகழ்ந்துரைப்பதே அவா்களுடைய தலையை அறுத்துக் கொலைபுரிவதற்கு ஒப்பாகும். அவ்வாறாக இன்னும் கொலை வேறுபுரிய வேண்டுமா?" என்று கூறித்தடுத்தாா். "சில இழிமொழிகளைக் கூறித்தருமனை வைதால் சூளுரை பொய்யாகாமல் போகும்" என்று சூழ்ச்சியும் சொல்லிக்கொடுத்தாா். அருச்சுனன் தனக்கு விருப்பமில்லாதிருந்தும் சில புன்மொழிகளைக் கூறித்தருமரை வைதான். அருச்சுனன் வைதலைக் கேட்ட தருமா், "நான் இனிமேல் துறவு வழியை மேற்கொண்டு காட்டிற்குச் செல்வேன்," என்று கூறி அவ்வாறே எழுந்து செல்லத் தொடங்கினாா். கண்ணபிரானும் அருச்சுனனும் தருமரைப் பணிந்து பிழை பொறுக்குமாறு வேண்டிக் கொண்டாா்கள். "விரைவில் கன்னனைக் கொல்வோம்" என்றாா்கள். தருமா் சினந்தணிந்தாா். அருச்சுனனனும் கண்ணபிரானும் மீண்டும் போருக்குச் சென்றாா்கள்.

**மீண்டும் போா்**

கண்ணபிரானும் அருச்சுனனும் மீண்டுங் கன்னனிடஞ் செல்வதற்குள் வீமன் கன்னது அம்புக்கூட்டை அறுத்து அவனோடு போா் செய்து கொண்டிருந்தான். கண்ணபிரானும் அருச்சுனனும் அந்த இடத்தை அடைந்தாா்கள். அருச்சுனன் தீக்கணையைக் கன்னன் மீது செலுத்தினான்.

அக்கணை தீப்பொறிகளைச் சிதறியது. அருச்சுனனுடைய தீக்கணையைக் கன்னன் வருணன் கொடுத்த வருணக்கணையால் மாற்றிவிட்டான். அருச்சுனன் காற்றுக் கணையைத் தொடுத்தான்; கன்னன் ஆதிசேடன் தனக்குக் கொடுத்த பாம்புக்கணையைச் செலுத்தினான். அக்கணை அருச்சுனனுடைய காற்றுக்கணையை விழுங்கிவிட்டது. அருச்சுனன் இருட்கணையைச் செலுத்தினான்; கன்னன முழுத்திங்கட்கணையினால் அதனை மாற்றிவிட்டான். அருச்சுனன் ஐந்திரக்கணையைச் செலுத்தினான். கன்னன் ஞாயிற்றுக்கணையைச் செலுத்தினான். இரண்டும் சம ஆற்றலோடு முட்டிக்கொண்டன. அருச்சுனன் நான்முகக் கணையைச் செலுத்தினான். கன்னன் உருத்திரக்ணையைச் செலுத்தி நான்முகக்கணையைச் சாம்பலாக்கி விட்டான். இருவரும் சிறியதுபோது வாளாவிருந்தனா். போா்க்களம் செந்நிறமாகத் திகழந்தது.

**பாம்புக்கணை செலுத்தல்**

கன்னன் அருச்சுனனைக் கொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான். காண்டவக் காட்டை அருச்சுனன் எரித்தநாளில் தன்னிடம் கணையாக வந்து தங்கிய பாம்புக்கணையை எடுத்தான். அருச்சுனனுடைய கழுத்திற்கு நேராகக் குறி பாா்த்தான். கன்னனுடைய தேரோட்டியாகிய

சல்லியன் கன்னனைப் பார்த்து, “வஞ்சனைக் குணமுள்ள கண்ணன் அங்குள்ளான்; யாதேனும் சூழ்ச்சி செய்து கணையைத் தடுத்துவிடுவான்; ஆகையால் நீ கணையைக் கழுத்துக்கு நேர்குறியாகச் செலுத்தாமல், மார்ப்க்கு நேரே குறி வைத்துச் செலுத்து,” என்று விம்பினான். கன்னன் சல்லியனுரையைப் பொருட்படுத்தவில்லை. தன் முடிவுப்படி கழுத்தையே குறியாக வைத்துச் செலுத்தினான்.

**தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று**

பாம்புக்கணை விரைவாகச் சென்றது. கண்ணபிரான் அதனைக் கண்டார். காண்டவக் காட்டிலிருந்து தப்பிய நீண்ட பாம்பு என்று அறிந்தார். தேரைப் பன்னிரண்டு விரற்கடை நிலத்தில் அழுந்துமாறு அழுத்திவிட்டார்.

விரைவாக வந்த அந்தப் பாம்புக்கணை அருச்சுனனுடைய முடியைத் தள்ளிக்கொண்டு சென்றது. அக்கணையின் தன்மையை அறிந்துகொண்ட அருச்சுனன் கணையையேவி அதனை இரண்டாகப் பிளந்துவிட்டான். அந்தப் பாம்பு கன்னனிடம் சென்று தன்னை இரண்டாம் முறையாக அருச்சுனன் மீது விடுமாறு வேண்டிக்கொண்டது. குந்தி தேவிக்கு உறுதிமொழி கூறியவனாதலின் இரண்டாவது முறைவிடமுடியாது என்று மறுத்துவிட்டான். அப்பாம்பு மேலே யாதுஞ்செய் முடியாமல் எமபுரம் அடைந்தது.

பாம்புக்கணைக்கு அருச்சுனன் பிழைத்ததைக் குறித்துப் பாண்டவர் பக்கத்தினர் மிகவும களிப்படைந்தார்கள். துரியோதனன் பக்கத்தார்களோ மிகுந்த வருத்தம் அடைந்தார்கள். சல்லியன் மிகுந்த வெறுப்படைந்தான். அவன் கன்னனைப் பார்த்து, “நான் மார்பைக் குறியாக வைத்துவிடு என்று சொல்லியும் நீ ஆணவத்தினால், என் சொல்லைக் கேளாமற் போனாய். அந்தப் பாம்பு இரண்டாம்முறை விடுமாறு வேண்டியதையும் கேட்கமாட்டேன் என்று கூறிவிட்டாய்; இனிமேல் உன்னால் அருச்சுனனைக் கொல்வது முடியாத காரியம் ஆகும்; ஆகையால் நான் இனி உனக்குத் தேர் செலுத்தமாட்டேன்; உன்னைக்கொண்டு உலகத்தை ஆள்வதற்குத் துரியோதனன் எண்ணியிருக்கிற எண்ணமும் இனிமேல் நிறைவேறமாட்டாது,” என்று கூறி விட்டுத் தன் தேர்மீது சென்று ஏறிக்கொண்டான்.

தான் கற்றவை சமயத்திற்கு உதவாமற் போகுமாறு பரசுராமர் கூறியுள்ள கொடுமொழி (சாபம்) பலித்துவிட்டது போலும் என்று கன்னன் எண்ணினான். வேறு தேரிலே சென்று ஏறிக்கொண்டான்.

**கன்னன் முடிவு**

வேறு தேரில் ஏறிக்கொண்ட கன்னன் அருச்சுனன் மீது பல கணைகளைச் செலுத்தினான். வரவரக் கன்னனுக்கு ஆற்றல் குறைந்துகொண்டே வந்தது. அதனைக் கண்ணபிரான் அருச்சுனனுக்குத் தெரியப்படுத்தினார். அருச்சுனன் கன்னனின் மூச்சுக்காற்றாகிய

உயிர்க்காற்றை ஒடுக்குவதற்கு எண்ணினான். கன்னன் உடல் மறையுமாறு மயிர்க்கால்கள் தோறும் கணைகளைத் தொடுத்தான். உடல் முழுவதும் குருதி வழிந்துகொண்டிருக்கும் போதும் கன்னன் சும்மா இருக்கவில்லை. கணைகளைப் பொழிந்துகொண்டேயிருந்தான்.

கதிரவன் மறைவதற்கு இரணடு விற்கிடை அளவேயிருந்தது. கண்ணபிரான் சிறிதுபோது போரை நிறுத்தி வைக்குமாறு அருச்சனனுக்குத் கூறிவிட்டுக் கன்னன் இடத்திற்குச் சென்றார். கண்ணபிரான் கோலம் தவம்புரியும் மறையவன் கோலமாக விருந்தது. பொய்க்கோலம் பூண்ட கண்ணன் கன்னனைப் பார்த்து, "நான் இந்நாள் வரையில் மேருமலையில் தவஞ் செய்து கொண்டிருந்தேன். நீ வேண்டுவோர்க்கு வேண்டுவதை ஈகின்றாய் என்று நான் கேள்வியுற்றேன். நான் மிகுந்த வறுமையினால் துன்புற்றவன்; உன்னால் கொடுக்க முடிந்ததை எனக்கு இப்போதே கொடுக்க வேண்டுகிறேன்," என்று கேட்டார்.

கன்னன் கண்ணனைப் பார்த்து, "நல்லது; நான் இப்பொழுது உனக்குக் கொடுக்கக்கத்தக் பொருளைச் சொல்லுவாயாக", என்று கூறினான். அந்தணக் கோலக் கண்ணன் கன்னனைப் பார்த்து, "நீ இதுவரையில் செய்துள்ள நல்வினை முழுவதையும் உள்ளபடியே கொடுப்பாயக", என்று கேட்டார். கன்னன் அதனைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்தான். கண்ணனைப் பார்த்து, "என்னுடைய உயிரோ தான் நிற்கும் இடத்திலிருந்தும் எழுந்தது; இப்பொழுது அவ்வுயிர் உடலுக்குள்ளே இருக்கிறதோ வெளியே இருக்கிறதோ என்னும் ஐயப்பாடான நிலைமையில் உள்ளது. தீவினையை உடையவனாகிய யான், வேண்டுவார் வேண்டுகின்ற பொருளை யெல்லாம் விரும்பிக் கொடுக்கிற சமயத்தில் நீ வந்தாயில்லை. நான் செய்துள்ள நல்வினைகளை யெல்லாம் ஒன்றும் ஒழியாமல் உனக்குக் கொடுத்தேன். நீ பெற்றுக் கொள்வாயாக!" என்று கூறிக் கைகளைக் குவித்து வணங்கினான்: கண்ணன் கன்னனைப்பார்த்து, "கையினால் தாரைவார்க்கப்பெறும் நீரோடு தானஞ் செய்வாயாக", என்று சொன்னார். கன்னன் தன் நெஞ்சில் தைத்த அம்பின் வழியெ வெளிவருகிற செந்நீரால் தாரை வார்த்துக் கொடுத்தான். தானநிரினைக் கண்ணபிரான் தமது கையில் ஏற்றார்.

அந்தணக் கோலம் பூண்டு வந்துள்ள கண்ணன் கன்னனைப் பார்த்து, "உனக்கு வேண்டிய சிறப்பை (வரத்தை)க் கேள், கொடுக்கிறேன்," என்றார். கன்னன், "நான் இன்னும் பிறப்பினை அடைந்தாலும் ஏற்பவர்கட்கு இல்லையென்னாமல் கொடுக்கிற உள்ளத்தை நீ எனக்குக்

கொடுத்தருளவேண்டும்," என்று வேண்டிக் கொண்டான். கண்ணபிரான், அவ்வாறே, "நீ ஒவ்வொரு பிறப்பிலும செல்வத்தையும் கொடையையும் அடைவாய்," என்ற திருவருள் புரிந்தார். "இறுதியில் வீடு பேற்றினை எய்துவாய்," என்றுங் கூறினார்.

"ஆலியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓலிலா தியான் செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ."

"மல்லலம் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்
சொல்லுக உனக்குத் தருதும்என் றுரைப்பச்
சூரன்மா மதலையும் சொல்வான்
அல்லல்வெவ் வினையால் இன்னம்உற் பவம் உண்
டாயினும் மேலெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா
இதயம்நீ அளித்தருள் என்றான்"

பிறகு கண்ணபிரான் தமது உண்மை வடிவத்தை நாராயண வடிவமாகக் காட்டி யருளினார். நான் நாராயணப் பெருமானைக் காணப் பெற்றது

என்னுடைய நல்வினை யாகுமென்று கூறிக் கன்னன் உள்ளம் களித்தான். திருமாலானவர் கன்னனைப் பார்த்துக் கவசகுண்டலங்களை வாங்கச் செய்தது முதலிய செயல்களெல்லாம் தன் திருவிளையாடல்களே என்பதைக் கூறினார். பிறகு தமது பழைய வடிவத்தை மேற்கொண்டு அருச்சுனனின் தேரையடைந்தார். அஞ்சரீகம் என்னும் கணையினால் கன்னன் உயிரைப் போக்குமாறு கட்டளையிட்டார். அருச்சுனனும் அவ்வாறே செய்தான். அக்கணை சென்று கன்னனைக் குற்றுயிராக்கிற்று.

**குந்திதேவி போர்க்களம் வருதல்**

கன்னன் குற்றுயிராக வீழ்ந்து கிடத்தலை வானொலி (ஆசரீரி) குந்திதேவிக்குக் கூறிற்று. குந்திதேவி பலவாறு கதறிக்கொண்டு

போர்க்களத்தை அடைந்தாள். "கன்னிப்பருவத்தினளாக இருந்த நான், கதிரவன் அருளால் உன்னைப் பெற்றேன். ஊர்ப்பழிக்கு அஞ்சி உன்னைப் பேழையில் வைத்து ஏழையேன் ஆற்றிற் போக்கினேன். நீ துரியோதனனுக்கு உயிர் நண்பன் ஆனதைக் கேள்வியுற்றும், உனது ஆண்மையைக் கேள்வியுற்றும் மனம் மிக மகிழ்ந்திருந்தேன். இப்போது நீ தேவர் உலக ஆட்சிக்குச்செல்லுகின்றாயோ? தருமன் முதலிய ஐந்து தம்பிமார்களும் துரியோதனன் முதலிய நூறு தம்பிமார்களும் உனது ஏவலைக் கேட்க, உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் நீ அரசாளும் நிலையை அடைந்திருந்தும் ஊழ்வினையின் வலியினால் அப்பயனை அடையாமல் இறந்துபோனாய். அந்தோ நான் யாது செய்வேன்!" என்று சொல்லிப் புலம்பினாள். போர்க்களத்தில் நின்ற அரசர்கள் எல்லோரும் என்ன புதுமை! என்று வியந்தார்கள். தாய்மைப் பெருக்கினால் குந்திதேவியின் தனங்களில் பால் சுரந்தது. கன்னனைக் கைகளினால் எடுத்துத் தழுவிக் கொண்டு தன் பாலைக் கன்னனுக்குப் புகட்டினாள். அவ்வளவில் கன்னன் உயிர் விண்ணுலகத்தை அடைந்தது. துரியோதனன் படைக்கடல் வற்றிப்போயிற்று. கன்னன் மாண்டுபோனதைத் துரியோதனன் உணர்ந்தான். "ஒப்பாரும் இல்லாத அரசனே! பகைவர்களின் படைக்கடலைக் கடப்பதற்குத் தெப்பமாக நின்றவனே! எனது இன்ப துன்பங்களை யெல்லாம் சொல்லுதற்குத்தக்க ஆருயிர்த் துணைவனான நின்னை இழந்தேனாகில்,

வேறு யாரைத் துணையாக வைத்துக்கொண்டு அரசாட்சி செய்வதற்கு இருக்கிறேன்; என்னுடைய வாழ்வுகட்கெல்லாம் காரணமானவனே! உன்னை இழந்தும் தம்பிமார்களை இழந்தும், இனிமேல் கடலாற் சூழப்பெற்ற நிலவுலகம் முழுவதையும் அரசாளுதலை விரும்புவேனா! நான் இனிமேல் இவ்வுலகில் தனித்து வாழமாட்டேன்; நானும் இதோ உன்னுடன் வந்து விடுகிறேன்" என்று கூறிப் புலம்பினான். பொழுது போய்விட்டது.

**பாண்டவர்கள் செய்தி உணர்தல்**

போர்க்களத்தில் தம் தாயின் அழுகுரலைப் பாண்டவர்கள் ஐவரும் கேட்டார்கள். அவர்கட்கு யாதும் விளங்கவில்லை. தங்கள் தாய் அங்கு வந்து அழவேண்டியதற்குக் காரணம் யாதென்று கண்ணபிரானைக் கேட்டார்கள். அப்பண்ணவன், "கன்னன் உங்கள் அண்ணன்; ஆகையால், குந்திதேவி இங்கு வந்து புலம்புகிறாள்", என்று உண்மையை உரைத்தருளினார். கண்ணபிரான் உரைத்த மாற்றத்தைக் கேட்ட ஐவரும் புண்ணிற் கோலிட்டது போலக் கலங்கினார்கள். குந்திதேவி புலம்பிக்கொண்டிருக்கும் இடத்தை நோக்கி ஓடினார்கள். "அந்தோ தாயே! இளம்பருவத்தில் நிகழ்ந்த செய்தியை எங்கட்குக் கூறி உண்மையைப் புலப்படுத்தாது விட்டாயே. இதுவும் ஓர் அறிவாகுமோ? பெற்ற தாயைவிடப்

பிறதாய் நல்லவள் என்னும் சொல்லை உண்மைப்படுத்தி விட்டாயே. நாங்கள் இவ்வாறு பெருந்தவறு செய்தலை அறியாமற் போனேமே", என்று ஐவரும் தனித்தனியே பல கூறிப் புலம்பினார்கள், பிறகு கண்ணபிரானைப் பார்த்து, "முற்காலத்தில இரணியனை அவன் புதல்வன் பிரலாகதனைக் கொண்டே கொல்வித்தாய்; பிற்காலத்தில் இராவணனை அவன் தம்பி வீபிடணனைக் கொண்டே அழித்தாய்; இக்காலத்தில் எங்கள் முன்னவனாகிய கன்னனை அவன் தம்பியரில் ஒருவனைக் கொண்டே முடித்துவிட்டாய்; தேவர்களாகிய நீங்கள் இவ்வாறெல்லாம் சூழ்ச்சிகளை மேற்கொண்டால், நாங்கள் யாது செய்வது?" என்று கூறிக் கண்ணபிரானை நொந்து கொண்டார்கள்.

'கன்னி இளம் பருவத்தில் அரியமா எனும் கடவுள் காதல் கூர, மன்னிய மந்திரம் எமக்கும் இன்று அளவும் உரைத்திலையால்; மறந்தாங்

கொல்லோ? பின்னிய செஞ் சடைக்குழலாய்! ஈது என்ன பேர் அறிவு? பெற்ற தாயின் அன்னியம் நன்றாய் இருந்தது; இப்படியே பிழைப்பிப்பது அறிந்திலேமே!"

'ஊற்று இருந்த வழியினளாய் உனைப் பயந்தாள் மனம் மறுக, உயிராய் நின்ற காற்று இருந்த இடம் தேடிக் கணை பலவும் உடல் குளிப்ப, கன்னா! இன்று கூற்று இருந்த பதி தேடிக்குடி. இருக்க நடந்தனையோ?- கொற்ற வேந்தாய் வீற்றிருந்து, இங்கு ஐவேமும் அடி வருடப் புவி ஆள விதி இலாதாய்!

"ஊன் தொடுத்த வய வாளி எத்தனை ஆயிரம் கொடுத்தேன்; உரகத்தால் நீதான் தொடுத்த கடுங் கணைக்குத் தப்பினேன் என மகிழ்ந்தேன்; சஞ்சரீகத்தேன் தொடுத்த மலர் அலங்கல் தின நாதன் சேயே! நின் திருமார்பத்தில்யான் தொடுத்த நெடும் பகழி எனைக் கெடுப்பது அறிந்திலேன்; என் செய்தேனே!

"யாய் உரைத்தது அல்லாது, வேறு உரைத்தது, அசரீரி என்னும் தேவின் வாய் உரைத்தது, இன்னும் அளவும் கேட்டிலேம்; கேட்டனமேல் வாட்டம் உண்டோ? பேய் உரைத்துத் தாலாட்ட, முலைப்பாலோடு உயிர் உண்ட பித்தா! ஈண்டை நீ உரைத்த பிறகு அறிந்தோம்; எம்முனை இன்று எமைக் கொண்டே நேர் செய்தாயே."

"ஆடகனைப் புதல்வனைக் கொண்டு அழிப்பித்தாய்; இலங்கை நகர்க்கு அரசை அன்று வீடணனைப் பகை ஆக்கிக் கிளையுடனே வீழ்வித்தாய்; வேலை சூழ்ந்த நாடு அறியப் புகுந்து எமக்கு நாயகமாம் கன்னனையும், நரன் கை அம்பால் ஈடு அழியப் பொருவித்தாய்; இமையோர்கள் வல்ல வீரகு யார் வல்லாரே?"

**சோதித்தறியும் வினா – விடைகள் :**

1. நகுலன்- கன்னன் போர் குறித்து எழுதுக.

   விடை : நகுலனும் கன்னனும் என்னும் தலைப்பிலமைந்த செய்திகள்

2. அருச்சுனன்-கன்னன் போர் குறித்து எழுதுக.

   விடை : அருச்சுனனும் கன்னனும் என்ற தலைப்பில் அமைந்த செய்திகள்

3. தருமரும் துரியோதனனும் போரிட்டதைக் கூறுக்

   விடை : தருமரும் துரியோதனனும் என்ற தலைப்பில் உள்ள செய்திகள்.

4. சல்லியரின் தேரோட்டுதல் குறித்து எழுதுக.

   விடை : கன்னன் சல்லியனைத் தேரோட்டியாக்க வேண்டுதல், சல்லியன் இணக்கம், சல்லியன் தேரோட்டுதல் ஆகிய தலைப்புக்களில் அமைந்த செய்திகள்.

5. கன்னனுக்கும் தருமருக்கும் போரிட்டதை எழுதுக.

   விடை : கன்னனுக்கும் தருமருக்கும் போர் என்ற தலைப்பிலமைந்த செய்திகளைப் படிக்க

**பயிற்சி வினாக்கள் :**

1. பதினேழாம் நாள் போர் இறுதியில் கன்னன் இறந்தது குறித்து விவரி.

   விடை : அருச்சுனனுக்கும் கன்னனுக்கம் போர் என்ற தலைப்பில் தொடங்கி கன்னன் முடிவு வரை உள்ள செய்திகள்.

2. குந்திதேவி மற்றும் துரியோதனனின் புலம்பலை விவரி.

   விடை : குந்திதேவி போர்க்களம் வருதலஎன்ற தலைப்பிலமைந்த செய்திகள்.

# கூறு 11- தேம்பாவணி – பால மாட்சிப் படலம்

## 11.1. தேம்பாவணி ஆசிரியர் ஓர் அறிமுகம்

வேற்று நாட்டில் பிறந்து தமிழகம் வந்து தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய பலருள் வீரமாமுனிவர் முதன்மையானவர் 1680 ஆம் ஆண்டு நவம்பர் எட்டாம் நாள் இத்தாலி நாட்டு வெனிஸ் மாநிலத்தின் காஸ்திகிளியோன் என்னும் சிற்றூரில் இவர் தோன்றினார். இவரது இயற்பெயர் ஜோசப்கொன்சுடான்சியசு பெஸ்கி; தந்தையின் பெயர் கொண்டால்போ பெஸ்கி; தாயார் பெயர் எலிசபெத் பெஸ்கி இவரது தந்தையார் பிரபுப் பட்டம் பெற்றவர்.

முதலில் ஊர்ப்பள்ளியில் கல்வி கற்றுப் பின் உரோமாபுரியில் இலக்கியம் கற்றுத் தேர்ச்சியடைந்தார். கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரெஞ்சு, போர்த்துக்கீசு முதலிய மொழிகளையும் பயின்றார். கலைப் பயிற்சியும் சமயப் பயிற்சியும் சிறுவயது முதலே பெற்ற பெஸ்கி இயேசு சமயத் தொண்டராதல் வேண்டும் எனத் துணிந்தார். பெற்றோரின் அனுமதியுடன் 1698-ஆம் ஆண்டு அக்டோபர் இருபத்தொன்றாம் நாள் தமது 18-ஆம் வயதில் துறவு பூண்டு இயேசு சபையில் சேர்ந்தார்.

1790-ஆம் ஆண்டு செப்டம்பரில் வீரமாமுனிவருக்குக் குருக்கள் பட்டம் வழங்கப் பெற்றது. இயேசுவின் நெறியை இந்தியாவில் பரவச் செய்ய வேண்டும் என இவர் விழைந்தார். தம் சமயத் தலைவர்களின் உடன்பாட்டுடன் 1711-ஆம் ஆண்டு இந்தியா வந்தடைந்தார். முதலில் கோவா, கொச்சி அம்பலக்காடு வந்து பின்னர் மதுரைப் பகுதியிலுள்ள காமநாயக்கன்பட்டி என்னும் சிற்றூரைத் தமது ஊழியக் களமாகத் தேர்ந்து கொண்டார்.

மொழியால் கலந்தால்தான் தம் சமயப் பணிகள் இனிதே நிறைவேறும் என்பதை உணர்ந்து வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் தமிழை எழுதவும் பேசவும் படிக்கவும் தெளிவாகக் கற்றார் முனிவர் சுப்ரதீபக் கவிராயர் இவரது தமிழாசிரியர்களுள் ஒருவர். இக்காலத்தில் தெலுங்கு,

கன்னடம், ஆரியம், இந்துஸ்தானி முதலிய மொழிகளையும் கற்றார். இவர் தமிழரோடு தமிழராய் வாழ எண்ணிய இவர் தம் இத்தாலியப் பெயரைத் தைரியநாதர் என மொழி பெயர்த்துக் கொண்டார்.

முனிவர் பணிபுரிந்த இடங்களுள் கயத்தாற்றுப் பாளையம், குருக்கள் பட்டி, திருச்சியிலுள்ள ஆவூர் தஞ்சையையடுத்துள்ள சில இடங்கள் குறிப்பிடத்தக்கன. ஏறத்தாழ 37 ஆண்டுகள் இவர் இந்தியாவில் சமயத் தொண்டும் தமிழ்த்தொண்டும் ஆற்றினார். 1747 ஆம் ஆண்டு பிப்ரவரி நான்காம் நாள் மணப்பாட்டில் இம் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

**படைப்புகள்**

வீரமாமுனிவர் பத்து வகை எழுத்தோவியங்களைத் தீட்டியுள்ளார் 1. கடிதங்கள் இரண்டு 2.காப்பியம் ஒன்று (தேம்பாவணி) 3.பாவகை நூல்கள் ஏழு (திருக்காவலூர்க்கலம்பகம், அடைக்கல நாயகிமேல் வெண் கலிப்பா, அடைக்கமாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, தேவாரம் வண்ணம், கித்தேரியம்மாள் அம்மானை) 4. உரைநடை நூல்கள் பத்து ஞானம் உணர்த்துதல், வேதியர் ஒழுக்கம் ஞானக் கண்ணாடி, வேதவிளக்கம், பேதகமறுத்தல், லுத்தேரினத்தியல்பு, வாமன் சரித்திரம், பரமார்த்த குருவின்கதை, ஞானவிளக்கம், திருச்சபைக் கணிதம் 5.இலக்கண நூல்கள் நான்கு (கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், 'திறவுகோல்' எனப்பொருள் தரும் கிளாவிசு - இது இலத்தீன் மொழியில் வீரமாமுனிவரால் வழங்கப்பட்ட தொன்னூல் விளக்கச் சுருக்கமாகும்) 6. மொழி பெயர்ப்பு ஒன்று (திருக்குறள் மொழி பெயர்ப்பும் விளக்கமும் அறம் பொருள் ஆகிய இருபாலுக்கும் இலத்தீன் மொழி பெயர்ப்பும் உரைவிளக்கமும் அமைந்துள்ளன.) 7. அகராதியில் ஐந்து - (சதுரகராதி, தமிழ் இலத்தீன் பேச்சு மொழி அகராதி, போர்த்துக்கீசு இலத்தீன் தமிழகராதி பிரெஞ்சு தமிழ் அகராதி, தமிழ் ஆங்கில அகராதி) 8. மருத்துவ நூல்கள் மூன்று வைத்திய நசகாடணம் இரணவாகடம் அநுபோக வைத்திய சிகாமணி) 9. வடமொழி நூல் ஒன்று (வாக்கிய சித்தாந்தம்) 10. தொகை நூல்கள் இரண்டு - (திருவள்ளுவப்பயன், தமிழ்ச்செய்யுள் திரட்டு)

**தேம்பாவணி ஓர் அறிமுகம் :**

தேம்பாவணி முதல் கிறித்துவக் காப்பியமாகும் கோனான்குப்பம் என்னும் ஆரியனூரில் உள்ள பெரிய நாயகியாம் அன்னை மரியாளின் திருவருளால் தூய சூசையாம் ஆரியவளன் கதையை 1726 ஆம் ஆண்டு வீரமாமுனிவர் இயற்றியுள்ளார். சிலர் 1729 ஆம் ஆண்டு தேம்பாவணி எழுதப்பெற்றது, என்பர். தேம்பாவணிக் காப்பியம் 1726 ஆம் ஆண்டிலும் இயற்றப்பெற்றுள்ளன என்பாரும் உளர் தேம்பாவணியைத் தந்தவர் வீரமாமுனிவர் என்றும் உரையை எழுதியவர் இவரது மாணவர் என்றும் நூலின் தொடக்கத்தில் உள்ள பதிகத்தாலும் முடிவில் இடம் பெற்றுள்ள புறவுரை ஆசிரியத்தாலும் தெரிய வருகின்றன.

முப்பத்தாறு படலங்களாக வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணியை உலூயி சவோனியன் தூபியர் அடிகளார் மூன்று காண்டங்களாக்கி 1851-1853 ஆகிய மூன்று ஆண்டுகளில் பதிப்பித்துள்ளார். இதில் 3615 பாடல்கள் அமைந்துள்ளன.

காப்பியங்கள்

குறிப்புகள்

இக்காப்பியத்தின் முதல்நூல் கி.பி.1660 ஆம் ஆண்டில் ஆகிர்த மரியாள் என்பவரால் ஸ்பானிய மொழியில் எழுதப்பட்டுப் பல மேலை நாட்டு மொழிகளில் எழுதப்பட்டிருந்த கடவுளின் நகரம் என்னும் நூலே ஆகும்.

**பெயர்க்காரணம் :**

முனிவர் இந்நூலுக்கு இட்ட பெயர் ‘தேம்பாவணி’ என்பதாகும் ‘தேம்பா+அணி எனப்பிரித்து ‘வாடாத மாலை’ என்றேனும் தேன் +பா+அணி எனப்பிரித்து தேன்போன்ற பாக்களின் வரிசை என்றேனும் பொருள் படுத்தலாம்.

மக்களது ஆன்ம கசடுகளை மாற்றி ஆன்மாவை வளமுறுத்தவல்ல வாடாத மாலையாய் இக் காவியம் விளங்க வேண்டும் என்பது முனிவரின் கருத்து சூசையின் தாயாகிய நீப்பி என்பவள் அக் குழந்தையைக் கடவுள் பாதத்தில் வைத்து வணங்கியபோது கடவுள் அசரீரியாய்த் தோன்றி ஆசிர்வதித்தார் என்றும் அவ்வப்போது வானத்தில் ‘என் மார்பில் தேம்பாவணி யாவான் என ஒரு ஒலி கேட்டது என்றும் அறியக்கிடக்கின்றன. அதனால் குழந்தையைச் சூழ்ந்து நிறை தாயார் உறவினர் முதலியோர் ‘தேம்பாவணியே’ என்று குழந்தையை வாழ்த்தினார் என்பர். இதனை முனிவர்

“வீடா வான்நலம்செய் நோக்கு நோக்கி விண்இறையோன

கோடா வரத்து ஆசிசெய் வான்மேல்ஓர் குரல் தோன்றி

ஆடா நிலையறுத்து என்மார்பில் தேம்பா வணியாவான்

வாடா அருள்மகன என்று அம்பூமாரி வழங்கிற்றே” (வளன் சனித்த படலம்.57)

என்கிறார்.

இங்ஙனம் தேம்பாவணி என்னும் பெயர். காப்பியத் தலைவனாகிய வளனையும் குறிக்கும். வளன் என்பதும் சூசை என்பதும் இக் கதைத் தலைவன் பெயர்கள்.

**காப்பியப் பகுதி**

இக் காப்பியம் பாயிரம் தவிர முப்பத்தாறு படலங்கள் கொண்டது. காப்பியத் தலைவனின் நாடாகிய யூதோ நாட்டு வளமும் அதன் தலை நகரான எருசலேம் நகரச் சிறப்பும் நாட்டுப்படலம் நகரப்படலம் ஆகிய முதலிரு படலங்களில் கூறப்படுகின்றன. காப்பியத்தலைவனின் முன்னோரில் பிறந்த தாவீதன் வரலாற்றைக் கூறி அம் மரபின் தலைவனாம் வளன் என்ற சூசை தோன்றியதை மூன்றாவதாகிய வளன் சனித்த படலம் குறிப்படும். பன்னிரு வயதில் வளன் காட்டை விரும்பித் துறவேற்க முற்பட்டதும்

முதியவர் வடிவில் தோன்றிய வானவரால் நாடு திரும்பித் தவம் போற்றத் துணிவதும் நான்காவதாகிய பால மாட்சி படலத்தின் செய்திகள் ஆகும்.



**பாலமாட்சி படலத்தின் செய்திச் சுருக்கம் :**

பாடப் பகுதியாகிய பாலமாட்சிப் படலம் தேம்பாவணியின் முதற்காண்டத்தில் நான்காவது படலமாக அமைந்துள்ளது. சூசை தன் பாலப் பருவத்தில் ஒழுகிய மாட்சிமையை இது உணர்த்துகிறது. இது 66 பாடல்கள் கொண்டது.

தாவீதரசன் மரபிற் தோன்றிய சகோபு என்பவனது தேவியாகிய நீப்பி என்பவளின் மகனாய்ப் பிறந்த சூசைக்கு வானவர்கள் அருள் அறம் தவம் ஆகிய உயர்ந்த நற்பண்புகளைப் புகட்டினர். இவ்வாறு வளர்ந்த சூசை மூன்று வயதிலேயே மூதறிவு உடையவனாக விளங்கினான். இறைவனைப் போற்றி வணங்கினான். கதிரவன் விண்மீன் திங்கள் காடு மலை ஆறு கடல் முதலியவை இறைவன் பெருமையைத் தனக்கு உணர்த்ன என எண்ணினான்.எனவே இயற்கையே அவனுக்கு ஆசிரியனாகத் திகழ்ந்தது. மலரின் தேன், கரும்பின்சாறு முதலியவை இறைவனின் குண நலன்களாகிய இன்ப வெள்ளத்தின் இயல்பை உணர்த்தின. நிழலில் எருமைகள், நீரில் சங்குகள், மலரில் வண்டுகள், வயலில் அன்னங்கள், சாலையில் மயில்கள் ஆகியவை தூங்குவதைக் கண்டதும் வளன் நெஞ்சம் இறைவனின் குளிர்ந்த திருவடியை நினைந்து இன்புற்றது. பறவைகளின் ஒலியைக் கேட்டதும் அவை இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றன எனக் கருதி அவனும் இறைவன் புகழைப் பாடினான்.

மக்களோடு போர்செய்யும் பாவத்தை உண்டாக்கும் பேய்களை அவன் தெய்வீக அருளால் வென்றான். பெண்களின் மாயையினின்று இயல்பாகவே விடுபட்டான். இங்ஙனம் இயல்பிலேயே நற்பண்புகளைப் பெற்றிருந்த சூசை தன் பன்னிரண்டாம் வயதில் அருந்தவம் புரியக் காட்டை நோக்கிச் சென்றான். அங்கே ஒரு மலையினைக் கண்டு இம்மலையேத் தவம் செய்வதற்கு ஏற்ற இடம் எனக் கருதி அங்குள்ள சோலையினுள் நுழைந்தான். அப்போது வானவன் ஒருவன் அவன் முன் முதியவன் போல் தோன்றினான். காட்டை விடுத்து நாட்டிற்குச் சென்று அங்கே இல்லறம் துறவறம் என்ற ஈரறத்திலும் ஈடுபடுமாறு அம்முதியவன் சூசைக்கு அறிவுரை கூறி மகிழ்ந்தான். சூசை முதியவனை வானவன் என உணர்ந்தான் அம் முதியவனின் கூற்றினை ஏற்று நாட்டிற்குச் சென்று எல்லாவகை நற்பண்புகளும் சிறக்க ஒழுகினான். சூசை ஐம்பொறி அடக்கி நன்றும் தீதும் ஆய்ந்து அன்பு ததும்பும் இன்ப நிலையில் நின்று துன்பத்தால் வாடிய உயிர்களுக்குத் துணைவனாக விளங்கினான்.

**பாலமாட்சி படலம் : பாடல் கருத்துக்கள் :**சூசையின் இளமைப் பருவச் சூழலைச் சித்திரிப்பதாக இப் பாலமாட்சிப் படலம் அமைந்துள்ளது.

காப்பியங்கள்

குறிப்புகள்

மூன்று வயது முதல் பன்னிரண்டு வயது வரையுள்ள வாழ்க்கைப் போக்கினை இப்படலம் காட்டுகின்றது.

**சூசைக்கு விண்ணவர் நன்மை மிகவே அளித்தல் : (1-2)**

வானுலகத்திற்குரிய அரசினை அடைந்துவாழ அவ்வானுலக வேந்தனுக்குத் தகுதியுள்ள நற்குணச் சிறப்புகளையெல்லாம் தேன் பொருந்திய இனிய மலர்போன்ற சிறுவனுக்கு விண்ணவர் அளித்தனர்.

எனவே "அவ்வானவர் சிறுவனுக்கு ஊட்டினார் அருள் : முடியின் ஒப்பெனச் சூட்டினார் அறம்; சுடரும் பூணெனப் பூட்டினார்; தவம் பொற் செங்கோலெனக் காட்டினார்; அறிவு அமைந்த காட்சியே" என்று வீரமாமுனிவர் சூசையின் இளமைப் பருவச் சிறப்பினைத் தெய்வீகத்தோடு இணையப் போற்றுகின்றார்.

**மூன்று வயதில் மூதறிவு : (3-4)**

"இளைய வான்பிறை என வளர்ந்து உளம்
வளைய மாசுறா வயது மூன்றுளான்
உளைய நூலவர் உற்ற காட்சியின்
திளைய வான்அறிவு எய்திச் சீர்த்தனன்" (3)

இளம் பிறையைப் போல் வளர்ந்து மனம் கெடும்படியான மாசினை உறாமல் மூன்று வயதுடைய சிறுவனாகத் தோன்றினான். சூசை இவ் இளம் வயதிலேயே புலவர்கள் வருந்தியடையும் அறிவைவிட நிறைந்த அறிவுடையவனாகச் சிறப்புற்றான். இத்தகைய அறிவைப் பெற்ற அவன் தன் மலர்ச்செங்கையால் தெய்வத்தைத் துதித்து வில்லின் தன்மை பொருந்திய நெற்றியை நிலத்தில் தாழ்த்தினான். (கைகூப்பி நிலத்தில் வீழ்ந்து வணங்கினான்).

எனவே சூசை இயல்பிலேயே மாசற்றவனாக கருவிலேயே திருவுடையவனாகச் சிறப்பிக்கப் பெறுகின்றான். 'தாயின் கருப்பத்திலேயே குழந்தையின் (சூசையின்) பழ வினையாகிய சென்மப் பாவம் இறைவனால் நீக்கப்பட்டது. என்று இப் படலத்தின் முன்னுள்ள வளன் சனித்த படலத்தில் குறிக்கப்பெறுகிறது.

"புரப்ப ஓர்பொதுமுறை பொறாத தன்மையால்
கருப்பம் ஓர் எழுமதி கடக்கும்முன் வினை
பரிப்ப ஓர் சிறப்பு அருட்பயத்தில் சூல்செயிர்
விருப்பமோடு இறையவன் விலக்கினான்; அரோ"

Self Instructional Material

(வளன் சலத்த படலம் - 50) என்கிறார்.

முதல் தாய் தந்தையர் கடவுள் கட்டளையை மீறிக் கனி உண்டாதல் அவர் தம் சந்ததியாகிய மனித குலத்துக்கு உற்ற பரம்பரை ஆன்மநோயை 'சென்மப்பாவம் எனக் கிறித்தவ மறை குறிப்பிடும். இத்தகைய சென்மப் பாவமாகிய பழவினை சூசையைப் பற்றவில்லை என்பது முனிவர் கூற்று. காப்பியத் தலைவனாகிய கூசையைத் தன்னிகரில்லாத மாண்புடைய தலைவன் எனக் காட்டுதற்கே சென்மபாவம் சூசைக்குக் கருவிலேயே நீக்கப்பட்டது என்கிறார். முனிவர்

**சூசை இயற்கையை ஊன்றிநோக்கி எண்ணத்தில் உயர்தல் : (6-12)**

"தூநி லாவுசெஞ்சுடரும் மீன்களும்
வான்நி லாவுஉடு நடுவ ழுங்கிய
பால்நி லாவையும் பார்த்து நாதனைத்
தேன்உ லாவு உலை செப்பி வாழ்த்துவான்".

வானத்தின் இயற்கையெழிலைக் கண்டு (6) களித்த சூசை தேன்போலும் இனிய சொற்களால் இறைவனை வாழ்த்தினான்.

மங்கையர் கொங்கை எனப்படும் மலைச்சிகரத்தின்மேல் அலைகளையுடைய பால்போன்ற அருவி பெருகி வழிந்தது.

"சோலை வாய் இறால் துளித்த தேறலும்
மாலை வாய்மரர் வழித்த தேறலும்
ஆலை வாய்க்கழை அளித்த தேறலும்
நூலை ஆய்ந்தென நுதலி மூழ்குவான்" (8)

இங்ஙனம் மலரின் தேன், கரும்பின்சாறு முதலிய இனியவை இறைவனின் குண நலன்களாகிய இயற்கையினது இன்ப வெள்ளத்தின் இயல்பை உணர்த்தின.

நிழலில் எருமைகளும் நீரில் சங்குகளும், சோலையில் மயில்களும் மலர்களில் வண்டுகளும், வயல்களில் அன்னங்களும் துயிலக்கண்டு குழந்தையாகிய சூசையிடத்தும் நன்மைகள் தூங்கிக் கொண்டிருக்குமாம்.

குயில்கள் அன்னங்கள் கிளிகள் ஆகிய பறவைகள் பாடுவதைக் கேட்டுச் சூசையும் இலக்கண அமைதியுடைய பாடல்களை இறைவனை எண்ணி இன்பமாகப் பாடினான்.

மலைக்குரிய வனப்பினைப் பெற்று மலையாகவும் அலைக்குரிய மணியாலாகிய மனத்தைக் கவரும் அலையாகவும் நிலைபெற்று மருதநீர்மையாகிய (தன்மையாகிய) சிறப்புப்பொருந்திய நிலையாகவும் கலைக்கு உரிய கருத்துக்கள் நிரம்பிய கலையாகவும் சூசை விளங்கினான்.

**இறைவழியிற் செல்லுதல் : (13-14)**

"மீதுலாவிய மீன்கள் தீபமாய்

போது லாவிய புவியும் வீதியாய்

கோது லாவிய குறைகொய் காட்சியான்

மூதுலாவு இறை அடைய முன்னினான்." (13)

வானில் திகழும் விண்மீன்களே தனக்கு வழிகாட்டும் விளக்குகளாக மலர்கள் நிரம்பித் திகழும் இப் பூவுலகமே தான் பயிலும் தெருவாகக் கொண்டு ஆதியாகிய இறைவனை அடையக் குற்றங் குறைகள் நீங்கிய சூசை முற்பட்டான்.

தம்முன் வேறுபடும் விகாரங்கள் யாவும் சரிந்துவிட (இறைவழிச் செல்லும் தடைகள் வீழ்ந்துபட) மாட்சியில் உயர்ந்த பேற்றினைக் கொண்டு இளவல் (சூசை) மனத்தால் உயர்ந்தான்.

**பேய்ப்பகை வெல்லல் : (15)**

மக்களைத் தாக்கிப் போராடும் பேய் மிகவும் கருத்தோடும் வஞ்சனையோடும் செய்யும் பகைமை அழித்து உய்ந்தான் சூசை.

**வரங்களோடு வளர்தல் : (16-17)**

கபடுகள் காட்டுகின்ற களங்கத்தினைக் கடிந்தவனாகிய சூசையின் ஒளிர்கின்ற உள்ளத்தை காட்டக் கூடிய ஒளிமுகம் தெளிவினைக் காட்டி எழில் கெண்டு விளங்கியது.

இத்தகையோன், வரங்களாகிய வெள்ளத்தோடு வளர்ந்து விளக்கமுற்றான். இனிமையாய் விளங்கி, எவரும் ஆசை கொள்ளுமாறு, பொன்னினைத் தெளித்து வரைந்தாற் போன்ற அழகுடையவனாக அவன் விளங்கினான். மின்னல் ஒளியைத் தூவி எழுதினாற் போன்ற ஒளியுடைய மாதர் அழகானது பயனற்றது எனத்தெளிந்து அவன் நெறி தவறாமல் ஒழுகினான். (பன்னிரண்டு வயதினையுடைய இளவல் நெறியில் வாழும் வரங்களை இயற்கையாகவே பெற்று எழில் மிகு மாதராயினும் அவர்களது அழகும் வீண் என உணர்ந்தும் தவ நெறியின் முற்படச் சிறந்து நின்றான். எனவே முனிவர்.

"கள்ளம் காட்டு களங்க கடிந்து ஒளிர்

உள்ளம் காட்டும்ஒளி காட்டிய ஒண்முகம்

தெள்ளம் காட்டுஎழில் தீட்டி வரங்கள்தம்

வெள்ளம் காட்டி வளர்ந்து விளங்கினான்.”

என்று குறிப்பிட்டுள்ளார்.



**சூசையைக் கண்ட மங்கையர் நிலை (18)**

“கதிர்மு கத்துஅலர் கஞ்சம்கொல்? கஞ்சமேல்

பொதிர்மு கத்தும்எழும் பொற்பு அளிகொல்? நசை

பிதிர்மு கத்து இழையார் இவன் பேரெழில்

முதிர்மு கத்திடை மொய்த்தன நோக்கமே”.

சூசையின் பேரெழில் முகத்தினைக் கண்ட அணிகலன்களை அணிந்த மங்கையர் கதிரவன்முன் தாமரையும் மலர்களில் மொய்த்த வண்டுகளும் போலாயினர்.

**மங்கையரைக் கண்ட சூசை (19-20)**

ஆனால் புதிய முகத்தோடு (பொலிவுடன்) மலர்மாலை அணிந்த பெண்களின் அழகிய முகத்திற்கு எதிர்ப்பட்ட (உணடையிடத்து விளங்கும் மேதையாகிய மேன்மையோனின்) கண்கள் சந்திரனுக்கு முன் குவியும் தாமரைபோல் ஆயின.

விண்மீன்களும் வணங்கத்தக்க ஒளியினையுடைய விழிகளைக் கொண்டவர்களாகிய மகளிரின் உரையினை (இனிமையால் தேனும் வணங்கத்தக்க அவ் இனிய சொல்லினை) வேல் என நினைந்து கேட்க விரும்புபாதவன் ஆனான் நற்றவக் காவலாகிய சூசை.

**போரும் காமமும் (21)**

“கார்மு கத்து வளைத்தன கார்முகம்

சீர்மு கத்துச் செயம் தரும்; காமவெம்

போர்மு கத்து வெல் வான் புரை ஆசையற்று

ஏர்மு கத்துஎதி ராதுஒளித்தான்; என்றான்.”

போரில் வில்லை வளைத்து எதிர்த்தவனுக்கு வெற்றி என்றும் காமப் போரின் புறங்காட்டி ஓடியவனுக்கு வெற்றி என்றும் சூசை எண்ணினான்

போர்க்களத்தில் நேர்நின்று எதிர்த்துப் போரிடுவதே ஆண்மையாகும். ஆனால் காமப்போரில் காமப்பேயினை விட்டு அறவே விலகி அஞ்சியோடுவதே ஆண்மையாகும். எவ்வாறெனில் விற்களையுடைய போர் முகத்து விற்களைக் கொண்டு வளைத்துச் செய்யும்போது அச் சீரிய போரில் வெற்றி ஏற்படும். ஆனால் காமமாகிய கொடிய போரினை வெல்லக்

கூடியவன், குற்றமாகிய ஆசையற்றவனாய்க் காமம் பொருந்திய அப்போர் முகத்து எதிர்த்து நிற்காமல் தன்னை மறைத்துக் கொள்வான் என்றான் சூசை (எனவே ஆசையை மிகுவிக்கும் நாட்டு வாழ்வை விடுவித்துக்கானகம் செல்லமுற்பட்டான் அவன்).

**சூசை கான் ஏகல் (22-23)**

காமத்தின் வசப்படாமல் ஒளிந்து செல்பவன் போலக் காட்டினை அடையச் சென்றான் சூசை. குன்றின்கண் ஒளிந்துள்ள மாணிக்கமணி போன்ற சாயலுடைய சூசை கன்று ஒளிந்தபோது அதனைத் தேடிக் கதறிச் செல்லும் பசுவினைப் போலத் தன்னைத்தேடி அனைவரும் அழுமாறு ஒளித்த இறைவனைத் தேடிக் காடு சென்றான்.

“தே(ம்) முயங்கிய தேன் தரு நீட்டிய
காமு யங்கிய கார்வரை கண்டால்
பூமு யங்கு பலந்தரு நீழற்கீழ்
பாமு யங்க வதிந்தினன் பாடுவான்”.

காடு சென்ற சூசை மணமிக்கதும் தேன்பொருந்தியதும் ஆகிய நீண்ட சோலைகள் சூழ்ந்த முகில் தவழும் மலையைக் கண்டான். கண்டபோது மலர்கள் நெருங்கிய மரத்தின் நிழலில் தங்கிப் பாடல்கள் சிலவற்றைப் பொருத்தமாகப் பாடினான். (மலையைப் பற்றிய பாடல்களைச் சூசை பாடினான்).

**சூசை ஒரு மலையைக் கண்டு புகழ்தல் : (24-26)**

“வளைத்தன தனுக்கொடு எழவும் ஈர்க்கு அடை
வடிக்கணை வினை(ப்)பட வினையை ஆக்கிய
விளைத்தன நசை(க்)கொடு விளையு நோய்த்திரள்
விட(ப்)பகை பகைத்தன பொறிகள் ஈர்த்துபு
திளைத்தன மிறை(க்)கொடு நகையும் நீத்து, அவை
செகுத்து ஓடு புகைத்திட உரியதாய் பொருவு
இளைத்தன திரு(க்)கொடு வளரும் மாட்சியை
இயற்றிய முகில்படர் மலையின் ஊக்கமே”

இம்மலை உயரமானது மேகம் தவழ்வது வளைத்த வில்லினின்று புறப்படுவதும் இறகுகளென உடையதும் ஆகிய தீட்டிய அம்பு தன் கொடிய செயலைத் தவிர்க்குமாறு இம்மலை நல்வினையை விருப்பத்தோடு செய்விப்பது; நோய்களின் கூட்டம் நீங்குமாறு செய்வது பகை செய்யும் இயல்புடைய ஐம்பொறிகளின் அவாவினை அறுப்பது; பெருகும்

குற்றங்களையும் ஆசைகளையும் நீக்குவது; நோய் அவா குற்றம் ஆசை ஆகிய அவற்றை ஒருங்கே அழித்துப் புதைப்பது; ஒப்புமையில்லாத செல்வமும் வளரும் சிறப்பும் விளைவிப்பது.

இம்மலை உயரமானது இதன்கண் உள்ள பொழில்கள் சூல் கொண்ட கருமேகங்கள் விலகுமாறு அவ்வளவு உயர்ந்தவை; முற்றிய கனிகள் நிரம்பியவை இம்மலை தன்னைச் சுற்றிலும் தேன்மலர் அம்புகள் தோற்றுவிப்பது.உயர்ந்த இடம் என்னுமாறு ஆகியது. ஒளிக்கதிர் வீசும் சூரிய மண்டலத்தினும் மேற்செல்வது எண்ணுதற்குரிய தகுதிசான்ற இடம் எனப்படுவது இரவும் பகலுமற நிறுத்திய தவத்தினால் தீவினை வேரோடு நீங்க இறைவனை வாழ்த்துதலின் மிகவும் விரும்பத்தகுவது.

"உடித்தன முதற்கதிர் எழுது கோட்டுஉயர்
உளத்து இருள் ஒழித்து ஒளி அறிவு நீர்த்தலின்
முடித்தன தவத்து உயிர் இனிது காத்துளி
முரண்படு பகை(ப்)பட அரணின் மாட்சியாய்
இடித்தன மழைத்துளி பெருகும் ஆற்றொடும்
இணை(ப்)பட நிறைபடும் அருளின் நீத்தம் உள்
குடித்தன மனத்துளழ உறுதி ஆக்கிய
குணத்து அருள் குடித்தகும் மலையின் ஊக்கமே"

இம்மலை உயரமாமனது. உதயசூரியனது முதற்கதிர் படியும் உயர்சிகரம் உடையது. உள்ளத்து அறியாமையை இருளை நீக்குவது; அறிவொளியை நிரப்புவது; முடிவானதவத்தின் உயிர்நிலையை இனிது காப்பது; மாறுபடும் பகை நீக்குமாறு அரண்போல் நிற்கும் பெருமையுடையது; இடியுடன் கூடிப் பொழிந்த மழைத்துளி பெருகும்

ஆற்றினையுடையது; அந்த ஆற்று வெள்ளத்திற்கு இவ்விரண்டையும் பருகிய மனத்தின் உறுதியை உண்டாக்கும் கருணைப் பண்பு குடி கொள்ளத்தகுவது.

**மலையை நோக்கிக் காட்டினுள் விரைந்து செல்லுதல்**

ஒலிக்கும் அலைகடலில் நீந்தி அதன் கரையைக் கண்டாற்போலக் களிப்பில் சிறந்துயர்ந்தவனாகவும் குன்றில் பொழிவுறும் முகட்டினை நோக்கியவனாகவும் குயில்கள் கூவவும் மயில்கள் அகவவும் வேங்கை மலர்கள் அலர்ந்துள்ளதும் ஆகிய காட்டின் நுழைந்தான் சூசை உலகப் பற்றுதலை விடுவிப்பதற்கு அடிப்படையான ஐம்பொறிகளின் அவாவினை

அடக்குவதற்கு ஏற்ற இடமாகக் காடும் மலையும் அமையும் என்பது ஈண்டு ஆசிரியரின் கருத்து எனவே ஏனைய முனிவர்களும் இத்தகைய இடங்களில் தான் தவம் செய்தனர் என்பதை அறிய முடிகிறது.

**ஒரு முதியவன் சூசையைச் சந்தித்தல் : (28)**

"காரிடைக் குளித்த மின்போல் கானிடைக் குளிப்பப் போகி

நீரிடைக் குளித்த பேவு நிறநரை குளித்(த) ஓர் மூப்பன்

தாரிடைக்குளித்த தேன்போல் தயையிடைக்குளித்த சொற்கொண்டு

ஏரிடைக் குளித்த பாலா! இயம்புதி போவது என்றான்"

மேகத்திடையே மறைந்த மின்னல்போல அக்காட்டிடையே மறைந்திருந்த ஒரு முதியவன் (வானவன்) சூசையின் எதிரே வெளிப்பட்டான். நீரில் தோன்றும் நுரையைப் போல வெளுத்த நரைமுடியினன் அவன். மலரில் தோன்றும் தேன் போல இனியதும் குளிர்ந்ததுமான அன்புச் சொல்லினால் அவன் 'அழகுமிக்க சிறுவனே நீ எவ்விடம் செல்கின்றாய்? கூறுக என்றான்.

**சூசை தன் கருத்தைத் தெரிவித்தல் : (29)**

வீட்டினையும் நாட்டினையும் இழந்து பகை செய்யும் பேய்களின் வினையினுக்கு அஞ்சி காட்டினில் விரும்பி வாழும் அறத்தினை நாடி

உவமையற்ற உயர்ந்த குன்றத்தினிடத்து மறைந்து வாழ எண்ணி மக்கள் குழாத்தை விடுத்துச் செல்கின்றேன்" என்று முதியவனிடம் இயம்பினான். துணையின்றித் தனியனாய்ச் செல்லும் உயர்ந்தோனாகிய இளவல் சூசை.

**துறவில் வீரம் வேண்டும் - முதியவன் (30)**

'இடியுடன் கூடிய கார்காலத்தில் மலரும் முல்லை நறுமணத்தோடு விளங்கும் புயல்காற்றுக்கு அஞ்சிய கப்பல் வேற்று நாட்டுச் செல்வங்களைக் கொண்டு வருமோ? போர்க்களத்தில் எதிர்த்துப் போர் செய்யாமல் நீங்கினால் விரும்பிய வெற்றி கிட்டுமோ? அழகுடைய முகத்தினை உடைய இளவலே" என்றான் முதியோன்.

**மக்களிடையே வாழ்ந்தால் ஆசை அனலாகும் (31)**

"படமும் புள்ளிகளும் உடைய பாம்பின் நஞ்சினைப்போல பழியுண்டாகப் பகைத்துத் துன்புறுத்தும் படியான ஐம்பொறிகள் அல்லாமல் நாட்டின் சுற்றுச்சூழலிலுள்ள யாவுமே பகைத்தபோது நெருப்புப்பொறியால் பசிய பூ அழிந்தது போல உள்ளமும் அழிந்து ஏங்கும், கொடிய நெருப்புப் பொறியாகிய வேட்கையும் தணிக்கப்படாது" என்றான் சூசை. (எனவே மக்களிடையே வாழ்ந்தால் ஐம்பொறிகளை நல்ல நெறியில் செலுத்த

முடியாமலும் வேட்கையை அடக்க முடியாமலும் கொடிய நிலைக்கு ஆளாக வேண்டும் எனத் தெரிவிக்கின்றான் சூசை).



**துன்பத்திடை மனவலிமை வேண்டும் - வானவன் (32)**

"செம்பொன் செந்தீயில் உருக்கும்போதுதான் ஒளிகாட்டும் நெருப்பில் அகில் புகைந்தால் தான் மணம் ஏற்படும். சாணக்கல்லில் தேய்த்தால் தான் மணி மின்னொளியைக் காட்டும். எனவே துன்பத்தினால் குன்றாத ஊக்கம் மாட்சிமையாகிய தன்னொளியைக் காட்டும். நிலைபெற்ற ஒளியினைக் காட்டும் நல்லோய் இதுதான் வேதமாகும்" என்றான் சான்றோனாகிய வானவன் (முதியோன்).

**ஆசையை அறுக்கத் தவமே வழி - சூசை (33)**

"உள்உயிர்உண்ணும்கூற்றின்உடன்றுகொல்நசையைக் கொல்லத்
தெள் உயிர் மருட்டும் செல்வத் திரள் துறந்து ஒருங்கு நீங்கி
கள்உயிர் உயிர்த்த. பைம்பூங் கானில் வாழ் தவத்தை நாடல்
எள்உயிர் தெளிக்கும் வண்ணம் என்பரே? என்றான் சேடன்"

'உடலினுள் பொருந்திய உயிரை உண்பது கூற்றம். அக் கூற்றம் போலச் சீறி ஆன்மாவைக் கொல்வது ஆசை. அவ்வாசையை ஒருவன் அழித்து ஆன்மாவைக் காக்க எண்ணினால் தெளிந்த உயிரையும் மருட்டும் வல்லமையுடைய செல்வங்களைத் துறக்க வேண்டும் என்றும் தேன்துளிக்கும் மலர்களைக் கொண்ட காட்டில் தவத்தை நாடவேண்டும் என்றும் பெரியோர் கூறுவரே" என்று மைந்தனாகிய சூசை முதியவனை நோக்கிக் கூறினான்.

**நெடும் போரிலேயே மனஉறுதி உண்டு – முதியவன் : (34)**

"ஒரு நாள் எல்லாவற்றையும் துறத்தல் உறுதியே எனவே மனத்தின் வாயிலை அடைத்துக் காத்தல் (மனவடக்கத்தோடிருத்தல்) மலைச் சிகரங்களில் உறுதியைக் காட்டிலும் மிகுதியான திறமாகும். என்றான் முதியோன்.

**'துறவறமே மேன்மை தரும்' - சூசை (35)**

"கனியை மட்டுமின்றி மரத்தையும் ஒருவனுக்கு ஈவது மேலான கொடை என்பார்களன்றோ? இவ்வாறு மனக்கனிவோடு உள்ள பொருள்களையும் பிறர்க்காகக் கொடுத்து மேற்கொள்ளும் துறவறமே துறவாகும் என்பர் பெருமை பொருந்திய நூலோர்" என்று இயம்பினான் இளவல்.

**அயலாரையும் நல்வழிப் புகுத்தல் அறம் - முதியவன்(36)**

"காயோடு மரத்தையும் தந்நது போல சிறந்த துறவறத்தின் அருமையினை விரும்பி மூங்கில்களோடு நெருங்கிய காட்டில் தான் ஒருவனே ஒழுகுவது நன்றோ? தீடையோடு பொருந்திய மற்றோரையும் செம்மையுறச் செலுத்துதல் நன்றோ? தூய நட்சத்திரத்தினும் விளங்கிய உணர்வோய்" என்று சூசையை நோக்கி வினவினான் முதியோன்.

(தீமையில் மூங்கில் கிடக்கும் பிறரை நல்வழிப் படுத்துவதே துறவறத்தினும் சிறந்தது என வானவன் உரைத்தான். இதுவே காயொடு மரத்தையும் தந்தது ஆகும்)

**'அயலாரால் ஆசையும் வளருமே' - சூசை (37)**

"பெற்றுள்ள அறத்தை அணியாகக் கொண்ட நல்லோய்! பிறர் மனையில் ஏற்பட்ட தீயினை அவிக்கப்போய்த் தன் மனை பற்றி எரிதல் போலப் பிறர்க்குப் பற்றறுக்க முற்பட்டுத் தானே நசையில் வேகலாமா? என்றான் இளவல். பற்றினை விடுமாறு பிறர்க்கு உபதேசிக்க முற்பட்டுத்தான் பற்றில் அகப்பட்டுத் துன்புற்றால் என் செய்வது? என்று வினவுவதால் துறவறத்தின் மீதுள்ள தன் பிடிப்பிளை சூசை புலப்படுத்துகின்றான்.

**'இடத்தையும் வெல்வது மனமே' – (38)**

"தீமையில்லாத இடத்தை அடைய விரும்பினால் வானுலகம் அடைதல் வேண்டும். குற்றமில்லாத காட்டிடத்துத் தான் வந்துறைந்தாலும் கொடிய பகை (மனத்தை அடக்கியாள முடியாத கொடியபகை) விளையும் குற்றமில்லாமல் ஒழுகுதல் மனத்தின் இயல்பினால் (மனவடக்கத்தால்) இயலுமேயன்றி போரில்லாத இடத்தால் இயலாது மைந்தனே" என்றான் சான்றோனாகிய முதியவன்.

**ஈரறத்திலும் சிறந்த அறம் எது? - சூசை(39)**

ஈரறம் (இல்லறம், துறவறம்) வழங்கி வரும் முறையில் யாவற்றையும் துறந்த தன்மையே பேரறம் எனக் கேள்வியுற்றேன். பின்னர் அத் துறவறத்தினும் விடச் சிறந்த ஓரறம் இருக்குமாகில் அதனை உரைப்பாய் ஐயா. அங்ஙனம் உரைத்த அத்தகைய சிறந்த அறத்தை விரும்புவேன், என்றான் வானுலகுக்கு உரிய இளைஞன்.

**'ஈரறத்தையும் இணைப்பதால் பெரும்பயன் விளையும்' – முதியவன்(40)**

"ஈரறத்தினின்று பிரிந்து நோக்கினால் துறவின் மாட்சிமையானது பேரறம் ஆவதன்றிப் பிரிதலில்லாத இரண்டும் (ஈரறமும்) தம்முள் ஓரறமாகச் சேர்ந்தால் அது (அந்த ஓரறம்) உறுதியும் பயனும் ஓங்கும் படியான சிறந்த அறமாகும்" என்றான், மாட்சிமைப்பட்ட பலவகைக் கேள்வியறிவினையுடைய மூத்தோன்.

**இல்லறம் புண்ணியம் துறவறத்தை மாட்சிமைப் படுத்துமோ' - சூசை**

இல்லறமும் துறவறமும் இணைந்தால் உறுதியும் பயனும் விளையும் என்று கூறிய அம் முதியவனை நோக்கிச் சூசை, "ஐயா பாலுடன் கலந்த நீர் பாலின் செறிவினைக் கெடுக்கும். வானில் எழுந்து விளங்கும் கதிரவனுக்கு முன்வைத்த விளக்கு ஒளியிழக்கும் பால் கதிரவன் ஆகியன போன்றது துறவறம், நீர், கதிரவன் முன் வைத்த விளக்கு ஆகியன போன்றது இல்லறம் எனவே இவ்விரண்டு அறங்களையும் ஒருங்கே இணைத்தால் இல்லறத்தால் வரும் புண்ணியம் துறவறத்திற்குப் பெருமை சேர்க்குமோ? சொல்லுங்கள்" என்றான்.

**'நாட்டில் செய்யும் துறவின் நன்மைகள்' –முதியவன்(42)**

மிக்க தெளிவு பொருந்திய சான்றோனாகிய முதியவன் இளைஞனைத் தழுவிக் கூறுவானாயினான். அருள் நிறைந்த உணர்வு, அன்பு, ஊக்கம், அரிய, பொறுமை, ஈகை, மயங்குதற்குரிய குணங்கள் நீங்கிய மாட்சிமை ஆகிய இவை திங்களை விண்மீன்கள் சூழ்ந்தாற்போல் செல்வத்தின் மேன்மை பெற்ற நாட்டில் ஈரறமும் இணைத்து நடத்தும் வாழ்க்கையில் பொலிவுற்று விளங்கும்.

**கடமையை உணர்த்தி முதியவன் மறைதல்(43)**

"காட்டில் வளரக் கூடிய தவத்தைக் காட்டில் வளர்த்து வருவார் மற்றவர். ஆனால் உன்னால் வளரக்கூடிய தவத்தை வைத்து விளங்கினான். குற்றம் செய்யாத முறையில் யாவரும் ஒழுகி நிற்கவேண்டி அவர்களுக்குச் செவ்வையான நெறியினை ஓதி நின்றான்.

பிறர்க்குப் பயன் நல்கும் இனிய வாய்ச் சொற்களை உடையவனாகிய சூசை ஐம்பொறிகளின் வாயிலாகச் செல்லும் ஐம்புலன்களையும் அடக்கி மயக்கந் தீர்த்து மனத் தெளிவுடன் விளங்கினான். எல்லோருக்கும் நன்மை புரிவதுடன் இன்னா செய்தார்க்கும் இனியவை செய்து அவருக்கும் அருந்துணையாகவும் விளங்கினான். துன்புற்றவர்க்கு உயிர்த்துணையாகவும் சிறந்து நின்றான். பொறுமையின் திறமையையும் மறையின் உரிமையையும் அணியாகக் கொண்டு நிறைந்த மாட்சியோடு விளங்கும் இவனைத் தகுதி வாய்ந்த முறையில் வாழ்த்துவதற்குச் சொல்வன்மை உடைய புலவர்களும் ஆற்றல் உடையவராவாரோ? (ஆகார்)"

இவ்வாறு சூசை எல்லாவகை உயர்ந்த பண்புகளையும் பெற்றுத் தூய தவவாழ்க்கையில் உயர்ந்து நின்றான்.

எனவே முனிவர்

“பொறையது ஆண்மையி னோடு எரிபூண் எனா
மறையது ஆட்சி அணிந்த வளன் தகும்
ஆட்சி நிகர்ப்பது நூல்வழி
அறைய வாய் மையர் எய்துப ஆண்மையோ?”

என அவனை வாழ்த்துகின்றனர்.

**சோதித்தறியும் வினாக்கள் :**

1.பாலமாட்சிப் படலத்தில் இலக்கியநயம் குறித்து விவரி.

“தமிழ் இலக்கியங்களில் தலை சிறந்த காவியங்களில் நான்கினைத் தேரின் தேம்பாவணியும் அவற்றுள் ஒன்றாகும்” என்று இயம்பியுள்ளார், கால்டுவெல் இருபதாம் படலத்திற்குத் தாசோவின் எருசலேமின் விடுதலை என்னும் காப்பியம் துணை நூலாக அமைந்தது எனக் கூறுவார், டாக்டர் தனிநாயகம். எனவே இந்நூல் காப்பியத் தன்மை பெற்று விளங்குகிறது எனலாம். ஆனால் ஏனைய புலவர்கள் எழுதிய காப்பியங்கட்கும் இதற்கும் இடையிட்டதோர் முரண்பாடு ஒன்று உண்டு. ஏனையோர் காப்பியங்கள் அகப்பொருள் புறப்பொருள் இலக்கணங்களைத் தழுவிச் செல்வன.

இக்காப்பியம் அகப்பொருள், இலக்கணத்துள்ளோ புறப்பொருள் இலக்கணத்துள்ளோ அமையாது ஈரறம் ஓரறமாகப் பொருத்தி விளங்கும் சிறப்பினைக் கொண்டது.

தேம்பாவணி நூலில் மிகுதியான சொல்லிலக்கணமும் பொருளணிகளும் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. மடக்கு, சிலேடை, இரட்டுற மொழிதல் முதலிய பல்வேறு அணிகளும் விளக்கம் பெறுகின்றன. எதுகை மோனை ஆகிய தொடைகளும் பரந்துள்ளன. ஒவ்வொரு படலத்திலும் நான்கு ஐந்து வகைச் சந்தங்கள் பொருந்திய பாடல்கள் அமைந்துள்ளன. இயற்கை வனப்பில் இறைவனிடம் தோற்றம் ஏற்றம் பெறுகின்றன. உவமைகளும் உருவங்களும் தலைசிறந்து விளங்குகின்றன. திருக்குறள் கருத்துக்களும் சிறப்பாகக் கையாளப்பட்டடுள்ளன. இவை பாலமாட்சிப் படலத்திலும் சிறப்புறும் பான்மையினை ஈண்டுக் காணலாம்.

**உவமைகள் :**

இப்படலத்தில் உவமைகள் சில சிறந்து நிற்கின்றன. என்பது குறிப்பிடத்தக்கது. இப்படலத்திலுள்ள அறுபத்தாறு பாடல்களும் 5,18,19,20, 22,27,28,36,37,41,42,44,46,59 முதலியவை உவமைகள் பொருந்திய பாடல்கள் ஆகும். சான்றாக

“பெற்றுஅறம் அணிந்த நல்லோய் பிறர்மனை விளைத்த செந்தீ

அற்றுஅற ஓடித் தன்வீடு அழன்றதே போல வேட்கைப்

பற்றுஅற உணர்த்தி உள்ளம் பற்றிய நசையில் வெந்தால்

இற்றுஅற உறுதிஎன்னோ? என்றனன் அரிய சூசை (37)

காட்டிற்குத் தவம் புரிய வந்த சூசையிடம் வானவனாகிய முதியவன் காட்டில் தானே தனியாய் நின்று தவம் புரிவதைவிட நாட்டில் மற்றையோரையும் நல்வழியில் செலுத்துதலே அறம் என இயம்பினான். அவன் கூற்றுக்கு விடையாக உவமையுடன் விளங்கும் பாடல் அமைகிறது.

பிறர் மனையில் பற்றிய தீயை அவிக்கப்போய் தன்னைப் பற்றி எரிந்தாற்போல் பற்றினை விடுமாறு பிறர்க்கு உணர்த்த முற்படும் போது தன் மனம் கெட்டுவிட்டால் என்ன செய்வது என்னும் உவமை சூசையின் தவவிழைவைச் சிறப்பிக்கின்றது. இங்ஙனம் ஏனைய உவமைகளும் நயமிக்கவை ஆகும்.

**இயற்கை :**

இப் படலம் இயற்கையின் சித்திரிப்பாகவும் தோற்றமளிக்கின்றது. இயற்கையின் எதிரொலிகளில் சூசை இறைவனின் சாயலைக் கண்டு தெய்வீகவுணர்வு கொண்டு வீறு பெறுகின்றான். ஐம்பொறிகளை அடக்கியாண்டு மனவடக்கத்தோடு தவம் இயற்றுவதற்கு நாட்டின் சூழல் சூசைக்குத் தடையாகத் தோன்றியதால் காட்டையும் சோலையையும் நோக்கிச் சென்றான். ஆங்கே இயற்கையின் சூழலில் இறைவனின் எழில் நலன்களைக் கண்டு வியந்து இறைவனை வாழ்த்தி வணங்கினான். இப்படலத்தில் ஆறுமுதல் பன்னிரண்டு வரையுள்ள பாடல்களும், இருபத்து நான்கு முதல் இருபத்தேழு வரையுள்ள பாடல்களும் இயற்கைச் சித்திரங்களாகும்.

“குயில்கள் பாடலும் குழலொப்பு ஓதிமம்

வயல்கண் பாடலும் மதுவுண கிள்ளைகள்

பயில்கள் பாடலும் பாலன் கேட்டு இயைந்து

இயல்கள் பாடலும் இனிது இயங்குமால்”

குயில்கள் முதலியவற்றோடு சூசையும் இன்பமாகப் பாடி இறைவனை ஏத்தினான்.

**கருத்துச் செறிவு**

கருத்துச் செறிவுள்ள பாடல்களும் இப் படலத்தில் அமைந்து இலக்கியச் சுவையை மிகுதிப்படுத்துகின்றன.

12,15,21,24,33 முதல் 43 வரையுள்ள பாடல்கள் 49 முதல் 56 வரையுள்ள பாடல்கள் அறத்தை நிலைநாட்டுவதற்குரிய நிலைக்களனாகத் திகழ்கின்றன. சூசைக்கும் முதியவனுக்கும் நிகழ்ந்த உரையாடல்களிலும் (33-43), காட்டினின்று நாட்டிற்குத் திரும்பிய சூசையின் சிறப்பியல்புகளை உணர்த்தும் இடங்களிலும் (49-56), அறம் தவம் துறவறம் ஈரறம் ஐம்பொறி அடக்கல் பிறர்க்கு நன்மை பயத்தல் முதலியவற்றைப் பற்றி உணர்த்தி முனிவர் மக்களை நல்வழியிற் புகுத்தப் பாடுபடுகின்றார்.

“ஒருங்கு எலாம் நீக்கல் ஓர்நாள் உறுதியே பகைத்துச் சூழ்தன்

மருங்குஎலாம் இருப்ப உள்ள வாய் அடைத்து இடைவிடாது

நெருங்குஎலாம் நுழையாகக் காத்தல் நெடும் பயன்பயத்த நீள்போர்

சிருங்குஎலாம் நிலையின் ஊக்கும் திறமிகு என்று அய்யன் சொன்னான்.(34)

“மனத்தின் வாயிலை அடக்குவதே செற்றி தரும் போர். இது எல்லாமலைச்சிகரங்களின் உறுதியைக்காட்டிலும் மிகுதியான திறமாகும், என்று மனவடக்கத்தை வலியுறுத்திச் சூசையிடம் முதியவன் பேசினான். இத்தகைய கருத்துக்கள் காப்பியச் சிறப்பிற்கு மெருகூட்டுவன.

“பென் னொளி காட்டும் செந்தீ புகை அதில் மணத்தைக் காட்டும்

மின்னொளி மணியைக் காட்டும் வினைசெயும் படைக்கல் மாட்சி

தன்னொளி காட்டும் துன்பத் தகுதியில் குன்றா ஊக்கம்

மன்னொளி காட்டும் நல்லோய் மறைஇது என்றான் சான்றோன்”

செம்பொன் உருக்கும்போது தான் ஒளிபெறும் அகில் தகட்டை புகைத்தால் தான் மணம் வீசும். மாணிக்கக் கற்கள் தேய்த்தால்தான் ஒளி வீசும். இதைப்போலச் சூழ்நிலையின் பொருந்தாச் சூழலை எதிர்த்து நின்றால்தான் அறத்தின் மாட்சிமை விளங்கும் என்னும் கருத்தும் அறத்தை வளர்க்கும் அடிப்படை நிலையாகும், என்றார். இதனை முனிவர்

“ஈரறம் பிரித்து நோக்கில் இயம்பிய துறவின் மாட்சி

பேரறம் ஆவதன்றி பிரிவிலா இரண்டும் தம்முள்

ஓரறமாகிய சேர்க்கில் ஒறுதியும் பயனும் ஓங்கத்

தேர் அறமாகும்”

என்று ஈரறத்தைச் சிறப்பித்துப் பேசுகின்றார். ஆயினும் அவர் செம்மை மனம் படைத்து துறவி எனவே ஈரறத்தில் துறவறத்தின் மாட்சியே பேரறம் ஆகும் என்று துறவறத்தின் மேன்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.

“ஒருவனைக் கெடுத்து அழிக்கும் ஐம்பொறியின் ஆற்றலை முனிவர்

“ஐம்பொறி அரவின் நஞ்சின் பழிப்படப் பகைத்துக் கொல்லும்
ஐம்பொறி அன்றி சூழ்ந்த அனைத்துமே பகைத்த காை
செம்பொறி பெய்த பைம்பூ சிதைந்தென உளமும் ஏங்கி
வெம்பொறி யாக ஆற்றா வேட்கையே என்றான் சூசை” (31)

என்கிறார்.

இங்ஙனம் பாம்பின் நஞ்சினைவிட ஐம்பொறிப் பகை கொடியது என்கிறார்.

**கற்பனை**

முனிவர் தம் காப்பியத்தில் கற்பனை வளமும் சிறப்புறுகின்றது என்பதற்குப் பல பாடல்களைச் சான்று காட்டலாம். பாலமாட்சிப் படலத்தில் 7,17,18,30,35,46 முதலிய பாடல்கள் சிறந்த கற்பனை நயம் வாய்ந்தவை ஓர் எடுத்துக்காட்டு:

“இன்தெளித்து எவரும் நசை எய்துவ
பொன்தெளித்து எழுதும் படப் பொற்பினான்.
மின்தெளித்து எழுதிக் கதிர்வீசு எழில்
கொன்தெளித்தென ஆசையிற் கோடிலான்.”

**திருக்குறள் கருத்துக்கள்**

திருக்குறள், நாலடியார், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களின் கருத்துக்களைத் தம் நூல்களில் கூறிச் செல்கின்றார் முனிவர். இங்ஙனம் பாலமாட்சிப் படலத்தில் திருக்குறள் கருத்துக்கள் சில கூறப்படுகின்றன. இப்படலத்தில் 16,32,64,65 ஆகிய பாடல்களில் குறட் கருத்துக்கள் செறிவு பெறுகின்றன. உள்ளம் காட்டு ஒளிகாட்டிய ஒண்முக (16) என்னும் இப்படலத் தொடர்.

“அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்”

என்னும் குறட்கருத்தைக் கொண்டது.

“ இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கில்
என்ன பயத்ததோ சால்பு”

என்றும் குறட்பாவின் கருத்துத் தொடர்

“தவர்க்கும் ஊங்கு அரி தாம்தயை தாங்குஉளத்து

உவர்க்கும் வேலை உடுத்தன பார்உறை

எவர்க்கும் நன்றி இயற்றி இன்னாசெயும்

அவர்க்கும் வாய்ந்த அறத்துணை யாயினான்”

என்னும் பாடலில் அமைந்துள்ளது.

**பயிற்சி வினா :**

1. தேம்பாவணி – பால மாட்சிப்படலச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

# பிரிவு : 4-சீறாப்புராணம் - நளவெண்பா — வளையாபதி



**கூறு — 12: சீறாப்புராணம் - நுபுவத்துக் காண்டம்**

**12.1 உமறுகத்தாபீமான் கொண்ட படலம் - பாடல் விளக்கம்**

சமர கேசரி யப்துல்லா தருதிரு மதலைக்

கமரர் கோனிழிந் தருநபி யெனும்பெய ரளித்துத்

திமிர வெங்குபிர் கடிந்துதீ னிலைநெறி நிறுத்திக்

கமைத ரும்படி யாண்டுநான் கெனக்கடந் ததற்பின்.

யுத்தச் சிங்கமாகிய அப்துல்லா அவர்கள் இவ்வுலகத்தின்கண் தந்த தெய்வீகம் பொருந்திய புதல்வரான நாயகம் ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களுக்கு அமரேசுவரராகிய ஜபுறயீல் அலைகிஸ்ஸலாம் அவர்கள் ஆகாயத்தை விட்டும் இறங்கி வந்து நபியென்று சொல்லும் நாமத்தை உதவிப் பொறுமை தரும் வண்ணம் அந்தகாரமான குபிர் மார்க்கத்தை அழித்துத் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை நிலைநிறுத்தி வருடமானது நான்கென்று சொல்லும்படி சென்றதன் பின்னர்,

வருட நான்குசென் றைந்தினின் முகம்மது மொருநா

ளிரவி நிற்றனித் திருந்திரு கரமெடுத் தேந்திப்

பொருவி லாமுத லிறைவனை யீறிலாப் பொருளை

யுருகு மெய்மன வாக்கொடும் புகழெடுத் துரைத்தார்.

அவ்வாறு நான்கு வருடம் சென்று ஐந்தாவது வருடத்தில் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் ஒருதினம் இரவில் ஏகமாயிருந்து இரண்டு கைகளையும் தூக்கி ஏந்தி ஒப்பற்ற முதன்மையாகிய இறைவனை முடிவில்லாத பொருளான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவை இளகாநிற்கும் மனம் வாக்கு காயமாகிய மூன்றினோடும் துதிகளை எடுத்தோதினார்கள்.

உலகி னிற்கரு தலர்க்கட லரியம றினைக் கொண்

டலத பூசகு லினைக்கொடு தீனிலை யதனைப்

பெலனு றும்படி யெனக்கருள் பிறிதிலை யெனவே

நலனொ டுந்துவாச் செய்தனர் முகம்மது நபியே,

அவ்விதம் ஓதிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் சத்துராதிகள் என்னும் யானைகளுக்கு வலிமையை உடைய

சிங்கமாகிய உமரென்பவரைக் கொண்டு அல்லது அபூஜகிலைக் கொண்டு எனக்கு இவ்வுலகத்தின்கண் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை வலிமையுறும் வண்ணம் அருள் செய்வாய். இதைத்தவிர வேறே யாதொன்றும் இல்லையென்று நன்மையுடன் துஆச் செய்தார்கள்.

"இந்த மன்னர்க ளிருவரி லொருவரென் வசமாய்த்

தந்து தீனிலை நிறுத்துவை யெனத்தனி முதனிலைப்

புந்தி கூர்தர வுரைத்தனர் கேட்டனர் புகழ்ந்தார்

சிந்து வெங்கதி ரெழுந்தது விழுந்தது திமிரம்."

அன்றியும் இந்த அரசர்களாகிய இருவரில் ஒருவரை எனது பக்கத்தில் அருளித் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை நிலையாக நிற்கச் செய்குவாயென்று சொல்லி ஒப்பற்ற முதலான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவைப் புத்தியானது அதிகரிக்கும் வண்ணம் வினாவித் துதித்தார்கள். அப்போது சூரியன் கீழ்ப்பாற் கடலில் உதயமாயினான். அந்தகாரமானது வீழ்ந்தது.

### 12.1.1 அபுஜகில் அறிவிப்பு

அற்றை யிற்பகற் போதினி லபூசகு லவையுள்

வெற்றி வேந்தர்கள் பலருட னுமறையும் விளித்துக்

கற்ற வாள்வலி யவர்க்குறு கமருமென் மனத்தி

லுற்ற தொன்றுள தியாவருங் கேண்மினென் றுரைத்தான்."

அன்றைய தினம் பகல் சமயத்தில் அபூஜகில் என்பவன் தனது சபையினகம் விஜயத்தை உடைய அரசர்கள் அனேகருடன் உமர் என்பவரையும் பார்த்து 'வாள் வல்லமையில் பழகியவர்களுக்கு ஒரு காரியம் எனது மனதின்கண் பொருந்தினதுண்டு. அதை நீங்கள் யாவரும் கேளுங்கள்' என்று சொன்னான்.

"திக்கு நான்கினுந் திசையினுந் தேயங்க டனினு

மக்க மேயிக லறுந்தலம் வலிமையு ம∴தே

மிக்க வீரத்தி னம்மினத் தவரதின் மேலோ

ரொக்கு மியாந்தொடுத் ததின்முடி யாததொன் றிலையே."

'நான்கு திக்குகளிலும் எண்டிசைகளிலும் அவற்றின் கண்ணுள்ள ஊர்களிலும் மக்கமா நரகமே விரோதமற்ற தலம் அன்றியும் வலிமையை உடையதும் அந்நகரமே மிகுந்த வீரத்தினால் பொருந்தா நிற்கும் நமது கூட்டத்தார்கள் அதிலும் மேலானவர்கள் ஆதலால் நாம் தொடங்கிய கருமங்களில் முடியாதது யாதொன்றுமில்லை.

'நமது இராஜ்யத்திற்கும் குடும்பத்திற்கும் நல்ல மார்க்கத்திற்கும் உள்விரோதாகத் தோற்றமாகிய துரோகர்களைப் போல முகம்மது நபியென்று சொல்லித் தோற்றமாயினன். சதி செய்யும் வஞ்சகத்தை உடைய குரூரனாகிய இவனை இனி நாம் ஒரு பொருளாக மதிக்க வேண்டியதில்லை. கொல்ல வேண்டும்.

"உதிரஞ் சிந்துடை முகம்மதி னுயிர்செகுத் தவர்க்கென்

பதியி னுற்றதெப் பொருளுள தப்பொருள் பலவு

நிதியு மீய்குவ னென்னக்கர செனநிகழ்த் திடுவ

னெதிரும் வீரர்க ளுளரெவ ரெனவெடுத் திசைந்தான்."

இரத்தமானது சொரியும் வண்ணம் முகம்மது என்பவனுடைய ஜீவனை அழித்தவர்களுக்கு எனது இராஜியத்தில் பொருந்தியதான எவ்வஸ்து உள்ளதோ அந்த வஸ்துகள் பலவும் திரவியமும் கொடுப்பேன். அன்றியும் எனக்கு அரசென்றும கொள்ளுவேன். ஆதலால் இங்கு உள்ளவர்களில் அவ்வாறு எதிர்க்கும் வீரர்கள் யாவரென்று எடுத்துக் கூறினான்.

அபிமானத்தை விட்ட கொடிய கொலைத் தொழிலைச் செய்திடும் மனத்தை உடையவனான கீழ்மை கொண்ட அபூஜகில் என்பவன் இந்த வார்த்தைகளைச் சொல்லிய மாத்திரத்தில் அந்தச் சபையின்கண் இருந்தவர்கள் இவ்வார்த்தை ஆகுமானது. இவ்வார்த்தைகள் குற்றமென்று யாதொன்றும் பேசாது ஊனுண்ட வேலாயுதம் புகுந்தவர்களை நிகர்த்திருந்தார்கள்.

விஜயத்தைக் கொண்ட வீரத்தினால் மிகுந்தவர்கள் யாவரென்று அபூஜகில் என்பவன் கேட்டதற்கு உமரென்பவர் கடுமையான கோபமடைந்து இரண்டு கண்களும் சுழலும் வண்ணம் ஊன்றிப் பார்த்து அச்சபையானது பயங்கரமடையும்படி 'மலைகளும் நடுங்கிடும் மிகுந்த வலிமையை உடைய எனது தோள்கள் இற்றதா? இறவில்லை" என்று சொன்னார்.

அவ்வாறு சொன்ன வெற்றியை உடைய உமறென்பவர் தனக்கு நூதனமான ஒரு வேதமுண்டு என்றும் பொய்மையாகிய வார்த்தைகளைச் சொல்லி இந்தத் திருமக்கமா நகரத்தின் கண் உள்ளவர்களுக்கு அரிய களையைப் போல விரோதத்தை உண்டாக்கிய வலிமையை உடைய அரசனான முகம்மது என்பவனின் சரீரத்தைக் கொல்லா நிற்கும் வாளானது இ∴து! நீங்கள் பாருங்கள்! என்று சொல்லி எழுந்தார்.

அவர் அவ்வாறு எழுந்து சத்துராதிகளின் ஆவியையும் இரத்தத்தையும் கக்கா நிற்கும் ஒரு குற்றுடை வாளை அரையின்கண்

இறுகும்படி கட்டி வேறேயொரு படைக்கலத்தை வலது கையில் தாங்கித் தடைப்படாத மன வலிமையுடன் தோள்களாகிய பெருமை பொருந்திய மலைகளின்கண் வாசனை கொண்ட குங்குமப் புஷ்பத்தினாலான மாலைகள் புரண்டு அசையும் வண்ணம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களிருக்கும் திசையை நோக்கிச் சென்றார்.

**12.1.2 மலக்கானவர் காளை வடிவம் கொள்ளல் :**

“உமறெ ழுந்திடும் வெகுளியி னுடையவ னருளா
லமரர் தங்களி லொருவரா னேறுரு வாகிக்
கமல மென்பத முகம்மதி னரும்பகை களைய
விமைநொ டிக்குளந் தரமிருந் தவனியி னிழிந்தார்.”

உமறென்பவர் அவ்வாறு எழுந்திடும் கோபத்தினால் யாவற்றையும் சொந்தமாய் உடையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருவருள் கொண்டு தேவர்களான மலாயிக்கத்துமார்களில் ஒரு மலக்கானவர் தாமரை மலர் போன்ற மெல்லிய பாதங்களை உடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் அரிய விரோதத்தை நீக்கும் வண்ணம் காளை மாட்டின் வடிவமாகி இமையா நிற்கும் நொடிப் பொழுதினகம் ஆகாயத்திலிருந்து இப்பூலோகத்தின்கண் இறங்கினார்.

அவ்வாறு இறங்கிய கால்களினது திரட்சியையும் பிளவுற்ற பாதமாகிய குளம்புகளின் உறுதியான வலிமையையும் மேலே திருகில்லாது வளைந்து எழா நிற்கும் கொம்புகளில் ஆச்சரியத்தையும் கூற்றுறாது உருண்ட கழுத்தடியின் தோலினது நெளிவைக் கொண்ட வளைவையும் நாசி மேல் துவாரத்தைப் பெற்ற மூக்கில் தவழ்கின்ற நாவையுமுடைய

ஆகாயத்தின் கண்ணுண்டாகும் இடியென்று சொல்லத்தக்க அந்தக் காளை மாடானது அசைகின்ற தனது வாலைத் தூக்கி இரண்டு பக்கங்களிலும் மண்ணானது அதிரும் வண்ணம் அடித்து வேகமுற்ற கால்களினால் உலாவிக் குளிர்ச்சி தங்கிய பசிய புற்களைச் சாப்பிட்டுப் பசியை கொண்ட புலியைப் போலும் உமறென்பவர் செல்லுகின்ற பாதையைப் பொருத்தி நெருங்கியது.

அவ்வாறு நெருங்கிய அந்தக் காளை மாடானது திரண்ட கல்லைப் போலும் திண்ணிய வலிமையைக் கொண்ட தோள்களை உடையவரான உமறென்று சொல்லும் ஒப்பற்ற சிங்கமானவர் ஆபரணங்கள் நானா பக்கங்களிலும் பிரகாசத்தை வீசவும் கோபத்துடன் இரண்டு கண்களிலும் உள்ள அக்கினியானது அதிகமாய்ப் பற்றவும் பிரபையை உடைய வாளாயுதம் மின்னவும் ஏகமாக நடந்து வருவதைக் கண்களினால் பார்த்தது.

அவ்விதம் பார்த்த அந்தக் காளை மாடானது ஓசையையுடைய அழகிய சமுத்திரத்தைக் கொண்ட இப்பூலோகத்தின்கண் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களை வருத்தும்

வண்ணம் சத்துராதிகள் இல்லரென்று சொல்லி மனத்தின்கண் சந்தோஷத்தோடும் நகைத்துப் பூமியானது நடுங்கும் வண்ணம் ‘உமறு கத்தாபே! என்று கூப்பிட்டு, ‘நீவிர் ஏகமாக எவ்விடத்திற்குச் செல்லுகின்றீ ரென்று’ கேட்டது.



“உரைத்த சொற்செவி புகவுழை யெவரென நோக்கித்

தரைத்த லத்திவ ணொருவரு மிலரெனச் சார

விரைத்த லோடுமவ் வுரைபகர்ந் துமறென விசைப்பத்

திருத்தி நாற்றிசை யெங்கணு நோக்கினர் செம்மல்.”

பெருமையில் சிறந்தவரான உமறு கத்தாபென்பவர் அக்காளை மாடு சொல்லிய வார்த்தையானது தமது காதுகளில் நுழையவே பக்கத்தில் யாவரென்று பார்த்து இப்பூமியினிடத்தில் ஒருவருமில்லரென்று சொல்லித் தமது திசையை நோக்கிச் சாரவும் அம்மாடானது ஓசையோடும் அந்த வார்த்தைகயையே சொல்லி மறுத்தும் உமறென்று கூப்பிடச் செவ்வையாக நான்கு திக்குகளிலுமுள்ள எல்லா இடங்களிலும் பார்த்தார்.

அவ்விதம் பார்த்து வாய் திறந்து பேசும் மனிதர்கள் ஒருவருமில்லரென்று சொல்லிப் பின்வரும் தமது பாதையிற் பொருந்த மறுத்தும் கூப்பிட்டது. அப்போது அந்த உமறென்பவர் இவ்விதம் கூப்பிடுவோர் யாவரென்று தமது மனமானது வசக்கேடடைந்து தம்மையல்லாமல் மற்ற மனிதர்களை அங்கு காணாதவராய் அந்தக் காளை மாட்டைப் பார்த்துத் தெளிந்த இந்த வார்த்தைகளைச் சொன்னது இங்கே யாரென்று சொல்லித் திகைப்படைந்தார்.

அப்போது அந்தக் காளை மாடானது பருந்துகள் எழா நிற்கும் பிரகாசத்தைக் கொண்ட வேலாயுதத்தை உடைய உமறென்பவரின் அழகிய முகத்தைப் பார்த்து உம்மை மனதின் கண் கருதி வருந்தாது கூப்பிட்டது நான்தானென்று சொல்லிக் ‘கீர்த்தியை உடைய உமறு கத்தாபே! நீவிர் பொருந்தும் வீட்டை விட்டும் விலகி எவ்விடத்திற்குச் செல்லுகின்றீர்? அச்சமாசாரத்தை உமது விரிவுற்ற வாயைத் திறந்து என்னிடத்தில் சொல்லு’ மென்று கேட்டது.

அவ்விதம் கேட்கவே ‘மகத்தாகிய அறிவைக் கொண்ட வேதங்களினது முன்னோர்களின் வார்த்தைகள் ஆனவை நடைபெறாமல் இழிவற்ற நமது வேதங்கள் எல்லாவற்றையும் நிந்தித்துப் பெருமை தங்கிய இந்தப் பூலோகத்தில் நூதனமாக ஒரு மார்க்கத்தை உண்டுபடுத்தி அதற்குத் தீனென்று சொல்லும் நாமத்தை நாட்டித் தனது சொல்லின் வண்ணம் யாவரையும் திருந்தச் செய்து. பந்துக்கள் எல்லாரும் விரோதிக்கும்

வண்ணம் விரோதியைப் போலத் தலையெடுத்துத் துன்பத்தை உண்டாக்கிடும் முகம்மது என்பவரின் சரீரத்தைத் துண்டாக வெட்டி எங்களுடைய கோபத்தை நீக்குவதற்காய் எழுந்தேன்! என்று தேறுதலுற்றுத் தமக்கு எதிராகக் கேட்கும் காளை மாட்டுடன் உமறென்று சொல்லும் வீரத்தை உடையவர் சொன்னார்.

"ஆதி தூதரை வெறுத்துல கடங்கலுந் திரண்டு

வேத னைத் தொழில் விளைக்கினு மவர்வயின் விளையா

தேத முற்றதும் மனவலி யிடரினைத் தவிர்ந்து

போதல் வேண்டுமா னுமக்கென மறுத்துரை புகலும்."

அவர் அவ்விதம் சொல்லவே, அந்தக் காளை மாடானது இந்தப் பூமியின் கண்ணுள்ள ஜனங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து யாவற்றிற்கும் முதன்மையனான ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் றசூலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களை விரோதித்துத் துன்பத்தை உடைய செய்கைகளைச் செய்தாலும் அத் துன்பமானது அந் நபிகள் பெருமான் அவர்களிடத்தில் சம்பவியாது; ஆதலால் குற்றமுற்றதான உமது மனதின்கண் பெருகா நிற்கும் துன்பத்தை ஒழிந்து நீர் போக வேண்டுமென்று சொல்லி அவரின் வார்த்தைகளை மறுத்துச் சில வார்த்தைகள் சொல்லும்.

"பரிக ரித்திரட் படையொடு நிலத்தினிற் பரப்பி

யரச ராயிர ரிகலினின் மனவலிக் கணுவே

திரம தாயினு முகம்மதி னிடத்தினிற் சேற

லுமர தன்றுநி னுரனது முரனல வுரவோய்."

'வலிமையை உடையவரான உமறு கத்தாபே! இந்தப் பூமியின்கண் கூட்டமாகிய சேனைகளுடன் குதிரைகளையும் யானைகளையும் பரவச் செய்து அரசர்கள் ஆயிரம் பேர் உம்மோடு பொருதினால் உமது இருதய வல்லமைக்கு அப்பொருதுதல் அணுப்போன்ற வலிமையே யானாலும் உமக்கு அந்நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களிடத்தில் சென்று பொருத வல்லமை இல்லை. உம்முடைய வல்லமையும் ஒரு வல்லமையல்ல.

அன்றியும் நான் யுத்தத்திற்குரிய ஆயுதங்களில் ஒன்றையாவது எடுத்தறியாத பிரித்துணரக் காளை மாடுகளுள் மெலிவை உடையவன். மேலும் இளமையை உடையவன். ஏகனானவன் வினையை உடையவனாகிய எனது பக்கத்துள் உமது வீரத்தை விளைப்பீரேயானால் நான் உம்முடைய வல்லமை அந்த முகம்மதின் கீர்த்தியைத் தகர்க்குமென்பதை உணர்வேன்!' என்று சொல்லிற்று.

அந்தக் காளை மாடானது இந்த வார்த்தைகளைச் சொல்ல மனிதாதிபரான உமறென்பவர் கட்டுத்தறியை அடர்த்து வீசா நிற்கும் யானையைப் போல இரண்டு கண்களிலுமுள்ள நெருப்புகள் சொரியும் வண்ணம் கரிய புருவங்கள் நெற்றியில் செல்லும்படி கோபித்துப் பிரகாசத்தை உடைய மந்திர வாளைக் கையில் தூக்கியசைத்து அதன் முன்னாக வந்தார்.



**12.1.3 காளையின் செயல்கள்**

"எதிர்த்து நின்றற வீசினர் வீசலு மிடபங்

குதித்துத் தம்வலப் பாரிச மாகின குறுகி

மதித்து வீசலு மிடப்புற மானது மறுத்தும்

பதித்து வீசலும் பிற்புற மானது பறந்தே."

அவ்விதம் வந்த அவர் அக்காளை மாட்டை எதிர்த்து நின்று அதன் சரீரமானது அற்றுப் போகும் வண்ணம் வாளினால் வீசினார். அவ்வாறு வீசின மாத்திரத்தில் அக்காளை மாடானது தான் நின்றிருந்த இடத்தை விட்டும் சாடித் தனது வலப்பக்கமானது மறுத்தும் மனதின்கண் மதிப்பிட்டு அணுகி வீசலும் இடப்பக்கமாகியது. மறுபடியும் அழுத்தி வீசலும் கிளம்பிப் பின்புறமானது.

"நான்கு திக்கினுங் குதித்துமுன் னணித்துற நடக்குந்

தேன்கு தித்தசெந் தொடைப்புய ருரத்தொடுஞ் சினந்து

வான்கு தித்தமின் னெனக்கர வாளொளி மயங்கத்

தான்கு தித்தனர் துரத்தினர் திரிந்தனர் சாரி."

அவ்வாறு அக்காளை மாடானது நான்கு திக்குகளிலும் சாடி முன்னர்ச் சமீபமாய்ச் செல்லும். அதைப் பார்த்துத் தேனானது குதிக்கப் பெற்ற வெச்சிய மலர் மாலை அணிந்த தோள்களை உடையவரான உமறென்பவர் வலிமையுடன் கோபித்து வானிலிருந்து பாயா நிற்கும் மின்னலைப் போன்ற தமது கையின் கண்ணுக்குள் வாளினது பிரகாசமானது மயங்கும் வண்ணம் சாடித் துரத்தி வலசாரி இடசாரி முன்சாரி பின்சாரியாக நான்கு எல்லைகளிலும் திரிந்தார்.

அன்றியும், தாவிப் பொருந்தி வெட்டுவார். அவ்விதம் வெட்டின மாத்திரத்தில் அந்தக் காளை மாடானது அந்த வெட்டுக்கு அகப்படாமலும் அவ்விடத்தை விட்டு நீங்காமலும் எதிர்த்து அவரின் சரீரமானது கிழிபடும் வண்ணம் முட்டித் தள்ளும்படி வருவதைப் போல அடிக்கடி நெருங்கும்.

மேலும் அவரைத் தீண்டாமலும் அவரை விட்டு மொழியாமலும் அரிய சூறைக் காற்றைப் போலச் சுழலா நிற்கும்.

அன்றியும் அந்தக் காளை மாடானது அவ்வுமறென்பவரைச் சமீபத்து அவரின் முன்னாக எதிர்த்து வளைந்த இரண்டு கொம்புகளையும் அசையும்படி செய்யும் பிளவுற்ற வாலினால் அடிக்கடி இரு பக்கங்களிலும் அடிக்கும். பூமியின் கண்ணுள்ள துகளானது ஆகாயத்திற் பொருந்தும் வண்ணம் கால்களினது குளம்புகளினால் பூமியைப் பறியச் செய்யும். ஆகாயத்தின்கண் இடியா நிற்கும் போல ஒலிக்கும்.

“கண்ணி னுக்கெதிர் தோன்றிடுங் காணொணா தகலும்

விண்ணி னிற்பறந் திடுந்திசை விசும்பொலந் திரியு

மெண்ணு முன்னமுன் வந்திடுங் கான்மடித் தெதிரே

மண்ணி னிற்படுத் திடுங்குனித் தெழுந்தவா னிமிர்க்கும்.”

அன்றியும், கண்களுக்கு எதிராகத் தெரியும். காணொணாது அவ்விடத்தை விட்டும் அகன்று செல்லும். ஆகாயத்தின்கண் பறக்கும் எண்டிசைகளிலும் அந்தர முழுவதிலும் திரியும். நினைப்பதற்கு முன்னும் முன்னராக வரும். நான்கு  கால்களையும் மடித்துக் கொண்டு எதிராகப் பூமியின்கண் படுக்கும். குனிந்து எழுந்து வாலை நிமிரும் வண்ணம் செய்யும்.

அந்தக் காளை மாடானது இவ்வாறு திரிய, உமறுகத்தாபு என்பவர் இரண்டு கண்களும் சிவப்புற்று அம்மாட்டைப் பின்பற்றிப் பிரகாசத்தை உடைய வாளாயுதத்தைக் கொண்டு தாக்குவார். ஓடிக்கொண்டு நெருங்குவார். எதிர்த்துத் தடுப்பார். மயங்குவார். சமீபித்துச் சமீபித்துக் கடிய விசையைக் கொண்ட தமது இரு கால்களும் தளர்ச்சியுற்று உதடுகளைக் கடிப்பார். விரைவாய்த் தமது கையைப் பார்ப்பார். வாளைப் பார்ப்பார். அந்தக் காளை மாட்டைப் பார்ப்பார். தமது வீரத்தைப் பார்ப்பார். அக்காளை மாட்டை எதிர்த்து ஜெயிக்காத ஒரு தன்மையைப் பார்ப்பார். அபூஜகிலோடும் சபையில் பேசின வார்த்தைகளைப் பார்ப்பார்.தமது இருதயத்தைப் பார்ப்பார். அவ்வாறு பார்த்த உமறுகத்தாபு என்பவர் நாம் இன்றைய தினம் இங்கிருந்து எழுந்து விரோதத்தைக் கொண்ட வலிமையை உடைய சிங்கத்தை நிகர்த்த முகம்மதென்பவனை வெற்றி கொண்டோமில்லை. அல்லது இந்த பாதையின்கண் பொருந்திய காளையாகிய மாட்டுக் குட்டியை வெட்டினோம், இல்லையென்று சொல்லி இருதயம் கசங்கப் பெற்று ‘நமது வீரமானது நல்லது! நல்லது!’ என்று மனதின்கண் சிரித்தார்.

அவ்விதம் கோபித்துப் புன்சிரிப்புக் கொண்ட வாளாயுதத்தை உடைய உமறுகத்தாபு என்பவரை இளம் பருவத்தையுடைய அந்தக் காளை மாடானது முன்னாக நெருங்கித் தலையைத் தாழ்த்திப் பரப்பை

உடைய பூமியை முகந்து தனது சரீரத்தைக் குழையச் செய்து மிகவும் தூக்கமுற்றுக் கனியைப் பெற்ற வாயை அசைபோட்டு இரண்டு செவிகளையும் அசையும்படி செய்து வளைந்ததைப் போல நீங்காது அவ்விடத்திலேயே நின்றது.

அப்போது உமறுகத்தாபு என்பவர் அந்தக் காளை மாடானது தமக்கு முன்னாகச் சமீபித்ததென்று சொல்லி அழகிய தமது கையிலிருந்த வாளினால் மாறி வீசி நெருங்கினார். அன்றியும் நான் உன்னைக் கொல்லுவேனென்று சொல்லி இப்பூமியானது குலுங்கும் வண்ணம் சீற்றமுற்று அடிக்கடி தடுத்து முன்னிலும் மூன்று பங்கென்று சொல்லும் வண்ணம் நான்கு எல்லைகளிலும் திரிந்தார்.

உமறென்பவர் இந்தப்படியாகச் சூரியன் உதயமாகு முன்னர்த் தொட்டு அசறு வரைக்கும் அலைந்து உலைந்து வசக்கேடாகி மிகவும் தவிப்புற்று அக்காளை மாடானது கலைந்து நம்மை விட்டு மொழிந்ததே அல்லாமல் நம்மிடம் அகப்படவில்லையே என்று சொல்லிக் கலக்கமடைந்து தடுமாற்றமுறாத தமது மனமானது சுழலும் வண்ணம் தடுமாற்றமுற்றார்.

அவ்வாறு தடுமாற்றமுற்ற உமறென்பவர் தேனானது ஒழுகா நிற்கும் சோலைகளையுடைய பாதையின்கண் இளம் பருவத்தையுடைய காளை மாடானது எதிர்த்து வெட்டுமென்று வார்த்தைகள் சொன்னதையும், கோபத்தோடும் சென்று தாம் பட்ட சமாசாரத்தையும், அதனால் உண்டான ஆச்சரியத்தையும், தமது ஊராகிய திருமக்கமா நகரத்தை உடையவர்களான காபிர்கள் பலரும் பிரித்துச் சொல்ல வேண்டுமென்று சீக்கிரமாய் எழுந்தார்.

“குறித்து வந்தவை விடுத்தெழு முமறினைக் கூவித்
தெறித்து நுண்டுளி முகிற்குடை முகம்மதைச் செகுப்ப
வெறித்த வெஞ்சின வீரத்தின் விழைவுக ளனைத்து
மறைத்தி ரோவெனப் புகன்று யதுமழ விடையே.”

அப்போது இளம் பருவத்தை உடைய அந்தக் காளை மாடானது மனதின்கண் குறிப்பிட்டு வந்தவைகளை விட்டு எழா நிற்கும் உமறுகத்தாபைக் கூப்பிட்டு ‘நுண்ணிய திவலைகள் தெறிக்கும் மேகக் குடையை உடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களைக் கொலை செய்யும் வண்ணம் ஆவேசமாகிய வெவ்விய கோபத்தைக் கொண்ட வீரத்தினது ஆசைப் பெருக்கங்கள் எல்லாவற்றையும் மறையச் செய்தீரோ?’ என்று சொல்லிப் போயிற்று.

அந்தக் காளை மாடானது அவ்வாறு போகவே உமறுகத்தாபு என்பவர் தாம் கொண்ட கோபமும் வீரமும் பின்னால் தலை தாழும் வண்ணம் கண்களினால் பார்த்த காரணத்துடன் தம் மெலிவானது அரிய பாதையைக் காட்டும்படி வேறுபட்டு உதிர்க்கப் பெற்ற சரீரத்தின் வேர்வையோடும் பையப் பைய நடந்து நெருங்கிய பெரிய சபையை உடைய அபூஜகிலிடத்தில் வந்து சேர்ந்தார்.

பிரிவைக் கொண்ட மனத்தை உடைய உமறென்பவர் அவ்விதம் சந்தோஷமற்று மிகவும் தவிப்புற்று வியர்வையினால் சரீரமானது முழுகும் வண்ணம் அங்கு வந்து சேர்ந்ததை யாவரும் பார்த்துக் குற்றமற்ற கீர்த்தியை உடையவரே! நீவிர் முகம்மது என்பவனிடத்தில் போனதையும் அங்கு நடந்ததையும் வகைப்படுத்திச் சொல்லுமென்று கேட்டார்கள்.

**12.1.4 உமறுகத்தாபு காளையுடன் மோதியதைக் கூறுதல் :**

“அறபிகள் குழுவி னாப்ப ணமரபூ சகுலை நோக்கிப்

பொறைமதக் கரிகோ டேற்ற புரவல ருயிலை மாந்திக்

கறைகெழுங் குருதி வைவேற் காவல ருமறு கத்தாப்

மறைபடா நெறியிற் கண்ட புதுமையை வகுக்க லுற்றார்.”

அவர்கள் அவ்வாறு கேட்கவே மதத்தைக் கொண்ட கொம்புகளை உடைய மலை போன்ற யானைகளின் மீது பொருந்திய அரசர்களின் ஆவியைக் குடித்து இரத்தக் கறை நிறைந்த கூர்மை தங்கிய வேலாயுத்தை உடைய இராஜரான உமறுகத்தாபு என்பவர் அறபிகளான காபிர்களின் கூட்டத்தினது மத்தியில் உறைந்திருக்கும் அபூஜகிலைப் பார்த்துத் தாம் பாதையில்கண் மறைவுபடாத தமது கண்களினால் பார்த்த அற்புதத்தை வகுத்துச் சொல்ல ஆரம்பித்தார்.

“மண்ணினிற் றிசையிற்சூழ்ந்த மறிதிரைக் கடற்குள் வானோர்

விண்ணினிற் பெரியோ ராய்ந்த மெய்மறை தனக்குட் டோர்ந்த

திண்ணிய ருரைக்குட் கேட்ட திலைமனந் தெளிய வென்றன்

கண்ணினிற் கண்ட தியாருங் காணொணாப் புதுமை யென்றார்.”

‘இப்பூமியின் கண்ணும் திசைகளிலும் பூமியை வளைந்த மடங்கா நிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தினுள்ளும் தேவர்களான மலாயிக்கத்து மார்களின் ஆகாயத்திலும் மேன்மையை உடையவர்களால் ஆராயப் பெற்ற சத்தியத்தை உடைய வேதத்தினுள்ளும் வலிமையை உடையவர்களின் வார்த்தைகளினுள்ளும் மனமானது தெளியும் வண்ணம் கேள்வியுற்றதில்லை. அன்றியும் என்னுடைய கண்களினால் பார்த்தது யாவரும் பார்க்க முடியாத அற்புத மென்று’ சொன்னார்.



“சரத்திடை விடையொன் றங்ஙன் றனித்துநின் றதிர்ந்தென் பேரை

யுரைத்தது விளிப்பக் கேட்டே னுணர்ந்தியா ரென்ன நேர்ந்தேன்

விரைத்தலி னெங்கே கின்றீ ரெனவிறன் முகம்ம துற்ற

துரைத்தனக் குறும்பு தீர்ப்பத் துணிந்தனென் றுரைத்தன் மாதோ."

'யான் போன பாதையின் கண்ணுள்ள அவ்விடத்தில் ஒரு காளை மாடானது ஏகமாக நின்று ஒலித்து என் நாமத்தைக் கூறி அது என்னைக் கூப்பிடும் வண்ணம் எனது காதுகளினால் கேள்வியுற்றதை மனதின்கண் தெரிந்து நம்மைக் கூப்பிடுகிறவர் யாவரென்று நேர்ந்து பார்த்தேன். அப்போது அந்தக் காளை மாடானது நீவிர் விரைவோடும் எங்கே செல்கின்றீரென்று கேட்க வலிமையை உடைய முகம்மதென்பவன் பொருந்திய அதிகாரத்தை உடைய பொல்லாங்கை நீங்கும் பொருட்டு நிச்சயித்துச் செல்லுகின்றே'னென்று சொன்னேன்.

"இன்றெனை யடர்த்தோர் செவ்வி யியன்முகம் மதுலை வென்றோ

ரென்றதற் கெதிர்ந்து கைவா ளெறிந்தன னுரத்திற் றாக்கி

நின்றனன் மறித்தே னெந்த நிலத்தினுந் தொடந்து காலிற்

சென்றனன் றவித்தே னென்னாற் செய்ததொன் றில்லை யன்றே."

அதைக் கேட்ட அந்தக் காளை மாடானது இன்றைய தினம் என்னைச் சண்டை செய்து ஜெயித்தவர்கள் அழகிய ஒழுங்கை உடைய அந்த முகம்மதென்பவர்களை ஜெயித்தவர்கள் என்று சொன்னதற்காய் யான் எதிர்த்து எனது கையிலிருந்த வாளாயுதத்தினால் வீசி வலிமையோடும் அம்மாட்டைத் தாக்கி நின்று தடுத்து எந்நிலங்களிலும் எனது கால்களிலும் நடந்து பின்பற்றித் தவிப்படைந்தேன். ஆனால் இவ்விதமெல்லாம் சிரமப்பட்டும் அம்மாட்டை என்னால் செய்தது யாதொன்றுமில்லை.

"காற்றெனப் பறக்கு மூழிக் கனலெனச் சீறுங் கொல்லும்

கூற்றென வெதிருஞ் செல்லிற் குலவரை யனைத்துஞ் சுற்றுந்

தோற்றிடா விசும்பிற் றாவுஞ் சுழலுமட் டிகிரி யென்னச்

சீற்றமுற் றடுத்துப் பின்னு முன்னுமே திரியு மன்றே"

ஆனால் அந்தக் காளை மாடானது காற்றைப் போலப் பறக்கும். வடவாமுகாக்கினியைப் போலச் சீறும். கொல்லா நிற்கும் எமனைப் போல எதிர்க்கும். மேகங்களை உடைய மேன்மை கொண்ட மலைகள் எல்லாவற்றையும் சுற்றும். கட்பார்வைக்குத் தோற்றாது ஆகாயத்தின்கண் தாவும் சுழலா நிற்கும் மண்ணினது சக்கரத்தைப் போலக் கோபமுற்று நெருங்கிப் பின்னாலும் முன்னாலும் திரியும்.

"அலகையின் குலமோ வானி னமரரி லொருவன் றானோ

வுலகுறுஞ் சின்னோ தெய்வ முருவெடுத் ததுவோ செவ்விச்

சிலைநுதல் கதீசா கேள்வன் செய்தொழில் வஞ்சந் தானோ

நிலமிசை விடையாய்த் தோன்றி நின்றவம் மாயந் தானே."

ஆதலால் இப்பூமியின்கண் காளை மாடாக உதயமாகி நின்ற அந்த மாயமானது பைசாசங்களின் குலத்திலுள்ளதோ? அல்லது வானலோகத்தின் கண்ணுள்ள தேவர்களான மலாயிக்கத்து மார்களில் ஒருவனோ?

இவ்வுலகத்தின்கண் பொருந்திய ஜின்னோ? தெய்வமானது உருவெடுத்த தோற்றமோ? அழகிய வில்லைப் போலும் நெற்றியை உடைய கதீஜாவென்பவளின் நாயகனான முகம்மது செய்யா நிற்கும் வஞ்சனைத் தொழிலோ? இவற்றில் இன்னதென்று யானறியேன்.

ஆனால் யான் மாறுபாடான வார்த்தைகளைக் கொண்ட வேதத்தைச் சொல்லும் முகம்மதென்பவனை நாடிச் செல்லுகின்ற பாதையின்கண் இந்தக் காளை மாட்டைப் பார்த்து அசறுவரையும் கண்களில் தோற்றாத வருத்தத்தை அடைந்த ஆச்சரியத்தை ஒழுங்காய் உங்களிடத்தில் சொல்லுவதற்காகச் சீக்கிரமாய் இங்கு வந்து பொருந்தினேன். எனது வீரத்தை யான் மறுத்திலே' னென்று சொன்னார்.

வேங்கையை நிகர்த்த கத்தாபென்பவரின் புதல்வரான உமறென்பவர் அவ்வாறு சொல்ல வலிமையை உடைய அபூஜகில் என்பவனும் அவனுடன் சூழ்ந்திருந்தவர்களாகிய மற்றும் காபிர்களும் தங்களின் காதுகளினால் கேள்வியுற்று மனமானது விஷத்தைப் போலும் கறுப்படைந்து ஒருவருக்கொருவர் தங்களின் ஒள்ளிய தோள்கள் குலுங்கும் வண்ணம் சிரித்து வலிமை பொருந்திய அவ்வுமறு கத்தாபின் அழகிய முகத்தைப் பார்த்துச் சொல்லுவார்கள்.

'நீவிர் இதையொரு ஆச்சரியமாக மனதின்கண் நினைத்துச் சொல்ல வந்தீர். ஆனால் இது வேதத்தினது மகாதவத்தை உடையவனான அந்த முகம்மதென்பவன் உண்டாக்கிய வஞ்சனைகளுக்குள் நூறு பகுப்பான ஒன்றிற்குப் பற்றாது. இவ்வாச்சரியத்தை நீவிர் பலகால் பேசுவதினால் தீது உண்டாகும். இவைபோல நாங்கள் பார்த்ததையும் தெரிவித்துச் சொல்ல முடியாது.'

இன்னமும் சூரியனை ஒத்த வேலாயுதத்தை உடையவரே! இவை போல இலட்சம் விதம் நீவிர் பார்த்தாலும் மன்னவனான அந்த முகம்மதென்பவன் செய்யும் வஞ்சகத்தை அமைத்தல் வேண்டும். அவ்விதம் அமைக்காது வெளியில் சொல்லுதவை யாவரும் கேட்பார்களே ஆனால் அதனால் குற்றம் உண்டாகும். ஆதலால் ஆதியில் உம்முடைய கருத்தில் நினைத்த வண்ணம் செய்து முடித்திடும்! என்று சொன்னார்கள்.

"பொய்யினைப் புகலேன் கண்ட புதுமையைப் புகன்றேன் றோன்று
மெய்யினைப் பொய்யென் றோத லியாவர்க்கும் விதிய தன்றே
யையுற லுரைக்க லாகா ததிசய மறைக்க லாகா
வையகத் தியற்கை யீதென் றுமறிவை வழங்கிப் போனார்."

அவர்கள் அவ்விதம் சொல்லவே உமறுகத்தாபு என்பவர், 'நான் பொய்மையான வார்த்தைகளைச் சொல்ல மாட்டேன். கண்களால் கண்ட ஆச்சரியத்தை சொன்னேன். தோற்றப் பெற்ற மெய்மையான செய்தியைப் பொய்மையென்று சொல்லுவது யாவருக்கும் கட்டளையல்ல. சந்தேகப்படுவதைச் சொல்லலாகாது. ஆச்சரியமானவற்றை மறைக்கலாகாது. இ∴து இந்தப் பூலோகத்தினது சுபாவ' மென்று இவைகளைச் சொல்லி விட்டுத் தமது திசையை நோக்கிச் சென்றார்.

அவ்விதம் சென்ற உண்டாகா நிற்கும் காரணத்தை அறியாதவரான வலிமையை உடைய உமறென்பவர் அன்றைய தினம் போய் மறுநாள் எழுந்து சிவந்த வேலாயுதத்தை உடைய அரசராகிய அப்துல்லா என்பவரின் புதல்வாரன நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி சவல்லம் அவர்களைக் கொலை செய்ய வேண்டி முதிர்ந்த மனதினுடன் அமையாமையைப் பெற்ற மதத்தைக் கொண்ட யானையை ஒத்த விஜயத்தை உடைய வெள்ளிய பிரகாசம் பொருந்திய வாளாயுதத்தைக் கையில் தாங்கிக் கொண்டு அந்நபிகள் பெருமான் அவர்கள் இருக்கும் திசையை நோக்கி நடந்து சென்றார்.

அப்போது நீதியானது பொருந்திய மனத்தை உடையவர்களும் சத்தியத்தை உடைய நான்கு வேதங்களையும் உயர்ந்த நாவை உடையவர்களுமாகிய பொய்யான வார்த்தைகளைச் சொல்லாத அழகிய அறபிகளனேகர் ஒருவரோடொருவர் சேர்ந்து ஒரு நியாயத்தைத் தீர்த்தும் தீராது பிரகாசிக்கின்ற சிவந்த பொன்னினால் செய்த சிகரமானது ஆகாயத்தைத் தூண்டா நிற்கும் ஒருகோயிலினது வாயிலின்கண் போய் நுழைந்தார்கள்.

அவ்வாறு அவர்கள் யாவரும் அந்தக் கோயிலின் கண் போய் நுழைந்து சிவந்த தேனையுடைய மலர் மாலைகளினால் தோயப் பெற்ற சுவாகென்று சொல்லும் விக்கிரகத்தின் தாமரைப் புஷ்பம் போன்ற அழகிய இரு பாதங்களிலும் வணங்கித் துதித்து இரண்டு கைகளையும் குவித்து அவ்விடத்தில் தங்கியிருந்து அவ்விக்கிரத்தைப் பார்த்து 'மேன்மை உடைய சுவாமியே! எங்களில் பொருந்திய நியாயத்தை விளங்கும் வண்ணம் கேள்வியுற்று மிகவும் நிசமாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டு' மென்று கேட்டார்கள்.

வாளினது வல்லமையை உடைய அறபிகளான அந்த வீரர்கள் அவ்வாறு மனமகிழ்ச்சி அடைந்து எங்களுடைய நியாயத்தின் நுட்பத்தினது கொழுவுதலை அறும்படி செய்து தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று இதழ்களை உடைய மலர் மாலைகளைத் தூக்கிய வாயிலினது அந்தச் சுவாகென்று சொல்லும் விக்கிரத்தைத் துதித்துக் கொண்டு இருக்கின்ற சமயத்தில் தீட்டப்பெற்ற பிரகாசத்தைக் கொண்ட வேலாயுதத்தை உடைய சிவந்த கையினது வல்லமை தங்கிய உமறுகத்தாபு என்பவர் அங்கு வந்து சேர்ந்தார்.

### 12.1.5 சுவாகென்னும் தெய்வ வாக்கு

"வகையறா வழக்குத் தீர்த்துத் தருகென மன்னர் சூழ்ந்த
தொகையினி லுமறென் றோதுந் தோன்றிலு மிருப்பக் கண்டு
திகைதெரி விளக்க மாகச் சுவாகெனுந் தெய்வம் வாய்விண்
டகமகிழ்ந் தவையோர் கேட்ப நன்மொழி யாய்ந்து சொல்லும்."

அப்போது சுவாகென்று சொல்லும் அவ்விக்கிரகமானது காரணம் இன்னதென்று மனதின்கண் அறாத வழக்கைத் தீர்த்துத் தருவாயாக என்று அரசரான அறபிகள் வளைந்த கூட்டத்தில் உமறென்று சொல்லும் மன்னவரும் இருக்கும்படி பார்த்து எண்டிசைகளிலும் தெரியும் வண்ணம் விளக்கமாகத் தனது வாயைத் திறந்து மனமகிழ்ச்சி அடைந்து அச்சபையோர் எல்லாரும் கேட்கும்படி நல்ல வார்த்தைகளை ஆராய்ந்து சொல்லும்.

"மதிகதி ரவனி காயம் வானமற் றெவையும் போற்றும்
புதியவ னுண்மைத் தூதர் நபிகளிற் புகழின் மிக்கோர்
பதியிரண் டினுக்கு மேலோர் படைப்புள வெவைக்கு முன்னோர்
கதிதருங் காட்சி பெற்றோர் கபீபெனு முகம்ம தென்போர்."

'ஹபீபென்று சொல்லும் காரணப் பெயரை உடைய முகம்மதென்று சொல்லப்பட்டவர் சந்திரன், சூரியன், பூமி, ஆகாயம், வான முதலிய மற்ற எல்லாப் படைப்புகளும் துதியா நிற்கும் புதிய ஆலத்தை உடையவனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் சத்தியத் தூதர். அன்றியும் நபிமார்களில் கீர்த்தியினால் மிகுந்த கீர்த்தியை உடையவர். இம்மை மறுமை என்னும் இரண்டு பதிக்கும் மேன்மையை உடையவர். படைப்பாகவுள்ள யாவற்றிற்கும் முதன்மையானவர். மோட்சத்தைத் தார நிற்கும் அற்புதத்தைப் பெற்றவர்.

அந்த முகம்மதென்பவரின் முன்னர்ச் சென்று அவரின் நிலைமையைக் கொண்ட தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது சொல்லின் நயத்தை உடைய "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர் றசூலுல்லாகி" என்னும் கலிமாவைச் சொல்லி அவரின் தாமரை மலர்

போன்ற இரு பாதங்களையும் துதித்துப் புகழா நிற்கும் மகத்தான வேதத்தினது இனிய வார்த்தைகளின் வண்ணம் தவறாது உடன்பட்டுப் பொன்னையும் பெருமை பொருந்திய இரத்தினத்தையும் போல இசைவது யாவருக்கும் வேண்டும்.

ஆதலால் என்னுடைய வார்த்தைகளை நன்மை பொருந்திய தெய்வ வாக்கியமென்று மனதின்கண் எண்ணினவர்கள் அரசர்கள் யாவருக்கும் மேன்மையராகிய இந்தப் பூலோகத்திற்கும் இராஜராகிப் புஷ்பங்கள் மலரா நிற்கும் சோலைகளையுடைய சொர்க்க லோகத்தை ஏகமாக ஆட்சி செய்வோராகிப் பொருந்திய பாவங்களும் தீரப் பெற்று வேதத்தினை நல்ல அறிவை உடையவர்களாவார்கள்.

ஆதலால் நீங்கள் வருத்தமுறாது அகன்று செல்லுங்கள். உங்களுடைய மனத்தின்கண் தங்கிய வழக்கினது வார்த்தைகளைத் திருந்தும்படி முகம்மதிடத்திற் சொல்லுங்கள். செவ்வையான நியாயத்தினது ஒழுங்கையுடைய அந்த முகம்மதின் வார்த்தைகளைக் கேட்டுப் பொருந்தும் வண்ணம் நடவுங்கள். எனது முன்னர்ச் சொல்லுவது உங்களின் புத்திக்கேடென்று அங்கு தங்கியிருந்த அவ்வறபிகள் எல்லாருக்கும் இப்படிப்பட்டவைகளைச் சொல்லிற்று.

அந்த விக்கிரகமானது அவ்வாறு நன்றாகச் சொல்லிய சமாச்சாரங்களை அங்கு தங்கியிருந்த யாவரும் ஆச்சரியமென்று சொல்லிப் போனார்கள். அப்போது மத்தகத்தைக் கொண்ட மதங்களைடைய யானைகளை வெட்டி அவற்றின் இரத்தத்தை உண்டு சிந்தா நிற்கும் அழகிய கூர்மை தங்கிய வாளாயுதத்தைப் பெற்ற சிவந்த கையையுடைய உமறென்று சொல்லும் செம்மலானவர் முன்னை நாள் சந்தித்த காளை மாட்டினது உத்தரத்தையும் இந்த நிண்ணயத்தையும் மனதின்கண் எண்ணித் தெளிவடைந்தார்.

**12.1.6 உமறு கத்தாபு சகோதரி பாத்திமா சந்திப்பு :**

“நென்னலேற் றுரையுந் தெய்வ நிகழ்த்திய மொழியும் பார்த்து
முன்னுறு காட்சி யேதோ முடிவதொன் றுளதென் றெண்ணித்
தன்னகத் திருத்திச் செவ்வி முகம்மதின் சார்பை மீட்டு
மன்னுசோ தரியென் றோதும் பாத்திமா மனையிற் சென்றார்.”

அவ்வாறு தெளிவடைந்த உமறென்பவர் முந்திய நாளில் அந்தக் காளை மாடு பேசின வார்த்தைகளையும் தற்சமயம் தெய்வமாகிய விக்கிரகம் சொல்லிய வார்த்தைகளையும் பார்த்து ஆதியில் பொருந்திய அற்புதமானது யாதோ ஒன்று முடிய வேண்டியதுண்டென்று நினைத்து அதைத் தமது மனதின்கண் இருக்கும்படி செய்து தாம் போக வேண்டிய

**காப்பியங்கள் குறிப்புகள்**

நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் இடத்தை விட்டும் திரும்பிப் பொருந்திய தமது சகோதரியென்று சொல்லும் பாத்திமா அவர்களின் வீட்டிற்கு வந்தார்.

அவர் அவ்வாறு வரவே அழகிய மயிலான பாத்திமா அவர்களும் அவர்களின் நாயகரான செவ்வையான ஒழுங்கையுடைய சயீதென்பவர்களும் தேனானது நெகிழப் பெற்ற வாசனை அதிகரியா நிற்கும் மலர்மாலை அணிந்த திண்ணிய புயங்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் கலிமாவைச் சொல்லிக் குருவின் முறைமையை உடைய ஹப்பாபென்று சொல்லும் குரிசிலானவர்களின் முன்னாகத் தங்கியிருந்து இன்பமிகுத்த புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது உண்மைகளைக் கேட்டு உவகை அடைந்திருக்கும்

சமயத்தில், மிகுந்த வல்லமை தங்கிய பெரிய கைகளைக் கொண்ட விஜயத்தையுடைய அழகிய உமறு கத்தாபு என்பவர் இங்கு நம்மிடத்தில் குறுகினாரென்று செல்வத்தையுடைய தமது குலத்திற்குக் கொடி போலும் பாத்திமா றலியல்லாகு அன்கு அவர்களும் தங்களில் மதிமயங்கிச் சன்மார்க்கத்தையுடைய ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்களை மறையும் வண்ணம் இருக்கும்படி செய்து தாங்கள் அழகிய செல்வத்தையுடைய வீட்டினது முற்றத்தில் வந்து நின்றார்கள்.

அப்போது உமறு கத்தாபென்பவர் இவ்விருவரும் மேன்னையையுடைய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களுக்கு ஈமான் கொண்டவர்களென்று சொல்லும் சினத்தாலும் வீட்டினகம் புகழா நிற்கும் மகத்தான வேத வாக்கியமோதிய ஒரு சந்தேகத்தினாலும் பொருந்திய தமது சுபாவத்தை ஒழித்து இரண்டு கண்களிலும் நெருப்பானது எரியும் வண்ணம் தமது மைத்துனரான சயீது றலியல்லாகு அன்கு அவர்களைக் கோபித்து இனிமை தங்கிய உம்முடைய ஜீவனைக் குறையச் செய்வேனென்று சொல்லி நின்றார்.

அந்நேரத்தில் காரிகையாகிய பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் தங்களின் நாயகரான ஸயீது றலியல்லாகு அன்கு அவர்களை உமறுகத்தாபு என்பவர் கோபித்தார் என்று மனதின்கண் நினைத்துத் தங்களின் இரண்டு கண்களிலுமிருந்து முத்துப் போலும் கண்ணீரானது

சொரியும் வண்ணம் இனிய உயிர் போன்ற சகோதரரைப் பார்த்துக் ‘கூட்டமாகிய வல்லமையைக் கொண்ட பெருமை பொருந்திய

கையையுடைய அரசரானவரே! நீவிர் சத்துராதிகளைப் போலக் கோபிப்பது உமக்குப் பொருந்தா தென்று சொல்லி அவர் நெருங்கியதை விலக்கினார்கள்.

அவ்வாறு விலக்கவே ஒள்ளிய பற்களினால் மடித்த அதரத்தைக் கடித்து நின்ற அரசனான உமறுகத்தாபு என்பவர் மடந்தையாகிய தமது சகோதரி பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களை விரோதித்துக் கடிய

ஓசையுடன் பேசி இரண்டு கண்களிலும் இருந்து அக்கினியானது சிந்தும் வண்ணம் சீற்றமுற்று ஒப்பற்ற கையின்கண் எடுத்த தண்டாயுதத்தினால் இளம் பருவத்தை உடைய சந்திரன் போன்ற நெற்றினது மேற்பக்கத்தில் அடித்தார். அவ்வடியினால் இரத்த மழையுண்டாய் ஆறாக ஒழுகிற்று.

அவ்வாறு தலையானது தகர்ந்து இரத்தம் சொரிந்து நிறையப் பெற்ற மயிலாகிய பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களைப் பார்த்து விரிந்த கிரணங்களைக் கொண்ட வேலையுடைய பசிய ஆபரணங்களைப் பெற்றவரான உமறுகத்தாபு என்பவர் தமது கோபமானது மனதின்கண் அமையும் வண்ணம் இரக்கமுற்று, 'அரிவையானவரே! நீவிர் உமது வீட்டினகம் அடிக்கடி படித்துப் படித்து வணங்கிய சொல்லானது யாது? அதைத் தெளியும்படி எனக்குச் சொல்லு' மென்று கேட்டார்.

அவ்வாறு கேட்கவே அதற்குக் கூர்மை தங்கிய பெருமையான பரகாசம் அமைந்த வேலாயுதம் போலும் மையுண்ட கண்களையுடைய பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் இங்கே படித்த சொல்லானது யாது? அதைப் படித்தவர்வேறே யாவர்? ஒருவருமில்லரென்று மறைத்துச் சொல்லப் பின்னரும் உவகையுற்று மதத்தைப் பெற்ற பெரிய துதிக்கையையுடைய யானைகளினது இராஜர்களுக்குச் சிங்கத்தை நிகர்த்தவரான உமறுகத்தாபு என்பவர் தாம் பிடித்த வார்த்தையை மறுக்காது கேட்டார்.

அவ்விதம் கேட்கவே பெண்களுக்குத் திலகத்தை ஒத்த பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் தம்முடன் அவதரித்து விரோதிக்கின்ற

உமறென்பவரைப் பார்த்துத் தங்களின் அழகிய வாயைத் திறந்து வலிமையானது தவழுகின்ற சத்தியத்தையுடைய புறுக்கானுல் அலீமென்று சொல்லும் வேதத்தினது தெளிந்த வார்த்தைகளை அவ் வார்த்தைகளுக்குரிய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை விட்டும் தாண்டினவர்களான பரிசுத்தமற்றவர்களின் கைகளில் கொடுப்பது குற்றமென்று சொன்னார்கள்.

அவ்வாறு தமது தமக்கையரான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் தங்களின் கொவ்வைக் கனி போன்ற வாயைத் திறந்து சொல்லிய வார்த்தைகளை அழகிய பிரகாசம் தங்கிய வேலாயுதத்தையுடைய சிங்கமாகிய உமறென்பவர் தமது மனதினகம் கொண்டு இராஜரான இந்நூலின் கொடைநாயகர் அபுல் காசீம் மரைக்காயர் அவர்களின் மனத்தெளிவிலும் மிகுந்த தெளிவாய்ச் சொல்லுதற்கரிய வரிசை பொருந்திய தாமரைப் புஷ்பங்களை உடைய ஒரு தடாகத்தை நெருங்கிக் குளிர்ச்சியுற்ற அத்தடாகத்தினது நீரின்கண் ஸ்நானஞ் செய்தார்.

அவ்விதம் ஸ்நானம் செய்த அவர் தாம் முன்னர் தரித்திருந்த மெல்லிய வஸ்திரத்தையும் தரித்து மனதைப் பரிசுத்தமாகச் செய்து அந்த அழகிய குளக்கரையை நீத்துக் கோபமானது தங்கா நிற்கும் பிரகாசத்தை உடைய வேலாயுதம் போலும் கண்களை உடையவர்களான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களின் தெய்வீகம் பொருந்திய வீட்டின்கண் நுழைந்து. 'நீவிர் எண்ணியவைகளைச் செய்து முடித்தேன். யானும் கேட்டதைத் தா,' மென்று கேட்டார்.

அவ்வாறு கேட்கவே, சிறிய இடையையும் பெரிய கண்களையும் உடையவரான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் அழகிய புதிய ஜலத்தில் ஸ்நானம் செய்து வஸ்திரம் அணிந்து விரோதமில்லாது வரப்பெற்ற தங்களின் தம்பியாகிய உமறென்பவரைப் பார்த்து நபி முகம்மது றசூலென்று முடிவற்றவனான அல்லாகு அபுகானகுவத்த ஆலாவானவன் சொன்ன ஆயத்தும் அதன் அர்த்தமுமாகிய இனிய சொல்லானது சிந்தா நிற்கும் ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தார்கள்.

பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் அவ்வாறு கொடுத்த கடிதத்தை அரசரான உமறுகத்தாபு என்பவர் தமது கைகளினால் வாங்கி அதிலிருந்த அழகிய வரிகளில் ஒரு வரியைத் தேரும் வண்ணம் படித்துத் தெளிந்து இந்தத் தகுதிக்குச் சொந்தமானவர் யாவர்? இ∴து யாருடைய

வார்த்தைகளென்று சொல்லித் தனது புத்தியினகம் சந்தோஷித்துத் தேர்ந்து ஒப்பற்ற விருப்பமுற்றார்.

அவ்விதம் விருப்பமுற்ற உமறுகத்தாபு என்பவர் அந்த வேத வாசகத்தின் அர்த்தத்தை மனதின்கண் தெளிந்து இ∴து மானுடர்களின் வார்த்தைகளல்ல. என்னுடைய இறைவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் வார்த்தைகளே என்று சொல்லி இருதயத்தின்கண் இருக்கும்படி செய்து வேதமானது நிறையப் பெற்ற நிலைமையைக் கொண்ட உள்ளத்தை உடையவராய்த் தாம் முன்னர் எண்ணிய வஞ்சகத்தை ஒழித்துக் குறைவைப் பொருந்திய அந்தக் காபிர்களை வளைந்த கூட்டத்தோடும் விரோதித்து நின்றார்.

அன்றியும், செல்லும் பாதையில் தவறி அந்தகாரத்தில் முட்கள் பொருந்திய காட்டின்கண் கிடந்து சரீரத்தினுள் தங்கிய ஜீவனானது கழியும் வண்ணம் வசக்கேடாகிச் சூரியனானவன் உதயமாகும் பொழுது நல்ல பாதையை அடைந்தவர்களைப் போலக் கிரணங்களைச் சிந்துகின்ற அழகிய முகத்தையுடைய அரசரான உமறுகத்தாபு என்பவர் கேட்டைத் தரா நிற்கும் குபிரென்னும் மார்க்கத்தை ஒழித்து சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தைக் கவனித்து நின்றார்.

அப்போது ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்களும் மகரந்தங்கள் அவிழா நிற்கும் மலர் மாலை அணிந்த கூந்தலையுடைய தையலான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களும் சகீது றலியல்லாகு அன்கு

அவர்களும் உமறென்பவர் ஓதா நின்ற நல்ல சன்மார்க்கத்திற்கு உடன்பட்டுப் பொருந்தினாரென்று மனதின்கண் நினைத்துத் தங்களின் பயங்கரத்தை ஒழித்து வீட்டினகம் ஒளித்ததைத் தவிர்த்துப் பொருந்திய திண்ணையின்கண் நுழைந்து மேல் உண்டாவதைப் பார்க்கும்படி நின்றார்கள்.

### 12.1.7 ஹப்பாபு றலியல்லாரு உரை

"மருங்கினி னின்ற கப்பாப் மன்னவ னுமறை நோக்கித்

தருங்கர தலத்தோய் நும்பாற் சகத்தினும் விண்ணு மொவ்வா

வருங்கன வெற்றி நன்மா ராய்மொன் றடைவ தாக

நெருங்கிய பொருளா யின்றோர் சோபன நிகழ்வ னென்றார்."

அவ்வாறு பக்கத்தில் நின்ற ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்கள் அரசரான உமறுகத்தாபு என்பவரைப் பார்த்து, 'யாவருக்கும் அருளா நிற்கும் கைத்தலத்தை உடையவரே! உம்மிடத்தில் இந்தப் பூமியின் கண்ணும் ஆகாய லோகத்திலும் ஒவ்வாத அரிய மிகுதியான வெற்றியையுடைய நல்ல விஷேஷமானது பொருந்தும் வண்ணம் நெருக்கமுற்ற பொருளாக இன்றைய தினம் ஒரு சோபனமானது சம்பவிக்கு, மென்று சொன்னார்கள்.

"இணையட றவிர்வெள் வேலோ யின்றிர வுமைதீ னுக்கோர்

துணையென வருள்செய் வாயென் றாதியைத் துதித்துச் செவ்வி

மணவலி புயத்தார் வள்ளன் முகம்மதாண் டிரந்து கேட்ப

வுணர்வுறக் கேட்டே மென்றா ரோங்குநன் னெறியை நீங்கார்."

ஓங்கா நிற்கும் நல்ல சன்மார்க்கத்தை விட்டும் நீங்காதவரான ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்கள், 'தம்மையொத்த சத்துராதிகளின் வலிமையை ஒழிக்கும் 'வெள்ளிய வேலாயுதத்தை உடைய உமறுகத்தாபானவரே! உம்மை இன்றைய இராவில் கூட்டமுற்ற வலிமையானது அழகிய தோள்களை உடையவர்களான வள்ளலாகிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் அங்கு தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற்கு ஒப்பற்ற துணையென்று சொல்லும்படி கிருபை செய்வாயாகவென்று ஆதியாகிய ஹக்கு சுபுகானகுவத்த

ஆலாவைப் புகழ்ந்து இரந்து கேட்கும்படி யாம் அறிவுறும் வண்ணம் எமது காதுகளினால் கேள்வியுற்றோ,' மென்று சொன்னார்கள்.

"எடுத்திவை யுரைத்த கப்பாப் தனைவிளித் திரப்போர்க் கென்றுங்

கொடுத்ததிற் சிவந்த செங்கைக் கோளரி யுமறு கத்தாப்

கடுத்தவழ்ந்த திருண்டு சேந்த கயல்விழி கதீசா கேள்வ

ரடுத்துறைந் தவணெங் கென்ன வணியிதழ் வாய்விண் டாரால்."



இச்சமாசாரங்களை எடுத்துச் சொன்ன ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்களை யாசிப்பவர்களுக்கு எந்நாளும் கொடுத்தினால் சிவப்படைந்த சிவந்த கைகளை உடைய ஆண் சிங்கமான உமறுகத்தாபு என்பவர் பார்த்து, 'விடமானது தவழப்பெற்றுக் கறுத்துச் சிவப்புற்ற கொண்டைமீன் போலும கண்களை உடைய கதீஜா அவர்களின் நாயகராகிய அந்த முகம்மது என்பவர்கள் நெருங்கி இருக்கின்ற இடமானது எங்கே?' என்று தமது அழகிய அதரங்களை உடைய வாயைத் திறந்து கேட்டார். அவ்விதம் கேட்கவே சூலானது முதிரப் பெற்ற கரிய மேகத்தைச் சிகரத்தின்கண் சுமந்து செழிய மதுவை விதிர்க்கா நிற்கும் கிளைகளை உடைய சோலைகளைச் சூழப்பெற்று விளங்குகின்ற பெருமை தங்கிய சபாமலைக்குச் சமீபத்தில் சதுரத்தையுடைய ஓர் வீடுண்டு. அவ்வீட்டில் அஹ்மதென்னும் திருநாமத்தை உடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களும் முதிர்ந்த கலிமாவினது நிலைமையில் தவறாத முதியவர்களான சில முஸ்லிம்களும் யாதொரு விரோதமும் இல்லாமல் தங்கியிருக்கிறார்கள் என்று அறிந்த உமறுகத்தாபு, குறையாதா சந்திரனைப் போலத் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை வளர்க்கும் குரிசிலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் தங்குதலைப் பொருந்திய சோலைகள் சூழ்ந்த அந்தச் சபாமலையின் கண் போய்ச் சேர்ந்தார்.

"மலையி னிடத்தி னுயர்ந்திருந்த

மனையை நோக்கி யெம்மருங்குஞ்

குலவ நோக்கி மநர்தருறை

குறிப்புற் றறியத் தோன்றாமல்

விலகுங் கதிர்மெய்க் குரிசினபி

யுறைவ் திவணே யெனவிரைவி

னிலைகொள் கபாடந் தனைத்தீண்டி

நின்றா ரறிவு குன்றாரே."

அவ்வாறு போய்ச் சேர்ந்த அறிவானது குறையாதவரான உமறுகத்தாபு என்பவர் அந்தச் சபாமலையின் கண் உயர்ச்சியுற்றிருந்த வீட்டைக் கண்டு பிரகாசிக்கும் வண்ணம் எப்புறங்களிலும் பார்த்து மனிதர்கள் தங்கா நின்ற அடையாளத்தைப் பொருந்தி அறிவதற்குத் தெரியாது பக்கத்தில் விலகி ஒளிரும் பிரகாசத்தைக் கொண்ட சரீரத்தை உடைய குரிசிலான நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம்

அவர்கள் தங்கும் இடம் இவ்விடந்தான் என்று சொல்லிச் சீக்கிரமாய் நிலையைக் கொண்ட அவ்வீட்டினது கதவைத் தொட்டுத்தட்டி நின்றார். அப்போது அங்குள்ள யாவரும் இவ்விடத்தில் வந்து சேர்ந்து இரு தாள்களைச் செறிக்கப் பெற்ற அழகிய கதவைத் தொட்டுத் தட்டினவர்கள் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தில் நெருங்கினவர்களா? அல்லது அவ்விதம் நெருங்காத அன்னியர்களா? என்று பார்த்து உமறுகத்தாபு என உணர்ந்து தாழ்வை உடைய பொறிக்கிடங்கின் யானைக் கூட்டத்தைப் போன்று நடுக்கமுற்று அஞ்சி மனமானது கலக்கமடைந்து சரீரப் பதறுதலைத் தணியாதவர்களாய்த் தங்களின் வார்த்தைகள் ஒழிந்து முகங்களும் குவியப்பெற்றார்கள்.

அவ்வாறு பயந்து பேசாது இருந்தவர்களான முஸ்லிம்களை, கையினால் அடரா நிற்கும் யானையை நிகர்த்த ஹம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் பார்த்து மனமானது கோபிக்கப் பெற்று, ‘உமறென்பவர் துதித்தற்கருமையான நமது தெய்வீகந் தங்கிய கலிமாவைப் பொருந்தி வந்தாரென்னில் யாவரும் தங்களின் புத்தியின்கண் மதிக்கும் வண்ணமாய்ப் பெருகா நின்ற நன்மையையும் சொர்க்க லோகத்தின் பேற்றையும் பெறுவா,’ரென்று சொன்னார்கள்.

அவ்விதம் சொன்ன பெரிய மாலையை அணிந்த தோள்களை உடையவர்களான அந்த ஹம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் விரோதியா நிற்கும் தீமையை மனதிண்கண் இருக்கும்படி செய்து எழுந்து வந்தாரேயானால் அவ்விடத்தில் அவரினது கையில் பிரகாசியா நிற்கும் கிரணங்களை உடைய வாளாயுதத்தைப் பறித்து அவரின் சிரத்தைக் களைவதே முடிவு. இந்தச் சபையை உடையவர்களே! நீங்கள் இதற்கு உங்கள் அகன்ற மனதின்கண் அஞ்சாதீர்கள். அழகிய தாளினால் செறியப் பெற்ற கதவினது தகவலை விடுங்ளென்று மறுத்தும் சொன்னார்கள்.

“அறந்தாங் ககத்தா ரம்சாசொல்

லறிவு ளிருத்தி மணிக்கதவந்

திறந்தார் திறந்த மனைநோக்கிச்

செம்மை குடிகொண்டெழுந்தடல்வெம்

மறந்தாங் கியபொற் புயத்துமாறு

வந்தார் வரலுஞ் செழுஞ்சோதி

பிறந்தா ரெழினந் நபிக்குரிசில்

பிந்தா திருந்தா ரெழுந்தாரே”

தருமத்தைச் சுமந்த இருதயத்தை உடையவர்களான ஹாம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் அவ்வாறு சொல்லிய அறிவாகிய வார்த்தைகளை அங்கிருந்த யாவரும் மனதின்கண் இருக்கும்படி செய்து அழகிய கதவைத் திறந்தார்கள். அவ்விதம் திறந்த வீட்டைப் பார்த்து அழகானது குடிகொண்டு ஓங்கிய வலிமையை உடைய வெவ்விய வீரத்தைத் தாங்கப் பெற்ற பிரகாசம் அமைந்த தோள்களையுடைய உமறுகத்தாபு என்பவர் வந்தார். வந்த மாத்திரத்தில் உட்கார்ந்திருந்தவர்களான செழிய பிரபையானது உதயமாய் அதிகரித்த அழகிய நமது நபிகள் பெருமான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் தாமதியாது எழுந்தார்கள்.

“நரந்தங் குலவி மரவமலர்

நறுந்தேன் குளிக்கும் புயவரையோ

டுரந்தங் கிடவா ளரியுமறைத்

தழுவி யொளிருங் கரந்தீண்டி

யிருந்திங் கிவணில் வரும்வரவா

றியம்பு மெனக்கென் றெழிலிமுற்றுங்

கபீபு முகம்ம துரைத்தனரால்.”

மேகங்கள் முழுவதும் கையின்கண் தங்கப் பெற்றதைப் போன்று நல்ல கொடையானது அதிகரியா நிற்கும் ஹபீபென்னும் காரணப் பெயரை உடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் அவ்வாறு எழுந்து வாசனையானது உலாவப் பெற்றுக் குங்குமம் புஷ்பத்தினது நறிய தேனில் படிந்த தங்களின் தோள்களாகிய மலைகளொடு வாளாயுதத்தை உடைய சிங்கமான உமறுகத்தாபு என்பவரை வலிமையானது தங்கும் வண்ணம் கட்டியணைத்துப் பிரகாசிக்கின்ற அவரின் கையைத் தொட்டுத் தங்கியிருந்து நீவிர் இங்கே வந்த வரலாற்றை எனக்குச் சொல்லுமாற கேட்டார்கள்.

“வரிசை நபியே முகம்மதுவே

வானோர்க் கரசே புவிக்கரசே

யுரிய தனியோன் முதற்றூதே

யுமது கலிமா வுரைப்படியே

யரிய மறைதேர்ந் தீமான்கொண்

டறத்தா றொழுகும் படிகருத்திற்

கருதி யிவணி லடைந்தேனென்

றுரைத்தா ருமறு கத்தாபே.”

அவர்கள் அவ்விதம் கேட்கவே உமறுகத்தாபு என்பவர், 'சங்கையை உடைய நபியானவர்களே! முகம்மதானவர்களே! தேவர்களான மலாயிக்கத்து மார்களினது இராஜாவானவர்களே! இப்பூலோகத்தின் கண்ணுள்ள யாவற்றிற்கும் அரசானவர்களே! உரிமையையுடைய தனியவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் முதன்மையாகிய றசூலானவர்களே! உங்களின் கலிமாவினது சொற்படி அருமையான புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தைத் தெளிந்து ஈமான் கொண்டு தரும நெறியில் ஒழுகும் வண்ணம் எனது கருத்தில் நினைத்து இங்கு வந்து சேர்ந்தே,' னென்று சொன்னார்.

"கூறுங் கலிமா வுரைத்தீமான்

கொள்ளும் படிக்கிங் கடைந்தனெனத்

தேறு மொழிகேட் டகுமதுஞ்

செவ்விக் கமல முகமலர்ந்து

பேறு மிதுவே கிடைத்தெனப்

பெரியோ னாதி தனைப்புகழ்ந்து

மீறுங் களிப்பா நந்தமன

விழைவாற் றக்கு பீறுரைத்தார்."

அவர் அவ்வாறு யாவரும் புகழா நிற்கும் கலிமாவை யோதி ஈமான் கொள்ளும் வண்ணம் இங்கு வந்து சேர்ந்தேனென்று சொல்லத் தெளிவுற்ற அவ்வார்த்தைகளை அஹ்மதென்னும் திருநாமத்தை உடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் தங்களின் காதுகளினால் கேள்வியுற்று அழகிய தாமரை மலர் போன்ற முகமானது மலரப் பெற்று நாம் பெற வேண்டிய பேறும் இதுான். அதுவே நமக்குக் கிடைத்ததென்று சொல்லிப் பெரியவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவைத் துதித்து மனதின்கண் அதிகரியா நிற்கும் சந்தோஷமாகிய ஆனந்தத்தினது பெருக்கத்தினால், "அல்லாகு அக்குபற்" என்னும் தக்குபீறைச் சொன்னார்கள். அவ்வாறு தக்குபீறு சொன்ன வல்லவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் நபியாகிய முகம்மது சல்லல்லாகு

அலைகி வசல்லம் அவர்களும் கலிமாவை வகைப்படுத்திக் காட்டி முன்னர் ஓதவே மேகத்தைப் போன்ற அழகிய கைகளை உடையவரான உமறுகத்தாபு என்பவர்களும் பின்னர் ஓதித் தீனுல் இஸ்லாம்மென்னும் மார்க்கத்தினது ஒழுங்குகளை மனதின்கண் நிறையும்படி செய்து அந்தகாரமானது அதிகரித்த கடியதான குபிரென்னும் மார்க்கத்தை ஒழித்துக்

கெடாத தொழுகையினது முறைமைகைளைக் கற்று நல்லவர்களாகிய மற்றும் முஸ்லிம்கள் வணங்கும் வண்ணம் ஜல்ல ஜலாலகு வத்த ஆலாவை வணங்கி நன்மை பொருந்திய தீனுல் இஸ்லா மார்க்கத்தினது அச்சத்தை ஒழித்தார்கள்.

அப்போது ஈமான் கொண்டவர்களாகிய முஸ்லிம்களியாவரும் விரிந்த பிரகாசமமைந்த சிறகுகளை உடைய சரீரத்தையும் பெரிய கண்களையும் உடைய அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாம் அவர்கள் அந்த ஹிறாமலையின்கண் தங்கியிருந்து அருவியைப் போலச் செய்திடும் கலிமாவை அமையாத ஆற்றினது பெருக்கமாகிப் புறுக்கானுல் அலீமென்றும் வேத வாக்கியத்தையுடைய தீனுல் இஸ்லாமமென்னும் மார்க்கப் பயிரானது தழைக்கும் வண்ணம் வளைந்த குபிராகிய வெவ்விய களையைத் தீயும்படி செய்யும் குருவான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களின் நீதியினால் மனமானது சந்தோஷம் அடையப் பெற்றார்கள். அப்போது அபூஜகில் என்பவன் உமறுகத்தாபானவர் அஹ்மதென்னும் பெயரையுடைய முகம்மதென்பவன் விளக்கிக் காட்டும் வார்த்தைகளைக் கேள்வியுற்றுக் கடவுளால் நியமிக்கப்பட்ட விதியினது முறைமைகளென்று தமது அறிவும் உடலும் மயங்கப் பெற்று வஞ்சனையை உடைய மாயத்தின்கண் தங்கினாரென்று அந்தத் திருமக்காமா நகரத்திலும் மற்றும் தேங்களிலும் அதிகரிக்கும் வண்ணம் வார்தைகளை நடாத்தி இந்த உமறுகத்தாபு என்பவர் இனி நமது சத்துராதியானவரென்று நூதனமாகிய சொற்களைப் பழைய தனது குடும்பத்தில் உள்ளவர்களுக்குப் புகழ்ந்து கூறி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்களை நிந்தித்தான். சாயா நிற்கும் அலைகளினால் முத்துக்களை வீசி ஒலிக்கும் சமுத்திரமாகிய காபிர்களிடை மத்தியில் விரிகின்ற அமுதமென்று சொல்லும் கலிமாவைப் பெற்ற மேன்மையை உடையவர்களான முஸ்லிம்கள் முப்பத்து மூன்று பேர்களும் அருமையாகிய பெண்கள் ஆறு பேர்களும் உமறுகத்தாபு என்று சொல்லும் இராஜரான ஒருவருமாகிய விளங்கிய இலக்கத்தை உடைய இந்த நாற்பது பேர்களோடும் இப்பூமியின்கண் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம் அவர்கள் சிறப்புற்றிருந்தனர்.

## 12.2.சோதித்தறியும் வினாக்கள் :

**பயிற்சி வினாக்கள்**

1. அடிஜகீல் அறிவித்தது யாது?

விடை : அபுஜகிலின் அறிவிப்பு என்னும் தலைப்பில் உள்ள செய்திகள்

2. உமறுகத்தாபு-காளை இருவருக்குமிடையே நடந்தனவற்றைக் கூறுக.

விடை: மலக்கானவர் காளை வடிவமாக வருதல், உமறு கத்தாபு காளையுடன் நேர்ந்ததைக் கூறுதல் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகள்.

3. உமறு கத்தாபு ஈமான் அடைந்ததனை விவரி.

விடை : உமறு கத்தாபு ஈமான் அடைதல் என்ற தலைப்பிலுள்ள செய்திகள்.

## 12.3 பயிற்சி வினாக்கள் :

1. உமறு கத்தாபு மனத்தெளிவு அடைந்தது எவ்வாறு?

## 12.4. பொருளறிக.

ஈனன் - கீழ்மை எண்ணம் கொண்டவன்.

ஆதிதூதர் - நபிகள் நாயகம்

ஈமான் - நம்பிக்கை

சுவனபதி – சொர்க்கலோகம்.

## 12.5. மேலும் படித்தறிக.

1. சிலம்பொலி செல்லப்பன், சீறாப்பறாணம் - மூலமும் உரையும்,

# கூறு: 13 நளவெண்பா



### 13.1 அறிமுகம்

### பாயிரம்

### கடவுள் வணக்கம்

**விநாயகர்**

ஈசனாகிய சிவபெருமானும், கரியவனாகிய திருமாலும், அன்னவாகனனாகிய பிரமனும் நினைந்து போற்றுகின்ற பெரும் புகழினைக் கொண்டிருப்பவன், யானைமுகத்தனாகிய விநாயகப் பெருமான், அவன்பால் அன்புடையவர்களுக்கு நன்மைகள் மிகுதியாக வேண்டும். அதனைக் கருதி, இந்த மண்ணுலகத்தினை ஒருகாலத்தே தாங்கி அரசியற்றியவனாகிய நளமகராசளின் பெருமைமிக்க வரலாற்றினைக் கூறப்பொகின்றோம். அதற்கு, அந்த விநாயகப் பெருமானின் வீரக்கழல் விளங்கும் திருவடிகளே எமக்குத் துணையாயிருக்குமாக!.

**நம்மாழ்வார் வணக்கம்**

எடுத்துச் சொல்லுவதற்கும் அருமையானது, திருமகள் மகிழ்ச்சி கொள்ளுகின்ற திருமாலினது புகழாகியது, வளவிய தமிழ்வேதமாம் திருவாய்மொழி, அதனைப் பாடியிருளியவர், பெருமை பொருந்திய மகிழமலர் மாலையினை உடையவராகிய 'மாறன்' எனப்படும் நம்மாழ்வார். அன்பர்கள் இன்புறும் வண்ணம், நிலமண்டிலத்தினைத் தாங்கிய நளனின் பெருமை மிக்க சரித்திரத்தினை எடுத்துரைக்க, அந்நம்மாழ்வாரின் திருவடிமலர்கள் எமக்குத் துணையாகுமாக.

**திருமால் வணக்கம்**

ஆதிநாளிலே ஒப்பற்ற பன்றிவடிவினனாகி இவ்வுலகைக் காத்தான்; அடியவனாகிய பிரகலாதாழ்வானின் பொருட்டாக ஒளிமிக்க அழகிய தூணிடத்தே நரசிங்கமாக முந்நாள் வெளிப்பட்டான்; வேதங்களின் முதன்மையான பிரணவப் பொருளாக அமைந்து நிலைபெற்றான்; களிறாகிய கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று அழைக்கவும், 'என்னவோ' எனக் கேட்டுவந்து, அதனை முதலைப்பிடியினின்றும் காத்தான், திருமால்; அத்தகைய கருணைகொண்டோனாகிய அவனே எமக்கும்

இறையாவான்; அவனை யாமும் வணங்குவோமாக!.

சிவபெருமான் வணக்கம் :

தோகைகளையுடைய மயிலைப் போன்ற நீலவண்ணச் சாயலினைஉடையவள் உமையவள்; அவள் வீற்றிருக்கின்ற ஒரு பாத்தியினை உடையவர் சிவபெருமான். கங்கையானது பாய்ந்தோடுகின்ற தம் சடாயாரத்தின் மேலாகத் தங்கியிருக்கின்ற நிலவின்

ஒளிவெள்ளத்தினைத் தம் திருமேனியிலேயும் வழிய வார்த்துக்கொண்டாற்போல விளங்கும் திருவெண்ணீற்றினை அணிந்திருப்பவர் அவர். நாகப்பாம்புகளை மிகுதியாகத் தம் ஆபரணங்களாக அணிந்திருப்பவரும் அவர். அத்தகைய சிவபெருமானும் நமக்கு இணையற்ற காப்பாக விளங்குவாராக!.

**முருகப்பிரான்**

நீலவண்ணத்துடன் நெடுகப்படர்ந்திருக்கின்ற மேகங்களின் உச்சியிலே ஒளிபரப்பியவனாகக் காலைப்பொழுதிலே எழுகின்ற, இருளினைப் போக்குகின்ற வெம்மையினையுடையவன் கதிரவன். அவனைப்போலச் சோலையிடத்ததான நீலவண்ணத் தோகைமயிலின்மேல் எழுந்தருளிச் சென்று, பெருங்கடலிடத்தே மாமரமாகி நின்ற சூரனை அழித்து வெற்றி கொண்டவன் முருகப்பிரான். அவனுடைய அழகிய சிவந்த திருவடிகள் எமக்குப் பாதுகாவலாகுமாக!

**சுயம்வர காண்டம் (1-45 பாடல்கள்)**

## 13.2 கதை பிறந்த கதை

### 13.2.1 தருமனின் வாட்டம்

“பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதும் தோற்றெருநாள்

ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி-வேண்ட

மறுத்தான் இருந்தானை மண்ணொடும் போய்மாளப்

பொறுத்தான் இருந்தான் புலர்ந்து.”

பாண்டவர்களுள் முதற்கண் தோன்றியவன் தருமபுத்திரன், அவன், தன் நாடு முழுவதையும் சூதினாலே தோற்றுவிட்டான்; ஆண்களுள் தலைசிறந்தோனாகிய கண்ணபிரானே அவன் தூதுவனாகத் துரியோதனனிடம் சென்றான்; இழந்த பூமியைத் தருமாறும் வேண்டினான். அதற்கு மறுத்தவனாயினோன் துரியோதனன். அதன்மேல் அவனுடைய பெரியபடையயெல்லாம் அவனுடைய நாட்டினோடும் அவனைவிட்டுப் போய், அவனும் மாண்டுபோகுமாறு போர்நிகழ்த்தும் பொறுப்பினை மேற்கொண்டான் தருமபுத்திரன். அவன், ஒருநாள் மிகவும் வாட்டமுற்றவனாகக் காட்டிடத்தே இருந்தான்.

### 13.2.2 வரும்தகையோர் வந்தனர்

“நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்

ஈட்டங்கள் சூழ இருந்தானைக்-காட்டில்

பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழில்தோள் வேந்தர்

வருந்தகையர் எல்லோரும் வந்து.”

நாட்டிடத்தே வாழ்ந்த அரசவாழ்வினைக் கை விட்டுச் சென்று, நான்கு வேதங்களையும் பயில்வோரான முனிவர் கூட்டங்கள் தன்னைச் சூழ்ந்திருக்கக் காட்டிலே அமர்ந்திருந்த பெருந் தகுதியுடையோனாகிய அந்தத் தருமபுத்திரனை, பேரழகு பொருந்திய தோள்களை உடைய மன்னர்களுள்ளே அவன்பால் வரத்தகும் தன்மையுடையோர் எல்லோரும், அக்காட்டினிடத்தே வந்து கண்டார்கள்.

**13.2.3. வேதவியாசர் வந்தார்**

“கொற்றவேல் தானைக் குருநாடன் பாலணைந்தான்

எற்றுநீர் ஞாலத் திருள்நீங்க- முற்றும்

வழிமுறையே வந்த மறையெல்லாம் தந்தான்

மொழிமுறையே கோத்த முனி.”

அலைமோதும் வெள்ளப்பெருக்கினையுடைய கடல்களாற் சூழப்பெற்றிருக்கும் இவ்வுலகத்தின் அறியாமையாகிய இருள் அனைத்தும் விலகுமாறு, முழுவதும் வழிமுறையே ஓதப்பட்டு வந்த வேதங்களை எல்லாம், சொல்லப்படும் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் எனத் திரட்டிச் சேர்த்த முனிவனாகிய வேதவியாசன், வெற்றி வேலினைக்கொண்ட படைஞரையுடைய குருநாடனிடத்தே, அப்பொழுது, தானும் வந்து சேர்ந்தான்.

**13.2.4. தருமன் போற்றினான்**

“மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்

பிறவிப் பெருந்துயரம் எல்லாம்-அறவே

பிழைத்தேன்யான் என்றானப் பேராழி யானை

அழைத்தேவல் கொண்ட அரசு.”

பெருமையுள்ள சக்கரப்படையினனாகிய கண்ணபிரானையும் தன்பால் அழைத்துத் தனக்குத் தூதாகச்சென்று வருமாறு ஏவல் கொண்டவன் தருமராசன். அவன் ‘வேத முதல்வனே! நீ இவ்விடத்தே வந்து அருள்செய்யப் பெற்றேன்! அதனாலே, என் பிறவிப் பெருந் துயரமெல்லாம் முற்றவும் நீங்கிப்போயினவனாக உய்தியும் பெற்றேன்’ என்று அந்த வேதவியாசனை வரவேற்றுப் போற்றினான்.

**13.2.5. வருந்திய காரணம்**

பெருமைவாய்ந்த வேதஞானத்தினாலே தன் உள்ளத்திற் செம்மைபெற்ற, யாவரும் விரும்பும் உண்மைத் தவத்தோனாகிய அந்த வேதவியாசன், தருமபுத்திரனின் முகக்குறிப்பினை ஆராய்ந்தான். “நிலையான செல்வங்கள் வந்தடைந்தாலும், வெம்மையான துயரங்கள் வந்தடைந்தாலும்,

விருப்பு வெறுப்பு ஆகியவையின்றி ஒரேதன்மைத்தாகவே இருக்கின்ற உள்ளப் பண்பினையுடைய வலிமையாளனே! உன் உள்ளமும் இப்பொழுது கலக்கமடைந்திருப்பதற்குரிய காரணந்தான் என்னவே?" என்று கேட்டான்.

**13.2.6. கயிலை போக்கினேன்**

இந்தப் பூவுலகத்தினிடத்தும், மேலுலகத்தினிடத்தும், வாய்மை உரைப்பதிலே தனக்கு ஒப்பான உறுதியுடையவர் எவருமே இல்லாதபடிக்குச் சிறந்தேன் தருமபுத்திரன். என்னும் மன்னவன். அவன், 'மார்பிடத்தே பாம்புகளை அணிபவரான சிவபிரானுடைய, பொன்னொளி சிறந்த பாசுபதாஸ்திரமாகிய படையினைப் பெற்றுவரும் பொருட்டாக, என் தம்பியாகிய அருச்சுனனை அழகிய பொன்மயமன கயிலைமலைக்குத் தன்னந் தனியனாகப் போகச் செய்தேன்" என்று சொல்லி வருந்தினான்.

**13.2.7. தோள் இரண்டும் துணை**

தீக் கடவுள் காண்டாவனத்தினை உண்ணுமாறு, தன் கைக்கணையின் வலிமையினாலே நெடுகிப் படர்ந்த மேகத்தையும் முற்காலத்துத் தடுத்து நிறுத்தியவன் உன் தம்பி. அவனுடைய ஆற்றலுக்குப் புறமுதுகிட்டுத் தேவர்களும் தம் தாளிரண்டும் நோவும்படியாக அந்நாள் தனித்தனியே சிதறுண்டு ஓடினரே, அந்நாளில், அவனுக்கு அவனுடைய தோள்கள் இரண்டுமல்லவோ துணையாயிருந்தன!.

**13.2.8. காரணம் யாதோ?**

"பேரரசும் எங்கள் பெருந்திருவும் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானம் சேர்தற்குக்-காரணம்தான்
யாதோவப் பாவென்றான் என்றுந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய்."

"எங்களுடைய பேரரசினையும் பெருஞ்செல்வத்தினையும் கைவிட்டு, சேர்ந்திருப்பதற்கும் அருமையுடையதான வெம்மையுடைய கானகத்தையும் யாங்கள் அடைந்தோமே. இதற்குக் காரணந்தான் யாதோ ஐயா?" என்று, தன் வெண்கொற்றக் குடைநிழலின் கீழாகத் தீமைகள் அனைத்தும் நீங்கிப் போகுமாறு உலகினைக் காத்தவனாகிய தருமபுத்திரன், அவ்வியாசனிடம் மீண்டும் கேட்டான்.

**13.2.9. மன்னர்க்கு இயல்பேகாண்**

"கேடில் விழுச்செல்வம் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க்கு இயல்பேகாண்-வாடித்

கலங்கலைநீ என்றுரைத்தான் காமருவு நாடற்கு
இலங்கலைநூல் மார்பன் எடுத்து"

"கெடுதலில்லாத மேலான செல்வமும் கேட்டினை அடையுமாறு சூதாடித் தோல்வியுறல் என்பது, இதழ்விரிந்த தாரணியும் மன்னர்க்கு என்றும் இயல்பே என்பதனை அறிவாயாக; அதனால், நீயும் வாட்டமுற்றுக் கலங்கா திருப்பாயாக" என்று, சோலைகள் செறிந்திருக்கும் குருநாட்டை உடையவானகிய அத் தருமனுக்கு, விளக்கமுடன் அசைந்தாடும் பூணூலை உடைய மார்பினனாகிய வேத வியாசன் எடுத்துக்கூறினான்.

### 13.2.10 எவரும் உள்ளாரோ?

"கண்ணிழந்து மாயக் கவறாடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனம்நண்ணி-விண்ணிழந்த
மின்போலும் நூல்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போல் உழந்தார் இடர்? (19)

வானம் இழந்துபோகவிட்ட மின்னலைப் போன்றதான பூணூலினை அணிந்திருக்கும் மலாபினைஉடையோனே! அறிவாகிய கண்ணினை இழந்துபோய் வஞ்சனையுடைய ஆதினை ஆடுதலிலே ஈடுபட்டுத் தம் நாட்டையிழந்து காட்டினை அடைந்திருந்து துன்புற்றவராகிய அரசர்தம் என்னினும் வேறு எவரேனும் உள்ளவரோ? என்று கூறித் தருமன் மிகவும் நொந்து கொண்டான். வயாசர் அப்போது நான் கதையைத் கூறத் தொடங்கினேன். இவ்வுலகத்து நாடுகளில் முதன்மையானதாக எடுத்துக் கூறப்படும் சிறப்புடையது நிழநாடாகும்.

### 13.2.11 நகரின் சிறப்பு

கோதையினைக் கூந்தலிற் சூடியவராக விளங்கும் இளம் பெண்களுடைய கொங்கைகளின் மேலாகப் பூசப்பெற்றிருந்த குளுமையான கலவைச் சாந்தாகிய செழுமையான சேற்றின் காரணமாகத், தெருக்கள் வழியே செல்லும் பெரிய யானைகளும் கால்வழுக்கி வீழுகின்றதும், மெய்ஞ்ஞானமாகிய கலை எங்கும் செழிக்கின்ற நகரமாயிருப்பதுமாக,

மாவிந்தம் என்றும் சொல்லப்படுவதொரு நகரம், அந்த நாட்டிடத்தே உள்ளது.

### 13.2.12 மாடங்களின் சிறப்பு

வீசும் தென்றற் காற்றானது அசைந்துகொண்டிருக்கும் கொடிகளையுடைய மாடங்களிடத்தே, தெரிந்தெடுத்த பொருத்தமான ஆபரணங்களை அணிந்தோரான இளம் பெண்கள் தம் கூந்தலுக்கு ஈரம் புலர்த்துதற்கு ஊட்டுகின்ற நறும்புகையானது, வானத்தே புகுந்து நிலைபெற்றிருப்பதனால், வானது மேகங்கள் பொழிந்த நீண்ட

மழைத்தாரைகள் யாவும், எக்காலத்தும், அகிற்கட்டையின் நறுமணத்தைக் கமழ்தலா யிருக்கும் என்று அறிந்தோர் சொல்வார்கள்.



### 13.2.13 மக்களின் சிறப்பு

அந்த மாவிந்த நகரத்திலே, கோணுவன கொடிய வில்களெயல்லாமல், மக்கள் மனங்கோணினரென்பது கிடையாது. தளர்ந்து சோர்வன மகளிர்களின் மென்மையான கூந்தல்களேயல்லாமல், மக்களுள் எவருமே அல்லர். வாய்விட்டு அரற்றுவன மகளிரின் அழகி காற்சிலம்புகளே அல்லாமல், மக்களுள் எவரும் அரற்றித் துயருறுபவர் அல்லர்; கலக்கம் அடைவன தண்ணீரேயன்றிக் குடிமக்களுள் எவரும் அல்லர். நேர்வழியை விட்டுக் குறுக்கிட்டுச் செல்வன மாளிகைகளின்மேல் விளங்கும் அழகியர்களின் கண்ணேயில்லாமல், மக்ககளுள் வழிபிறழ்வார் யாரும் இலர்.

### 13.2.14 கல்லாமிருலர்! இல்லாருமிலர்!

அந்நகரத்தே எங்கும் தெரிவன நல்ல நூற்களே! தெரியாதிருப்பன, வரிகள் பொருந்திய வளையணிந்தோரான மாதர்களின் இடையே! ஒரு சமயத்தும் இல்லாதிருப்பது இரத்தலாகிய ஒன்றே! இகழ்வுடன் ஒதுக்கி, எவரும் கல்லாமல் விட்டதும் வஞ்சனை என்பதே!,

### 13.2.15 முரணையும் மாவிந்தமும்

தாமரையாளான வெற்றித் திருமகள் நிலைபெற்றிருக்கும் பரந்த தோள்களை உடையனவும், அழகான பூமாலையினை அணிந்தோனும், பெரிதான மனுநூல் உலகிலே வாழ்ந்திருக்குமாறு வந்துதித்தோனுமாகிய, சந்திரன் சுவர்க்கி என்பானது முரணையம்பதிதான் என்று உலகாளும் வேந்தனாகிய அந்நள மன்னனின் தலைநகரமான அந்த மாவிந்தநகரத்தையும் சொல்லலாம்.

சிறப்பு மிகுந்த மாவிந்த நகரமாகிய அவ்விடத்தே, களத்தே புறமுதுகிட்டு ஓடாத ஆண்மையாற் சிறந்த படையினைக் கொண்ட நளன் என்பான் ஒருவன் இருந்தான். பெருமை பொருந்திய காதல் மிகுந்த தன் பெடையினோடும் வண்டானது ஊடல் கொண்டதனாலே, தேன் அருந்துவாரற்று உடைந்து வழிந்தோட அஃது அருகிருக்கும் மாதர்களின் முலையிடங்களை நனைக்கின்ற, குளிர்ந்த மாலையை அணிந்திருப்பவன் அவன்! அரிய வெண்கொற்றக்குடையினையும் அவன் உடையவன்!

### 13.2.16 நளனின் செங்கோற்சிறப்பு

"சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்

தாதவிம்பூந் தாரான் தனிக்காத்தான்- மாதர்

அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்

ஒருகூட்டில் வாழ உலகு".

பூந்தாதுகள் சிந்திக்கொண்டிருக்கும் மாலையினை அணிந்தோனாகிய அந்த நளன், மாதர்கள் தம் அருகிலே வைத்து ஊட்டிவரும் பசுமையான கிளியும், அதனுடன் போராடும் இயல்புடைய பருந்தும், ஒரே கூட்டிலே ஒற்றுமையாகத் தம்முடைய பகையினை மறந்து கூடி வாழுமாறு, குளிர்நிலவு போன்ற தன் வெண்கொற்றக் குடைநிழலின் கீழாகச், சிறந்த அறங்கள் எல்லாம் நிலைபெற்றிருக்கத், தன் நாட்டினை ஒப்பற்ற முறையிலே காத்து வந்தான்.

### 13.2.17 விதிவழியாகச் சென்றான்

இனிதான் குவளை மலர்களிடத்தேயுள்ள தேனிலே அளைந்தபடி இன்புற்ற வண்டுகள், தம் சிறகுகளை உலர்த்திக் கொண்டிருக்கின்ற,

நீர்வளமிகுந்த நிடத நாட்டிற்கு உரியவன் அந்த நளமகராசன், அவன் பூக்களைக் கொய்து வருதலை விரும்பிச் சோலையிற் சென்று புகும்பொருட்டாக, வளைவான வளையல்கள் விளங்கும் கையினரான பெண்களின், முகங்களாகிய நிலவினிடத்தே பூத்திருக்கும் அழகிய கண்களான நீலமலர்க் காட்டினிடையே புகுந்து, வீதிவழியாகச் சென்று கொண்டிருந்தான்.

### 13.2.18 இளவேனில் எதிர்வந்தது

வளர்ந்த முல்லைக்கொடிகள் தினைத்தட்டையின்மீது பற்றிப்படர்ந்து மலர்ந்திருக்கின்ற, மலைச்சாரல்கள் சூழ்ந்திருக்கும் நாடனாகிய அந்நளனுக்கு எதிராக, வெற்றிகொள்வானாகிய மதனன், தன் கரும்பு வில்லினை எடுக்கவும், வீதியெல்லாம் தென்றல் மலர்த்தேனாகிய நீரினைத் தெளித்து வரவுமாக, இளவேனிற் காலமும் அவ்விடத்தே வந்து தோன்றியது.

### 13.2.19 புழுதியவித்த பூத்தேன்

மிருதுவான இருளானது வெய்யோனாகிய கதிரவனின் எதிரே வருதற்கு அஞ்சி ஒதுங்கியதாகப் புகுந்து கொண்டிருந்தது போன்ற மரச்செறிவு மிகுந்ததும், கரிய வண்டினம் தொகுதியாகக் கூடியிருந்து ஆரவாரித்துச் சுற்றித்திரிவதுமான பொழிலினிடத்தே, தான் செல்லும் தேர்ச்சக்கரங்களினிடையே எழுகின்ற புழுதியினைத் திருந்திய அணிகளையுடைய மகளிரின் அழகிய கூந்தல்களினின்றும் வழிகின்ற பூந்தேன் என்னும் நீரானது வீழ்ந்து அவிக்குமாறு கடந்து சென்று, அவனும் அடைந்தான்.

அந்தச் சோலையினிடத்தே, மாட்சியமைந்த அழகு படைத்தவனாகிய அந்த நளனின் முன்பாக, நீரிலே தோன்றும் தாமரையிடத்தே வாழ்வதான அன்னப்பறவை ஒன்று தன் உடலின் வெண்மை நிறத்தினாலே சோலையின்

நிறம் வெண்ணிறமாகவும், நெடிதான தன் கால்களின் செந்நிறத்தினாலே பொய்கையிடமெல்லாம் செந்நிறமாகவுமாக வந்திருந்து தோன்றிற்று.

### 13.2.20 பிடித்துத்தா என்றான்

“பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்

மேதிக் குலமேறி மென்கரும்பைக்-கோதிக்

கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்

பிடித்துத்தா என்றான் பெயர்ந்து.”

எருமை மந்தைகள் சென்று மென்மையான கரும்புகளைக் கடித்துக் குதப்பி அவற்றுள்ளிருக்கும் முத்துக்களை உமிழ்ந்து விடுகின்ற, கங்கைநீரால் வளமிகுந்த நிடதநாட்டினை உயைடவன் நளன். அங்கிருந்த பணிப்பெண்களுள் ஒருத்தியை அவன் நோக்கி, ‘பேதாய்! நீ சென்று அந்த இளையதான அன்னத்தினைத் தப்ப விட்டுவிடாதபடி மெல்லப் பிடித்துத் தருவாயாக’ என்று ஏவினான்.

### 13.2.21. பிடித்து வந்தனர்

நெடிதானதும், நன்கு செழித்ததுமான கூந்தலையுடைய சேடியர்கள், அந்த அன்னத்தினைப் பிடிக்கக் கருதி, மயிலின் கூட்டமொன்று ஓடிச்சென்று வளைத்துக்கொண்டதுபோல அதனை வளைத்துச் சூழ்ந்துகொண்டு, தம் கையினாற் பற்றிக் கொணர்ந்து, தம் அரசனின் முன்பாகப் பணிவுடன் அதனை வைத்தார்கள்.

### 13.2.22. வருத்தமும் கலக்கமும்

தெரிந்தெடுத்த வளையல்களை அணிந்தவரான அந்தச் சேடியர்கள், அன்னத்தினைப் பிடித்துக்கொண்டு போய்த் தம் மன்னவனான நளனின் முன்பாக வைத்ததுமே, அந்த அன்னம், தன்னுடைய சுற்றமாகிய மற்றை அன்னங்களைத் தேடி வருத்தமுற்றது; எதிரேயிருந்த மன்னவனைக் கண்டு கலக்கமும் கொண்டது.

“அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்

வஞ்சி யனையார் மணிநடையும்- விஞ்சியது

காணப் பிடித்துகாண் என்றான் களிவண்டு

மாணப் பிடித்தார் மன்.”

மதுவுண்டு களிப்பனவாய வண்டுகள் மிகுதியாக மொய்த்துக்கொண்டிருக்கும் மாலையினை அணிந்திருந்தோனாகிய நளமன்னன், அன்னத்தின் அந்த அச்சத்தினைக் கண்டான். ‘இளமையுடைய

அன்னமே! உன்னுடைய அழகான நடையினையும், வஞ்சிக்கொடியினைப் போன்றவரான இம்மாதர்களின் சிறந்த நடையினையும் ஒப்பிட்டுப் பார்த்து, சிறந்தது எதுவனெக் காண்பதன் பொருட்டாகவே நின்னைப் பிடித்தது; அதனால், நீ அஞ்சாதே' என்று கூறினான்.

**13.2.23. தடுமாற்றம் தீர்ந்தது**

செந்தாமரை மலரிடத்தே வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற சேடியானவள். பிடித்துக்கொணர்ந்த, அந்த ஒப்பற்ற அன்னமானது, கொலைசெய்யும் கொடிதான கருத்தில்லாத அரசனின் அந்தச் சொற்களைக் கேட்டுத், தன் மனக்கலக்கம் தீர்ந்ததாயிற்று.

**13.2.24. பொருத்தம் தமயந்தியே!**

"திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசைமுகந்த தோளுக்கு இசைவாள்-வசையில்
தமையந்தி என்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு."

"எட்டுத் திக்குகளிலும் பரவிய வெண்கொற்றக் குடையினையுடைய தேர்வேந்தனே! உன்னுடைய புகழ்மிகுந்த "தோள்களுக்குப் பொருத்தமானவள், மென்மையான தோள்கள் மூங்கிலைப்போன்று அழகாயின' என்று சொல்லத்தக்கவளும், தேவமகள் போன்றவளுமான, குற்றமற்ற தமையந்தி என்று சொல்லப்படும் தையலே யாவாள்" என்று, அந்த அன்னம் அப்போது உரைத்தது.

**13.2.25. யாவர் மகளோ?**

"அன்னம் மொழிந்த மொழியுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்-சொன்னமயில்
ஆர்மடந்தை என்றான் அனங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து" . (37)

அன்னமானது சொல்லிய அந்தச் சொற்கள் செவிவழியாகப் புகுந்து மனத்தை அடைவதற்கு முன்பாகவே, அந்தத்தமையந்தி என்னும் கன்னியானவள் அவன் மனக்கோயிலுட் புகுந்து அதனைத் தன்வசமாக்கிக் கொள்ளவும், மன்மதன் தன் கருப்புச் சிலையினை வளைத்து அம்பினை ஏவவும், நிலமகளுக்குத் தலைவனான அந்த நளமன்னன் துடிதுடித்து "நீ சொன்ன அந்த மயிலனையாள்தான் யாவரது மடந்தையோ?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

### 13.2.26. விதர்ப்பன் பூங்கொடி

"எழுவடுதோள் மன்னா இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை-உழநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
தொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு." 38

'தூணினையும் வெற்றிகொள்ளும் திண்மையான தோள்களையுடைய மன்னவனே! ஒளி சிதறும் ஆபரணங்களை அணிந்த அந் நங்கையானவள், உழவர்கள் ஏரினைத்தூண்டிச் செலுத்த, அந்த ஏரின் கொழுமுனையிலே சாய்ந்துபோன குவளைகள், அவர்கள் நீர்வடியும் மடையினை மதிப்பத் தேனைப் பெருக்குகின்ற மிக்க ஆரவாரத்தையுடைய நீர்வளமிகுந்த விதர்ப்ப நாட்டிற்கு உரியவனும், கொடையாளனுமாகிய, விதர்ப்பராசன் பெற்றெடுத்த ஒப்பற்ற பூங்கொடியாவாள்!"

### 13.2.27. பெண்மை அரசு

"நாற்குணமும் நாற்படையார் ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா-வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு." (39)

'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனப்படும் நான்கு குணங்களுமே நால்வகைச் சேனைகளாகவும், ஐம்புலன்களுமே நல்ல அமைச்சர்களாகவும், ஒலிமுழங்கும் காற்சிலம்பே அழகிய முரசமாகவும், வேற்படையும் வாளுமே கண்களாகவும் கொண்டு, தன் முகமாகிய நிலவட்டக் குடையின் கீழாகப் பெண்மை அரசு வீற்றிருக்கின்ற தன்மையுடனே விளங்குபவள் அவள்.'

### 13.2.28. நூபுரங்கள் புலம்பும்!

'அவளின் இடையானது பருத்துயர்ந்த அவளது இளங்கொங்கைகளை முற்றவும் சுமந்து நிற்கும் வலிமையுடையது ஆகமாட்டாதென்று, அவளுடைய காலிலே விளங்கும் நூபுரங்கள், புதிய, தேன் அலம்பிக்கொண்டிருக்கும் நீண்ட கூந்தலுடைய அவளின் இரு பாதங்களிலும் தாழ்ந்துகிடந்து, சதா வாய்விட்டுப் புலம்பிக்கொண்டேயிருக்கும்'.

### 13.2.29. இடை நுடங்கும்

'ஏழு உலகங்களிடத்தும் நிலைபெற்ற வெண்கொற்றக் குடையினையுடைய வேந்தனே! 'ஆறு கால்களையுடைய சிறு பறவை'

என்னும் வண்டானது, தன் அழகிய சிறகினாலே வீசும் மெல்லிய காற்றுக்கும் ஆற்றமாட்டாமல், அவளுடைய இடையானது மெலிவுற்றுத் துவண்டு கொண்டிருக்கும்,'



**13.2.30. மலர்வாளி தீட்டும் இடம்**

'மலரம்புகளையுடைய வேந்தனான மன்மதன், எக்காலத்தும் போர் செய்வதற்குரிய தன் கொடிய வில்லினைச் சார்த்தி வைத்துவிட்டுத், தன் அம்பின் வரிசைகளைத் தீட்டிக்கூர்மை செய்துகொள்ளும் இடம், செவ்விய தேன்போன்று இனிக்கும் பேச்சினளான அவளின் செறிவான முற்புறக் கூந்தல் வரிசையின் கீழாக விளங்கும் பின்றத்துண்டமாகிய நெற்றியே ஆகும். அந்த அன்னப் பறவையினையும் முன்னமேயே தன் நடையழகினாலே வெற்றி கொண்டவளான தமையந்தியின் பால் விருப்பங்கொண்டு, 'அன்னமே! நீ சொல்லிய அந்த அன்னத்தை நினைக்கும்போதே என் உயிர் சோர்கின்றது. உனக்கு அவளுடன் எத்தகைய தொடர்போ? அதனைக் கூறுக' என்றான் நளன்.

**13.2.31. நடைகற்கச் சென்றோம்**

'மன்மதன் அவளுடைய கண்பார்வையினைப் பார்த்துத்தானும் படைதொடுக்கும் தொழிலினைக் கற்கும் பொருட்டாக அவளிடத்தே வந்திருந்தான். யாங்கள், அந்தப் பசிய தொடியுடையாளின் பாதத்து நடையினைக் கற்பது கருதி அவளிடத்தே சென்று சேர்ந்தோம். **13.2.32. வாயுடையது என் வாழ்வு**

அன்னம் கூறியவைகளை நளன் கேட்டான். அவன் நெஞ்சம் தடுமாற்றம் அடைந்தது. மிகுதியான காதலும் எழுந்தது. மானவுணர்வும் நீங்கிப் போயிற்று. நாணமும் அழிந்தது. கொடிய காமமாகிய தீயினைக் கொண்டிருந்த நெஞ்சத்தை உடைய அவன், தெளிவுற்று, 'இனி என்னுடைய வாழ்வு உன் வாய்ச்சொற்களின் இடமாகவே இருக்கின்றது' என்று, அந்த அன்னத்தை நோக்கி கூறினான்

## 13.3. சோதித்தறியும் வினா – விடைகள் :

1. பாயிரச் செய்திகளை எழுதுக.

விடை : பாயிரத்தில் கடவுள் வணக்கம் இடம்பெறுகிறது. விநாயகர், நம்மாழ்வார், திருமால், சிவபெருமான் முருகப்பிரான் ஆகியோர் வணக்கம் குறித்த செய்திகள்.

2. நளன் கதை பிறந்த கதையைக் கூறுக.

விடை : தருமனின் வாட்டம், வரும்தகையோர் வந்தனர், வேதவியாசர் வந்தார், தருமன் போற்றினான் வருந்திய காரணம், காரணம் யாதோ? மன்னர்க்கு இயல்பே காண், எவரும் உள்ளாரோ? முதலான தலைப்புக்களில் அமைந்துள்ள செய்திகள்.

3. நிடதநாட்டின் சிறப்பினை விளக்குக.

விடை : நகரின் சிறப்பு, மாடங்களில் சிறப்பு, மக்களின் சிறப்பு, கல்லாருமிலர்! இல்லாருமிலர், நளனின் செங்கோற்சிறப்பு முதலான தலைப்புகளில் உள்ள செய்திகள்.

4. நளனைக் கண்ட அன்னப்பறவை கூறுவன யாவை?

விடை : அன்னம் தோன்றிற்று, பிடித்து வந்தனர், வருத்தமும் கலக்கமும், அஞ்சாதே அன்னமே, தடுமாற்றம் தீர்ந்தது, பொருத்தம் தமயந்தியே, பெண்மை அரசு, நூபுரங்கள் புலம்பும், இடை நுடங்கும், மலர்வாளி தீட்டும் இடம் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகள்.

5. அன்னப்பறவையிடம் தமயந்தி குறித்து நளன் வினவியது யாது?

விடை: யாவர் மகளோ?, விதர்ப்பன் பூங்கொடி, வாயுடையது என் வாழ்வு எனவரும் தலைப்புகளில் உள்ள செய்திகள்.

## 13.4. பயிற்சி வினா :

1. நளவெண்பாவில் அமைந்துள்ள இலக்கிய நயத்தைப் புலப்படுத்துக.

## 13.5. பொருளறிக :

நிலவயம் - நிலமண்டிலம் ; கோலம் - பன்றி; கலாபம் - தோகைஉரவு – வலிமை; பீடு – பெருமை; வாங்குதல் - வளைதல் பெரியபுனல் - பூந்தேன்.

## 13.6. மேலும் படித்தறிக.

1. நளவெண்பா – புலியூர்க்கேசிகன் தெளிவுரை பாரிநிலையம் சென்னை.

# கூறு 14: வளையாபதி

## 14.1. வளையாபதி கதைச்சுருக்கம்

கடல் வணிகத்தில் சிறந்து விளங்கிய புகார் நகரில் வாழ்ந்தவன் நாராயணன் என்னும் வணிகன். இவன் மிகப்பெரும் வைர வியாபாரியாகத் திகழ்ந்தான். செல்வச் செழிப்பில் சிறந்தோங்கியிருந்த இவன் ஒன்பது கோடிப் பொன்னுக்கு உரிய பெரிய செல்வந்தனாக இருந்ததால் இவனை மக்கள் 'நவகோடி நாராயணன்' என்றழைத்தனர்.

இவனுக்கு வணிக குலத்துப் பெண் ஒருத்தி மனைவியாக இருந்தும் வேற்றுச் சாதிப் பெண் ஒருத்தியை இவன் விரும்பி மணந்து கொண்டான். இதனை ஊரார் ஏற்காததால், இரண்டாம் மனைவியை நாராயணன் விலக்கி வைத்தான். அப்போது அவள் கருவுற்றிருந்தாள். என்றாலும் ஊர் கட்டுப்பாட்டை நாராயணனால் மீற இயலவில்லை.

விலக்கி வைக்கப்பட்ட இரண்டாம் மனைவி நகருக்கு வெளியே உள்ள காளி கோயில் ஒன்றின் அருகில் இருந்து கொண்டு, தன்னைக் கைவிட்ட கணவன் மீண்டும் தன்னோடு சேர்ந்து வாழ வரவேண்டும் என்று தினம் காளியை வேண்டித் தொழுதபடி இருந்தாள்.

அவளுக்கு ஓர் ஆண் மகன் பிறந்தான். பிறந்த குழந்தை வளர்ந்து பெரியவனாகித் தாயிடம் தன் தந்தையைப் பற்றிக் கேட்க, தாயும் மகனுக்காக மனம் வருந்தி அவனுக்கு அவன் தந்தை யார் என்பதையும், தான் ஏன் தனித்திருக்க நேர்ந்தது என்பதையும் விளக்கிச் சொன்னாள்.

சிறுவன் தந்தையைத் தேடிச் சென்று தன் வரலாறு கூறித் தன்னை மகனாக ஏற்றுக்கொள்ள மன்றாடினான். நாராயணன் மனம் இளகவில்லை. ஊர்க்கட்டுப்பாடு அவன் முன் நின்று அச்சுறுத்தியது.

மனம் சோர்ந்து வந்த மகனைத் தாய் தேற்றி, காளி மாதாவை பணிந்து வரச் செய்தாள்.

காளியின் அருளால் சிறுவன் செல்வந்தன் ஆனான்; ஊரார் போற்றும் வணிகன் ஆனான். இந்நிலையில் நவகோடி நாராயணன், மகனையும் மனைவியையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு இரு மனைவி மகனோடு இன்புற்று வாழ்ந்தான் என்பது வளையாபதி நூலின் கதையாகச் சொல்லப்பட்டாலும், வளையாபதி பாடல்கள் 72-ல் ஒன்றிலேனும் இதற்கான குறிப்பு இல்லை.

நவகோடி நாராயணன் மனைவி காளி தேவியை வணங்கினாள் என்று கூறப்பட்டாலும், வளையாபதியின் கடவுள் வாழ்த்து சமண சமயம் சார்ந்ததாக உள்ளது. பாடல்கள் எல்லாமும், கொல்லாமை, வாழ்க்கை நிலையாமை பற்றி ஞானங்களைப் போதிப்பனவாகவே உள்ளன.

வளையாபதி நூல் முழுதும் கிடைக்கவில்லை. கிடைத்துள்ளவை 72 பாடல்கள்தான். இதன் ஆசிரியர் யார், அவர் வாழ்ந்த காலம் எது என்பதும்

உறுதியாகத் தெரியவில்லை. வளையாபதி ஆசிரியர் காலம் ஏழாம் நூற்றாண்டு என்று சிலரும் ஒன்பதாம் நூற்றாண்டு என்று சிலரும் கூறுவர். ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றப்படுவது வளையாபதி.



## 14.2. வளையாபதி – பாடல் விளக்கம் :

### 14.2.1. அருகன் அடிபோற்றி

வளையாபதி காப்பியத்தின் கடவுள் வணக்கப் பாடலாக அமைந்த இதில், மூவுலகும் ஓர் உணர்வாய் ஒரு நினைவாய்க் கூடி நின்று போற்றப்படுபவன் அருகதேவன் என்கிறார் கவி. ஒளி வீசும் நெற்றித் திலகம் போன்றவன் உலகுக்கு அருகக்கடவுள் என்பதை மாண்திலகம் என்று குறித்தார். மாண்-உயர்ந்த-திலகம் பொட்டு. இப்படிப்பட்ட இறைவனை குற்றமற்ற (வழு-குற்றம். இல்-இல்லாத) மனத்தொடு தொழுவேன். உள்ள உறுதியோடு (வாலிதின் உறுதியுடன்) தொழுவேன். தொடரும் வினைத்துன்பங்கள் என்னை அணுகாது நீங்க அருள்வாய் அருகதேவா என்பது விண்ணப்பம். வினை பிறவிதோறும் தொடர்ந்து வரும் என்பதால் தொல்வினை எனப்பட்டது.

### 14.2.2. அருளாளன் அடிவணங்கி ஆரம்பம் செய்கின்றேன்

அருகக் கடவுளைப் போற்றித் துதித்த கவி, அடுத்து குரு வணக்கம் கூறுவதாக அமைந்த பாடல் இது. உயிர்க்கு உற்ற துன்பங்களைப் போக்கவல்ல, அருட்பார்வை கொண்டவர்கள், பற்றெல்லாம் விட்ட பரமஞான குருவாக விளங்கும், துறவறத்தார்கள் கூட்டத்தை, ஈடுபாட்டுடன், சிந்தையும் செய்யும் செயலும் ஒன்றாகி மனம் குவிய, உலகியல் வழக்குக்கு ஏற்பத் தொழுது பணிந்து, யாழ் மீட்டி இசையெழக், கூறவந்த கதை சொல்லத் தொடங்குகிறேன்.

### 14.2.3.நெஞ்சுக்கு நீதி

நீல நிறத்தனவாய்-கருநீல நிறமுடையதாய், நெய்ட கனிந்து-வாச நறுமண எண்ணெய் நிறையப் (கனிந்து) பூசப்பட்டு, பேதவிழ்ந்து-மலர்த்து மணம் வீசும் நறுமண மலர்கள் சூட்டப்பட்டு, கோலம் குயின்ற- அழகுடன் பின்னிமுடிக்கப்பட்ட கொண்டையும்-கூந்தலும், காலக் கனல் எரியில் வேம்-முடிவு காலத்தில் சுடுகாட்டு நெருப்பில் வேந்தழிந்து சாம்பலாகிப் போய்விடும். இப்படி முடிவு காலத்தில் வெந்தொழிந்து போவது, ஆகும் இளமையும், அழகிய கூந்தலும், அது உடைய உடம்பும் என்பதை எல்லாம் கண்டறிந்த பின்னரும் நெஞ்சமே! இந்த அழகும் இளமையும் உடலும் நிசம்-நித்தியம் அழிவற்றது என்றெண்ணி, நீ மயங்கலாமா?, மயங்காதே! நிலையாததை எண்ணி மயங்கிக் கிடக்காமல், நிலையானதை எண்ணி நெஞ்சமே நீ வாழ்ந்து மகிழ்வாயாக.

### 14.2.4.அரச வாழ்வு அநித்தியமே

வித்தகர் என்பதற்கு கைத்திறன் மிக்கவர் என்பது பொருள். பொன் வேலை செய்வதில் புகழ் பெற்றவர்கள் வடிவமைத்து, அழகுடன் விளங்கும் மணிமுடியைத் தலையில் அணிந்து கொண்டிருக்கும். மாமன்னர்கள் எல்லாம் கூட, தங்கள் வலிமையும் பெருமையும் அழிய மாண்டு மடிந்து போவதை மனமே நீ ஆய்ந்துணர்ந்து பார்ப்பாயாக. மாமன்னர்கள் வாழ்வே இப்படிப் போவதைக் கண்டும், நீ அதில் மயங்கிக் கிடக்கலாமா? கூடாது. எனவே இந்த பொய் மாய வாழ்வை நிசம் என்று நம்பி, அதிலேயே மயக்கம் கொண்டுழலாமல் மேலான அறவழியில் செல்ல மனத்தைப் பழக்குவாயாக. உத்தம –அறவழிச் செல்ல நீ உறுதி கொண்டு விட்டால், முத்தி இன்பச்சித்தி பெறுதல் நிச்சயம் என்பதை மனமே தெளிந்து தேர்வாயாக.

### 14.2.5. மானிடப்பிறவி மத்தானது

பிறவிகள் தோறும் உயிர்கள் மேற்கொள்ளும் செயல்களாலே அதன் பயனான நன்மை தீமைகளுக்கு ஏற்பப் பற்பல வடிவில், பல்வேறு பிறவிகளை உயிர்கள் பெறுகின்றன. “எததனையோ பிறவி இழைத்திடும் தீமையலாம்” என்கிறார் பட்டினத்தார். பிறவிகள் அளவிட முடியாதன என்பதை அருணகிரியாரும், “எழுகடல் மணலை அளவிடல் அரிது எனதிடர்ப் பிறவி” என்றும், “எழுபிறவி நீர்நிலத்தில் இருவினைகள் வேர்பிடிது” என்றும் பாடினார். இப்படி உயிர்கள் அவை அவை செய்த நல்வினை, தீவினைக்கு ஏற்பப் பல்வேறு பிறவிகள் எடுத்துத் துன்புற்று வருந்தினாலும், உயிர்கள் மனித உடம்பெடுத்து அடைகின்ற மனிதப் பிறவி மிக மேலானது. அடைவதற்கு அரிதானது; இப்படிப்பட்ட அரிதான மனிதப் பிறவி அடையப் பெற்றாலும், பெற்ற மனிதப் பிறவியின் சிறப்பை உணர்ந்து, அதற்குச் சிறப்புச் சேர்க்கும் வண்ணம் அறவழி தவறாது புகழோடு வாழ்தலும், அதன் பயனான செல்வச் சிறப்பை அடைந்த னுபவித்தலும், அரிய ஒன்றேயாகும். எல்லார்க்கும் எளிதில் அடையக் கூடியதல்ல இச்டசிறப்”பு என்பது இதன் பொருள். “மனிதப் பிறவியும் வேண்டுவதே” என்பது அப்பர் வாக்கு, “இனியவை நுகர எய்தும் செல்வம்” என்று செல்வத்தின் பயன் துய்த்தல் என்பதைப் புறுநானூற்றில் நக்கீரர் போற்றுகிறார். பல்வேறு வகைப் பிறவி என்பதை எழுவகைப் பிறப்பு என்பார் தொல்காப்பியர். அவை நீரவாழ்வன, மரம் செடி, கொடி, ஊர்வன, பறப்பன, மிருகம், மனிதர், தேவர் என்பன என்றும் கூறுவர்.

### 14.2.6. உயர்குடிப் பிறப்பு உன்னதமானது

“உயர்குடி நனிஉள் தோன்றல்

ஊனமில் யாக்கை ஆதல்

மயர்வறு கல்வி கேள்வித்

தன்மையால் வல்லர் ஆதல்

பெரிதுணர் அறிவே ஆதல்

பேரறம் கோடல் என்றாங்கு

அரிதிவை பெறுக லோடே

பெற்றவர் மக்கள் என்பார்."

மக்கள் பிறவி மிக உயர்ந்தது என்று முன் பாடலில் சொன்ன கவி, அப்படி மக்களாய்ப் பிறந்தவர்கள் எல்லோருமே உயர்ந்தவர்களாகிவிட முடியாது. அந்த உயர்ந்த மனிதப் பிறவி எடுத்தவர்களிலும், பெருமைக்குரியவராகப் போற்றப்படுபவர்கள் யாரெல்லாம் என்பதை இப்பாடலில் பட்டியலிட்டுள்ளார்.

மனிதப் பிறவி எடுத்துவிட்டால் மட்டும் போதாது. அப்பிறப்பும் ஒழுக்கமும் நற்பண்புகளும் உடைய உயர் குடியில் பிறந்த பெருமை உடையதாக இருக்க வேண்டும். உயர்குடியில் பிறந்திருந்தாலும், அவ்வுடம்பு உடல் குறை இல்லாததாக இருக்க வேண்டும். உடல் குறை-ஊனம் இன்றிப் பிறந்தாலும், அறிவை மயங்கச் செய்யும் -நல்லது தீயது அறியாத, அறிய முடியாத அறிவு மயக்கத்தைப் போக்கி, மெய்யறிவு புகட்டும் படிப்பறிவும் பட்டறிவும் உடையவராய்ச் சிறந்து விளங்குவதும்; இதனால் மெய்யறிவாகிய ஞானம் பெற்றுத் திகழ்வதும் ஆகிய சிறப்புகளைப் பெற்றிருப்பதோடல்லாமல், அச்சிறப்பால், நல்லறச் சிந்தனையோடு நடந்தொழுகுவது, ஆகிய குண நலன்களைப் பெற்றவரே மக்கள் என மதிக்கத்தக்கவர் ஆவார்கள்.

### 14.2.7. பெண்ணின் பெருமை

"நாடும் ஊரும நனிழபுகழ்ந்து ஏத்தலும்

பீடுறும மழை பெய்க எனப் பெய்தலும்

கூடல் ஆற்றவர் நல்லது கூறுங்கால்

பாடு சால்மிகு பத்தினிக்கு ஆவதே"

நாடு பாராட்டி மகிழும் ஊர் மக்கள் எல்லாம் புகழ்ந்து பேசுவர், பெருமைக்குரிய கற்புடைய மகளிரை. கணவன் மனங்கோணாது நல்லறமாக இல்லறம் நடத்தும் இப்படிப்பட்ட வாழ்க்கைத் துணைநலங்களின் பெருமைகளைச் சொல்ல வேண்டுமானால், இவர்கள் பெய் என்று சொன்னால் மழையும் பெய்யும் பேராற்றலும், பெருமையும், கற்புடைப் பெண்களின் சிறப்பாகும். வள்ளுவப் பெருந்தகையும் இத்தகைய வாழ்க்கைத் துணைநலத்தை,

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக்கடை"

என்றார்.

"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்எனப் பெய்யும் மழை"

என்பதற்குப் பருவத்தில், அதாவது தேவைப்படும் காலத்தில் பெய்கின்ற மழை போல்வாள் என்று பொருள் கூறுவார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

**14.2.8. இப்படியும் சில பெண்கள்**

பள்ளம் -ஆழம், முதுநீர்-நிறையத் தண்ணீர் இருக்கும் ஆறு, குளம் போன்ற இடங்கள். தண்ணீரிலேயே வாழுகின்ற மீன்கள் ஆழமான நீர்நிலைகளிலே, (அதாவது தண்ணீர் குறையாமல் நிறைய இருந்தாலும்) இருந்தாலும், மழை பெய்யப் புதுவெள்ளம் வருமானால், அந்தப் புதவெள்ள நீரில் நீந்திக் களிக்கவே நினைக்கும். இதைப்போலவே, தேன் சிந்தும் வாசமலர் அணிந்த கூந்தலுடைய பெண்களில் சிலர் காமனைப் போன்ற அழகிய கணவனை மணாளனாகப் பெற்றிருந்தாலும், புதிதாய்க் காண நேருகிற பிற ஆடவனிடம் மனத்தைச் செல்லவிட்டு, அவன் நினைவில் உருகுவதும் உண்டும. இந்த உலகியல் உண்மையை மனமே நீ புரிந்துகொள்வாயாக.

**14.2.9. மனமே காவல் மகளிர்க்கு**

"உண்டியுள்ள காப்புண்டு உறுபொருள் காப்புண்டு

கண்ட விழுப்பொருள் கல்விக்குக்ட காப்புண்டு

பெண்டிரைக் காப்பது இலம்என்று ஞாலத்துக்

கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே."

உண்டி-உணவு. சமைத்த உணவு கெடாது பாதுகாத்து வைத்துக்கொள்ள வழியிருக்கிறது. தேடிப் பெற்ற செல்வத்தை (உறுபொருள்) பறிபோக விட்டுவிடாது பாதுகாப்புச் செய்து கொள்ளவும் வழியுண்டு. கற்றறிந்த மேலான கல்விச் செல்வம் அது மறந்து போகாமல் நினைவில் வைத்திருக்கவும் வழியுண்டு. ஆனால் பெண்டிர் கற்பு நிலை தவறாது பாதுகாத்திட வழியே இல்லை என்பதை, உலகில் கற்றறிந்த பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மனக்காப்பே-கட்டுப்பாடே மிகப்பெரிய காப்பு என்பதை வள்ளுவரும்.

"சிறைகாக்கும் காப்பு என்செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை"

என்றார்.



### 14.2.10. ஆடவர்க்கும் கற்பு நிலை

"எத்துணை ஆற்றுள் இடுமணல் நீர்த்துளி

புற்பனி உக்க மரத்து இலை நுண்மயிர்

அத்துணையும் பிறர் அம்சொலினார் மனம்

புக்கணம் என்று பொதி அறைப் பட்டார்."

ஓடிவரும் பேராற்றில் எத்துணை கிளை நதிகள் மலை அருவிகள் எவ்வளவு மணலை வாரிக் கொண்டு வந்து கொட்டியிருக்கும்? அந்தப் பேராற்று நீரில் எவ்வளவு நீர்த்துளிகள் இருக்கும்? ஆற்றங்கரைகளில் படர்ந்திருக்கும் புல்லின் மீது படிந்த பனித்துளிகள் எவ்வளவு இருக்கும்? மரத்தின் இலைகள் எவ்வளவு இருக்கும்? உடம்பின் மேல் தோலில் எவ்வளவு மயிர்க்கால்கள் இருக்கும்? (இவை அளவிடமுடியாதன) அவ்வளவு எண்ணிக்கையிலான ஆடவர்களும் இன்மொழி பேசும் மாற்றான் மனைவியை விரும்பும் மனத்தினராய் உள்ளனர். இப்படிப் பிற பெண்கள் மனத்தில் இடம் கொண்டு விட்டோம் என்று மகிழ்வது இருட்டறையில் கிடந்து இடாப்படுவது போன்றதாகும். பிறர் பழிக்கும் இழிநிலைக்கு ஆளானவர்கள் அவர்கள்.

கற்புநிலை என்பது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் அது வேண்டும். பிறனில் விழையாமையே ஆடவர்க்கும் அழகு தரும் பேராண்மை என்பதை விளக்குகிறது இப்பாடல்.

### 14.2.11. தாமரை இலைத் தண்ணீர் கற்பிலாப் பெண்கள்

தனிப்பெயல் தண்துளி துளித்துளியாக மழை மேகம் வடிக்கின்ற குளிர்ந்த நீர்த்துளிகள் தாமலை இலைகளில் முத்து முத்தாய்ப் படிந்திருக்கும். அப்படிப் படிந்திருக்கின்ற நீர்த்துளிகள் நெடு நேரம் அப்படியே அந்த தாமரை இதழ்கள் மேல் படிந்தபடி இருப்பதில்லை. அவை அப்படியே சிறு காற்று வீசும் வரையே அங்கிருக்கும். அதுபோலக் கற்பு நெறி நிற்கத் தவறிய பெண்கள் ஒருவனுடன் கொண்ட உறவோடு நில்லார். பொருள் தந்து உறவுகொள்ள வரும் அடுத்தவனைக் கண்ட மாத்திரத்தில் இவனைக் கைவிட்டுவிட்டு விலகிவிடுவர். தாமரை இலைத் தண்ணீர் காற்றடிக்கும் வரையிலுமே இலையோடு ஒட்டிக் கொண்டிருந்து பிறகு விலகி விடுவதைப் போல.

### 14.2.12. மக்கள் செல்வம் மனைக்கு அலங்காரம்

"பொறை இலா அறிவு போகப்

புணர்விலா இளமை மேவத்

துறைஇலா வனச வாவி

துகில் இலாக் கோலத் தூய்மை

நறை இலாப் மாலை கல்வி

நலம் இலாப் புலமை நன்னீர்ச்

சிறை இலா நகரம் போலும்

சேய் இலாச் செல்வம் அன்றே."

சேய் இலாச் செல்வம் பிள்ளைச் செல்வத்தைப் பெற்றிருக்காத ஒருவன் வாழ்வு பொறுமைக் குணம் இல்லாத அறிவு போலவும், இன்ப நுகர்ச்சி ஏற்ற படித்துறை இல்லாது இருக்கும் அழகிய தாமரைத் தடாகம் போலவும், ஆடை அணிமணி அலங்காரம் இல்லதா அழகு போலவும், வாச மணமில்லாத மலர் மாலை போலவும், நல்ல நீர்த் தேக்கம் இல்லாத நகரம் போலவும் அழகும் பயனுமற்றதாகும்.

அறிவுடைமைக்கு அழகு பொறை உடைமை, இளமைப்பயன், இன்ப நுகர்வு. நீராடப் படித்துறை தாமரைக் குளத்துக்குஅழகு. ஒப்பனைக்கு அழகு அணிமணி ஆடை அலங்காரம்; மாலைக்கு அழகு அதிலுள்ள மலர்களின் வாசம்; கல்விக்கு அழகு நல்ல அறிவாற்றல்; நகரத்துக்குப் பெருமை பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்தேக்கம் என்பது போல நல்ல குடும்பத்துக்கு அழகு நன்மக்கட் பேறு என்பதை விளக்கும் கவிக்கூற்று, புலவர் புலமைக்குச் சூட்டிய புகழாரம்.

"நீரில்ல நெற்றிபாழ் நெய்இல்ல உண்டி

பாழ்…ஆறிலலர் ஊருக்கு அழகு பாழ்"

என்று வரும் அவ்வை மூதாட்டியின் பாடலும் நினைவுகூரத்தக்கது.

**14.2.13. காக்கக் ….காக்க நா….. காக்க**

புலனடக்கம் மனிதர்க்கு பெருமைக்குரிய குணநலம். ஐம்புலனடக்கம் கைவரப் பெறாவிட்டாலும் நாவடக்கம் ஒன்றாவது கைக்கொள்ளப்படுமானால் அது உயிர்க்கு எவ்வளவோ நன்மைகளைத் தரும். நாவடங்கப் பெறவில்லை என்றால் அதனால் வரும் இன்னல்கள் என்னென்ன என்பதைப் பட்டியலிடுகிறது இப்பாடல்.

ஒருவனுக்கு உயர்ந்த செல்வச் செழிப்பைத் தருவதும், சிறைப்படுத்தப்பட்டுச் சிறுமைக்கு உள்ளாக்குவதும், பெருமை தருவதும், கொடிய நரகத்துள் அழுந்தித் துன்பப்பட வைப்பதும் நாவினால் அமையும். எனவே மெய்வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களிலும் நாக்கைக் காப்பது போல அதாவது தீய சொற்கள் பிறர்க்குத் தீங்கு விளைவிக்கும் சொற்களைப் பேசாது, நாவைக் காத்துக் கொள்வதைப் போன்று சிறந்த

செயல் இல்லை. தீயினால் சுட்ட புண்டைணவிட நாவினால் சொன்ன சொல் தருந்துன்பம் மிக வருத்தம் தருவது. எனவேதான் வள்ளுவப் பெருந்தகையும் "யாகாவராயினும் நாகாக்க" என்றார்.



### 14.2.14. மனைவியை மதித்தால் மாண்படைதல் நிச்சயம்

தாரம் மனைவி வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியிடம் அன்பு பாராட்டிப் போற்றி மகிழுங்கள். இதனால் ஊர் மக்களும் நாடும் கூட உங்களை மகிழ்ந்து கொண்டாடுதல் நிச்சயம். ஊரும் நாடும் மட்டுமல்ல, வீரமும் வெற்றிப் புகழும் திறமையும் மிக்க விண்ணுலகத்தவர்களும் கூட உங்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்துவர். எதிர் கொண்டு உங்களுக்கு முத்தியின்பம் அளிப்பர்.

### 14.2.15.பிறர் மனை விரும்பாமையே பேராண்மை

அடுத்தவர் மனைவியை விரும்புதலாகிய பெருந் தீவினைக்கு ஆளாகி வருத்தம் துன்ப நகரத்தில் கிடந்து உழலுவோர் எண்ணிக்கை எண்ணிலடங்காததாகும். எனவே பிறர் மனைவியை விரும்பிப் பெருந்துன்பத்துக்கு ஆளாகும் தீமைக்கு இடம் கொடாமல் என்ன பாடுபட்டேனும் அதைவிட்டு விலக முயலுங்கள்.

### 14.2.16.செய்யற்க இவற்றை

"பெய்யின்மின் புறம்கூறன்மின் யாரையும்
வையன்மின் வடிவு அல்லன சொல்லி நீர்
உய்யன்மின் உயிர் கொன்று உண்டு வாழுநாள்
செய்யன்மின் சிறியாரொடு தீயன்மின்.

பொய் பேசாதீர்கள்! புறம் கூறாதீர்கள்! எவரையும் வையாதீர்கள்! நல்லதல்லாதனதவற்றைக் கூறி நீங்கள் உயிர் வாழ நினைக்காதீர்கள். மற்ற உயிர்களைக் கொன்று தின்று பசியாற அதன் மூலம் உங்கள் வாழ்நாளைப் பெருக்கிக் கொள்ளும் பாவச் செயலைச் செய்யாதீர்கள். அற்பர்களுடன் சேர்ந்து நீங்களும் தீயவர்களாகித் தீயச் செயல்கள் செய்யாதீர்கள். சிலப்பதிகார காப்பியத்தின் தலைப்புச் செய்தியாக அமைந்த கருத்தும் இதுதான். அது

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிதோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊன்ஊண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்

தானம் செய்யுமின் தவம் பல தாங்குமின்
செய்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன் மின் பொருள் மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழைஉயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒளிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லல் மாஞாலத்து வாழ்நீர் ஈங்குஎன்"

மேலும், கொலை, களவு, காமம், கூடாது என்பதை,

"கள்ளமின் கள வாயின யாவையும்
கொள்ளன்மின் கொலை கூடிவரும் அறம்
எள்ளன்மின் இலர் கூடிவரும் அறம்
தள்ளன்மின் பிறர் பெண்ணொடு நண்ணன்மின்."

என்னும் பால் வலியுறுத்துகிறது.

திருடாதீர்கள் திருடிப் பிறர் கொண்டு தரும் பொருள்கள் எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். வேள்வி தானம் என்று எந்த உயிர் நோக்கத்துக்காகவும் புண்ணியம் என்று எண்ணிக்கூட உயிர்க் கொலை பலியிடுவது போன்ற செயல்களுக்கு உடன்பட நினையாதீர்கள். இல்லாதவர் வறியவர்கள் என்பதற்காக யாரையும் இகழ்ந்து பேசாதீர்கள் தாழ்த்தித் தள்ளிவிட நினைக்காதீர்கள். பிறன் மனைவியை அடைய நினையாதீர்கள்.

### 14.2.17. பசிப்பிணி போக்குதல் பாரில் மேலான அறம்

கைநிறைய உணவைச் (சோற்றை) வைத்துக் கொண்டு காத்திருப்பது. எதற்கு என்றால்.... குறைவில்லாத நிறைவை, பெரும் பயனைத் தருகின்ற தானங்கள் பல இருப்பினும் பசித்த வயிற்றுக்கு உணவு தந்து பசியாறச் செய்யும் அன்னதானத்துக்கு அவை நிச்சயமாக ஈடாக மாட்டா என்பதாலேயே ஆகும்.

### 14.2.18. எவ்வுயிர்க்கும் அன்பும் அருளும் செய்க :



"ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெல்லாம்

தூற்றுமின் அறம் தோம் நனி துன்னன்மின்

மாற்றுமின் கழி மாயமும் மானமும்

போற்றுமின் பொருளா இவைகொண்டு நீர்."

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துக இரக்கம் காட்டுக. நல்லறச் செயல்களையே நாளும் செய்யப் பழகுக. நல்லறச் செயல்களையே நபளும் செய்க. தீமையை விலக்குங்கள். எவர்க்கும் தீங்கிழைக்க எண்ணாதீர். பிறரை வஞ்சிக்காதீர்கள். சூழ்ச்சி செய்யாதீர்கள் தான் என்னும் அகந்தையை இறுமாப்பைத் தள்ளி வையுங்கள். மேலே சொல்லிய நற்செயல்களையே உயர் செல்வமாகப் போற்றி அவற்றையே வாழ்வில் கைக்கொண்டொழுகக் கற்றுக் கொள்ளுங்கள்.

பொருட் செல்வத்தையே ஒரு பொருட்டாகப் பெரிதாகக் கருதி அதைப் பாதுகாப்பதிலேயே குறியாக இல்லாமல், அன்பு செய்வதாகிய பிற உயிர்களிடம் இரக்கம் காட்டுவதாகிய அருட்குணமாகிய செல்வத்தைப் பெரிதாக எண்ணி நல்லன செய்தல் வேண்டும். இப்படி அருளாகிய செல்வத்தையே பெரிதாகக் கருதி நல்லறம் செய்தால் துன்பம் இல்லாத இன்பமே நிறைந்த விண்ணுலக வாழ்வு கிட்டும் என்பதை மனிதர்களே நீங்கள் ஏனோ எண்ணிப் பார்க்காமல் இருக்கின்றீர்கள்?

### 14.2.20. உயிர்க்கொலை தவிர்ப்பீர்

பொருளீட்டும் ஆசையால் உயிர்க்கொலை செய்து உண்பதற்காக ஊன் வணிகம் செய்பவனுக்குப் பாவச்சுமை மிகுதியாகவே உண்டு. நிறைய ஊன் விற்றால் நிறையப் பொருள் கிடைக்கும் என்பதால் நிறையவே உயிர்க்கொலை நிகழக் காரணமாவான். அதேபோல ஊன் உண்பவனும் அன்றாடம் தானுண்ண நிறைய இறைச்சி கிடைக்க வேண்டும் என்று விரும்புவான். இந்த வகையில் உயிர்க் கொலை மிகுதியாக அவனும் ஒரு காரணமாவதால் உயிர்க் கொலை செய்கிறவனைப் போன்றே இவனும் பாதகனாகி கொலைப் பாவத்துக்கு உள்ளாகிறான். ஊன் விற்பவனும் பாவி. ஊன் உண்பவனும் பாவியே.

பிறவிப் பெருங்கடலுள் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறந்தும் மாண்டும் மறுபடி பிறந்தும் கழிவதற்கான காரணத்தை ஆராய்ந்து அறியப்போனால் உயிர்க்கொலை என்கிற பாவத்துக்கு ஆளாகாதவர்கள் பாரில் யாருமில்லை என்றே சொல்ல வேண்டும்.

காப்பியங்கள்

குறிப்புகள்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் உயிர்க்கொலை புரிந்த குற்றத்துக்கு ஆளானவர்களே ஆவர். உயிர்கொலை பாவம் தீமை என்பதுணராது. ஊன் உணவை விரும்பி உண்போர் தம் சுற்றத்தாரையே உண்பவர் ஆவர்.

உயிர்க் குலத்துக்கே அன்பு செலுத்தி, அவற்றிற்குப் பாதுகாவலாக இருங்கள். இறைச்சி உணவை உண்ண விரும்பாதீர்கள். மற்றவர்கள் மீது கோபம் கொள்ளாதீர்கள். பிறரிடம் பகைமை பாராட்டுவதை வெறுத்து ஒதுக்குங்கள். இதனால் உங்கள் வாழ்வு தழைத்து வளம் பெருகி வருவதைக் காண்பீர்கள். குறையொன்றுமில்லாதது நீங்கள் வணங்கத்தக்க நிறைமதிபோலும் பூரணப் பொலிவுடன் திகழுவீர்கள்.

**14.2.21. பொருளோடு அருளும் பெற முயலுக**

பொருட் செல்வத்தோடு இனிய இல்லறம் துணைவியும் வாய்க்கப் பெற்று இன்புற்றிருந்தாலும் அன்புள்ளம் கொண்டு மேலான தவத்தையும் செய்யுங்கள் துன்ப இருள் இல்லாத பேரின்பப்பேறு இதனால் நீங்கள் அடையப் பெறுவீர்கள். மீண்டும் பிறவித் துன்பத்தில் பட்டு துயர்ப்படும் நிலையடைய மாட்டீர்கள். பொருள் வேட்கையா? அருள் வேட்கையா? எதை மேலாகக் கொள்வது என்று தடுமாற்றம் ஏற்படினும் அருள் வேட்கையே உயிர்க்கு ஊதியம் என்பதைத் தேர்ந்துணர்ந்து தெளிவடைவீர்கள்.

**14.2.22. தவத்திற்கு அடையாளம்**

தவம் செய்தலின் மேலான தன்மையை அருந்தவப் பயனை அடைதல் என்பது தவத்துக்கே தலைவனான அருகப் பெருமானுக்கல்லாது மற்றவர்க்கு இயலாததாகும். பொய்யை மெய்யென நம்பித் தடுமாறும் நிலைகடந்து மனத்தாலும் பேச்சாலும் செயலாலும் நன்நெறி நிற்றலும், விருப்பு வெறுப்பின்றி எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டிக் கருணை காட்டி அருள் செய்வதும் உலக வாழ்வில் வைத்த பற்றை விட்டொழித்தலும் ஆகிய நற்பண்புகளே உயர்ந்த தவத்துக்கு அடையாளம் என்பதை நீ உணர்வாயாக.

**14.2.23. காமத்தின் இயல்பு**

காமத்திற்குக் கண் இல்லை. அதாவது காம வயப்பட்டவர்களுக்கு அறிவு அவர் வசமிருக்காது. எதையும் எண்ணிப் பார்க்காது செயல்படும். எது நல்வழி எது தீயவழி என்று எண்ணிப் பார்க்காமல் மனம் போனபடி போகும். உள்ளத்துள்ளே இருந்தபடியே உடலை உருக்கும். நல்லவர்கள் கூறும் அறிவுரைகளைக் காது கொடுத்துக் கேட்காது வருந்தி உடல் மெலியும். தன்னை விரும்பாதவர்கள் மீதும் விருப்பம் கொண்டு தவிக்கும். இப்படிக் காமம் ஒருவரைத் துன்பத்தில் ஆழ்த்தி விடும்.

காம வேளாகிய மன்மதன் தான் ஏந்தியிருக்கும் கரும்பு வில்லை வளைத்து விடுகின்ற மலர் அம்புகள் மெய்ப்படுமாயின், அக்கணமே அம்

*Self Instructional Material*

மலரம்புகள் தைக்கப் பெற்றவர்கள் கற்றறிந்த பெரியோர்கள் வெறுப்புக்காளாவர். பெரியோர்கள் பழிக்கு ஆளான இவர்களைக் காம வசப்பட்டுக் கருத்தழிந்து நிற்பவர்களை மற்றவரும் வெறுப்பர். எனவே, சமூகத்தில் தனிமரமாய் நின்று தவிப்பர். நல்லாசிரியன் கூறும் அறிவுரைகளும் அவர்தம் காதில் ஏறாது. அதை அவர்கள் ஏற்க மாட்டார்கள். இவர்கள் பிறர்க்கு கொடுத்துதவும் பெருங்குணமும் இல்லாதவராயினும் அவை எல்லாம் பிறர் பழிக்கு ஆளாகக் குலப் பெருமையும் குன்ற நிற்பர். காம வயப்பட்டு கருத்தழிந்து நிற்பவர்கள். இத்தகைய சிறுமையெல்லாம் அடைய நேரும் என்பது கருத்து.

"மா என்று உரைத்து மடல் ஏறுப மன்று தோறும்

பூ என்று எருக்கின் இணர்சூடுப புன்மைகொண்ட

பேய் என்று எழுந்து பிறர் ஆர்ப்பவும் நிற்பர் காம

நோய் நன்கு எழுந்து நனி காழ்கொள்வது ஆயினோர்க்கே."

காம வயப்பட்டவர் புத்தி தடுமாறிப் புலனறிவு கெட்டு என்ன செய்வர். எப்படியெல்லாம் நடந்து கொள்வர் என்று சொல்ல முடியாது. குதிரை என்று பனை மட்டையினாலான மடல் மீதமர்ந்து கொண்டு காதலி இருக்கும் தெருவெல்லாம் திரிவர். பூ என்று சொல்லி எருக்கம் பூங்கொத்தை அணிந்து கொள்வர். இப்படி இவர்கள் அறிவு தடுமாறித் திரிவதைச் கண்டு 'பேய்' என்று இவரைப் பிறர் பழிக்கும் நிலைக்கு ஆளாவார். இவையெல்லாம் காமம் என்னும் நோய் பற்றி நன்கு முற்றிய நிலையிலுள்ளோர் அடையும் மாற்றங்களாம்.

இதே கருத்தமைந்த பாடல் ஒன்று குறுந்தொகையிலும் உண்டு. அது,

"மாஎன மடலும் ஊர்ப பூஎனக்

குவிமுகழ் எருக்கங் கண்ணியும் சூடுப

மறுகின் ஆர்க்கவும் படுப

பிறிதும் ஆகுப காமம் காழ்கொளினே."

என்பதாகும்.

காமுகர்களின் கருத்தழிந்த செயல்கண்டு சிறுவர்கள், சிறுமதியாளர்கள் கூட அவர்களை எள்ளி நகையாடி ஏளனம் செய்வர். இதற்காக இவர்கள் வெட்கப்படவும் மாட்டார்கள். காரணம் இவர்களே விழிப்பிலும் உறக்க நிலையிலே கிடப்பவராவர். நினைவிருந்தும் கனவுலகில் சஞ்சரிப்பது போலத் திரியும் இவர்கள் பசிக்கு உணவு உண்ணுவதையும் மறந்திருப்பர். தாங்களாகவே பேசிச் சிரித்து மகிழ்வர். அழுவர். பெண்கள்

மேல் கொண்ட மையலால் காம வசப்பட்டவர்கள் ஊரறியப் படும் துன்பம் இவையெல்லாம் ஆகும்.

**14.2.24. கற்பிலாப் பெண்கள்**



அரசர்களுடன் நட்புரிமை கொண்டு பழகுபவர்கள் பல நன்மைகளைப் பெருமைகளை முன்னேற்றத்தைப் பெறுவர். பாம்பைப் பிடித்துப் பழக்கி அதனோடு சேர்ந்து வாழ்பவர்கள்கூட பாம்பாட்டும் வித்தை காட்டி அன்றாட உணவுக்கான பொருளைச் சேர்த்துக் கொண்டு வாழ்தல் கூடும். ஆனால் அழகிய வளையல்களையும் அணிமணி ஆபரணங்களும் அணிந்த கற்பில்லாப் பெண்களுடன் கொண்ட தொடர்பு, நட்பு எப்போதும் தீமையே தரும் என்பதாலேயே பெரியோர்கள் முன்னமேயே அவர்கள் தொடர்பை விலக்கி வைத்துள்ளனர்.

**14.2.25.களவும் பொய்யும் தீதே :**

பொய், கொலை, களவு, கள், காமம் இவை ஐந்தும் மிகப்பெரிய தீமைகள் இவற்றில் மனம் பற்றாதிருப்பதே மாண்புடை வாழ்க்கை என்பது ஆன்றோர் வாக்கு. அறநூலோர் கொள்கை. இங்கே வளையாபதி ஆசிரியரும் களவு திருட்டால் வரும் தீமைகளைப் பட்டியலிடுகிறார். திருட்டுக் குற்றம் புரிவோன் பெருமை இழந்து பலர் கூறும் பழிச் சொல்லுக்கு ஆளாவான். பிறர் வீடுகளில் திருடியவனைக் காவலர்கள் பிடித்துக் கைகளிலும் அவன் ஓடிவிடாதபடி கால்களிலும் விலங்குகளைப் பூட்டி அடித்துத் துன்புறுத்தும் தண்டனைக்கு உள்ளாவான். திருடர்கள் திருட்டால் பெறும் பயன் இத்தகைய துன்பந்தான். களவைப் போலப் பொய்பேசுவதும் தீமையே ஆகும்.

“பொய்யின் நீங்குமின் பொய்யின்மை பூண்டு கொண்டு

ஐயம் இன்றி அறநெறி ஆற்றுமின்

வைகல் வேதனை வந்துஉறல் ஒன்று இன்றிக்

கௌவைஇல் உலகு எய்துதல் கண்டதே.”

காமம், கள் இரண்டையும் தீது என விலக்கச் சொன்ன கவி இப்பாடலில் பொய் பேசாதிருக்கப் போதிக்கிறார்.

‘பொய் பேசாமை’ என்னும் உயர்ந்த கொள்கையையே பூணத்தக்க அழகிய ஆபரணமாக அணிந்து கொண்டு தடுமாற்றம் இன்றி மேலான அறவழிச் சென்று கடமையைச் செய்வீர்களாக இப்படி வாழ்வதால் என்ன பயன் என்று கேட்டால், பொய் பேசாது வாய்மை வழி வாழ்வது இவ்வுலகில் வாழுநாள் மட்டும் துன்பம் ஏதுமில்லாது வாழஉதவுவதோடு பின்னர் துன்பம் இல்லாப் பேரின்பப் பெருவாழ்வு தரும் வானுலகப் பயன் கிட்டவும் உதவும் என்பது முன்னோர் கண்டு மொழிந்த உண்மையாகும்.



“கல்வி இன்மையும் கைப்பொருள் போகலும்

நல்இல் செயல்களால் நலிவு உண்மையும்

பொய்யில் பொய்யோடு கூடுதற்கு ஆகுதல்

ஐயம் இல்லை அது கடிந்து ஓம்புமின்."



பொய் பேசுவதால் கற்ற கல்வியின் பெருமை குன்றும், நல்லறிவு கெடும். தேடி வைத்த செல்வம் பாழாகும். பொய் பேசுபவன் செயல்களும் பொய்த்தன்மை கொண்டவையாய்ப் போவதால் பெருந்துன்பம் அடையவும் நேரும். மேலும் மேலும் பொய்யையே பேசுவோர் வாழ்வு இப்படியெல்லாம் துன்பம் அடைய நேரும் என்பது உண்மை. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவே பொய் பேசுவதிலிருந்து பாதுகாத்துக் கொண்டு நல்வழிச் செல்ல மெய் பேசுக.

**14.2.26. கொல்லாமை கோடி நன்மை**

உலகுடன் விளங்க உலகத்தவர்கள் எல்லாம் போற்றிப் பாராட்டும்படியான உயர்ந்த பெருமைமிகு புகழ் அடைந்திருக்க வேண்டும் என நினைத்தாலும் விலங்கு, நரகர், மனிதர், தேவர் என்று உள்ள நான்கு நிலைகளிலும் பிறந்து உழன்று தடுமாறி அளவில்லாத் துன்பத்துக்கு ஆளாகித் தவிக்காமல் இருக்க விரும்பினாலும் உயிர்களை வருத்தி நடுங்கச் செய்யும் கல்வி கேள்விகளில் சிறந்த கற்றுணர்ந்த பெரியோர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

**14.2.27. செல்வம் நிலையல்ல**

"வெள்ளம் மறவி விரல்வேந்தர் தீத்தாயம்

கள்வர் என்று இவ்வாறிற் கைகரப்பத் தீர்ந்தகலும்

உள்ளில் ஒரு பொருளை ஒட்டாது ஒழிந்தவர்

எள்ளும் பெருந்துயர் நோய் எவ்வம் இகப்பகவோ."

வெள்ள நீர்ப்பெருக்கு, மறதி, வலிமை, மிக்க வேந்தன் கட்டளை, தீ, சுற்றத்தார், திருடர்கள் என்னும் இந்த ஆறு வழிகளிலும் கைக்கொள்ளப்பட்டு சேர்த்து வைத்த செல்வம்தீர்ந்து போகும். எனவே நிலையில்லா இச்செல்வத்தை ஒரு பொருட்டாக எண்ணாது விட்டொழித்தவர்கள், துறந்தவர்கள் இழிந்த பிறவித்துயர் என்னும் பெருந்துன்பத்திலிருந்து விடுபட்டவர்களாவர்.

செல்வப் பொருளைச் சேர்ப்பதிலேயே குறியாக இருப்பவர்கள் அச் செல்வத்தைப் பிறர்க்கு உதவும் நல்லறச் செயல்களைச் செய்யாமல் அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றெண்ணிச் செல்வத்தைத் தேடுவதிலேயே கருத்தாயிருப்பர். இப்படிப்பட்டவர்கள் ஆசையோடு தேடிச்

தேடிச் சேர்ந்த அச்செல்வம் அவர்கள் பாடுபட்டுச் சேர்த்த பொருட்செல்வத்தின் பயனை நுகராது வீணே இழந்து விட்டோமே என்று வருந்தியமும் பெருந்துன்ப நோய்க்கும் ஆளாகி அவதிப்படுவர்.



இன்மை இல்லாமை வறுமை மிகவும் இழிவானது, கேவலமானது. அதே நேரம் பெருஞ்செல்வம் உடையவராக இருப்பதும் உயிர்க்கும் அச்சம் தருவதாக உள்ளது. அதாவது கள்வர் பகைவர் செல்வத்தைக் கவர்ந்துகொள்ள உடைமையாளர்களைக் கொலையும் செய்யக்கூடும். எனவே செல்வத்தின் பெருமை குறைவாகவும் அதன்மேல் கொண்டுள்ள பற்று மிகப் பெரிதாகவும் உள்ளது. இப்படிப்பட்ட அற்புதமான சிறப்பில்லாத செல்வத்தின் மீது பற்றுக் கொள்ளாது அதை விட்டு விலகி நிற்கும் துறவு வாழ்வு மிகச் சிறப்புடையதாகும். பொருள் மீது பற்றிருப்பதே பயனுடைய வாழ்க்கையாகும்.

ஈண்டல் என்பதற்கு ஈட்டுதல் அல்லது தேடிப் பெறுதல் என்பது பொருள் செல்வத்தைத் தேடிச் சேர்த்துக் கொள்ளுதல் என்பது எளிதானதாக இல்லை. ஆனால் அரிதாக முயன்று சேர்த்து வைத்த செல்வம் மிக எளிதில் கைவிட்டுப் போய் விடுகிறது. சேர்த்து வைத்த செல்வம் நிலையாக ஓரிடத்தில் இருப்பதில்லை. ஆனால் அதனால் விளையும் அச்சம் பலவகைப் பட்டதாக இருக்கிறது. அதனைக் காப்பாற்றிக் கொள்வதில் பல இடர்பாடுகள் நேருகின்றன. அப்படிப்பட்ட நிலையில்லாத இயல்பான தனிச்சிறப்பும் பெருமையும் இல்லாத ஆனாலும் அரிதாக உள்ள பொருட் செல்வத்தை வேண்டாம் என்று விலக்கிவிடும் பெரியவர்கள் ஆற்றல் மனவலிமை சிறந்தது; போற்றுதற்கு உரியதே.

பொருள் இல்லாது போனால் உலகில் வாழ்க்கையும் இல்லைதான். இந்த பொருட்செல்வம் மிகுதியாக இருந்துவிட்டால் அதைத் தீயவர்கள் வந்து திருடிக் கொண்டு போய்விடுவார்கள்; தடுத்தால் உடைமைக்கு உரியவரைக் கொல்லவும் துணிவார்கள். உயிர் தப்பினால் இழந்த

பொருளை எண்ணி வருந்தி உரியவர் உயிர் விடுவர். பொருளில்லா நிலையில் இப்பிறப்பில் உலக வாழ்வு வறுமையால் வெறுமையாவதோடு பொருளில்லாததால் புண்ணிய அறச் செயல்கள் செய்ய முடியாதும் போவதால் மறுமையிலும் அது நன்மை பயப்பதில்லை விரும்பும்போது அது வந்து சேருவதும் இல்லை. இப்படிப்பட்ட பொருள்மீது பற்று வைத்து அதைச் சேர்த்து வைத்துக் கொண்டு வாழ்வதிலும் அதை விலக்கி விடுதலே நல்லறமாகும்.

**14.2.28. இளமை நிலையானது முதுமை ஒழியாது**

வேல்கண் மடவார் வேல் போலும் நீண்ட கூரிய கண்களை உடைய பெண்கள் இன்ப நுகர்வை விரும்புதல் ஒழிந்தாலும் அவர்களோடு இன்புறும் வேட்கையை விட விரும்பாத ஆடவர்கள் வயது முதிர்ந்து முதுமை அடைந்த நிலையில் இரு காலும் கண்ணும் கொண்டு செல்வழி அறிய இயலாது. மூன்றாவதாக ஒரு கோலைக் கைத்துணையாகக் கொண்டு

நடக்க வேண்டியுள்ள நிலையில் வயதும் நாற்பதைக் கடந்து விடும்போது உயிரைக் கவர்ந்து செல்ல எமன் அருகில் வந்துவிட்டான் என்பதை உணர்த்துவது போல நரை முடியும் தோன்றி விடும் எனவே இளமையும் அழகும் நிலையல்ல; நீர்மேல் குமிழி போன்றது என்பதை உணர்ந்து பெண்ணாசையை விட்டொழித்துப் பற்றற்று இருக்கப் பழகிக் கொள்வதே மேற்கொள்ள வேண்டிய நல்வழியாகும்.

இளமைப் பருவம் எப்போதும் நிலைத்திருக்கக் கூடியதல்ல. இளமை கழிந்து முதுமை வந்தடைதல் உறுதி. அதேபோல் இந்த இளமைப் பருவத்தில் துய்க்கின்ற இன்பங்களும் சேர்த்து வைத்த செல்வ வளங்களும் கூட நிலையானவை அல்ல. இவை பெருந்துன்பமே இன்பமான உயிர் வாழ்வுக்கு இவையே உற்ற துணையென்று நினைத்து இவற்றையே பற்றி இருக்காமல் வாழ்நாள் பயனுடையதாக மறுமையிலும் அது மாண்புடையதாக அமைய இப்பிறவியிலேயே நல்லறங்களைச் செய்து மறுமைக்கும் பயன்தரும் வித்தாகவும் விளைநிலமாகவும் இவ்வுலகில் வாழும் உங்கள் சிந்தனையும் செயலும் அமைவதாக உழவர் பெருமக்கள் உழுது விதைத்து அறுவடை செய்த தானியங்களை முழுவதுமாகப் பயன்படுத்தி விடாது. மறு உழவுக்கு விதைக்க என்று தானிய மணிகளை விதைகளைத் தனியே எடுத்து வைப்பது போல, இவ்வுலகில் வாழும் போக மறுமை இன்பம் கிட்ட பற்றிருக்கப் பழகிக் கொள்வதன் மூலம் மறுமை இன்ப விளைச்சலுக்கு விதையாகுங்கள், என்னும் உயர் கருத்து கவி உவமையின் உச்சம்.

**14.2.29. வினைப்பிறவிச் சுமை உடம்பு**

பிறவித் துன்பத்தை அறுத்துக் பொண்டு அதை விட்டு விலகிவிட நினைப்பவர்களுக்கு இந்த உடம்பே ஒரு சுமையாகத் தோன்றும். எப்போது அந்தச் சுமை இறங்கும் என்று மனம் கவலைப்படும். எனவே துன்பப்பிறவி தொடர்வதற்குக் காரணமான ஆசையைப் பொருள்கள் மேல் வைத்த பற்றை விட்டுவிடுதலே மேலான வாழ்வாகும். தன் உடம்பையே சுமை என்று கருதுபவன் மற்ற பொருள்கள் மேல் பற்று வைப்பது எதற்காக? என்பது கேள்வி.

இதே கருத்தமைந்த திருக்குறள்

"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்

உற்றார்க்கு உடம்பும் மிகை."

என்பதாகும்.

இரத்தக் கறை படிந்த ஆடையில் உள்ள இரத்தக் கறையைப் போக்க அதை இரத்தத்திலேயே தோய்த்துக் கசக்கிக் கழுவுவதை என்னவென்று சொல்வது? அதைப் போன்ற அறிவற்ற செயல்தான் ஒன்றின்

மேல் வைக்கிற பற்றாகிய பாவம் மீண்டும் மீண்டும் பிறந்திறக்கின்ற பாவத்திற்கே காரணமாகிப் பிறவித் துயரைப் பெருக்கும்.

பிறர்க்கு ஒன்றைக் கொடுத்து உதவி வாழவில்லை. பற்றுடன் புலனடங்கி இருக்கவும் பழகியதில்லை. காட்டிலே காண்பாரின்றி வீணாகத் தன் கதிர்களைப் பொழிகின்ற நிலவைப் போல, நம் வாழ்வு (பிறந்த பயன் அறியாது) வீணாகிப் போனது. வாச நறுநெய் பூசப்பட்ட கூந்தலை உடையவளே! இனி நாம் பிறவிப் பலனடைதல் கூடுமா? விருப்பு வெறுப்பைத் தான் என்னும் தன்மதிப்பையும் விட்ட தவ வாழ்வு மேற்கொண்டொழுகிய மேலோர்கள் (இப்படிப்பட்ட வாழ்வு வீண் என்று) சொன்னது பொய்யல்லவே! (உண்மை என்பது இப்போது புரிகிறது என்பது குறிப்பு).

தனக்கு மேலான வாழ்க்கை நிலைமை வாய்த்து விட்டால் எண்ணி பெருமகிழ்ச்சி அடைவதைத் தவிருங்கள். மேன்மை தந்த மகிழ்வைப் போலவே அச்சம் தரும் துன்பமும் வரும். இப்படி இன்பம் துன்பம் இரண்டையும் அடையச் செய்யும் ஆற்றலாளன் ஒருவன் உளன் என்பதை உணர்ந்து விருப்பு வெறுப்பற்று வாழ்வீர்களாக.

நிலத்தில் நன்றாக ஆழ அகல ஏர் ஓட்டி உழுதுவிட்டு பிறகு அந்த நிலத்தில் விதை விதைக்காமலே விளைச்சலை எதிர்பார்ப்பது எப்படிப்பட்ட செயல் என்றால், பற்றற்ற மேலான அற ஒழுக்கத்தை மேற்கொள்ளாமல் பொன் பொருள் போகமென்னும் இன்ப வாழ்வு பெற ஆசைப்பட்டு அவற்றை அடையப்பெறாது வருந்தி இளைத்துத் துன்பத்தில் உழன்று துயர்ப்படுவது போன்றதாகும். விளைச்சல் காண விதைக்க வேண்டும். இன்ப நலன்கள் பெற அறவாழ்வு மேற்கொள்ள வேண்டும் என்பது குறிப்பாகும்.

### 14.2.30. செல்வம் எல்லாம் தரும்

“குலம் தரும் கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த கிளைகள் அழிபசி தீர்க்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருள் தரப் புன்கண்மை உண்டோ?”

பொருட்செல்வம் நிலையற்றது. அதை ஒரு பொருட்டாக போற்றிக் கொண்டாடக் கூடாது என்று இதற்கு முந்தைய பாடல்களில் சொன்ன கவி இப்பாடலில் பணம் மனிதர்க்கு எந்தெந்த வகையில் எல்லாம் பயன்தரு பொருளாக உள்ளது என்பதைப் பட்டியல் இட்டுள்ளார்.

பொருளுடையவன் அவனுடைய குலத்தவரால் போற்றிக் கொண்டாடப்படுவான். இதனால் அவன் இருக்கும் குலம் பெருமைப்படும். அவனுக்கும் ஒரு சமூக அங்கீகாரம் செல்வத்தால் வந்து சேரும். இதைத்தான் குலம் தரும் என்றார். பொருட்செல்வம் அவன் அடைய விரும்பும் கல்விச் செல்வத்தை அவன் பெறவும் உதவும் வறுமையால்

வாடித் துன்பப்படும் அவனுடைய சுற்றத்தார்களின் பசித்துயரைப் போக்கும். நிலம் வெடித்துப் பாளம் பாளமாகக் கிடக்கும்படி வெப்பம் மிகுந்திருக்கும் பாலைவனத்தையும் கடந்து சென்று உதவும் வலிமை, செல்வததிற்கு உண்டு. இப்படிப் பல வகையிலும் உதவும் செல்வத்தைப் பெற்றிருந்தால் வாழ்வில் துன்பம் இருக்குமா? இருக்காது என்பதே குறிப்பு.



இதே கருத்தமைந்த,

"வென்றி ஆக்கலும் மேதக ஆக்கலும்
அன்றியும் கல்வியொடு அழகு ஆக்கலும்
குன்றினார்ளைக் குன்று என ஆக்கலும்
பொன் துஞ்வு ஆகத்தினாய் பொருள் செய்யுமே."

என்னும் சீவகசிந்தாமணிப் பாடலும்நினைவு கூரத்தக்கது.

செல்வச் செழிப்போடு இருந்த ஒருவன் செல்வத்தை இழந்து வறுமையுற்றுத் தவிக்கின்றோம் ஒருவேளை உணவுக்கு அலையும் நிலையில் இருக்கிறோம் என்று அவனைச் சார்ந்தவர்களிடம் சென்று அவன் தன்நிலையை எடுத்துக் கூறுவானாயின் அவனுடைய நண்பர்களும் சுற்றத்தார்களும் கூட அவனுக்கு உதவ நினைக்காது விலகிப் போய் எட்ட நின்று கொண்டு அவனுடைய செல்வம் கெட்டதுக்குக் காரணம் என்று பல பொய்களைச் சொல்லி விலகுவர்.

இதைத் திருவள்ளுவரும் "இல்லாரை எல்லோரும் எள்ளுவர்" என்றார்.

"பெண்டிர் மதியார் பெருங்கிளை தான்அது
கொண்ட விரகர் குறிப்பினின் அ∴குப
வெண்டறை நின்று வெறுக்கை இலராயின்
மண்டினர் போவர் தம் மக்களும் ஒட்டார்."

செல்வம் இல்லாதவனை அவன் மனைவியும் மதிக்க மாட்டாள். நெருங்கிய பெரிய சுற்றத்தார்கள். உறவினர்கள். நிலையும் அதுதான். அதாவது, அவர்களும் அவனை மதியார். நண்பர்களும் நாளடைவில் குறைந்து போவர் (செல்வ வளம் குறையக் குறைய) கையில் காசில்லாது போனால் அவனோடு அதுவரை நெருங்கி இருந்தவர்கள் எல்லாம் அவனை விட்டுப் போய்விடுவர். அவனுடைய பிள்ளைகளும் கூட அவனோடு நெருங்கியிருக்க நினைக்காது விலகுவர்.

இதே கருத்தமைந்த அவ்வை மூதாட்டியின் 'நல்வழிப் பாடல் ஒன்றுண்டு.அது:

"கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்

எல்லாரும் சென்று எதிர்கொள்வர் - இல்லானை

இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்

சொல்லாது அவன் வாயில் சொல்," என்பதாகும்.

செல்வம் இல்லாதவர் சொல்லுகிறவற்றை எவரும் பாராட்டிப் பேச மாட்டார்கள். அவர்கள் செய்யும் நல்ல செயல்களையும் கூட யாரும் போற்றிப் புகழ மாட்டார்கள். அவர்களின் கல்வி அறிவும் கூட மதிக்கப்படாமல் போகும். இப்படிக் கையில் காசில்லாதவர்கள் எவராலும் மதிக்கப்படாது அற்பமாய் ஒதுக்கப்பட்டுச் சிறுமை அடைவது பொய்யல்ல. உண்மைதான் என்பதை மனமே நீ அறிந்து கொள்வாயாக.

"இல்லாரைம் எல்லாரும் எள்ளுவர் செல்வரை

எல்லோரும் செய்வா சிறப்பு"

என்பது வள்ளுவர் வாக்கு.

அடுத்தவரை அண்டித் தொழுது வாழும் நிலையில் உள்ள கீழ்மகன் கூட செல்வம் நிறைய உள்ளவனாய் இருப்பானாகில் பழங்கள் நிறையப் பழுத்துள்ள கனிமரங்களைத் தேடிப் பறவைகள் கூட்டம் கூட்டமாக வருவது போல் சுற்றத்தார்கள் வந்து சூழ்ந்து கொள்வார்கள். ஆனால் உயர்வுடைய நல்லொழுக்கமுள்ள மேலோரானாலும் அவர்கள் செல்வம் இல்லாத – வறியவர்களாயிருப்பின் பழங்கள் இல்லாது மரம் காய்ந்து போனால் பறவை நெருங்காது விலகிப் போலதைப் போல நெருங்காது ஒதுங்குவர்.

பொருளாகிய செல்வம் இல்லாதவன் குடிப்பெருமை, குலப்புகழ், பொறுமை இல்லாதவன் மேற்கொள்ளும் தவம், இரக்கமில்லாதவன் செய்யும் நற்செயல்கள் அறிவார்ந்த அமைச்சர் இல்லாத அரசாட்சி இவையெல்லாம் இருட்டில் கண்ணுக்கிட்ட 'மை' போன்று பயனற்றவையே என்று ஆய்ந்தறிந்து தெளிந்த புலவர் பெருமக்கள் மனத்தில் படும்படிக் கூறியுள்ளனர். கண்ணுக்கு இடும் அஞ்சன மை கரு நிறம். அதை இருட்டில் இட்டு என்ன பயன்? இருட்டுடன் இருட்டாக இருக்கும் இருண்மை என்றார். கவி.

தெளிந்த நீர் தரையில் பாய்ந்து எல்லாப் பக்கமும் பரந்து ஓடி எண்ணெயுடன் கலந்து தெளிந்த அந் நன்னீர் கெட்டுக் கலப்பட நீராகிவிட்ட நிலையில் அந்த நீரையெல்லாம் வழித்தெடுத்துக் கொண்டு அதில் கலந்துள்ள எண்ணெயை நீக்கிச் சுத்தமாக்குவேன் என்று கூறுவது எதைப் போன்றது என்றால்... அது பொருளாசை கொண்டு புத்தி தடுமாறி அலை பாயும் மனம் கொண்ட விலைமகள் ஒருத்தியைத் திருத்தி நல்வழியில் நிலைக்கச் செய்வேன் என்று கூறி அதற்கு முயல்வதைப் போன்றதாகும்.



**14.2.31.விளைமகளின் பொருள் பற்று :**

நீண்ட பூ மொக்கு. அதை கொடியிலிருந்து பறித்து அதன் இதழ்களைப் பிரித்து முகா்ந்து பாா்த்துக் கொண்டு மறைவாக நின்று ஓா் அழகிய பெண் காட்டும் குறிப்புக்கு என்ன பொருள் என்றால் ஒரு பெண் ஆடவனிடம் அன்பு கொண்டது போல அணைத்து மகிழ்ந்து பின்னா் அவனை விட்டு விலகி விடுவதும் அவனை விலக்கி விடுவதும் போன்றதே மலராத மொக்கைப் பறித்து அதன் இதழ்களைப் பிா்த்து முகா்ந்துவிட்டுப் பின் எறிந்து விடுகிற செயலின் குறிப்பு ஆகும், என்பதாகும்.

ஆற்றைப் போலவும் இசை கூட்ட மீட்டும் வீணை போலவும் தீக்கடையும் கோல் போலவும் வெண்ணிலவைப் போலவும் அழகிய பூங்கொடி போலவும் மரக்கலம் போலவும் கற்புடைய பெண் போலவும் விலங்கு போலவும் வரும் ஆண்களிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று தாய்க்கிழவி அதாவது வயது முதிா்ந்த பொதுமகள் ஒருத்தி தன் பெண்ணுக்குப் புத்திமதி கூறினாள்.

மரத்துக்கு மரம் தாவி நல்ல பழுத்த பழமாகப் பாா்த்தெடுத்து உண்ணும் குரங்கு போலவும், தேனிருக்கும் வாச மலா் தேடித் தேடிப் போய் தேன் உண்ணப் பறக்கும் அழகிய சிறகுகளை உடைய தும்பியினம் போலவும் பெண்ணே நீ நடந்து கொள்ள வேண்டும். உன்னை விரும்பி வரும் ஆடவரிடம் என்று தாய்க்கிழவி மகளிடம் முன்னுரை இல்லாமலே எடுத்த எடுப்பிலேயே சொன்னாள். பெருஞ்செல்வத்தோடு வந்து நின்னை அடைய விரும்பி வரும் எவா்க்கும் இது பொருந்தும் என்று திரும்பத் திரும்பச் சொல்லினாள்.

மழை பொழியப் பொழிய ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வரும். மழை பெய்வது குறையக் குறைய ஆற்றில் வரும் வெள்ளமும் வடியும் - நீா்ப் பெருக்கம் குறைந்து விடும். அதுபோல மகளே உன்னை விரும்பி வரும் ஆடவா் அதிகம் செல்வத்தைக் கொண்டு வந்து தருகிற வரையிலும் அவரோடு இணைந்து இருந்து பொருள் வரத்துக் குறைந்து விட்டால் அவரை விட்டு விலகிவிடு.

நாமின்று பெற்றிருக்கிற செல்வம் நம்மைத்தேடி வந்தவா்கள் மகிழ நாம் அன்பு பாராட்டியதால் அவா்கள் தரப்பெற்றது. பொருள் தரும் வரை அவா்க்கு இன்பம் தருவோம். பொருள் தருதல் இல்லையென்றால் பொருள் தரும் வேறு ஒருவரைத் தேடிக்கொள்ள வேண்டும். வீணையை மீட்டிப் பாடவல்ல பாணன் ஒருவன் இறந்து விட்டால் யாழ் மீட்டிப் பாட இன்னொரு பாணன் வருவான் அல்லவா? இது போன்றதே நமது வாழ்க்கையும்.

அன்பு காட்டி சின்பமூட்டி இன்னும் பலவகையில் தன்னைத் தேடி வந்து அடைபவா்களுக்கு ஆதரவாக இருப்பது போல நடித்துப் பல வழிகளிலும் தன்னை அடைந்தவா்களின் கைப்பொருளை எல்லாம் கவா்ந்து கொண்டு பின்னா் அவா்களைக் கைவிட்டு விடுவா். அது எதுபோல என்றால்

காப்பியங்கள்

குறிப்புகள்

அரணிக் கட்டை கொண்டு தீ கடை வேர் அதிலிருந்து வரும் நெருப்புப் பொறிகள் எளிதில் பற்றிக் கொள்ள பஞ்சு அல்லது காய்ந்த சருகைச் சட்டியில் போட்டுக் கடைவர். (சிக்கிமுக்கிக் கல் கொண்டு பஞ்சில் தீ மூட்ட இந்த கட்டைகளைச் சுமந்து செல்வர் என்பர்) அவை பற்றிக் கொண்டதும் அத்தீயிலேயே அழிந்து போகும். அதுபோலப் பொதுமகளிரும் ஆசை காட்டுவது போல நடித்து அண்டியவர்கள் கைப்பொருள் கவர்ந்து கொண்ட பின்னர் அவர்களை அழிய விட்டுவிடுவர் என்பது கருத்து.

பொது மகளிர் தம்மைத் தேடி இன்பம் அடைய வருபவர்களிடம் அவர்கள் தரும் பொருளுக்கு ஏற்பத் தினம் தினம் அவர்கள் மீது அன்பைப் பொழிவது போல நடிப்பர். பொருள் வரத்து குறைந்து விட்டால் சிறிது சிறிதாகத் தங்களின் அன்பு காட்டுதலையும் குறைத்துக் கொள்வர். எப்படி எனில் பொருள் தரும்போது அன்றாடம் வளரும் வளர்பிறைச் சந்திரன் போல அன்பு பெருகும். பொருள் இன்றேல் தேய்பிறைக்கால நிலாப்போலக் குறைந்து கொண்டே வந்து ஒருநாள் இல்லாமலே போய்விடுவதைப் போல ஆகிவிடும்.

இயற்கையாக அழகான தோற்றம் இல்லாதவர் ஆனாலும் செல்வ வளம் மிக்கவர்களின் மனத்தைக் கவர்ந்து அவர்கள் தம்மை விரும்பும் வகையில் தம்மை அழகு செய்துகொண்டு அந்தச் செல்வந்தர்கள் கண்ணைக் கவரும் வண்ணம் பொதுமகளிர் காட்சி தருவது எதுபோல என்றால் வண்டுகள் தேனுண்ணத் தம்மைத் தேடி வரும் விதத்தில் வண்ண மணமலர்கள் சிரிக்கச் சோலையில் வளர்ந்திருக்கும் பூங்கொடிக்கு ஒப்பாக இருக்கிறது.

தம் மீது மையல் கொண்டு வந்த ஆடவரை அவர்கள் கைப்பொருளை எல்லாம் கவர்ந்து கொண்டு பின்னர் திண்டாடித் திரிய விடுவதால் பொது மகளிர் மரக்கலத்துக்கு ஒப்பானவர்கள் எப்படியெனில் அரிய பல பொருட்களை ஆறு கடல் அல்லது வேறு நீர்ப்பரப்புகள் தாண்டிக் கொண்டு சென்று விற்றுப் பொருளீட்டலாம் என்று ஆசையோடு வரும் வணிகர்களை அவர்கள் பொருளோடு நீர்ப்பரப்பில் மரக்கலம் ஆழ்த்தி விடுகிறதல்லவா? அதுபோன்றது இந்தப் பொது மகளிர் இயல்பு என்பது

“ஒத்த பொருளால் உறுதி செய்வார்களை
எத்திறத் தானும் வழிபட்டு ஒழுகலின்
பைத்தரவு அல்குல் பொன்பாவையின் நல்லவர்
பத்தினிப் பெண்டிர் படியும் புரைப.”

தங்களை விரும்பி வந்து நிறையப் பொருள்தந்து போற்றும் ஆடவர்களைப் பல வழிகளிலும் உபசரித்து அவர்களை விருப்பப்படியெல்லாம் மனம் கோணாமல் நடந்து கொள்வதால் பொது மகளிரும் கற்புடைப் பெண்கள் போன்றவர்களே கற்புடைப்பெண் - மனைவிக்குக் கணவன் மனம் கோணாது நடந்தொழுக வேண்டியது

கட்டாயம். பொது மகளும் அப்படி நடந்து கொள்கிறாள் என்றால் அது பணம் பறிக்கும் நோக்கத்தால் ஆகும்

தன்னை விரும்பி வந்தடைந்தவனுடைய செல்வம் தேய்ந்து குறைந்து அழியும் நிலைக்கு வந்துவிட்டது என்று தெரிந்தவுடன் அப்பொருளற்றவனை விட்டு விலகிப் பிறகு வேறோர் செல்வச் செழிப்புடையவன் பக்கம் சேர விரும்பும் பொது மகளிர், மேய்ச்சல் நிலத்தில் மேலும் மேயப் புல் அற்றுப் போக மேயப் புதிதாக வேறோர் வளநிலம் நோக்கிப் போகும் விலங்கு போன்றவர்கள்.

அரிய செல்வம் உடைய ஒருவனோடு கூடி இன்புற்று அவன் செல்வத்தையெல்லாம் கவர்ந்து கொண்ட நிலையில் அவன் வறியனாக அவனை விலக்கிவிட்டு வேறொரு செல்வந்தனைத் துணையாகக் கொள்ள விரும்பும் கச்சணிந்த மென்மையான இள மார்பும், வாள் போல நீண்ட கண்ணும் உடைய பொது மகளிர் சுவையான காய் கனிகளை உண்ண விரும்பி மரத்துக்கு மரம் தாவும் மரக்கொம்பில் குடியிருக்கும் குரங்கு மனமொத்த குணத்தவர் ஆவர்.

முருக்க மலர் போன்ற சிவந்த அழகு மிக உடைய ஆண்கள் என்றாலும் அவர்கள் செல்வ வளம் மிக்கவர்கள். இல்லையென்றால் அவர்கள் இருக்கும் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூட நினைக்காத பூ மொக்கு போன்ற மென்மையான மார்பும் இனிய வாய்ச்சொல்லும் உடைய பொதுமகளிர், வாசமலர் இல்லாத செடிகளை நாடிப் போக விரும்பாத புள்ளிச் சிறகுகளுடைய வண்டுகளைப் போன்றவர்கள். தேனிருக்கும் மலர்களைத் தேடிப் போவதே வண்டின் இயல்பு.

### 14.2.32. இல்லற வாழ்வே இனியது என்றும்

"மக்கள் பயந்து மனைஅறம் ஆற்றுதல்
தக்கது அறிந்தார் தலைமைக் குணம்என்ப
பைத்தரவு அல்குல் படிற்றுரை யாரொடு
துய்த்துக் கழிப்பது தோற்றமொன்று இன்றே."

நல்ல பிள்ளைகளைப் பெற்று இல் வாழ்வானுக்குரிய ஒழுக்க நெறியில் நின்று அறநெறி வழுவாது வாழ்தலே மனித வாழ்வின் மாண்புடைய செயல்; குடும்பத் தலைவைனுக்கு உரிய உயரிய குணம் என்று கற்றறிந்த சான்றோர் கூறியுள்ளனர். இப்படிப்பட்ட உயர் வாழ்வு வாழாமல் நச்சுப் பையுடைய பாம்பின் படம் போன்ற அல்குல் உடைய பொய்யுரை கூறும் விலை மகளிரோடு கூடி இன்புற்று வாழ்நாளை வீணாளாக்குவது ஒன்றும் பெருமைக்குரிய செயல் அல்ல.

**14.2.33. வானுலகு இவர்க்கு வழிவிடும்**

"நகை நனிதீது துனி நன்றி யார்க்கும்
பகை நனி தீது பணிந்தீ யாரொடும்
மிகைமிகு பொருள் என்று இறத்தல் இலரே
வகைமிகு வானுலக எய்தி வாழ்பவரே."

மிகுந்த இன்பத்தால் மகிழ்ந்து பிறரை இகழ்தல் கூடாது. சினம் கொள்ளக் கூடாது. தவறு செய்யாதிருக்க அச்ச உணர்வுடனே இருப்பதே நல்லது. எவரோடும் பகைமை பாராட்டுவதும் தீது. தீய குணமுடையாருடன் சேர்தலும் தீது. எதிலும் வரம்பு மீறாது தன்னடக்கமுடன் வாழ்பவர்கள் உயர்வான வானுலக வாழ்வு பெறும் பேறுடையவர் ஆவார்கள்.

**14.2.34. குருடுக்குக் குருடு வழிகாட்ட இயலாது**

பார்வையற்ற ஒருவன் இன்னொரு பார்வை இல்லாதவனுக்குச் செல்ல வேண்டிய பாதையைச் சொல்லி வழிகாட்டுவது போன்றது தான், முற்பிறவியில் செய்த தீவினைப் பயனை முற்றாகப் போக்கிக் கொள்ளும் ஞானத்தெளிவு பெறாதவன் ஞான நிலை பெற வழி அறியாது இருக்கும் இன்னொரு வனுக்கு ஞான மார்க்கம் பற்றி உபதேசிப்பதுமாகும்.

இதே கருத்தமைந்த திருமூலர் திருமந்திரப் பாடல்,

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி வீழுமாறே"

என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

அறியாமையைப் போக்கும் ஆசானை அடையாமல் அறியாமையைப் போக்க இயலாத ஆசானைக் குருவாகக் கொள்ளுதல் குருடுக்குக் குருடு வழிகாட்டப் போய் பள்ளத்தில் வீழ்ந்து பரிதவிப்பதைப் போன்றது என்பதே திருமந்திரப் பாடல் படம் பிடிக்கும் கருத்து.

**14.2.35. வானுயர வளரும் கரும்பும் கமுகும்**

இதுவரை வாழ்வியல் கூறுகளை ஒழுக்க நெறி உண்மைகளைப் பாடிய கவி இயற்கை வளம் பற்றி இப்பாடலில் பாடுகிறார்.

வளமிக்க மருதநிலப் பகுதி அங்கே வயலில் நெற்பயிர் கரும்போடு போட்டி போட்டுக் கொண்டு வளரும். இனிக்கும் சுவையுடைய வெல்லம் போன்ற கரும்போ பாக்கு மரத்தோடு போட்டியிட உயர்ந்தெழும். இப்படிச் செந்நெல்லும் கரும்பும் விளைவதைக் கண்டதில்லையே காண்போம் என்று இவைகளுக்கெல்லாம் மேலாக உயர்ந்த கூந்தால் பனை வானுற உயர்ந்து

மேக மண்டலத்தில் முகத்தைப் புதைத்துக் கொள்ளும் என்கிற இயற்கை வளம் இனிய மருத நில வயல் வளம் இப்பாடலில் சொல் வளம் சுவை வளம்.



**14.2.36. பாசாண்ட சாத்தன்**

இசை நுட்பம், இசை நூல், இசை இலக்கணம் என்றுள்ளவற்றில் குறை கூற முடியாதபடி கற்றுத் தேர்ந்து தொண்ணூற்று ஆறு வகையான தருக்க நூல்களிலும் துறைபோகிய வித்தகனான பாசாண்ட சாத்தன் என்னும் தெய்வம் விண்வழியே செல்லும் இசை பொழிவதில் தன்னினரற்றவர்களான கந்தருவர்களைக் கண்குளிரக் கண்டு பெரிதாகச் சிரித்தான்.

பாசாண்ட சாத்தன் என்னும் தெய்வக் கதை சிலப்பதிகாரம் கனாத்திறம் உரைத்த காதையில் வருகிறது. மாலதி என்னும் பெண் மாற்றான் மகவுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த போது பால் விக்கி குழந்தை இறந்துவிட இறந்த குழந்தையுடன் அவள் பல தெய்வக் கோயில்களுக்குச் சென்று முறையிடும் போது முன் செய்த தவப்பயன் இல்லாமல் தெய்வங்கள் உனக்கு உதவாது குழந்தையை என்னிடம் ‘தா’ என்று இடாகினிப் பேய் குழந்தையை வாங்கி விழுங்கி விட்டது. மாலதி அங்கேயே கிடந்து அழுது புலம்ப அக்கோயிலில் இருந்த பாசாண்ட சாத்தன் என்னும் தெய்வமே குழந்தையாக வளர்ச்து தேவந்தி என்ற பெண்ணையும் மணந்து இல்லறம் நடத்திப் பின் தன் உண்மை உருக்காட்டி என் கோயிலுக்கு வா எனக் கூறி மறைகிறான்.

**14.2.37. மாலை வந்தும் மணாளன் வரவில்லை**

தனிமையில் தலைவனைப் பிரிந்து வாடும் ஒரு தலைவி பகல் பொழுது எப்படியோகழிந்து விட்டது. மாலைப் பொழுதும் வந்துவிட்டது. வந்த மாலைப் பொழுதும் தனியே வரவில்லை.அன்றில் பறவையின் குரலையும் மேய்ச்சலுக்குச் சென்ற மாடுகள் பொழுது சாய்ந்ததால் வீடு திரும்பத் துள்ளி வர ஒலிக்கும் அவற்றின் கழுத்தில் கட்டிய மணி ஓசையையும், கொன்றைப் பழங்கொண்டு குழல் போல் செய்த இசைக்கருவிகளில் கறவை மாடுகளுடன் வரும் இடையர்கள் எழுப்பும் இன்னிசையையும், ஆம்பல் பூக்களில் தேனுண்ண மொய்த்த வண்டின் ரீங்கார இசையையும் அல்லவா கூட்டிக் கொண்டு வருகிறது. தனிமைத் துயர் தரும் தாபத்தை மேலும் அதிகரிப்பது போல என்ற ஏக்கம் - கருவியின் தாக்கம் ஆகும்.

அன்றில் பறவைகூடக் கூடு திரும்பி விட்டது.மேய்ச்சலுக்குப் போன மாடுகள் வீடு நோக்கி வரத் தொடங்கி விட்டன. ஆம்பல் மலர்ந்து விடடதால் தேனுண்ண வண்டுகளும் வந்துவிட்டன. தன் தலைவன்

வரவில்லையே இன்னும் என்ற கவலைப்படும் தலைவி கதை – கவிதையாகும்.



## 14.3. சோதித்தறியும் வினா விடைகள் :

பெண்ணின் பெருமை குறித்து வளையாபதி கூறுவன யாவை?

விடை : பெண்ணின் பெருமை, மனமே காவல் மகளிர்க்கு முதலான தலைப்புகளில் உள்ள செய்திகள்

1. கொல்லாமை அறம் குறித்து எழுதுக.

விடை : உயிர்க்கொலை தவிர்ப்பீர், ஊன் உண்போர் சுற்றத்தின் உயிர் உண்போர், ஊனுணவு தவிர்த்து உயர்கதி அடைவீர், கொல்லாமை கோடிநன்மை முதலிய தலைப்புகளில் அமைந்த செய்திகள்.

2. காமத்தின் இயல்பு குறித்து வளையபதி கூறுவது யாது?

விடை : காமத்தின் இயல்பு, காமன் படுத்தும்பாடு, மடலேறி மானம் இழப்பான், பிறர் பழிப்பக்கு ஆளாக்கும் பீடைகாமம் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ள செய்திகள.

3. வாய்மை குறித்து வளையாபதி கூறுவன யாவை?

விடை : பொய் பேசுதலும் தீதே, பொய்பேசுவதால் வரும் தீமை ஆகிய தலைப்பகளில் உள்ள செய்திகள்.

4. செல்வத்தின் சிறப்பு யாது?

விடை : செல்வம் தடையல்ல, பிறர்க்குதவி வாழ்க, பொருளைப் பொருட்டாக மதியாதிருப்பது பெருமை, செல்வம் எல்லாம்தரும், இல்லாதவரை எல்லோரும் இகழ்வர், மனைவி மக்களும் மதியார், இல்லாதவர்க்கு இல்லை சிறப்பு, பொருள் இல்லையேல் எதுவும் இல்லை ஆகிய தலைப்புக்களில் உள்ள செய்திகள்.

## 14.4. பயிற்சி வினாக்கள் :

1. பொது மகளிர் குறித்து வளையாபதி கூறுவன யாவை?
2. வளையாபதி கூறும் வாழ்வியல் ஒழுக்க நெறிகளைக் கட்டுரையாக்குக.

## 14.5. பொருளறிக .

வளி – காற்று; பொறை – பொறுமை; ஏதில் பெண்- அயலார் மனைவி

வைதல் - திட்டுதல்; அற்றம் - துன்பம்; ஓம்பல் - பாதுகாத்தல்;

ஊன் - புலால் உணவு; செயிர் - கோபம்; வெறுக்கை- செல்வம்; முகை – மொக்கு.

## 14.6. மேலும் படித்தறிக.

1. ஞா.மாணிக்கவாசகன், வளையாபதி – குண்டலகேசி (மூலமும் விளக்க உரையும்), உமா பதிப்பகம், சென்னை, 2011.

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**
**முதுகலைத்தமிழ் -காப்பியங்கள்**
**பகுதி-அ (10 x 2 =20)**
**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**



1. கண்ணகியின் தந்தை பெயர் யாது?
2. நாட்டிய அரங்கேற்றத்தால் மாதவி பெற்ற சிறப்பு யாது?
3. மாதவி ஆடிய பதினோருவகை ஆடல்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. 'இறம்பூது அன்று; இஃது அறிந்தீமின், யார் கூற்று?
5. மாலதி சென்ற கோயில்களுள் இரண்டினைக் கூறுக.
6. 'திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாசுன்'-யார் கூற்று?
7. பாறுகொள் பருதி வைவேல் குமரர்க்கு என்றே ஏற்றவன் யார்?
8. தேம்பாவணியின் ஆசிரியர் யார்?
9. தேம்பாவணியின் ஆசிரியர் யார்?

10.'சேய் இலாச் செல்வம்' எதனைப் பேனர்றது?

**பகுதி-ஆ (5x5=25)**
**ஒருபக்க அளவில் விடை தருக.**

11.அ.கோவலனின் குறியாக் கட்டுரை பற்றிக் குறிப்பு வரைக.

(அல்லது)

ஆ.மாதவி பாடிய கானற்பாடற் கருத்துகள் யாவை?

12.அ.தேவந்தி வரலாறு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ.மாதவி ஆடிய ஆடல் வகைகளை எழுதுக.

13.அ.சுதமதி கூறும் ஐந்து வனங்களின் சிறப்பு குறித்து விளக்குக.

அல்லது

ஆ.நளனைக் கண்ட அண்ணப்பறவை கூறுவன யாவை?

14.அ.வேடர்குலத் தலைவனாகத் திண்ணன் முடிசூட்டப்பட்டதை எழுதுக.

அல்லது

ஆ.சல்லியன் தேரோட்டுதல் பற்றிக் குறிப்பு வரைக.

15.அ.காடு சென்ற சூசைக்கு முதியவன் கூறிய அறிவுரைகள் யாவை?

அல்லது

ஆ.உமறு கத்தாபு ஈமான் அடைந்தது பற்றி எழுதுக.

**பகுதி-இ (3 x 10 =20)**
**கட்டுரை வடிவில் விடைதருக**

16.கண்ணகி கண்ட கணவினை விவரி.

17.ஆபுத்திரன் பாத்திரம் பெற்ற வரலாற்றினை எழுதுக.

18.தேம்பாவணி பாலமாட்சிப் படலத்தின் இலக்கியத்தை விவரி.

19.திண்ணன் கண்ணப்பரான வரலாற்றை விவரி.

20.வளையாபதி வழங்கும் வாழ்வியல் கருத்துக்களைத் தொகுத்துக்கூறுக.